பூமியில் மஸ்ஜிது கட்டுவோம் !

சுவனத்தில் மாளிகை எழுப்புவோம் !!

ஜாமிஆ நாஸிருஸ்ஸுன்னா அரபிக்கல்லூரி & மஸ்ஜித்

ஒரு முஸல்லாவிற்கான ஹதியா ₹15,000

சென்னை செங்குன்றம் அருகே புழலில்
ஜாமிஆ நாஸிருஸ்ஸுன்னா அரபிக் கல்லூரி
மிக சீரான முறையில் நடைபெற்று வருகிறது

அல்லாஹ்வின் அருளால் எடப்பாளையம் அருகில்
காயிதே மில்லத் அறக்கட்டளையின் சார்பில் 8000 சதுரடி நிலம் நமது
ஜாமிஆ நாஸிருஸ்ஸுன்னாவிற்கு கிடைக்கப்பெற்றது.

அந்த நிலத்தில் மூன்று நிலைகளாக 13500 சதுரடியில் மஸ்ஜிது மற்றும்
மத்ரஸா கட்ட நாடியுள்ளோம். கட்டுமான பணிக்காக ரூபாய் இரண்டு கோடியே
ஐந்து லட்சம் தேவைப்படுகிறது.. பரிபூரணமாக கட்டிமுடிய தாங்கள் அதிகம்
துஆ செய்வதோடு பள்ளிக்கு பணமாகவும் அல்லது பொருளாகவும்
வழங்கி பள்ளிவாசல் மத்ரஸா அமைக்க முன் வாருங்கள்.

நமது அனைத்து தேவைகளை வல்லான் அல்லாஹ் நிறைவேற்றுவானாக!

Bank Detail :

Account Name : QUIDE MILLETH JAMIA MASJID EDUCATIONAL AND CHARITABLE TRUST

Account No : 201007516741

Customer ID : 51641487

Bank Name : Indusind Bank Ltd

Branch Name : Anna Nagar

Branch IFSC Code : INDB0000046

காயிதே மில்லத் எஜுகேஷனல் சாரிட்டபிள் டிரஸ்ட்

எண்: 8, அந்தோணியார் முதல் குறுக்கு தெரு, புழல், சென்னை - 600 066.

தொடர்புக்கு : 72991 59299 / 97919 67125 / 96009 03222 / 9962116786

உத்தம நபி ﷺ நீட்டிய உறுதிமிக்க கயிறு

العروة الوثقى

في أحاديث الأتقى صل اللّٰهُ عليه وسلم

அல் உர்வத்துல் உத்கா ஃபீ அஹாதீஸில் அத்கா

உத்தம நபி ﷺ நீட்டிய உறுதிமிக்க கயிறு

அரபியில்: P. அலவி காமில் ஸகாஃபி

தமிழில்: U. முஹம்மது சலீம் ஸிராஜி

JAMIA NASIRUSSUNNA

No: 12/1, Anthoniyar 1st Cross Street,
Puzhal, Chennai - 600 066.
Contact: 72991 59299, 97919 67125, 9600 03222, 88385 8876

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா தமிழகத்தின் தலைநகராம், சீர்மிகு சென்னையில், புழல் பகுதியில் கடந்த 17. 05. 2017 அன்று தொடங்கப் பட்டு, சிறப்பாக நடந்து வருகிறது. அல்ஹம்து லில்லாஹ் !

நோக்கமும் ஏக்கமும்

தற்காலச் சூழலில் வருங்கால சந்ததிகளுக்கு அவசியமான, ஒழுக்கத்துடன் கூடிய சரியான கல்வி ஞானத்தை தரமான வகையில் வழங்க வேண்டும் என்ற பேராவலால் தொடங்கப் பட்டதே எமது கல்வி நிறுவனம்.

அதுவும் போட்டிகள் நிறைந்த இக்காலத்தில் ஆலிம்கள் அரபியில் மட்டுமின்றி ஆங்கிலத் திலும் இன்ன பிற மொழிகளிலும், பல்வேறு துறைகளிலும் தேர்ந்து தன்னிறைவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும். அப்படித் திகழ்ந்தால் தான் சன்மார்க்க சட்டதிட்டங் களை, ஹலால், ஹராம்களை சரிவர சொல்ல முடியும். பொருளாதாரத்தில் யாரையும் எதிர்பாராமல் செயல்பட முடியும் என்ற நன்நோக்கத்தின் அடிப்படையில் வருங்கால வாலிபர்களை வார்த்தெடுக்கும் வகையில் தொடங்கப்பட்டது தான் நமது கல்வி நிறுவனம்!

இந்த சோதனையான காலகட்டத்தில் நமது உயிர் மூச்சான ஷரீஅத்தை சரியாக விளங்கி அதனை சமூக மன்றத்தில், உலக அரங்கில் எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் திறன் படைத்த உலமாப் பெருமக்களை உருவாக்குவதே நம்முடைய உயரிய நோக்கமாகும்.

மேல்நிலை பாட வகுப்புகளான 9ஆம் நிலை முதல் +2 வரையும் அப்ளலுல் உலமா, B.A., B.B.A., B.Com., போன்ற இளங்கலை பட்டப்படிப்பு கற்கச் செய்தல், கல்லூரி படிப்புகளுக்கான பயிற்சிகளும் தரமான ஆசிரியர்களால் வழங்கப்படுகிறது.

நமது கல்வி நிறுவனம் முற்றிலும் தூய்மையான சுன்னத் வல் ஜமாஅத்தின் அடிப்படையில் கலப்பற்ற கொள்கை ஸ்தாபனமாக திகழ வேண்டும் என்பதே நம் அவா, அதற்காக நாம் தங்களிடம் கேட்கச் சொல்கிறோம் துஆ!

ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னாவின் செலவினங்கள் :

ஊதியம், வாடகை மற்றும் மின் கட்டணம் ஆகிய அனைத்தும் பொதுமக்களின் ஹதியாவின் மூலமே நடைபெற்று வருகின்றன.

எனவே, இந்த மத்ரஸாவுக்கான ஹதியாக்களை உணவு வகைகளாக, பணமாக, சந்தாக்களாக தயவுசெய்து கொடுத்து மார்க்கக் கல்விக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- நிர்வாகக் குழு
ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா
பேச: 72991 59299, 97919 67125,
96009 03222, 88385 88476

HEBA METRIC SCHOOL

Plot No: 2,3,4,5, Yadava Street,
Zameen Pallavaram, Chennai - 600 043
Contact: 044 2247 5469 / 98410 14362

ஹிபா மெட்ரிக் பள்ளி ஓர் அறிமுகம்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழித்தோன்றலும், இறைநேசருமான கதீபுல் ஹிந்த், அல்லாமா, மஜ்ஹர் ரப்பானி (ரஹ்) ஹஜ்ரத் கிப்லா அவர்களின் திருக்கரங்களால் 2001ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஹிபா மெட்ரிக் பள்ளியின் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ஹஜ்ரத் அவர்களின் துஆ பரக்கத்தினால் அனைவரும் பயன்பெறும் வண்ணம் சமய நல்லிணக்கத்திற்கு முன்னோடியாக ஹிபா மெட்ரிக் பள்ளி LKG முதல் +2 வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஏழை எளியவர்களின் கல்வித்தரம் உயர வேண்டும் எனும் உன்னத நோக்கில் உருவாக்கப் பட்டதே இப்பள்ளிக்கூடம்.

ஏழைகள் மற்றும் ஆதரவற்ற உள்ளூர், வெளி மாநிலங்களில் உள்ள இஸ்லாமிய மாணவர் களுக்காக 2003ஆம் ஆண்டு தாருல் உலூம் ரப்பானிய்யா இப்ராஹீமிய்யா எனும் பெயரில் சகல வசதிகளுடன் ஈருலக கல்வியுடன் கூடிய தங்கும் விடுதி கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் இக்கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள் பலர் பொறியாளர்களாக, மருத்துவர்களாக, I.P.S., PhD., மற்றும் U.G. டிகிரிர் முடித்து பல நிறுவனங்களிலும் குறிப்பாக வெளிநாடுகளிலும் பணி புரிந்து வருகிறார்கள்.

இந்நிறுவனங்களை தொடங்கியவர்களுக்கும் திறம்பட செயல்படுத்தி வருபவர்களுக்கும் இந்நிறுவனங்களில் சம்பந்தப்பட்ட மர்ஹூம் களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது வற்றாத பேரருளை பொழிந்தருள்வானாக! ஆமீன்.

இக்கல்வி நிறுவனங்களை உருவாக்கியவர் களை உங்கள் துஆக்களில் மறந்துவிடாதீர்கள்!

العروة الوثقى

அல் உர்வத்துல் உத்கா
பி அஹாதீஸில் அத்கா

உத்தம நபி ﷺ நீட்டிய
உறுதிமிக்க கயிறு

மூல நூலாசிரியர்:

P. அலவி காமில் ஸகாஃபி

மொழி பெயர்ப்பாசிரியர்:

ப. முஹம்மது சலீம் ஸிராஜி

வெளியீடு:

ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா
புழல், சென்னை - 600 066
பேச: 72991 59299, 97919 67125, 96009 03222, 88385 88476

நூல் விவரம்

நூலின் பெயர்	:	உத்தம நபி ﷺ நீட்டிய உறுதிமிக்க கயிறு
மூல நூலாசிரியர்	:	P. அலவி காமில் ஸகாஃபி
மொழி பெயர்ப்பாசிரியர்	:	U. முஹம்மது சலீம் ஸிராஜி
உரிமை	:	வெளியீட்டாளருக்கே
பக்கங்கள்	:	232
முதல் பதிப்பு	:	அக்டோபர் 2021
வெளியீடு	:	ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா சாரிடபிள் ட்ரஸ்ட் எண்.8, அந்தோணியார் கோவில் முதலாம் குறுக்குத் தெரு, புழல், சென்னை - 600 066
வெளியீடு எண்	:	03
வடிவமைப்பு	:	ஜமாலீ ஆர்ட் கேலரி 9842008468
விலை	:	₹ 300

சமர்ப்பணம்

தம் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் செலவு செய்து இஸ்லாமிய ஷரீஅத் சட்ட திட்டங்களைத் தொகுத்து, பாதுகாத்து உலகம் உள்ளளவும் வரவிருக்கும் முஸ்லிம்கள், முஃமின்கள் பின்பற்றுவதற்கு எளிமையாக வடிவமைத்து தந்த நான்கு பெரும் இமாம் பெருமக்களான

இமாம் நுஃமான் பின் ஸாபித் (ரஹ்)

இமாம் மாலிக் பின் அனஸ் (ரஹ்)

இமாம் முஹம்மத் பின் இத்ரீஸுஷ் ஷாஃபியீ (ரஹ்)

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்)

இவர்களுக்கும்...,

இவர்களுடைய மாணவ மணிகளுக்கும்...,

பொருளடக்கம்

1	நூல் அறிமுகம்	05
2	பதிப்புரை	08
3	மூல நூலாசிரியரின் முன்னுரை	11
4	மூல நூலாசிரியரின் அனுமதிக் கடிதம்	13
5	மூல நூலுக்கான அறிமுகவுரை	14
6	மொழி பெயர்ப்பு நூலுக்கான மதிப்புரை	18
7	மொழி பெயர்ப்பு நூலுக்கான வாழ்த்துரை	21
8	மொழிபெயர்ப்பாசிரியரின் முன்னுரை	23
9	அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தை இறுகப் பிடித்தல் பித்அத் எனும் வழிகேட்டிலிருந்து எச்சரிக்கையாக இருத்தல்	32
10	அத்தவஸ்ஸுலு - வஸீலா தேடுதல்	39
11	இஸ்திஙாசா - இறைநேசர்களிடத்தில் உதவி தேடுதல்	51
12	முஃஜிஸா, கராமத் நபிமார்கள் மற்றும் இறைநேசர்களின் பேரற்புதங்கள்	66
13	மறைவான ஞானம்	86
14	மரணத்திற்குப் பின் இறைநேசர்கள்	96
15	பரகத் எடுப்பது	111
16	ஷஃபாஅத் - பரிந்துரை	122
17	கப்ருகளும் அதனை ஸியாரத் செய்வதும்	130
18	மரணித்தவர்களுக்காக குர்ஆன் ஓதுதல் மற்றும் பிரார்த்தனை செய்தல்	140
19	மரணித்தவர்களுக்காக தானதர்மங்கள் செய்தல்	143
20	ஜமாஅத், ஜுமுஆ தொழுகைகளுக்கு பெண்கள் செல்தல்	148
21	பிறை பார்த்தல்	158
22	தராவீஹ் தொழுகை	161
23	ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதுதல்	167
24	ஜுமுஆவும் அதனோடு தொடர்புடையவைகளும்	172
25	ஃபர்ளுத் தொழுகை களுக்குப் பின் துஆ ஓதுதல்	179
26	திக்ரு மஜ்லிஸுகள்	185
27	நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழுதல்	192
28	ஓதிப்பார்த்தல்	202

நூல் அறிமுகம்

சிறப்புமிக்க இந்நூலின் பெயர் 'அல்உர்வதுல் உத்கா பி அஹாதீஸில் அத்கா ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்' என்பதாகும். 'உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அமுத மொழிகளைக் கொண்டுள்ள உறுதி மிக்க கயிறு என்பது பொருள்.

அருள்மறை அல்குர்ஆனில் இரண்டு இடங்களிலும், ஹதீஸிலும் اَلْعُرْوَةِ الْوُثْقَى எனும் இந்த வார்த்தை இடம் பெற்றுள்ளது.

شبه ذلك بالعروة الوثقى التي لا تنفصم فهي في نفسها محكمة مبرمة قوية وربطها قوي شديد

'இஸ்லாமை பலமானதொரு கயிற்றுக்கு ஒப்பிட்டுள்ளான் அல்லாஹ். அந்தக் கயிறு அடிப்படையிலேயே மிகுந்த உறுதியானது. எளிதில் அறுந்து விடாதது. அதன் இணைப்பு மிகுந்த வலுவானது.'

قال مجاهد: : الإيمان، وقال السدي: هو الإسلام ، وقال سعيد بن جبير والضحاك: لا إله إلا الله ، وعن أنس بن مالك: : القرآن ، وعن سالم بن أبي الجعد قال: هو الحب في الله والبغض في الله ، وكل هذه الأقوال صحيحة ولا تنافي بينه.

'உர்வதுல் உத்கா - உறுதிமிக்க கயிறு என்றால் ஈமான் என முஜாஹித் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும்,

இஸ்லாம் என ஸுதிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும்,

லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் திருக்கலிமா என ஸஈத் பின் ஜுபைர், ளஹ்ஹாக் ரஹ்மதுல்லாஹி அலைஹிமா ஆகியோரும்,

அல்குர்ஆன் என அனஸ் பின் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும்,

அல்லாஹ்வுக்காக நேசித்தல், அல்லாஹ்வுக்காக வெறுத்தல் என ஸாலிம் பின் அபுல் ஜஃத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் சொல்கின்றனர். உர்வதுல் உத்கா என்ற வார்த்தைக்கு இத்தனை அர்த்தங்கள் இருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று முரண்பாடானவை அல்ல.' (தஃப்ஸீர் இப்னு கதீர்)

அப்துல்லாஹ் இப்னு ஸலாம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: 'பசுமையான பூந்தோட்டத்தின் நடுவில் ஒரு இரும்புக் கம்பம் இருந்தது. அதன் கீழ் பகுதி பூமியிலும், மேற்பகுதி வானத்திலும் இருந்தது. அதன் மேற்பகுதியில் ஒரு வளையமிருந்தது. 'அந்தக் கம்பத்தில் ஏறு' என்று என்னிடம் சொல்லப்பட, என்னால் ஏற இயலவில்லை என்றேன். அப்போது ஒருவர் என்னை அதில் ஏற்றி விட்டார். நான் மேலே சென்று அந்த வளையத்தைப் பிடித்தேன். 'அதை உறுதியாகப் பிடித்துக் கொள்' என்று என்னிடம் சொல்லப்பட்டது. அந்த வளையம் எனது கையில் இருக்க நான் விழித்தெழுந்தேன். நான் கண்ட இக்கனவை நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சொன்னபோது அவர்கள்: 'அந்தப் பூந்தோட்டம் இஸ்லாம், அந்தக் கம்பம் இஸ்லாமெனும் தூணாகும். அந்த வளையம் உர்வதுல் உத்கா - உறுதியான கயிறாகும். நீங்கள் மவ்த்தாவது வரை இஸ்லாமில் நிலைத்திருப்பீர்கள்' என்றார்கள். (புகாரி 3813, முஸ்லிம் 4894)

இவ்வாறு உயர்வான, பொருள் செறிந்த வார்த்தையால் பெயரிடப் பட்டு இஸ்லாமின் உண்மையான கொள்கைகளைத் தெளிவாக

விளக்கும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அமுத மொழிகளைத் தொகுத்து நூலாக்கிய அலவி ஸகாஃபி ஹழ்ரத் அவர்களும், அழகிய முறையில் மொழி பெயர்த்துத் தந்த முஹம்மது சலீம் ஸிராஜி ஹழ்ரத் அவர்களும் இறையருளுக்குப் பாத்திரமானவர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்களின் தன்னலம் கருதா சமுதாயப் பணி மென்மேலும் தொடர்ந்திட வல்லமை மிக்க அல்லாஹ் எல்லாவித சௌபாக்கியங்களையும் வாரி வழங்குவானாக! ஆமீன்.

அன்புடன்

M. அப்துல் கரீம்,

பிபிஎஸ். புறம், தேங்காய்ப்பட்டணம்.

பதிப்புரை

அளவற்ற அருளாளன் அல்லாஹ்வின் திருநாமத்தால்

வழி தவறச் செய்து நம்மைக் கொத்திச் செல்ல வல்லூறுகள் சுற்றிக் கொண்டிருக்கிற காலமிது. தேன் தடவிய வார்த்தைகளால் இனிக்க இனிக்கப் பேசி நம்முடைய ஈமானைப் பறித்து சதிக் குழியில் தள்ளிவிட நம்மைச் சுற்றி ஒரு கூட்டம் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

குழப்பவாதக் கொள்கைகள் கொண்ட இவர்களின் பேச்சில் மயங்கி ஈமானுக்குப் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாது. அத்தோடு நமது இளந்தலைமுறை தீவிரவாதம், பயங்கர வாதத்தின் பக்கம் ஈர்க்கப் பட்டு வழி தவறிப் போய் விடாமல் அவர்களைக் காப்பாற்றியாகவும் வேண்டும்.

இந்த மகத்தான இலட்சியத்தை முன் வைத்து தலைநகர் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டதுதான் **ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா சாரிடபிள் ட்ரஸ்ட்.**

கொள்கைக் குழப்பத்திலும், வழிகேட்டிலும் நம்மை ஆழ்த்தத் துடிப்போரிடமிருந்து நம்மவர்களையும், நம் இளைய சமுதாயத்தையும் காப்பாற்றி நம் முன்னோர்கள் சென்ற நேரான சத்தியப் பாதையில் வழி நடத்திச் செல்ல வேண்டுமென்ற சமுதாயக் கடமையை நிறைவேற்றும் இக்லாஸான நன்நோக்கில் ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா பல்வேறு சேவைகளை ஆற்றி வருகிறது.

இந்த வரிசையில் நம்முடைய சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் இஸ்லாமிய மார்க்கக் கல்வியை ஊட்டுவதோடு நின்று விடாமல் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைகள், கோட்பாடுகளை விளக்கும் நூற்களையும் வெளியிட்டு வருகிறது ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா ட்ரஸ்ட்.

ஏற்கனவே ஹனஃபி ஃபிக்ஹ், ஷாபிஈ பிக்ஹ ஆகிய இரண்டு நூற்களை வெளியிட்டு வினியோகம் செய்தோம். இப்போது அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையால் அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைகளை விளக்கி அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது அமுத வாய் திறந்து செப்பிய அருள் மொழிகள் சிலவற்றைத் தொகுத்து மதிப்பிற்குரிய **கொளத்தூர் P. அலவி காமில் ஸகாஃபி ஹழ்ரத்** அவர்கள் அரபு மொழியில் எழுதிய **'அல்உர்வதுல் உத்கா பி அஹாதீஸில் அத்கா'** என்ற மகத்தானதொரு நூலை, எங்கள் ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா சாரிடபிள் ட்ரஸ்டின் தலைவர் கண்ணியத்திற்குரிய மவ்லவி **U. முஹம்மது சலீம் ஸிராஜி ஹழ்ரத்** அவர்கள் எல்லோருக்கும் புரியும் வகையில் எளிய தமிழில் மொழி பெயர்த்து **'உத்தம நபி (ஸல்) நீட்டிய கயிறு'** என்ற பெயரில் எழுதிய நூலை வெளியிடுகின்றோம்.

நவீன குழப்பவாதிகளால் விமர்சிக்கப்பட்டு வரும் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைகள்தான் அல்லாஹ்வும் அவனது திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஒப்புக் கொண்ட இஸ்லாமின் உண்மையான கொள்கைகள் என்பதை இந்நூல் அண்ணல் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அமுத மொழிகளை-ஹதீஸ்களை ஆதாரமாக வைத்து நிரூபித்துக் காட்டுகிறது.

எனவே நவீன குழப்பவாதிகளின் பகுத்தறிவுப் பிதற்றல்களைக் கேட்டு வழி தவறிச் சென்று படுகுழியில் வீழாமலிருக்க இந்த நூல்

மிக மிக உதவும் என்பதால் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டுமென விழைகின்றேன்.

அருமையான இந்நூலை ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா சார்பில் வெளியிடுவதில் பெருமையடைகின்றோம். பல பணிகளுக்கும், சிரமங்களுக்குமிடையில் இந்நூலை மொழி பெயர்த்தெழுதிய மவ்லவி U. முஹம்மது சலீம் ஸிராஜி ஹழ்ரத் அவர்களுக்கு மேலும் இது போன்ற நூற்கள் பலவற்றை சமுதாயத்திற்கு வழங்கிட அல்லாஹ் நீண்ட ஆயுளையும், நிறைவான நலத்தையும் வழங்கி அருள்புரிய துஆச் செய்கின்றோம்.

இந்நூல் வெளி வருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் துஆவை சமர்ப்பிக்கின்றோம்.

அன்புடன்

மவ்லவி T.P. ஹாரிஸ் ஆலிம் ஸகாஃபி

முதல்வர்: ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா,

புழல், சென்னை.

மூல நூலாசிரியரின் முன்னுரை

உறுதி மிகுந்த கயிறான தூய இஸ்லாமை நமக்களித்து அருள் பாலித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்!

தூய்மைமிக்க நமது கண்மணி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும்,

புண்ணியம் மிகும் ஹதீஸ்களை உறுதியாகப் பற்றிப் பிடித்து, நிலையான மார்க்கத்தை உலகெங்கும் சென்று பிரச்சாரம் செய்த அஹ்லுல் பைத்துகளான நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினர், ஸஹாபாக்கள், தாபிஈன்கள் மற்றும் உறுதியான ஆதாரங்களை விளக்கிச் சொல்வதில் தமது மொத்த ஆற்றலையும் செலவு செய்த இமாம்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும், ஸலாமும் நிலவுவதாக!

இன்றைய புதிய தலைமுறை ஸுன்னத் வல்ஜமாஅத்தின் ஆதாரங்களைப் படிப்பதிலும், அதன் உண்மை நிலைகளைத் தெரிந்துக் கொள்வதிலும் பின் தங்கி இருக்கின்றனர். இந்தக் குறையை அகற்றி, ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைகளை அவர்களுக்குப் புரிய வைப்பதுவே இந்நூலின் நோக்கம்.

எனவே, ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைகள் மற்றும் மத்ஹபுகளின் சட்டங்களின் ஆதாரங்களான ஹதீஸ்கள் சிலவற்றையும், ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்களின் கூற்றுக்களையும், ஹதீஸ்கள்

பதிவு செய்யப்பட்ட நூற்களின் பெயர்களையும், ஹதீஸ் எண்களையும் இந்நூலில் தொகுத்துள்ளேன்.

மேலும் ஹதீஸ் அறிஞர்களின் கொள்கைகளையும், கருத்துக்களையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது என்பதால் அப்பெருமக்களுக்கு நான் செய்கின்ற எளிய சேவையுமாகும்.

இந்நேரத்தில் மார்க்கப் பிரச்சாரம் செய்தும், அரிய பல நூற்களை சமுதாயத்துக்கு வழங்கியும் சரித்திரம் படைத்த என் ஆசான்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

குறிப்பாக இந்நூலைத் தொகுத்தளிக்க ஆக்கமும், ஊக்கமும் தந்த எனது ஷெய்கும், வழிகாட்டியுமான **ஸுல்தானுல் உலமா காந்தபுரம் A.P. அபூபக்ர் ஹழ்ரத் கிப்லா** அவர்களுக்கும், எனது ஆசானும், வழிகாட்டியுமான **பொன்மள அப்துல் காதிர் முஸ்லியார்** அவர்களுக்கும் அல்லாஹ் நீடித்த ஆயுளையும், நிறைவான உடல் ஆரோக்கியத்தையும் வழங்கியருள்வானாக!

மேலும் இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த எனது நண்பர் அபூபக்ர் ஸகாஃபி அவர்களுக்கும், இந்நூலை ஜாமிஅத்துல் ஹிந்த் அல்இஸ்லாமியா சார்பில் வெளியிட உதவிகள் செய்த அதன் வெளியீட்டாளர்கள், வினியோகத் துறை இயக்குனர் ஆகியோருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் மாணவர்களுக்கும், புதிய தலைமுறையினருக்கும், அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்திட வேண்டுமெனவும், மறுமையின் பயன் மிகுந்த அமலாக இதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் துஆச் செய்கின்றேன்.

அலவி காமில் ஸகாஃபி

கொளத்தூர், மலப்புரம், கேரளா.

மூல நூலாசிரியரின் அனுமதிக் கடிதம்

P ALAVI SAQUAFI
Kolathur PO, Malappuram DT
Kerala, Pin: 679338
PH: 9645265700

السلام عليكم ورحمة الله وبركاته

கண்ணியம் நிறைந்த முஹம்மது சலீம் ஸிராஜி ஹஸ்ரத் அவர்கள் அறிய . . .
தாங்கள் நலமெனக் கருதுகின்றேன் . . .

அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கைகளை உறுதிப்படுத்துகின்ற வகையில் 125 ஹதீஸ்களும், சில அஸருகளும் அடங்கியதுதான் நான் எழுதிய "அல்உர்வதுல் உத்கா பி அஹாதீஸில் அத்கா" என்ற அரபி நூல் . . .

மேற்கூறிய நூலை தாங்கள் தமிழில் மொழியாக்கம் செய்வதாகச் சொல்லி எனக்கெழுதிய கடிதம் கிடைத்தது . . . மட்டற்ற மகிழ்ச்சி . . .

நூலின் உள்ளடக்கத்தில் சிறிதும் மாற்றமின்றியும், எவ்வித கருத்துச் சிதைவுகள் இல்லாமலும், வாக்கியங்களின் சரியான அர்த்தங்களுக்கு எந்த வித்தியாசங்கள் இல்லாமலும் இந்நூலை தமிழில் மொழியாக்கம் செய்திட நான் உங்களுக்கு அனுமதி தருகின்றேன் . . .

ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கைகளுக்குப் பயன்படும் வகையில் மிக்க மகிழ்ச்சியோடு இப்பணியை பூர்த்தி செய்திட அல்லாஹ் தங்களுக்கு உதவி செய்து அருள் புரிவானாக!!!

உங்களுடைய மார்க்கச் சேவைகளை இறைவன் கபூல் செய்து, உண்மையான ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கைக்குச் சேவை செய்ய நம் அனைவருக்கும் ஆரோக்கியமான நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவானாக!!!

முன்னோர்களின் பாதையில் உறுதியுடன் நின்று, ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கையை உயிர்ப்பிப்பதற்கான பிரச்சாரத்தினை தமிழ் நாட்டில் செய்து வருகின்றீர்கள் . . .

நீங்கள் செய்து வரும் எல்லா அழகிய முயற்சிகளுக்கும் எனது வாழ்த்துக்களையும், துஆவையும் தெரிவித்துக் கொள்கின்றேன் . . .

அல்லாஹ் நம் அனைவருக்கும் எல்லாவித பறக்கத்தையும் செய்வானாக!!!

இவண்
அலவி ஸகாஃபி கொளத்தூர்

10/06/2021
இர்ஷாதிய்யா, கொளத்தூர்

MEMBER OF MUSHAVARA SAMASTHA KERALA JAM-IYYATHUL ULAMA
GEN.SECRETARY OF MARKAZUTHAZKIYYATHIL IRSHADIYYA, KOLATHUR
SECRETARY OF SAMASTHA KERALA JAM-IYYATHUL ULAMA MALAPPURAM-DT

இந்தியன் கிராண்ட் முஃப்தி, கேரளா, கோழிக்கோடு மர்கஸ்
பல்கலைக் கழக வேந்தர், அபுல் அய்தாம், கமருல் உலமா
காந்தபுரம் A.P. அபூபக்ர் ஆலிம் பாகவி ஹழ்ரத்
தாமத் பரகாதுஹூ அவர்கள்
மூல நூலுக்கு வழங்கிய

அறிமுகவுரை

ஏக இறைவன் அல்லாஹ்வுக்கு புகழ் அனைத்தும்!

அவனே எம்மை சீரான பாதையில் நேர்வழி நடத்திச் செல்பவன். மிகத் தெளிவான, அப்பழுக்கற்ற அகீதா-கொள்கைகளில் எம்மைச் செலுத்துபவன். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சீர்மிகு சமுதாயத்தில் எம்மைப் பிறந்திடச் செய்தவன்.

வானத்தின் கீழ் உள்ளவர்களில் மிக மிகச் சிறந்தவரான, எம் உயிரினும் மேலான கண்மணி முஹம்மத் முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், பயபக்தியாளர்களும், உயர்வானவர்களுமான அன்னாரின் குடும்பத்தினர், தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் என்றும் நிலவுவதாக!

அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு இவ்வுலகைப் படைத்து, அதில் மனித, ஜின் இனங்களிலிருந்து பல்வேறு படைப்புகளை வாழ்ந்திடச் செய்தான். அவர்களுக்கு தவ்ஹீது மற்றும் இறை நம்பிக்கையை ஊட்டி நேர்வழியில் நடத்திச் சென்றிட தூதர்களை அனுப்பி வைத்தான்.

இறுதியாக அத்னான் கோத்திரத்திலிருந்து எம்முடைய தலைவரும், நேசரும், நபியுமான முஹம்மத் முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுதித் தூதராக இப்பாருலகிற்கு அனுப்பி வைத்தான் அல்லாஹ். இப்புனிதப் பெருமகனாருக்குப் பின் இறுதி நாள் வரை வேறொரு இறைத் தூதர் வரப் போவதில்லை.

முஹம்மத் முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவுக்குப் பின் சத்திய மார்க்கத்தின்பால் அழைப்பு விடுக்கும் பணியினை அன்னாரின் புனிதத் தோழர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அப்பெருமக்கள் இறை வேதம் அல்குர்ஆனையும், நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னத்து களையும் கற்றுக் கொடுப்பதில் மிகச் சிறப்பாகப் பணியாற்றினர்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்: 'உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் நீங்கள் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் வழி தவறிச் சென்றுவிட மாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் திருவேதமான அல்குர்ஆன் மற்றும் அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னத்துகள்!'

சத்தியம்! குர்ஆனும், ஸுன்னத்துகளும் எவ்வாறு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டதோ அதே அமைப்பில் ஸஹாபாப் பெருமக்களின் வாழ்வியல், வழிகாட்டுதல்கள் மூலமாக எந்தவொரு ஒளிவு, மறைவுமின்றி நாடுகள், இனங்களிடம் இன்றும் உயிர்ப்புடன் இருக்கின்றன. இந்த சங்கிலித் தொடர் எக்காலமும் என்றென்றும் தொய்வின்றித் தொடர்ந்துக் கொண்டிருக்கும்.' இன்ஷா அல்லாஹ்.

எனினும், கைசேதம் என்று கூற வேண்டும்! இக்காலத்தில் குறுமதியாளர்கள் சிலர் பெரும்பான்மை முஸ்லிம்கள் மீது குஃப்ர், ஷிர்க் அவதூறுகளை அங்கிங்கெனாதபடி எங்கும் வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

முஃஜிஸத் மற்றும் கராமத்துகளை அடிப்படையாக வைத்து நபிமார்கள், அவ்லியாப் பெருமக்கள் மீதுள்ள நேசத்தில் அவர்களிடம் வஸீலா, ஷஃபாஅத் தேடுவதால் கண்ணியமிகு முன்னோர்கள், இமாம்கள் மீதும் காஃபிர் பட்டத்தைச் சுமத்துகின்றனர்.

இவர்களின் இந்த அவதூறுகளைக் குறித்து நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்கனவே முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். உலக முடிவு நாளின் அடையாளங் களைப் பட்டியலிடும் போது 'இந்த சமுதாயத்தின் பிற்காலத்தவர், உம்மத்தின் முந்தைய தலைமுறையைச் சபிப்பர்' என்று அமுதவாய் திறந்து அருளினார்கள்.

சகோதரர் அலவி முஹம்மத் ஸகாஃபி அவர்கள் இஸ்லாமிய கொள்கை சம்பந்தமான நபி மொழிகளைத் தொகுத்து இக்காலத்திற்கு மிகத் தேவையான சிறப்பானதொரு நூலைக் கோர்வை செய்து நன்றிக்குரிய பெரும் பணியாற்றியுள்ளார்.

அவரது அரிய இப்பணியினை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!

நன்மைகள் நிறைந்த நற்கூலிகளை அவருக்கு வழங்கியருள்வானாக!

ஷெய்க் அபூபக்ர் அஹ்மத் மலபாரி ஷாஃபிஈ,
பொதுச் செயலாளர்,
அகில இந்திய ஸுன்னத் வல்ஜமாஅத் உலமா சபை,
வேந்தர், மர்கஸ் ஸகாஃபத்துஸ் ஸுன்னிய்யா பல்கலைக் கழகம்
கோழிக்கோடு, கேரளா.

GRAND
MUFTI OF
INDIA
مفتي الديار الهندية

الشيخ أبوبكر أحمد
Sheikh Abubakr Ahmad

06 محرم 1443 هـ
15 أغسطس 2021م

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

الحمد لله خالق التقوى،ورازق الجدوى،والصلاة والسلام على رسول الله ذي الأسوة الوثقى، وعلى اله وصحبه ذوي القدوة المثلى ،أمابعد.

فظلنا بسكوت العلماء وسكون الأمراء ترفع البدعة رأسها في انحاء مختلفة في قضيات متداولة. وبجهد الأكابر المتقدمين والمتأخرين العوام أنفسهم فهموا ما هو الحق و ما هو الباطل ولكن أمامهم ثلمة الدلائل وخندق الأناجل. هذا الكتاب الذي جمعه تلميذي علوي الثقافي وهو الذي ترجمه أخونا سليم سراجي كما تقوم بطبعه جامعة ناصر السنة بتشاني، ولاية تاملنادو ،كمافهمت ، باعتبار المعنى سيف مسلول، وباعتبار اللفظ تراب مبلول و باعتبار النفع دواء للمعلول.

جعل الله هذا السعي مشكورا و صير هذا العمل مبرورا.

مع أطيب التحيات

الشيخ أبوبكر أحمد

مفتي الديار الهندية

ورئيس جامعة مركز الثقافة السنية الإسلامية، كيرلا، الهند

Head Office: D7, Ground Floor, Nizamudheen West, New Delhi, India, 110013.
Camp Office: Markaz, Karanthur, Calicut, Kerala, India, 673571, +91 9847000002, info@grandmufti.in

சிறீலங்கா, புத்தளம், மதுரங்குளி
அல்ஜாமிஅதுல் அஸீஸிய்யா அரபிக் கல்லூரி நிறுவனர்
ஷம்ஸுல் ஆரிஃபீன் ஃபழீலத்துஷ் ஷெய்க்
அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி
அர்ரிஃபாஈ தாமத் பரகாதுஹு அவர்கள்
மொழி பெயர்ப்பு நூலுக்கு மனமுவந்து வழங்கிய

மதிப்புரை

بسم الله الرّحمن الرّحيم ،

الحمد لله الذي جعل محمّدا رحمة للعالمين مدحه بما لم يمدح به غيره من الانبياء والمرسلين،

والصّلاة والسّلام على سيّدنا ونبيّنا وشفيعنا محمّد صاحب الكمال خير من تضرب له اكباد المطي وتشد اليه الرحال وعلى آله وصحبه خير صحب وآل،

'அல்உர்வதுல் உத்கா' என்ற வார்த்தை, அல்குர்ஆனில் பின்வரும் இரண்டு இடங்களில் இடம் பிடித்துள்ளது.

لاَإِكْرَاهَ فِي الدِّينِ قَدْ تَبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ فَمَنْ يَكْفُرْ بِالطَّاغُوتِ وَيُؤْمِنْ بِاللَّهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَى لاَانْفِصَامَ لَهَا وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ، البقرة : ٢٥٦

'மார்க்கத்தில் நிர்பந்தமே இல்லை. ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. ஆகவே எவன் ஷெய்த்தானை நிராகரித்து விட்டு அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கின்றானோ அவன் திண்ணமாக பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ் நன்கு செவியுறுபவனாகவும், அதிகம் அறிந்தவனாகவும் உள்ளான்.' - ஸூரதுல் பகரா, வசனம் : 256

وَمَنْ يُسْلِمْ وَجْهَهُ إِلَى اللَّهِ وَهُوَ مُحْسِنٌ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَى وَإِلَى اللَّهِ عَاقِبَةُ الْأُمُورِ، لقمان : ٢٢

'யாரொருவர் தனது முகத்தை முழுமையாக அல்லாஹ்வின் பக்கம் திருப்பி, நன்மையும் செய்துக் கொண்டிருக்கிறாரோ அவர் திண்ணமாக பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டார்.'

- ஸூரத் லுக்மான், வசனம்: 22

'அல்உர்வதுல் உத்கா' என்ற இப்பதம் அல்குர்ஆனில் இடம் பெற்றிருப்பதுபோல அல்ஹதீதிலும் இடம் பிடித்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

இப்பதத்திற்கு 'பலமான கயிறு' என்று பொதுவாக தமிழில் அர்த்தம் கொடுத்துக் கொண்டாலும், 'பலமான கயிறு' என எதற்குச் சொல்வது? என தேடிப் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று முரண்படாத பின்வரும் கருத்துக்களைக் காணலாம்.

1. லாயிலாஹ இல்லல்லாஹ் 2. அல்குர்ஆன் 3. இஸ்லாம் 4. ஈமான் என கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இமாம் காழி இயாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் ஸுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியோர் 'அல்உர்வதுல் உத்கா' என்பது அண்ணல் நபிகள் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்பெயர்களில் ஒரு பெயர் என பதிவிட்டுள்ளனர்.

அதாவது யாரொருவர் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு நல்லமல்கள் செய்கின்றாரோ அவர், அருமை நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனும் பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார் என்பது மேற்சொன்ன இறை வசனங் களின் விளக்கமாகும் எனச் சொல்கின்றனர்.

அண்ணல் நபி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான உண்மைக்குண்மையான அன்பைப் போதிக்க வேண்டிய அவசியத் தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது.

அண்ணல் நபி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மண்ணின் உள்ளே வாழ்ந்து வருகின்றார்கள் என்றபோதிலும், அங்கிருந்தவாறு நமது அமல்களை அறிகிறார்கள், நமக்காகப் பிரார்த்திக்கிறார்கள், நாம் சொல்லும் ஸலவாத், ஸலாமுக்கு பதில் சொல்கிறார்கள் போன்ற கருத்துக்களை நமது பிள்ளைகளுக்குப் பாலாக ஊட்ட வேண்டும்.

இதுவே அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் அறிஞர்களின் பிரதான பணியாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறானதொரு அளப்பெரிய பணிக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து, அல்லாஹ், ரஸூலுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் பெரும் மதிப்புக்கும், சங்கைக்கும் உரிய முஹம்மது சலீம் ஸிராஜி ஹழ்ரத் அவர்கள் மொழியாக்கம் செய்து ‘அல்உர்வதுல் உத்கா-உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீட்டிய கயிறு’ எனும் பெயரில் வெளியிட்டுள்ள இச்சேவையை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

நாமும், அவரும் அண்ணல் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்களின் அருளால் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அல்லாஹ் வழி வகுப்பானாக! ஆமீன்!!

அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ்
மௌலானா குஷ்ஹாலி அர்ரிஃபாஈ
நிறுவனர்: அல்ஜாமிஅதுல் அஸீஸிய்யா அரபிக் கல்லூரி
விருதோடை, மதுரங்குளி புத்தளம், சிறீலங்கா,

இந்தியன் கிராண்ட் முஃப்தி, கேரளா, கோழிக்கோடு மர்கஸ்
பல்கலைக் கழக வேந்தர், அபுல் அய்தாம், கமருல் உலமா
காந்தபுரம் A.P. அபூபக்ர் ஆலிம் பாகவி ஹழ்ரத்
தாமத் பரகாதுஹுு அவர்கள் மனமுவந்து
மொழி பெயர்ப்பு நூலுக்கு வழங்கிய

வாழ்த்துரை

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால் . . .

இறையச்சத்தை உருவாக்கிய, சத்தியத்தை அருளிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும்!

உறுதியான முன்மாதிரிக்குச் சொந்தக்காரரான அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், சிறப்பான வழிகாட்டிகளான அன்னாரின் குடும்பத்தினர், தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் என்றும், எப்போதும் நிலவுவதாக!!

அறிஞர்களின் மௌனமும், சமுதாயப் பிரமுகர்களின் அலட்சியமும் பல்வேறு விஷயங்களில், பல பகுதிகளிலும் பித்அத்துகள் தலையெடுப்பதற்குக் காரணமாக, ஏதுவாக அமைந்து விடுகின்றன என்று எண்ணுகின்றேன்.

முன்னோர்களும், பின்னோர்களுமான பேரறிஞர்களின் பெருமுயற்சியால் சாதாரண மக்கள் உண்மை எது, பொய்மை எது என்பதைப் புரிந்துக் கொண்டனர். எனினும் அவர்களுக்கு முன்னால் ஆதாரங்கள் பற்றிய ஞானம் குறைவாக உள்ளது, நூற்களைக் குறித்த அறிவும் குறைவாக உள்ளது.

‘அல்உர்வதுல் உத்கா பி அஹாதீஸில் அத்கா’ எனும் நூலை எனது மாணவர் அலவி ஸகாஃபி அவர்கள் தொகுத்தெழுதியுள்ளார்கள்.

அதனை சகோதரர் முஹம்மது சலீம் ஸிராஜி அவர்கள் ‘உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீட்டிய உறுதியான கயிறு’ என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்து சென்னை நாஸிருஸ் ஸுன்னா சாரிடபிள் ட்ரஸ்ட் சார்பில் வெளியிடப்படுகிறது.

இந்நூலின் அர்த்தங்கள் உருவப்பட்ட வாளைப் போன்றும், இதன் வார்த்தைகள் ஈரமான –செழுமையான மண்ணைப் போன்றும், இதன் பயன் நோயுற்றவனுக்கு அருமருந்தைப் போன்றும் அமைந்திருக்கிறது என நான் புரிந்துள்ளேன்.

இந்த நன்முயற்சியை அல்லாஹ் நன்றிக்குரிய ஒரு ஸாலிஹான அமலாக ஏற்றுக் கொள்வானாக!

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன்

15-08-2021
06 முஹர்ரம் 1443

ஷெய்க் அபூபக்ர் அஹ்மத்,
இந்தியன் க்ரான்ட் முஃப்தி,
தலைவர்:
மர்கஸ் ஸகாஃபதுஸ் ஸுன்னிய்யா இஸ்லாமிய்யா,
கேரளா, கோழிக்கோடு, இந்தியா.

மொழி பெயர்ப்பாசிரியரின் முன்னுரை

அனைத்து புகழுக்கும், ஆற்றல்களுக்கும் அதிபதியாய் அமைந்த ஏக நாயன் அல்லாஹ்வின் அழகுத் திருநாமத்தால் . . .

அகிலத்தின் பேரொளி முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலாமும் ஸலவாத்தும் நாமணக்க, இதயம் நிறைய மொழிந்தவனாய் . . .

உங்கள் கரங்களில் தவழும் இந்நூல் வெறுமொரு சாதாரணப் புத்தகமல்ல!

அண்ணல் நயுபில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது செப்பு வாய் திறந்து செப்பிய மணி முத்துக்களின் தொகுப்பு.

அவை ஒவ்வொன்றும் விலை மதிக்க முடியாத மாணிக்கங்கள்.

அவர்களின் வாழ்வியலும், வழிகாட்டுதல்களும் ஈருலகப் பேறுகளை வாரித் தரும் பெறுமதி மிக்கவை.

இன்றைய கால கட்டம் . . .

அகிலத்திற்கே வழி காட்டிக் கொண்டிருக்கும் இஸ்லாமியத் தத்துவங்கள் —

முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் சில அதிநவீன சிந்தனையாளர்களால், ஏகத்துவ சீர்திருத்தவாதிகளால், அனாச்சாரங்

களை களைய வந்த அவதாரங்களாய் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் சில வேஷதாரிகளால் சின்னா பின்னப்படுத்தப்பட்டு, சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவர்கள் தமது மேம்பட்ட வாழ்க்கை வசதி, வாய்ப்புகள், அதிகாரத்திற்காக இஸ்லாமைத் தகர்த்திடவும், முஸ்லிம்களை பல கூறுகளாய் பிளவுபடுத்தவும் முனைப்புடன் செயல்படுகின்றனர்.

வஹ்ஹாபிசம் என்ற விஷ விதை என்று ஊன்றப்பட்டதோ அன்று முதல் இஸ்லாமிய சமூகம் பேரிழப்புகள் பலவற்றைச் சந்தித்து வருகிறது.

இணை வைப்பிலிருந்து தூய்மைப்படுத்துகின்றோம், வழி கேட்டிலிருந்து விடுதலை பெற்றுத் தருகின்றோம் என புறப்பட்டு வந்த இந்த நாசகாரக் கும்பலின் கைங்கரியத்தால் சமாதான வாழ்க்கை தொலைந்து போயிற்று. ஒற்றுமை காணாமல் போய் விட்டது. வீட்டிலும், குடும்பத்திலும், ஊரிலும் எங்கும் எப்போதும் பிரச்சனைகள்.

இஸ்லாமின் உன்னதமான சட்டங்களைத் தெரியாத, அல்லது தெரிந்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிட்டாத சாதாரண இளைஞர் களைத் தம் வலையில் வீழ்த்தி, மூளைச் சலவை செய்து, உசுப்பேற்றி விடப்பட்ட வாலிபர்கள் தம் இளமை வாழ்வைத் தொலைத்து வெஞ்சிறைகளில் வெந்துருகிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் வார்த்தை ஜாலங்களாலும், பிரச்சார உத்திகளாலும் கவரப்பட்டு மனதைப் பறிகொடுத்த சாதாரண ஜனங்கள், இஸ்லாம் நற்செயல்கள் என்று கற்றுத் தந்தவை பலவற்றையும் ஒதுக்கித் தள்ளும் மன நிலைக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே வளரும் தலைமுறையை ஒழுக்கமும், இறைநம்பிக்கையும், இஸ்லாமிய உணர்வும் மிக்கதாய் வார்த்தெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம், ஈமானுள்ளவர்களின் கடமை.

ஒவ்வொருவரும் இஸ்லாமின் இனிய கொள்கைகளையும், அனுஷ்டானங்களையும் ஓரளவுக்கேனும் தெரிந்து வைத்திருக்க வேண்டியதும் அவசியம்.

அந்த வகையில் ஷிர்க் என்று கிறுக்கத்தனமாய் குழப்பம் விளைவிக்கும் புதுமை வாதிகளால் பட்டியலிடப்படும் இஸ்லாமில் ஆதாரப்பூர்வமான பல விஷயங்கள் பற்றிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள் மொழிகளைத் தொகுத்து **'அல்உர்வதுல் உத்கா பிஅஹாதீஸில் அத்கா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்'** எனும் பெயரில் கேரளாவின் மலப்புரம் மாவட்டம் குளத்தூரைச் சார்ந்த தலைசிறந்த பேச்சாளரும், எழுத்தாளரும், மர்கஸ் இர்ஷாதிய்யா பொதுச் செயலாளருமான **மவ்லானா அலவி காமில் ஸகாஃபி ஹழ்ரத்** அவர்கள் அரபி மொழியில் நூலொன்று எழுதியுள்ளார்கள்.

அருமையான இந்நூலை அன்னாரின் அனுமதி பெற்று **'உத்தம நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீட்டிய உறுதிமிக்க கயிறு'** என்ற பெயரில் தமிழ்படுத்தி உங்கள் கரங்களில் தந்துள்ளேன்.

கீழ்க்காணும் செய்தி கண்ணியத்திற்குரிய மவ்லானா அலவி காமில் ஸகாஃபி ஹழ்ரத் அவர்கள் எழுதியுள்ள இந்நூலின் சிறப்பை எடுத்துரைக்கப் போதுமானது.

நவீன குழப்பவாதிகளால் இஸ்லாமிய சமூகத்தில் பல்வேறு குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும் தலை தூக்கியுள்ள கால கட்டத்தில், அஹ்லுஸ் ஸுன்னாவின் உண்மையான மார்க்க அறிவும், ஆற்றலும் பெற்ற ஒரு உத்தம சமுதாயத்தை வார்த்தெடுக்க வேண்டுமென்ற மகத்தான லட்சியத்தை முன் வைத்து மார்க்கக் கல்வியோடு, உலகக் கல்வியையும் இணைத்துக் கற்பிக்கும் நன்னோக்கில் 2013ஆம் ஆண்டு துவங்கப்பட்டது ஜாமிஅத்துல் ஹிந்த் அல்இஸ்லாமியா எனும் பல்கலைக் கழகம்.

இன்றைக்கு ஜாமிஅதுல் ஹிந்த் அல்இஸ்லாமியா பல்கலைக் கழகத்தின் கீழ் பல நூறு ஷரீஅத் கல்லூரிகள், தஃவா கல்லூரிகள், பள்ளி தர்ஸுகள் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

பத்தாம் வகுப்பு. ப்ளஸ் 2 மற்றும் பட்டப் படிப்புகள் படித்தவர்கள் ஜாமிஆவில் இணைந்து உலகக் கல்வியோடு சேர்த்து மார்க்கக் கல்வியும் கற்றுத் தேறி வருகின்றனர்.

தற்போது பள்ளிப் படிப்பை முடிக்காத முதிர்ந்தவர்களும், மத்ரஸாக் கல்வியை பாதியில் விட்டவர்களும் மார்க்கக் கல்வியை முழுமை யாகப் பெற்றிட வாய்ப்பளிக்கும் வகையில் ஸ்கூல் ஆஃப் டிஸ்டன்ஸ் எஜுகேஷன் (School of Distance Education) என்ற துறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் தஃப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹ் ஆகிய துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்தி மேலதிக ஆய்வுகள் நடத்தும் வசதிகளும் ஜாமிஅதுல் ஹிந்த் சார்பில் பல்வேறு கல்லூரிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இத்துணை சிறப்புகள் வாய்ந்த ஜாமிஅதுல் ஹிந்த் அல்இஸ்லாமியா பாடத் திட்டத்தில் இந்நூலும் இணைக்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகிறது.

இந்நூலின் சிறப்புக்கு இதைவிட மேலான சான்றுகள் தேவையில்லை.

அனைவருக்கும் பயன் தரும் மிக்கச் சிறப்பான இந்நூல் வெளிவருவதில் எனக்கு மிகுந்த உறுதுணையாக இருந்து உற்சாகமூட்டிய பெருமகனார் —

சிறீலங்காவைச் சார்ந்த பேரறிஞர், ஷம்ஸுல் ஆரிஃபீன், அபுல் கைராத், ஃபழீலத்துஷ் ஷெய்க், **அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி அர்ரிஃபாஈ சர்க்கார்** தாமத் பரகாதுஹு அவர்கள் முக்கியமானவர்களாவர்.

யாருடைய உதவியையும் எதிர்பாராமல் தமது சொந்த உழைப்பில் அல்ஜாமிஅதுல் அஸீஸிய்யா எனும் அரபிக் கல்லூரியை சிறீலங்காவில் உருவாக்கி மிகுந்த சிறப்புடன் நடத்தி வருகிறார்கள்.

கண்ணியத்திற்குரிய ஷெய்க் நாயகமவர்கள், குவலயம் போற்றும் குதுப் நாயகம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் வாழும் பக்தாது மாநகரில் மூன்றாண்டுகள் தங்கி இருந்து தலை சிறந்த மார்க்க அறிஞர்களிடம் கல்வி கற்றுத் தேறிய பேரறிஞர் பெருமகனாவார்கள்.

பேரறிஞராகவும், பெரும் ஞானியாகவும் திகழ்ந்தாலும் பணிவைத் தம் அணிகலனாகக் கொண்டவர்கள் ஷெய்குனா குஷ்ஹாலி அவர்கள்.

சிறீலங்கா மட்டுமின்றி இந்தியா, பாக்கிஸ்தான், அரபு நாடுகள் என உலகின் பல்வேறு பகுதிகளில் ஷெய்குனா அவர்களின் முரீதுகள் பெருமளவில் வாழ்கின்றனர்.

பெருமானார் நயுபில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழித் தோன்றலான ஸெய்யித் வம்சத்தைச் சார்ந்த ஷெய்கு நாயகம் அவர்கள் தம்முடைய மாணவர்கள் உட்பட அனைவரிடமும் மிகவும் மரியாதையுடனும், அன்புடனும், பரிவுடனும், பணிவுடனும் நடந்துக் கொள்ளும் பண்பாளரும், பழகுவதற்கு இனிமையான சீதேவியும் ஆவார்கள்.

மரியாதைக்குரிய ஷெய்குனா சர்க்கார் அவர்கள் எளியவனின் இந்நூலுக்கு அழகியதொரு மதிப்புரை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கும்,

கண்ணியத்திற்குரிய இந்தியன் கிராண்ட் முஃப்தியும், அகில இந்திய ஸுன்னத் வல் ஜமாஅத் உலமா சபை பொதுச் செயலாளரும், கோழிக்கோடு, மர்கஸ் ஸகாஃபத்துஸ் ஸுன்னிய்யா பல்கலை கழக வேந்தருமான அபுல் அய்தாம், கமருல் உலமா **காந்தபுரம் A.P. அபூபக்ர் பாகவி ஹழ்ரத்** தாமத் பரகாதுஹு அவர்கள் இந்நூலுக்குச் சிறப்பான தொரு வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கும்,

இந்நூலை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட விருப்பம் தெரிவித்தபோது மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு அனுமதி தந்ததோடு, அனுமதியுரை வழங்கி துஆச் செய்த கேரள குழப்பவாதிகளின் சிம்ம சொப்பனமாகத் திகழும் மிகச் சிறந்த அறிஞரும், விவாதப் புயலும், மர்கஸ் இர்ஷாதிய்யா பொதுச் செயலாளருமான பாசத்துக்குரிய **மவ்லானா அலவி காமில் ஸகாஃபி ஹழ்ரத்** அவர்களுக்கும்,

இந்நூலை மொழியாக்கம் செய்திடவும், முழுமை பெறவும் உற்சாகமூட்டி, உடனிருந்து ஒத்துழைப்பு நல்கி, திருத்தங்கள் செய்து தந்த பண்பாளர், எனது பாசத்திற்குரிய சகோதரர் எங்கள் ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா அரபிக் கல்லூரி முதல்வர் **மவ்லானா T.P. ஹாரிஸ் ஆலிம் ஸகாஃபி ஹழ்ரத்** அவர்களுக்கும்,

இந்நூலை சரிபார்த்து, பிழை திருத்தம் செய்து தந்த அன்பிற்குரிய சகோதரர் **M. அப்துல் கரீம் அல்ஜீலி** (பிபிஎஸ். புறம், தேங்காய்பட்டணம்) அவர்களுக்கும்,

என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவர்களின் மார்க்கப் பணிகள் மென்மேலும் தொடர அல்லாஹ் நிறைவான நல்லருள் புரிந்திட துஆச் செய்கின்றேன்.

நற்செயல்களுக்கு மனம் கோணாமல் உள்ளன்புடன் வாரி வழங்கும் வள்ளல், தனது தாயார் ஆயிஷா அவர்கள் பெயரில் பெருஞ்செலவில் பள்ளி வாசல் கட்டி வக்ஃப் செய்த மாண்பாளர், நற்பண்புகள் கொண்ட எங்கள் ஜாமிஆவின் காப்பாளர், காதிமுல் மில்லத், முஹிப்புல் உலமா **அல்ஹாஜ் பிஸ்மி இனாமுல்லா யூனுஸ் (கொல்லாபுரம்)** அவர்களும்,

சென்னையில் பல பள்ளிவாசல்கள் கட்டிய பண்பாளர், தொழில் அதிபர், ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கைகளைப் பரப்பிட வாரி வழங்கும் கொடையாளி **அல்ஹாஜ் K.A. ஷாபு (பட்ரோடு)** அவர்களும்,

கமருல் உலமா காந்தபுரம் A.P. அபூபக்கர் ஹழ்ரத் அவர்கள் போன்ற மேதையர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட தொழில்

அதிபரும், சமுதாய ஆர்வலரும், கொடை வள்ளலுமான **அல்ஹாஜ் K.A. மன்ஸூர்** அவர்களும்

இந்நூல் உங்கள் கரங்களில் தவழ்ந்திட பொருளுதவி வழங்கி உற்சாகமூட்டிய பெருமக்களாவர். எனது உளமார்ந்த நன்றிகளை இப்பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் தொழில்களிலும், ஆயுளிலும் பரக்கத்தை அல்லாஹ் தந்தருள துஆச் செய்கின்றேன்.

இந்நூலை மிக நேர்த்தியாக அச்சுக் கோர்வை செய்து அழகுறச் செய்த ஜமாலி ஆர்ட் கேலரி நிறுவனர் நேசத்திற்குரிய **மவ்லவி S.S. அப்துல் கனி ஜமாலி ஹழ்ரத்** அவர்களுக்கும்,

இந்நூல் வெளிவர உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

எனது இச்சிறிய முயற்சியை பேரருளாளன் அல்லாஹ் ஒரு ஸாலிஹான அமலாக ஏற்று அருள் புரிவானாக!

யாஅல்லாஹ்! உன்னையும், நீ நேசித்தவர்களையும் பேரன்பு கொண்டு, மறுமைப் பயன்களைப் பெறும் பெரும் பாக்கியத்தை எமக்கும், எம்மைச் சார்ந்தவர்களுக்கும் தந்தருள்வாயாக!

நீ அருள் புரிந்த அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தில் எங்களையும், எங்கள் சந்ததியினரையும் என்றும் நிலை பெறச் செய்வாயாக!

பொல்லாதவர்களின் பொல்லாங்குகளை விட்டும், கொள்கைக் கோமாளிகளின் தவறான வழிகாட்டுதல்களை விட்டும் இந்த சமுதாயத்தைக் காப்பாற்றுவாயாக!

அன்பும், அருளும் நிறைந்த அல்லாஹ் எல்லாருக்கும் நேர்வழிகாட்டி குழப்பவாதிகளின் குழப்பங்களிலிருந்து எல்லோரையும் காப்பானாக!

அன்புடன்

மவ்லவி U. முஹம்மது சலீம் ஸிராஜி,
தலைவர், ஜாமிஆ நாஸிருஸ் ஸுன்னா சாரிடபிள் ட்ரஸ்ட்,
புழல், சென்னை.

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

العروة الوثقى

فَأَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَلْقَمَةَ بْنِ وَقَّاصٍ اللَّيْثِيِّ يَقُولُ: سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رضي الله عنه عَلَى الْـمِنْبَرِ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ صلى الله عليه وآله وسلم يَقُولُ: إِنَّمَـا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ، وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى، فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى دُنْيَا يُصِيبُهَا أَوْ إِلَى امْرَأَةٍ يَنْكِحُهَا فَهِجْرَتُهُ إِلَى مَاهَاجَرَ إِلَيْهِ.

ஹழ்ரத் உமர் பின் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மிம்பர் மீது நின்று சொன்னார்கள்:

‘செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்து அமைகின்றன. ஒவ்வொருவரும் தாம் எண்ணியதைக் கிடைக்கப் பெறுவர். ஒருவருடைய ஹிஜ்ரத் உலகைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதனை அவர் அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டிருந்தால் அவளை மணப்பார். எனவே ஒருவரது ஹிஜ்ரத் எதனை நோக்கமாகக் கொண்டுள்ளதோ அதனையே அவர் அடைவார் என்று நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதைச் செவியேற்றேன்.’

அறிவிப்பவர்: அல்கமா பின் வக்காஸ் அல்லைஸீ ரழியல்லாஹு அன்ஹு

நூல் : புகாரி

ஹதீஸ் எண்: 1

بسم الله الرحمن الرحيم

الاعْتِصَامُ بِالسُّنَّةِ وَالْجَمَاعَةِ وَالتَّحْذِيرُ عَنِ الْبِدْعَةِ

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தை இறுகப் பிடித்தல் மற்றும் பித்அத் எனும் வழிகேட்டிலிருந்து எச்சரிக்கையாக இருத்தல்

أَخْرَجَ التِّرْمِذِي عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو، رضي الله عنهما قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لَيَأْتِيَنَّ عَلَى أُمَّتِي مَا أَتَى عَلَى بَنِي إِسْرَائِيلَ حَذْوَ النَّعْلِ بِالنَّعْلِ، حَتَّى إِنْ كَانَ مِنْهُمْ مَنْ أَتَى أُمَّهُ عَلَانِيَةً لَكَانَ فِي أُمَّتِي مَنْ يَصْنَعُ ذَلِكَ، وَإِنَّ بَنِي إِسْرَائِيلَ تَفَرَّقَتْ عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً، وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَى ثَلَاثٍ وَسَبْعِينَ مِلَّةً، كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً وَاحِدَةً، قَالُوا : وَمَنْ هِيَ يَا رَسُولَ اللهِ؟ قَالَ: "مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِي".

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘பனூ இஸ்ரவேலர்கள் மீது எவையெல்லாம் நிகழ்ந்தனவோ அவையெல்லாம் எனது உம்மத்தின் மீதும் நிகழும். ஒரு செருப்பு மற்றொரு செருப்புடன் எவ்வாறு ஒப்பாக உள்ளதோ அதுபோல!

பனூ இஸ்ரவேலர்களில் தம் தாயிடம் தவறான விஷயங்களுக்காக சென்றவர் இருந்தால் அது போன்றே என் உம்மத்தில் உள்ளவர்களும்

தம் தாயிடம் வருவர். நிச்சயமாக பனூ இஸ்ரவேலர்கள் 72 பிரிவினராகப் பிரிந்தனர். என் உம்மத்தினர் 73 பிரிவினராகப் பிரிவர். அவர்களில் ஒரு பிரிவினரைத் தவிர எல்லோரும் நரகைச் சேர்ந்தவர்களாவர்.'

'அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! அந்த ஒரு பிரிவினர் யார்? என ஸஹாபாக்கள் கேட்டனர்.

நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: 'நானும் எனது தோழர்களும் எந்த வழியில் செல் கின்றோமோ அவ்வழியைப் பின் பற்றுபவர்கள்'

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: திர்மிதி 2641

وَفِي رِوَايَةٍ: عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ: افْتَرَقَتْ بَنُو إِسْرَائِيلَ عَلَى إِحْدَى وَسَبْعِينَ فِرْقَةً وَأَنَّ هَذِهِ الْأُمَّةَ سَتَفْتَرِقُ عَلَى اثْنَتَيْنِ وَسَبْعِينَ فِرْقَةً، إِحْدَى وَسَبْعُونَ فِي النَّارِ وَوَاحِدَةٌ فِي الْجَنَّةِ. قَالُوا: يَارَسُولَ اللهِ مَا هَذِهِ الْوَاحِدَةُ ؟ قَالَ: أَهْلُ السُّنَّةِ وَالْجَمَاعَةِ.

இன்னொரு அறிவிப்பு :

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'பனூ இஸ்ரவேலர்கள் 71 பிரிவினராகப் பிரிந்தனர். நிச்சயமாக (என்னுடைய) இந்த சமுதாயத்தினர் 72 பிரிவினராகப் பிரிவர். அவர்களில் 71 பிரிவினரும் நரகைச் சார்ந்தவர்கள்.ஒரேயொரு பிரிவினர் மட்டும் சுவனத்தில் இருப்பர்.'

'அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! அந்த ஒரு பிரிவினர் யார்?' என ஸஹாபாக்கள் கேட்க, 'அவர்கள் தான் அஹ்லுஸ் ஸுன்னத்

வல் ஜமாஅத்தினர்' என நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலுரைத்தார்கள். நூல் : திர்மிதி 2676

أَخْرَجَ ابُو دَاوُدَ عَنْ عِرْبَاضِ بْنِ سَارِيَةَ قَالَ: صَلَّى بِنَا رَسُولُ اللهِ ﷺ ذَاتَ يَوْمٍ، ثُمَّ أَقْبَلَ عَلَيْنَا فَوَعَظَنَا مَوْعِظَةً بَلِيغَةً ذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ وَوَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، فَقَالَ قَائِلٌ: يَا رَسُولَ اللهِ كَأَنَّ هَذِهِ مَوْعِظَةُ مُوَدِّعٍ، فَمَاذَا تَعْهَدُ عَلَيْنَا؟ فَقَالَ: أُوصِيكُمْ بِتَقْوَى اللهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ، وَإِنْ كانَ عَبْدًا حَبَشِيًّا، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ بَعْدِي فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ، تَمَسَّكُوا بِهَا وَعَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ، فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ، وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ.

இர்பாழ் இப்னு ஸாரியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

'ஒரு நாள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இமாமாக நின்று எங்களுக்குத் தொழ வைத்தார்கள். பின்னர் பொருள் நிறைந்ததோர் உபதேசம் செய்தார்கள். அதைக் கேட்டு எங்கள் கண்கள் கண்ணீர் வடித்தன, உள்ளங்கள் நடுங்கின.

ஒருவர் கேட்டார்: 'அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே ! தங்களது உபதேசம் விடைபெற்றுச் செல்லும் ஒருவரின் உபதேசத்தைப் போன்றல்லவா உள்ளது! எங்களுடன் தாங்கள் என்ன உடன்படிக்கை செய்கின்றீர்கள் ?'

நபிகள் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

‘‘நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டும் என வஸிய்யத்துச் செய்கின்றேன். உங்களின் தலைவருக்குக் கட்டுப்பட வேண்டும். அவர் கறுத்த அடிமையாக இருந்தாலும் சரியே! நிச்சயமாக எனக்குப் பின்னர் உங்களில் வாழ்பவர்கள் ஏராளமான கருத்து வேற்றுமை களைக் காண்பர். அப்போது எனது ஸுன்னத்தையும், நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் வழிமுறைகளையும் பற்றிப் பிடியுங்கள்.

அவற்றை உங்கள் கடவாய்ப் பற்களால் இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள். புதிதாக உருவாக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து உங்களை எச்சரிக்கின்றேன். நிச்சயமாக புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்தும் பித்அத் ஆகும். எல்லா பித்அத்களும் வழிகேடாகும்.

நூல் : அபூதாவூத் 4607

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: يَكُونُ فِي آخِرِ الزَّمَانِ دَجَّالُونَ كَذَّابُونَ، يَأْتُونَكُمْ مِنَ الْأَحَادِيثِ بِمَا لَمْ تَسْمَعُوا أَنْتُمْ، وَلَا آبَاؤُكُمْ، فَإِيَّاكُمْ وَإِيَّاهُمْ، لَا يُضِلُّونَكُمْ، وَلَا يَفْتِنُونَكُمْ.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

‘இறுதி காலத்தில் தஜ்ஜால்களும், பொய்யர்களும் தோன்றுவர். நீங்களும், உங்கள் மூதாதையர்களும் கேட்டிராத பல செய்திகளை அவர்கள் உங்களுக்குக் கூறுவர்.

உங்களை எச்சரிக்கின்றேன். அவர்களை விட்டு உங்களை எச்சரிக்கின்றேன். அவர்கள் உங்களை வழி தவறச் செய்து விடாமல் இருக்கட்டும். உங்களை, குழப்பத்தில் ஆழ்த்திவிடாமல் இருக்கட்டும்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு

நூல் : முஸ்லிம்

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ ابْنِ عُمَرَ رضي الله عنهما قَالَ: ذَكَرَ النَّبِيُّ ﷺ: اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِي شَامِنَا، اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِي يَمَنِنَا قَالُوا: وَفِي نَجْدِنَا ؟ قَالَ: اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِي شَامِنَا، اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِي يَمَنِنَا قَالُوا: يَا رَسُولَ اللهِ، وَفِي نَجْدِنَا؟ فَأَظُنُّهُ قَالَ فِي الثَّالِثَةِ: هُنَاكَ الزَّلَازِلُ وَالْفِتَنُ، وَبِهَا يَطْلُعُ قَرْنُ الشَّيْطَانِ .

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘இறைவா! எங்கள் ஷாம் நாட்டிற்கும், எமன் நாட்டிற்கும் பரக்கத் செய்வாயாக!’ என பிரார்த்தனை செய்தார்கள். அப்போது எங்கள் நஜ்து நாட்டிற்கும் துஆ செய்யுங்கள்’ என மக்கள் வேண்டினர். இவ்வாறு மூன்று முறை நடந்ததாக நான் கருதுகிறேன்.

இறுதியாக நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அங்குதான் பூகம்பங்களும், குழப்பங்களும் ஏற்படும். அங்குதான் ஷைத்தானின் கொம்பு தோன்றும்’ என்றுரைத்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு

நூல் : புகாரி 7094

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي سَعِيدِ الْخُدْرِيِّ أَنَّهُ قَالَ: بَيْنَمَا نَحْنُ عِنْدَ رَسُولِ اللهِ ﷺ وَهُوَ يَقْسِمُ قِسْمًا، أَتَاهُ ذُو الْخُوَيْصِرَةِ ، وَهُوَ رَجُلٌ مِنْ بَنِي تَمِيمٍ فَقَالَ، يَا رَسُولَ اللهِ اعْدِلْ، فَقَالَ: وَيْلَكَ، وَمَنْ يَعْدِلُ إِذَا لَمْ أَعْدِلْ، قَدْ خِبْتَ وَخَسِرْتَ إِنْ لَمْ أَكُنْ أَعْدِلُ . فَقَالَ عُمَرُ: يَا رَسُولَ اللهِ، ائْذَنْ لِي فِيهِ فَأَضْرِبَ عُنُقَهُ؟ فَقَالَ: دَعْهُ، فَإِنَّ لَهُ أَصْحَابًا يَحْقِرُ أَحَدُكُمْ صَلَاتَهُ مَعَ صَلَاتِهِمْ، وَصِيَامَهُ مَعَ صِيَامِهِمْ، يَقْرَءُونَ الْقُرْآنَ لَا يُجَاوِزُ تَرَاقِيَهُمْ، يَمْرُقُونَ مِنَ الدِّينِ كَمَا يَمْرُقُ السَّهْمُ مِنَ الرَّمِيَّةِ، يُنْظَرُ إِلَى نَصْلِهِ فَلاَ يُوجَدُ فِيهِ شَيْءٌ ....الخ.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஹவாஸின் போரில் கிடைத்த கனீமத்) பொருட்களைப் பங்கிட்டுக் கொண்டிருந்த போது நாங்களும் அவர்களுடன் இருந்தோம், அந்நேரத்தில் பனூ தமீம் கோத்திரத்தைச் சார்ந்த துல் குவைஸிரா என்பவர் வந்து 'அல்லாஹ்வின் திருத் தூதரே! நீதமாக நடந்து கொள்ளுங்கள்!' என்றார்.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உனக்கு நாசமேற்படுவதாக! நான் நீதியாக நடந்துக் கொள்ளவில்லை என்றால் வேறு யார் தான் நீதியாக நடப்பர்? நான் நீதியாக நடக்க வில்லை என்றால் நீ இழப்புக்குள்ளாகி நஷ்டமடைந்து விடுவாய்' என்றுரைத்தார்கள்.

உடனே உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! இவர் விஷயத்தில் எனக்கு அனுமதி தாருங்கள், இவரது கழுத்தைத் துண்டித்து விடுகின்றேன்' எனக் கேட்டார்கள்.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

'அவரை விட்டு விடுங்கள். நிச்சயமாக இவருக்கு தோழர்கள் சிலர் உள்ளனர். அவர்களுடைய தொழுகைகளை உங்களுடைய தொழுகையுடனும், அவர்களுடைய நோன்புகளை உங்களுடைய நோன்புகளுடனும் ஒப்பிட்டால் உங்களுடைய தொழுகை, நோன்புகளை அற்பமானதாகக் கருதுவீர்கள். (அந்த அளவு அவர்களுடைய வணக்க, வழிபாடுகள் அதிகமாக இருக்கும்.) அவர்கள் குர்ஆன் ஓதுவர். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழியைத் தாண்டாது. வேட்டைப் பிராணியைவிட்டு (அதன் உடலைத் துளைக்கும்) அம்பு (உடலின் மறுபக்கமாக) வெளியேறிச் செல்வதைப்

போல மார்க்கத்தை விட்டு அவர்கள் வெளியேறிச் செல்வர். (அந்த பிராணியின் உடலைத்துளைத்து வெளியேறியதற்கான அடையாளம் எதுவும் இருக்கிறதா? என்று) அம்பின் முனை பார்க்கப்படும். ஆனால் அதில் (அடையாளம்) எதுவும் காணக் கிடைக்காது.

அறிவிப்பவர்: அபூ ஸயீதுல் குத்ரி ரழியல்லாஹுு அன்ஹுு
நூல் : புகாரி : 3610

أَخْرَجَ ابْنُ مَاجَة عَنْ حُذَيْفَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: لاَ يَقْبَلُ اللهُ لِصَاحِبِ بِدْعَةٍ صَوْمًا وَلَا صَلاَةً وَلَا صَدَقَةً وَلَا حَجًّا وَلَا عُمْرَةً وَلَا جِهَادًا وَلَا صَـرْفًا وَلَا عَدْلًا يَخْرُجُ مِنَ الْإِسْلَامِ كَمَا تَخْرُجُ الشَّعَرَةُ مِنَ الْعَجِينِ.

இறைத்தூதர் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

‘பித்அத்காரனின் நோன்பையோ, தொழுகையையோ, ஸதகாவையோ, ஹஜ்ஜையோ, உம்ராவையோ, ஜிஹாதையோ, ஈட்டுத்தொகையையோ, நீதத்தையோ அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். குழைத்த மாவிலிருந்து (எந்த பிடிமானமும் இல்லாமல்) முடி வெளியேறுவது போல இஸ்லாமை விட்டு அவன் வெளியேறி விடுவான்.’

அறிவிப்பவர்: ஹுுதைபா ரழியல்லாஹுு அன்ஹுு
நூல்: இப்னு மாஜா 49

التَّوَسُّلُ

அத்தவஸ்ஸுலு - வஸீலா தேடுதல்

ஹிஜ்ரி 600ஆம் ஆண்டு வரை வாழ்ந்த எந்தவொரு இஸ்லாமியப் பேரறிஞரும் வஸீலா- நபிமார்கள், இறை நேசர்களிடம் உதவி தேடுவதை விமர்சனம் செய்யவோ கூடாது என்றுரைக்கவோ செய்யவில்லை. முதன்முதலாக வஸீலாவை எதிர்த்துக் கருத்துரைத்தவர் இப்னு தைமிய்யா ஆவார்.

இஸ்லாமில் குழப்பங்களையும், பித்அத்தான புதிய கொள்கை களையும் உருவாக்கிய ஜமாஅத்தே இஸ்லாமி, ஜாக், இன்னபிற வழி கெட்ட போலித் தவ்ஹீத் குழுக்கள் அனைத்தும் இப்னு தைமிய்யாவை ஒப்புக் கொண்டவர்களும் அவரது கொள்கைகளை வரவேற்பவர் களும் ஆவர்.

ஷெய்குல் இஸ்லாம், ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ஃபக்ருல் உலமா என்றெல்லாம் இஸ்லாமியப் பேரறிஞர்களால் போற்றப்படும் இமாம் தகியுத்தீன் ஸுப்கி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் தமது ‘ஷிஃபாவுஸ் ஸகாம்’ (பக்கம் : 359) என்ற நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்.

قال الإمام تقي الدين السبكي رحمه الله: اعلم أنه يجوز ويحسن التوسل والاستغاثة بالنبي ﷺ إلى ربه سبحانه وتعالى، وجواز ذلك وحسنه من الأمور المعلومة لكل ذوي دين، المعروفة من فعل الأنبياء والمرسلين وسير السلف الصالحين والعلماء والعوام من المسلمين ولم ينكر أحد ذلك من أهل الأديان ولا سمع به في زمن من الأزمان حتى جاء ابن تيمية فتكلم في ذلك بكلام يلبس فيه على الضعفاء الأغمار. اهـ (شفاء السقام في زيارة خير الأنام. ٣٥٩)

‘நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு அல்லாஹ்விடம் வஸீலா மற்றும் இஸ்திஙாஸா - உதவி தேடுதல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதும், அழகானதுமாகும்.

வஸீலாவும், இஸ்திஙாஸாவும் அனுமதிக்கப்பட்டவை, அழகானவை என்பதை தீனுடையவர்கள் தெரிந்துள்ளனர். அவை அனுமதிக்கப் பட்டவை என்பதை நபிமார்கள், ரஸூல்மார்களின் செயல்களி லிருந்தும் அறிந்துள்ளனர். முன்னோர்களான ஸாலிஹானவர்கள், உலமாப் பெருமக்கள், முஸ்லிம்களான பாமர மக்கள் ஆகியோரது செயல்களிலிருந்தும் அறியப்பட்ட விஷயமாகும்.

இப்னு தைமிய்யா என்பவர் வரும் வரை இச்செயல்களை யாரும் மறுத்துரைக்கவில்லை. எந்தக்காலத்திலும் இப்படியொரு கருத்தை யாரும் செவியேற்கவுமில்லை.

பலவீனமானவர்களைக் குழப்பத்தில் ஆக்கும் விஷயங்களை இப்னு தைமிய்யாதான் முதன் முதலில் கூறினார்.

வஸீலா என்றால் என்ன?

التوسل : في اللغة : جعل شيئ ذريعة لحصول المقصد أو التقرب منه .

மொழி அகராதிப்படி: ஒரு இலட்சியத்தை அடைவதற்கு ஒரு பொருளை-ஒரு நபரை கருவியாக ஆக்குதல் என பொருள்படும்.

وفي اصطلاح الشريعة : جعل شيئ مقبول عند الله تعالى ذريعة لقبول الدعاء . والصالحون وكذا الأعمال الصالحة مقبولة في حضرة الله تعالى. ولهذا أجمع جمهور العلماء على جواز التوسل بالأعمال الصالحة والذوات الصالحة... من عقائد أهل السنة : ١٤١

ஷரீஅத்தின் படி: துஆ - பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதற்கு அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றை இடையில் ஆக்குதல்.

நல்லடியார்களும், நற்செயல்களும் அல்லாஹ்வின் சன்னிதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

இந்த அடிப்படையில் நற்செயல்கள் மற்றும் நல்லடியார்கள் மூலம் வஸீலா – உதவி தேடுதல் கூடும் என்பதில் பெருவாரியான பேரறிஞர்கள் ஒத்த கருத்துடையவர்களாக உள்ளனர்.

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ ﵁ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ ﵁، كَانَ إِذَا قَحَطُوا اسْتَسْقَى بِالْعَبَّاسِ بْنِ عَبْدِ الْـمُطَّلِبِ ﵁، فَقَالَ: اَللّٰهُمَّ إِنَّا كُنَّا نَتَوَسَّلُ إِلَيْكَ بِنَبِيِّنَا فَتَسْقِينَا، وَإِنَّا نَتَوَسَّلُ إِلَيْكَ بِعَمِّ نَبِيِّنَا فَاسْقِنَا، قَالَ: فَيُسْقَوْنَ.

உமர் இப்னுல் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பஞ்சம் ஏற்பட்டால் ஹழ்ரத் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலமாக (அல்லாஹ்விடம்) மழை வேண்டி துஆச் செய்வார்கள்.

'இறைவா! நாங்கள் எங்களுடைய நபி அவர்களுடைய பொருட்டால் உன்னிடம் மழை வேண்டிப் பிரார்த்தனை செய்தோம். ' நீ எங்களுக்கு மழை பொழிவித்தாய். இப்போது அவர்களின் பெரிய தந்தையார் அவர்களை வஸீலாவாக வைத்து மழை வேண்டுகிறோம். எங்களுக்கு மழை தருவாயாக!' என்று பிரார்த்திப்பார்கள். அவர்களுக்கு மழை பொழியும்.

அறிவிப்பவர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : புகாரி 1010

العيني: وفيه من الفوائد: استحباب الاستسقاء بأَهْل الخير والصلاح وأَهْل بيت النبوة في فتح الباري ٤٩٧/٢.

இந்நிகழ்வின் விளக்கவுரையில் ஹதீஸ் கலையின் மாபெரும் விரிவுரையாளர் இப்னு ஹஜரில் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், ‘அப்பாஸ் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களின் இச்சரித்திரத்திலிருந்து, நபிமார்களின் குடும்பத்தினர், மற்றும் ஸாலிஹீன்கள், நல்லவர்களை வஸீலாவாக வைத்து அல்லாஹ்விடம் வேண்டுதல் புரிவது ஆகுமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்’ என்று கூறுகிறார்கள். நூல் : ஃபத்ஹுுல் பாரி

أَخْرَجَ إبن ماجه عَنْ عُثْمَانَ بْنِ حُنَيْفٍ، أَنَّ رَجُلًا ضَرِيرَ الْبَصَرِ أَتَى النَّبِيَّ ﷺ فَقَالَ: اُدْعُ اللهَ لِي أَنْ يُعَافِيَنِي، فَقَالَ: إِنْ شِئْتَ أَخَّرْتُ لَكَ وَهُوَ خَيْرٌ، وَإِنْ شِئْتَ دَعَوْتُ، فَقَالَ: ادْعُهْ، فَأَمَرَهُ أَنْ يَتَوَضَّأَ فَيُحْسِنَ وُضُوءَهُ، وَيُصَلِّيَ رَكْعَتَيْنِ، وَيَدْعُوَ بِهَذَا الدُّعَاءِ: اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ، وَأَتَوَجَّهُ إِلَيْكَ بِمُحَمَّدٍ نَبِيِّ الرَّحْمَةِ، يَا مُحَمَّدُ، إِنِّي قَدْ تَوَجَّهْتُ بِكَ إِلَى رَبِّي فِي حَاجَتِي هَذِهِ لِتُقْضَى، اَللّٰهُمَّ فَشَفِّعْهُ فِيَّ.

கண்பார்வையற்ற ஒருவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, ‘நான் சுகம் பெற்றிட எனக்கு துஆச் செய்யுங்கள்’ எனக் கேட்டார்.

‘தாங்கள் விரும்பினால் நான் உங்களுக்குப் பிற்படுத்துகிறேன், அது மிகச் சிறந்ததாக அமையும். தாங்கள் விரும்பினால் துஆச் செய்கிறேன்’ என்றார்கள் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள். ‘துஆச் செய்யுங்கள்’ என்றார் அவர்.

அழகிய முறையில் உளூச் செய்து , இரண்டு ரகஅத்துகள் தொழுது விட்டு, இறைவா! உன்னிடம் நான் வேண்டுகிறேன். பேரருளின் திருத்தூதரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டால் உன்னை முன்னோக்குகின்றேன்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! என்னுடைய இத்தேவை நிறைவேறுவதற்காக என்னுடைய இறைவனிடத்தில் தங்களைக்கொண்டு முன்னோக்குகின்றேன். இறைவா! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிந்துரையை என் விஷயத்தில் ஏற்றுக் கொள்வாயாக!' என்று துஆச் செய்திட அம் மனிதரிடம் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளை இட்டார்கள்.

அறிவிப்பவர்: உஸ்மான் இப்னு ஹுனைஃப்
ரழியல்லாஹு அன்ஹு
நூல் : இப்னு மாஜா

أَخْرَجَ الطَّبْرَانِيُّ عَنْ أَبِي جَعْفَرٍ الْخَطْمِيِّ الْـــمَدَنِيِّ عَــنْ أَبِي أُمَامَـةَ بْــنِ سَهْلِ بْنِ حُنَيْفٍ عَنْ عَمِّهِ عُثْمَانَ بْنِ حُنَيْفٍ أَنَّ رَجُلًا كَانَ يَخْتَلِفُ إِلَى عُثْمَانَ بْنِ عَفَّانٍ رضي الله عنه فِي حَاجَةٍ لَهُ، فَـكَانَ عُثْمَـانُ لاَ يَلْتَفِـتُ إِلَيْـهِ وَلاَ يَنْظُرُ فِي حَاجَتِهِ فَلَقِيَ ابْنَ حُنَيْفٍ فَشَكَا ذَلِكَ إِلَيْـهِ، فَقَـالَ لَهُ عُثْمَـانُ بْـنُ حُنَيْفٍ اِئْتِ الْمِيضَأَةَ فَتَوَضَّأْ ثُمَّ ائْتِ المَسْجِدَ فَصَلِّ فِيهِ رَكْعَتَيْنِ ثُمَّ قُلْ اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ وَأَتَوَجَّهُ إِلَيْكَ بِنَبِيِّنَا مُحَمَّدٍ صلى الله عليه وآله وسلم نَبِيِّ الرَّحْمَةِ، يَـا مُحَمَّـدُ إِنِّي أَتَوَجَّهُ بِكَ إِلَى رَبِّي فَتُقْضَـي لِي حَـاجَتِي، وَتَـذْكُرُ حَاجَتَـكَ وَرُحْ حَـتَّى أَرُوحَ مَعَكَ، فَانْطَلَقَ الرَّجُلُ فَصَنَعَ مَا قَـالَ لَهُ، ثُـمَّ أَتَي بَـابَ عُثْمَـانَ بْـنِ

عَفَّانَ ﵁، فَجَاءَ البَوَّابُ حَتىَّ أَخَذَ بِيَـدِهِ، فَأَدْخَلَـهُ عَلَى عُثْمـاَنَ بـنِ عَفَّانَ ﵁، فَأَجْلَسَـهُ مَعَـهُ عَلَى الطِّنْفِسَـةِ ، فَقَـالَ حاجَتَـكَ؟ فَـذَكَرَ حاَجَتَهُ وَقَضَاهَا لَهُ، ثُمَّ قَالَ لَهُ: ماَ ذَكَـرْتَ حَاجَتَـكَ حَـتىَّ كاَنَ السَّـاعَةَ وَ قَالَ: ماَ كاَنَتْ لَكَ مِنْ حاَجَةٍ فاَذْكُرْهاَ، ثُمَّ إِنَّ الرَّجُل خَرَجَ مِنْ عِنْدِهِ فَلَقِيَ عُثْماَنَ بْنَ حُنَيْفٍ فَقَالَ لَهُ: جَزَاكَ اللهُ خَيْرًا، ماَ كاَنَ يَنْظُرُ فِي حَـاجَتِي وَلاَ يَلْتَفِتُ إِلَيَّ حَتَّى كَلَّمْتَهُ فِيَّ، فَقَـالَ عُثْمـاَنُ بْـنُ حُنَيْـفٍ: وَاللهِ مـاَ كَلَّمْتُـهُ، وَلَكِنِّي شَهِدْتُ رَسُولَ اللهِ ﷺ وَأَتاَهُ ضَرِيرٌ ، فَشَكَا إِلَيْهِ ذَهَـابَ بَصَــرِهِ، فَقَالَ لَهُ النَّبِيُّ ﷺ: فَتَصْبِرُ فَقَالَ: يَا رَسُولَ اللهِ لَيْسَ لِي قَائِدٌ وَقَدْ شُـقَّ عَلَيَّ، فَقَالَ النَّبِيُّ ﷺ: اِئْتِ المِيضَأَةَ فَتَوَضَأْ ثُمَّ صَلِّ رَكْعَتَيْنِ ثُمَّ ادْعُ بِهَـذِهِ الدَّعَوَاتِ قَالَ ابْنُ حُنَيْفٍ: فَوَاللهِ ماَ تَفَرَّقْنَا، وَطَاَلَ بِنَا الحَدِيثُ حَتىَّ دَخَلَ عَلَيْناَ الرَّجُلُ كَأَنَّهُ لَمْ يَكُنْ بِهِ ضُرٌّقَطُّ.

ஒருவர் தன்னுடைய தேவை நிறைவேறுவதற்காக உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களிடம் வந்து போய்க் கொண்டிருந்தார். உஸ்மான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் அம்மனிதரைக் கண்டுக் கொள்ளவில்லை; அவரது தேவையை நிறைவேற்றவுமில்லை. அம்மனிதர் உஸ்மான் இப்னு ஹுுனைஃப் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களைச் சந்தித்து இவ்விஷயத்தை முறையிட்டார்.

உஸ்மான் இப்னு ஹுுனைஃப் ரழியல்லாஹுு அன்ஹுு அவரிடம் சொன்னார்கள்: ‘‘ஹவுளுக்குச் சென்று உளூச் செய்த பின் பள்ளிக்குச் சென்று இரண்டு ரகஅத்துகள் தொழுது விட்டு, ‘இறைவா!

உன்னிடம் நான் கேட்கின்றேன். அருள் நிறை நபியான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டால் உன்னை முன்னோக்குகின்றேன். முஹம்மத்! ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே!

என்னுடைய நாட்டம் நிறைவேறுவதற்காக என்னுடைய ரப்பிடத்தில் தங்களைக் கொண்டு முறையிடுகிறேன்' என்று துஆச் செய்து, உம்முடைய தேவை எதுவோ அதைக் கூறுங்கள். பின் உஸ்மான் இப்னு அஃப்ஃபான் அவர்களிடம் செல்லுங்கள், நானும் உடன் வருகிறேன்.''

உஸ்மான் இப்னு ஹுனைஃப் ரழியல்லாஹு அன்ஹு சொன்னதைப் போல அவர் செய்து விட்டு, உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்றார்.

வாயிற் காப்போர் அவரது கைப்பிடித்து உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அழைத்துச் சென்றனர். உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவரை ஒரு விரிப்பின் மீது அமர வைத்து தாங்களுடைய தேவை யாது? என விசாரிக்க, அவர் தனது தேவையை எடுத்துரைத்தார்.

உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவரது தேவையை நிறைவேற்றி விட்டு, 'ஏன் உம்முடைய தேவையை முன்னரே என்னிடம் கூறவில்லை? வேறு ஏதாவது தேவை ஏற்பட்டாலும் என்னிடம் கூறுங்கள்'என்றார்கள்.

உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்ற அவர், இப்னு ஹுனைஃப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சந்தித்து 'அல்லாஹ் தங்களுக்கு அருள் புரிவானாக! தாங்கள் என் விஷயமாக உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர் களிடம் பேசும் வரை அவர்கள் என்னைக் கண்டு கொள்ளவில்லை, என் தேவையை நிறைவேற்றவுமில்லை' என்று சொன்னார்.

உஸ்மான் இப்னு ஹுனைஃப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தங்களுக்காக பரிந்துரை செய்யவில்லை - எனினும் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருச் சமூகத்தில் நான் இருந்த போது பார்வையற்ற ஒருவர் வந்து, பார்வை பறிபோனதைச் சொன்னார். நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'நீர் பொறுமையாக இருப்பீரா?' என அவரிடம் வினவ, 'யா ரஸூலல்லாஹ்! (பார்வையற்ற) எனக்கு வழிகாட்டி யாருமில்லை, அதனால் எனக்கு சிரமமாக இருக்கிறது' என்றார்.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரிடம் 'உளூச் செய்யுமிடத்திற்குச் சென்று, உளூச் செய்து, இரண்டு ரகஅத்துகள் தொழுது விட்டு, இந்த துஆவை ஓதுங்கள்' என்றுரைத் தார்கள்.

அல்லாஹ் மீது சத்தியமாக! நாங்கள் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தை விட்டு அகலவில்லை, நீண்ட நேரமாகவுமில்லை. பார்வையற்ற அவர் எவ்வித குறைவும் இன்றி கண் பார்வையுடன் எங்களிடம் வந்தார்.

அறிவிப்பவர்: அபூ ஜஃபர் அல்கத்மீ ரழியல்லாஹு அன்ஹு
நூல் : தப்ரானீ

أَخْرَجَ الطَّبْرَانِيُّ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قَالَ: لَمَّا مَاتَتْ فَاطِمَةُ بِنْتُ أَسَدِ بْنِ هَاشِمٍ أُمّ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ دَخَلَ عَلَيْهَا رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم فَجَلَسَ عِنْدَ رَأْسِهَا فَقَالَ "رَحِمَكِ اللهُ يَا أُمِّي، كُنْتِ أُمِّي بَعْدَ أُمِّي وَتُشْبِعِينَنِي وَتَعْرَيْنَ وَتُكْسِينِي وَتَمْنَعِينَ نَفْسَكِ طِيْبَ الطَّعَامِ وَتُطْعِمِينِي تُرِيدِينَ بِذَلِكَ وَجْهَ

اللهِ وَالدَّارَ الآخِرَةَ ثُمَّ أَمَرَ أَنْ تُغَسَّلَ ثَلَاثًا، فَلَمَّا بَلَغَ المَاءُ الَّذِي فِيهِ الْكَافُورُ سَكَبَهُ عَلَيْهَا رَسُولُ اللهِ ﷺ بِيَدِهِ ثُمَّ خَلَعَ رَسُولُ اللهِ قَمِيصَهُ فَأَلْبَسَهَا إِيَّاهُ وَكُفِنَتْ فَوْقَهُ ثُمَّ دَعَا رَسُولُ اللهِ ﷺ أُسَامَةَ بْنَ زَيْدٍ وَأَبَا أَيُّوبَ الْأَنْصَارِيَّ وَعُمَرَ بْنَ الْخَطَّابِ وَغُلَامًا أَسْوَدَ يَحْفِرُونَ فَحَفَرُوا قَبْرَهَا فَلَمَّا بَلَغُوا اللَّحْدَا " حَفَرَهُ رَسُولُ الله ﷺ بِيَدِهِ وَأَخْرَجَ تُرَابَهُ بِيَدِهِ فَلَمَّا فَرَغَ دَخَلَ رَسُولُ اللهِ ﷺ فَاضْطَجَعَ فِيهِ وَ قَالَ: اَللهُ الَّذِي يُحْيِي وَيُمِيتُ وَهُوَ حَيٌّ لاَ يَمُوتُ اِغْفِرْ لِأُمِّي فَاطِمَةَ بِنْتِ أَسَدٍ وَلَقِّنْهَا حُجَّتَهَا وَوَسِّعْ عَلَيْهَا مَدْخَلَهَا بِحَقِّ نَبِيِّكَ وَالْأَنْبِيَاءِ الَّذِينَ مِنْ قَبْلِي فَإِنَّكَ أَرْحَمُ الرَّاحِمِيْنَ ثُمَّ كَبَّرَ عَلَيْهَا أَرْبَعًا ثُمَّ أَدْخَلُوهَا الْقَبْرَ هُوَ وَالْعَبَّاسُ وَأَبُوبَكْرٍ الصِّدِيقِ رضي الله عنهم

اهـ.

அலீ இப்னு அபீ தாலிப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தாயார் ஃபாத்திமா பின்த் அஸத் பின் ஹாஷிம் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வஃபாத்தான போது அங்கு வருகை தந்த நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னாரின் தலைமாட்டில் அமர்ந்து ‘‘என்னுடைய தாயார் அவர்களே! தங்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

என்னுடைய தாயாருக்குப் பின் தாங்கள் எனக்குத் தாயாக இருந்தீர்கள். தாங்கள் பசித்திருந்து எனக்கு வயிறார உணவளித் தீர்கள். தங்களுக்கு ஆடை இல்லாத போதும் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நல்ல உணவை தங்களுக்குத் தடுத்து எனக்கு உணவூட்டினீர்கள். இவற்றால் அல்லாஹ்வின் திருப் பொருத்தத் தையும் மறுமையின் வெற்றியையும் நாடினீர்கள்’’ என்று திருவாய் மலர்ந்துரைத்தார்கள்.

பின்னர் ஜனாஸாவைக் குளிப்பாட்டவும் மூன்று முறை நீர் ஊற்றவும் பணித்தார்கள். கற்பூரம் கலந்த நீரால் குளிப்பாட்டும் நேரமான போது தமது திருக்கரங்களால் அவர்மீது தண்ணீர் ஊற்றினார்கள். பின்னர் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாம் அணிந்திருந்த சட்டையை கழற்றிக் கொடுத்து அணியச் செய்தார்கள். அதன் மீது கஃபன் ஆடை அணிவிக்கப்பட்டது.

பிறகு உஸாமா இப்னு ஜெய்த், அபூ அய்யூபுல் அன்ஸாரி, உமர் இப்னுல் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரையும் ஒரு கறுப்பு அடிமையையும் அழைத்து கப்ர் தோண்டச் சொன்னார்கள். அவர்கள் கப்ர் தோண்டினர். கப்ரின் அடிப் பகுதியானதும் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் கைகளால் தோண்டி மண்ணைத் தம் கரங்களால் அகற்றினார்கள். தோண்டி முடித்ததும் அதன் உள்ளே ஒருக்களித்து சாய்ந்து படுத்துக் கொண்டு ‘உயிர்பிப்பவனும், மரணிக்கச் செய்பவனுமாகிய அல்லாஹ்வே!

அவன் நித்திய ஜீவனுள்ளவன், அவன் மரணிக்க மாட்டான். என்னுடைய தாயார் ஃபாத்திமா பின்த் அஸத் அவர்களை மன்னிப்பாயாக! கப்ரில் அதற்கான ஆதாரத்தை மொழியச் செய்வாயாக! அவர்களுடைய நுழைவிடத்தை - கப்ரை - விசாலப் படுத்துவாயாக! உன்னுடைய நபியின் பொருட்டாலும் எனக்கு முன் சென்ற நபிமார்கள் பொருட்டாலும்! நிச்சயமாக நீ கிருபையாளர் களுக்கெல்லாம் கிருபையாளனாக இருக்கின்றாய்!’ என்று துஆச் செய்தார்கள். பின்னர் நான்கு தக்பீர்கள் சொல்லி அவர்களைத் தொழ வைத்தார்கள். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அப்பாஸ், அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோரும் சேர்ந்து கப்ரினுள் வைத்தார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு

நூல்: தப்ரானீ 189

أَخْرَجَ الْحَاكِمُ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لَمَّا اقْتَرَفَ آدَمُ الْخَطِيئَةَ قَالَ: يَارَبِّ أَسْأَلُكَ بِحَقِّ مُحَمَّدٍ لَمَّا غَفَرْتَ لِي، فَقَالَ اللهُ: يَا آدَمُ كَيْفَ عَرَفْتَ مُحَمَّدًا ؟ وَلَمْ اَخْلُقْهُ ؟ قَالَ: يَارَبِّ لِأَنَّكَ لَمَّا خَلَقْتَنِي بِيَدِكَ وَنَفَخْتَ فِيَّ مِنْ رُوحِكَ رَفَعْتُ رَأْسِي فَرَأَيْتُ عَلَى قَوَائِمِ الْعَرْشِ مَكْتُوبًا "لاَ إِلَهَ إِلَّا اللهُ مُحَمَّدٌ رَسُولُ اللهِ" فَعَلِمْتُ أَنَّكَ لَمْ تُضِفْ إِلَى اسْمِكَ إِلَّا أَحَبَّ الْخَلْقِ إِلَيْكَ، فَقَالَ اللهُ: صَدَقْتَ يَاآدَمُ إِنَّهُ لَأَحَبُّ الْخَلْقِ إِلَيَّ أُدْعُنِي بِحَقِّهِ فَقَدْ غَفَرْتُ لَكَ . وَلَوْ لاَ مُحَمَّدٌ مَا خَلَقْتُكَ . وَقَالَ الْحَاكِمُ: هذا حديث صحيح الإسناد .

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சறுகுதல் ஏற்பட்ட பொழுது அவர்கள், 'யா அல்லாஹ்! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டால் எனது சறுகுதலை மன்னிப்பாயாக!' என்று கேட்டார்கள். 'ஆதமே! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எப்படி நீங்கள் அறிந்தீர்கள்? அவர்களது உடலை நான் படைக்கவில்லையே!' என அல்லாஹ் ஆதம் நபியிடம் கேட்டான்.

ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்: 'எனது இரட்சகா! உனது கரத்தால் என்னை நீ படைத்து, உனது ரூஹை என்னில் நீ ஊதிய போது நான் தலை உயர்த்தினேன்.

அப்போது அர்ஷின் தூண்களில் 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். படைப்புகளில் உனக்கு மிக்க நேசத்திற்குரிய ஒருவரது பெயரை அன்றி வேறொரு பெயரை உன் திருநாமத்துடன் நீ இணைத்து எழுதமாட்டாய் என்பதை அறிந்துக் கொண்டேன்!'

அல்லாஹ் சொன்னான்: ‘ஆதமே! உண்மை உரைத்தீர். அவர்கள் படைப்புகளில் எனக்கு நெருக்கமானவர்கள். அவர்களது பொருட் டால் என்னிடம் துஆச் செய்தீர்கள். உங்களுக்கு மன்னிப்பளித்தேன்! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இல்லாதிருந்தால் உம்மை நான் படைத்திருக்கமாட்டேன்!.’

இமாம் ஹாகிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹ் என்று கூறுகிறார்கள்.

அறிவிப்பவர்: உமர் இப்னுல் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஹாகிம் 4281

اَلاِسْتِغَاثَةُ

இஸ்திஙாசா - இறைநேசர்களிடத்தில் உதவி தேடுதல்

الاستغاثة: في اللغة: طلب الغوث والمعونة

அகராதிப்படி : இஸ்திஙாசா என்ற அரபிச் சொல்லுக்கு உதவி தேடுதல் என பொருள்படும்.

وفي الإصطلاح: طلب المعونة بسبب المعجزة والكرامة من الأنبياء و الْأَوْلياء او طلب المعونة بسبب دعائهم وشفاعتهم ويسمى استشفاعا ايضا اه عقيدة السنة:

வழக்கு மொழிப்படி: இஸ்திஙாசா என்றால்... நபிமார்களின் முஃஜிஸத்துகள் மற்றும் வலிமார்களின் கராமத்துகள் மூலம் அவர்கள் நமக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் உதவி தேடுதல் என பொருள்படும்.

வலிமார்களின் துஆக்கள் மூலம் அல்லது அவர்கள் பரிந்துரை செய்வதின் மூலம் உதவி தேடுதல்- பரிந்துரை செய்திடக் கேட்டுக் கொள்வதற்கு 'இஸ்திஷ்ஃபா' என்றும் கூறுவர்.

قوله تعالى: ولو أنهم إذ ظلموا أنفسهم جاءوك واستغفروا الله واستغفر لهم الرسول لوجدوا الله توابا رحيما: ٦٤ . قَالَ المفسرالحافظ ابن كثير: يرشد تعالى العصاة والمذنبين إِذَا وقع منهم الخطأ والعصيان أن يأتوا إِلَى الرسول ﷺ فيستغفروا الله عنده، ويسألوه أن يستغفر لهم، فإنهم إِذَا فعلوا ذلك تاب الله عليهم ورحمهم وغفر لهم، ولهذا قَالَ: " لَوَجَدُوا اللهَ تَوَّابًا رَحِيمًا"

‘அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்படிவதற்காகவே அன்றி (மனிதர்களிடம்) நம் தூதர்களில் எவரையும் நாம் அனுப்பவில்லை. ஆகவே அவர்களில் யாராவது தங்களுக்குத் தாங்களே அநியாயம் செய்துக் கொண்டு உம்மிடம் வந்து அல்லாஹ்வின் மன்னிப்பைக் கோரி அவர்களுக்காக (அல்லாஹ்வின்) தூதராகிய தாங்களும் மன்னிப்புக் கேட்டால் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் அவர்கள் பெறுவார்கள்.

(அல் குர்ஆன் 4 : 64)

இவ்வசனத்துக்கு ஹாஃபிழ் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தஃப்ஸீரில் கீழ்க் கண்டவாறு விளக்கம் தருகிறார்கள்:

‘பாவங்கள் செய்தவர்களுக்கு அல்லாஹ் வழி காட்டுகிறான். பாவம் செய்தவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருச்சமூகத்துக்குச் சென்று அங்கு வைத்து அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேட வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தனக்காக பாவ மன்னிப்புக்கோர கேட்க வேண்டும். பாவிகள் அவ்வாறு செய்தால் அவர்களது தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். அவர்களுக்குக் கருணை காட்டுவான். அவர்களுக்கு பாவ மன்னிப்பு வழங்குவான்.’

عن العتبي قَالَ: كنت جالسا عند قبر رسول الله ﷺ فجاء اعرابي ف قَالَ: السلام عليك يا رسول الله سمعت الله يقول:"ولو أنهم إذ ظلموا أنفسهم جاءوك فاستغفروا الله واستغفر لهم الرسول لوجدوا الله توابا رحيما". وقد جئتك مستغفرا من ذنبي مستشفعا بك إِلَى ربي ثم يقول:

يَا خَيْرَ مَنْ دُفِنَتْ بِالْقَاعِ أَعْظُمُهُ   فَطَابَ مِنْ طِيبِهِنَّ الْقَاعُ وَالْأَكَمُ
نَفْسِي فِدَاءٌ لِقَبْرٍ أَنْتَ سَاكِنُهُ   فِيهِ الْعَفَافُ وَفِيهِ الْجُودُ وَالْكَرَمُ

ثم انصرف فحملتني عيناي فرأيت النبي ﷺ في النوم ف قَالَ: يا عتبي ألحق الأعرابي فبشره بأن الله تعالى قد غفرله . اهـ المجموع شرح المهذب: ٢٧٤/٨

உத்பி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: ஒருநாள் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரு ஷரீஃபுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது அங்கு வருகை தந்த கிராமவாசியொருவர், 'அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! தங்கள் மீது அல்லாஹ்வின் ஸலாம் உண்டாவதாக!

அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ் படிவதற்காகவே அன்றி (மனிதர்களிடம்) நம் தூதர்களில் எவரையும் நாம் அனுப்பவில்லை. ஆகவே யாராவது தங்களுக்குத் தாங்களே! அநியாயம் செய்துக் கொண்டு உம்மிடம் வந்து அல்லாஹ்வின் மன்னிப்பைக் கோரி அவர்களுக்காக (அல்லாஹ்வின்) தூதராகிய தாங்களும் மன்னிப்புக் கேட்டால் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று அல்லாஹ் அருளியதை நான் கேட்டுள்ளேன்.

நான் எனது பாவங்களுக்குப் பரிகாரம் தேடி தங்களின் திருச் சமூகத்திற்கு வந்துள்ளேன். என்னுடைய இரட்சகனிடத்தில் தங்களை வஸீலாவாக ஆக்கியுள்ளேன்.' என்று கூறிவிட்டு, 'மிக்க புனிதமான இவ்விடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் புனிதரே! அந்த கப்ரு ஷரீஃபின் நறுமணத்தால் மலை முகடுகளும் சமநிலப் பிரதேசங் களும் மிகுந்த நறுமணம் உடையதாகிவிட்டது. தாங்கள் வாழும் கப்ர் ஷரீஃபுக்கு எனது உடல் அர்ப்பணம். அதில் தான் பாவ மன்னிப்பும், கொடையும், கருணையும் உள்ளது' என்று பாடி விட்டு அக்கிராமவாசி போய் விட்டார். நான் கண் அயர்ந்தேன். தூக்கத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டேன். ' உத்பீ! அந்த கிராமவாசியைச் சந்தித்து அல்லாஹ் அவரை மன்னித்து விட்டான் என்ற நற்செய்தியை அறிவிப்பீராக!' என நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

أَنْتَ الشَّفِيعُ الَّذِي تُرْجَى شَفَاعَتُهُ   عَلَى الصِّرَاطِ إِذَا مَازَلَّتِ الْقَدَمُ
وَصَاحِبَاكَ فَلَا أَنْسَاهُمَا أَبَدَا   مِنِّي السَّلَامُ عَلَيْكُمْ مَاجَرَى الْقَلَمُ

شرح الإيضاح للإمام النووي: ٤٩٩ وفي نسخة لدار الفكر: ص: ٢١٨

கால்கள் சறுகக் கூடிய ஸிராத் பாலத்தில் நாயகமே!

பரிந்துரை எதிர்பார்க்கப்படும் பரிந்துரையாளர் தாங்கள்!

தங்களுடைய இரண்டு தோழர்களை ஒருபோதும் நான் மறக்க மாட்டேன்.

பேனாக்கள் எழுதும் காலமெல்லாம் தாங்கள் மீது எம் ஸலாம் உண்டாவதாக!’

أخرج البخاري عن أبي هريرة رضي الله عنه قَالَ: قُلْتُ: يَا رَسُولَ اللهِ، إِنِّي أَسْمَعُ مِنْكَ حَدِيثًا كَثِيرًا أَنْسَاهُ، قَالَ: أُبْسُطْ رِدَائَكَ فَبَسْطتُّهُ قَالَ: فَغَرَفَ بِيَدَيْهِ، ثُمَّ قَالَ: ضُمَّهُ فَضَمَمْتُهُ فَمَا نَسِيتُ شَيْئًا بَعْدَهُ

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்:

‘யா ரஸூலல்லாஹ்! நான் தங்களிடமிருந்து ஏராளமான பொன் மொழிகளைச் செவியேற்கின்றேன். அவற்றை மறந்து விடுகிறேன்’ என்று முறையிட்டேன்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘உமது மேலங்கியை விரியுங்கள்’ என்றார்கள்.

நான் விரித்துப்பிடித்தேன். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் இரு கைகளால் (சூன்யத்திலிருந்து எதையோ) அள்ளிப் போடுவதைப் போன்று பாவனை செய்து விட்டு, அதை நெஞ்சோடு அணைத்துக் கொள்’ என்றார்கள்.

நான் அதை நெஞ்சில் அணைத்துக் கொண்டேன். அதன் பின்னர் நான் எதையுமே மறந்ததில்லை!'.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரீ 119

ரபீஆ பின் கஃப் அல்அஸ்லமீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ رَبِيعَةِ بْنِ كَعْبٍ الْأَسْلَمِيِّ، قَالَ: كُنْتُ أَبِيتُ مَعَ رَسُولِ اللهِ ﷺ فَأَتَيْتُهُ بِوَضُوئِهِ وَحَاجَتِهِ، فَقَالَ لِي: سَلْ فَقُلْتُ: أَسْأَلُكَ مُرَافَقَتَكَ فِي الْجَنَّةِ. قَالَ: أَوَ غَيْرَ ذَلِكَ ؟ قُلْتُ: هُوَ ذَاكَ. قَالَ: فَأَعِنِّي عَلَى نَفْسِكَ بِكَثْرَةِ السُّجُودِ.

நான் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஓரிரவு தங்கினேன். அவர்கள் (இரவுத் தொழுகைக்காக எழுந்த போது) இயற்கைக் கடனை முடித்த பின் சுத்தம் செய்து கொள்வதற்காகவும், உளூச் செய்வதற்காகவும் தண்ணீர் கொண்டு கொடுத்தேன்.

அப்போது அவர்கள் (உன்தேவை எதையேனும்) என்னிடம் ''கேள்!'' என்றார்கள்.

''சுவனத்தில் தங்களுடன் இருக்க வேண்டும்'' என்றேன்.

''இதன்றி வேறு தேவை ஏதாவதுண்டா?'' எனக் கேட்டார்கள்.

(சுவனத்தில் தங்களுடன் இருக்க வேண்டும் என்பது தவிர வேறில்லை) அதுவே வேண்டும்'' என்றேன்.

''உமது கோரிக்கை நிறைவேற அதிகமாக ஸுஜூதுகள் செய்து எனக்கு உதவுவீராக'' என திருவாய் மலர்ந்தார்கள் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். நூல் : முஸ்லிம் - 843

أخرج الْحَافِظُ نُورُ الدِّينِ الْهَيْثَمِي عَنْ عَلِيٍّ رضي الله عنه اَنَّهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: كَمْ بَيْنَ مَسْأَلَةِ الْاَعْرَابِيِّ وَعَجُوزِ بَنِي إِسْرَائِيلَ ؟ أَنَّ مُوسَى لَمَّا أُمِرَ أَنْ يَقْطَعَ الْبَحْرَ فَانْتَهَى اِلَيْهِ صُرِفَتْ وُجُوهُ الدَّوَابِّ فَرَجَعَتْ، فَقَالَ مُوسَى: مَالِي يَارَبِّ ؟ قَالَ: إِنَّكَ عِنْدَ قَبْرِ يُوسُفَ فَاحْمِلْ عِظَامَهُ مَعَكَ وَقَدْ اسْتَوَى بِالْأَرْضِ فَجَعَلَ مُوسَى لاَ يَدْرِي أَيْنَ هُوَ ؟ فَسَأَلَ مُوسَى: هَلْ يَدْرِي أَحَدٌ مِنْكُمْ أَيْنَ هُوَ ؟ فَقَالُوا: إِنْ كَانَ أَحَدٌ يَعْلَمُ أَيْنَ هُوَ؟ فَعَجُوزُ بَنِي فُلاَنٍ تَعْلَمُ أَيْنَ هُوَ ؟ فَأَرْسَلَ إِلَيْهَا الرَّسُولَ قَالَتْ مَالَكُمْ ؟ قَالُوا: إِنْطَلِقِي إِلَى مُوسَى فَلَمَّا اَتَتْهُ قَالَ لَهَا: تَعْلَمِينَ أَيْنَ قَبْرُ يُوسُفَ ؟ قَالَتْ: نَعَمْ . قَالَ: فَدُلِّينَا عَلَيْهِ قَالَتْ: لاَ، وَاللهِ حَتَّى تُعْطِيَنِي مَا أَسْأَلُكَ قَالَ لَهَا: لَكِ ذَلِكِ قَالَتْ: فَإِنِّي أَسْأَلُكَ أَنْ أَكُونَ مَعَكَ فِي الدَّرَجَةِ الَّتِي تَكُونُ فِيهَا فِي الْجَنَّةِ . قَالَ: سَلِي الْجَنَّةَ قَالَتْ: لاَ وَاللهِ لاَ أَرْضَى إِلَّا أَنْ أَكُونَ مَعَكَ فَجَعَلَ مُوسَى يُرَادُّهَا فَأَوْحَى اللهُ إِلَيْهِ أَنْ أَعْطِهَا ذَلِكَ فَإِنَّهُ لاَ يَنْقُصُكَ شَيْئًا. فَأَعْطَاهَا وَدَلَّتْهُ عَلَى الْقَبْرِ فَأَخْرَجُوا الْعِظَامَ وَجَاوَزُوا الْبَحْرَ .

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

இஸ்ராயீல் சமூக மூதாட்டியின் கேள்விக்கும், இக்கிராமவாசியின் கேள்விக்கும் மத்தியில் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது?

கடலைக் கடந்து சென்றிட நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கட்டளை இடப்பட்டு, கடலை அவர்கள் நெருங்கியபோது - மிருகங்கள் நேராக செல்லாமல் முகம் திரும்பி நின்றன.

‘‘என்னுடைய இறைவா! என்ன இது?’’ என நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் கேட்க, ‘‘நீங்கள் நபி யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்ருக்கருகில் இருக்கிறீர்கள். அவர்களது உடலை சுமந்து செல்லுங்கள்’’ என்றான் அல்லாஹ். அந்த கப்ர் தரையோடு சேர்ந்து இருந்ததால் அது எங்கே இருக்கிறது என்பது நபியவர்களுக்குத் தெரியவில்லை.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ‘‘ அந்த கப்ர் எங்கே இருக்கிறது? என்பதை உங்களில் யாராவது அறிவீர்களா?’’ எனக் கேட்டார்கள். பனூ இஸ்ரவேலர்கள் கூறினர்: அந்த கப்ர் இந்த சமூதாயத்தைச் சார்ந்த இன்ன மூதாட்டிக்குத் தெரியும்!

நபியவர்கள் ஆளனுப்பி அம்மூதாட்டியை அழைத்து வரச் செய்தார்கள்.

மூதாட்டியிடம் ‘‘நபி யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்ர் எங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?’’ என்று நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் கேட்டார்கள்.

‘‘ஆம்! தெரியும்’’ என்றார் அம்மூதாட்டி

‘‘அதை எங்களுக்கு அறிவித்துத் தாருங்கள்’’ என்று கேட்டார்கள் நபி அவர்கள்,

‘‘இல்லை! அல்லாஹ்மீது சத்தியமாக! நான் கேட்பதை தாங்கள் வழங்கினால்தான் அதனை நான் காட்டித் தருவேன்!’’ என்றார் அம்மூதாட்டி.

‘‘தாங்கள் கேட்பதைத் தருகின்றேன்!’’ என்றார்கள் நபி அவர்கள்.

‘‘சுவனத்தில் எந்தப் பதவியில் தாங்கள் இருப்பீர்களோ அந்தப் பதவியில் தங்களோடு நானிருக்க வேண்டும்’’ என்று கேட்டார் அம்மூதாட்டி.

‘‘சுவனத்தைக் கேளுங்கள்!’’ என்றார்கள் நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள்.

‘‘இல்லை! அல்லாஹ்மீது ஆணையாக, சுவனத்தில் தங்களோடு இருக்க வேண்டுமென்பதைத் தவிர வேறெதையும் நான் ஏற்க மாட்டேன்’’ என்றார் அவர்.

நபி அவர்கள் மீண்டும் மீண்டும் அதை (சுவனத்தைக் கேள் என) சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அல்லாஹ், ‘‘சுவனத்தில் தங்களோடு இருக்கும் பதவியை கொடுத்து விடுங்கள். தங்களுடைய பதவியில் எதையும் அது குறைத்து விடாது’’ என நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர் களுக்கு **வஹீ** அறிவித்தான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவனத்தில் தன்னோடு இருக்கும் பாக்கியத்தை அம்மூதாட்டிக்கு வழங்க, அவர் நபி யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்ரைக் காட்டிக் கொடுத்தார்.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், கப்ரைத் தோண்டி யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உடலை வெளியே எடுத்தார்கள். பின்னர் கடல் கடந்து அக்கரை சென்றார்கள்.

அறிவிப்பவர் : அலி ரழியல்லாஹு அன்ஹு
நூல் : கன்ஜுல் உம்மால், ஹாகிம் 32412

குறிப்பு : நபிமார்களிடம் சுவனத்தைக் கேட்பதில் தவறேது மில்லை. அப்படிக் கேட்பது ஷிர்க் அல்ல, பித்அத்தும் அல்ல என்பதை மேற்சொன்ன இரு ஹதீஸ்களும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

மேற்சொன்ன நிகழ்வில் யூஸுஃப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கப்ரைத் தோண்டி உடலை எடுத்தார்கள் என்பதற்கு عِظَامُ எலும்பு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(قوله: عظامه) أي جسده الشريف. قَالَ: محمد ناصر الدين الألباني: (فائدة) كنت استشكلت قديما قوله في هذا الحديث " عظام يوسف " لأنه يتعارض بظاهره مع الحديث الصحيح: " إن الله حرم على الأرض أن تأكل أجساد الأنبياء " حتى وقفت على حديث ابن عمر رضي الله عنهما ." أن النبي ﷺ لما بدن، قَالَ له تميم الداري: ألا أتخذ لك منبرا يا رسول الله يجمع أو يحمل عظامك ؟ قَالَ: بلى فاتخذ له منبرا مرقاتين". أخرجه أبو داود (١٠٨١) بإسناد جيد على شرط مسلم . **فعلمت منه أنهم كانوا يطلقون " العظام"، و يريدون البدن كله، من باب إطلاق الجزء و إرادة الكل،** كقوله تعالى: (و قرآن الفجر) أي: صلاة الفجر . فزال الإشكال و الحمد لله، فكتبت هذا لبيانه .اهـ السلسلة الصحيحة:٢١٢/١

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடல் எடை அதிகரித்தபோது தமீமுத் தாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் யாரஸூலல்லாஹ்! தங்களுடைய எலும்புகளைச் சுமக்கக்கூடிய இரண்டு படிகளுள்ள மிம்பரைத் தங்களுக்குச் செய்து தரட்டுமா?'' எனக் கேட்டார்கள். (அபூதாவூத் 1081)

இந்த ஹதீஸில் வந்துள்ள எலும்பு என்பதற்கு உடல் என்பது பொருளாகும்.

வஹ்ஹாபிய மவ்லவி நாஸிருத்தீன் அல்பானி தனது ஸில்ஸிலத்துஸ் ஸஹீஹா என்ற நூலில் எழுதுகிறார்: மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மேற்சொன்ன நிகழ்வைக் கூறும் ஹதீஸில் நீண்ட காலம் எனக்குச் சந்தேகமிருந்தது. யூஸுஃப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் எலும்புகளை மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெளியே எடுத்தார்கள் என்று இந்த ஹதீஸ் கூறுகிறது. ஆனால் 'நபிமார்களின் உடலைத் தின்பதை பூமிக்கு அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான்' என்று ஸஹீஹான ஹதீஸ் கூறுகிறது.

பின்னர் அபூதாவூத் பதிவு செய்துள்ள தமீமுத் தாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மேற்சொன்ன ஹதீஸைப் பார்த்த பிறகு எனது

ஐயம் நீங்கியது. முழு உடல் என்பதையே அவர்கள் எலும்புகள் என்று குறிப்பிடுகின்றனர் என்பதைப் புரிந்துக் கொண்டேன்.''

أَخْرَجَ البُخَارِيُّ عَنْ ابْنِ عَبَّاسٍ ﵄ قَالَ: كَانَ النَّبِيُّ ﷺ يُعَوِّذُ الْحَسَنَ وَالْحُسَيْنَ، وَيَقُولُ: إِنَّ أَبَاكُمَا كَانَ يُعَوِّذُ بِهَا إِسْمَاعِيلَ وَإِسْحَاقَ: أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ، مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ، وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ .

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோருக்காக (அல்லாஹ் விடம்) பாதுகாப்புத் தேடுவார்கள். ''அல்லாஹ்வின் பரிபூரணமான (நலம் தரும்) சொற்களைக் கொண்டு எல்லா ஷைய்தான்களிட மிருந்தும், நச்சுப் பிராணிகளிடமிருந்தும், தீய எண்ணம் கொண்ட எல்லா (பொறாமைக்) கண்களிடமிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன் - எனும் இச்சொற்களைக் கொண்டு உங்களுடைய தந்தையர் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மகன்களான இஸ்மாயீல், இஸ்ஹாக் அலைஹிமுஸ்ஸலாம் ஆகியோருக்குப் பாதுகாப்புத் தேடுவார்கள்'' என்று கூறுவார்கள்.

நூல் : புகாரி 3371

قَالَ الْإِمَامُ الرازي: فَقَوْلُهُ: أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ: اِسْتِعَاذَةٌ مِنَ الْأَرْوَاحِ الْبَشَرِيَّةِ بِالْأَرْوَاحِ الْعَالِيَةِ الْمُقَدَّسَةِ الطَّاهِرَةِ الطَّيِّبَةِ فِي دَفْعِ شُرُورِ الْأَرْوَاحِ الْخَبِيثَةِ الظُّلْمَانِيَّةِ الْكَدِرَةِ. وَالْمُرَادُ بِكَلِمَاتِ اللهِ التَامَّاتِ: تِلْكَ الْأَرْوَاحُ الْعَالِيَّةُ الطَّاهِرَةُ.

இமாம் ஃபக்ருத்தீன் ராஸீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தஃப்ஸீர் அல்கபீரில் எழுதுகிறார்கள்: ''அவூது பிகலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி... என்பதற்கான விளக்கம் - உயர்வான, மிக்கப்பரிசுத்தமான, தூய்மையான ரூஹ்களைக் கொண்டு இருள் சூழ்ந்த, மிக்க மோசமான ரூஹ்களின் தீங்குகளை விட்டு மனித ரூஹ் பாதுகாப்புத் தேடுவதாகும்.

'கலிமாத்தில்லாஹித் தாம்மா....' என்றால் உயர்வான, தூய்மையான ரூஹ்கள் என்பது கருத்து. ''உயர்வான, பரிசுத்தமான, தூய்மையான ரூஹ்கள் யார்? நபிமார்கள் மற்றும் வலிமார்கள் ஆவர். எனவே நபிமார்கள், வலிமார்களைக் கொண்டு பாதுகாப்புத் தேடலாம், பரிந்துரை செய்திடக் கேட்கலாம் என்பதை மேற்சொன்ன ஹதீஸுக்கு இமாம் ராஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தரும் விளக்கத்திலிருந்து ஐயமறத் தெரிந்துக் கொள்ளலாம்.

أَخْرَجَ الْحَافِظُ ابْنُ أَبِي شَيْبَةَ عَنْ أَبَانِ بْنِ صَالِحٍ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِذَا نَفَرَتْ دَابَّةُ أَحَدِكُمْ اَوْ بَعِيرُهُ بِفَلاَةٍ مِنَ الْأَرْضِ لاَ يَرَى بِهَا أَحَدًا فَلْيَقُلْ: أَعِينُونِي عِبَادَ اللهِ، فَإِنَّهُ سَيُعَانُ.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

''யாருமில்லாத பாலைவனத்தில் உங்களது ஒட்டகம் அல்லது வாகனம் தவறி விட்டால் அல்லது விரண்டோடி விட்டால் ''அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள்'' என்று கூறட்டும். நிச்சயமாக அவருக்கு உதவி செய்யப்படும்!''

அறிவிப்பவர்: அபான் இப்னு ஸாலிஹ் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : முஸன்னிஃப் இப்னு அபீ ஷைபா 29810

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: أَنَا سَيِّدُ وُلْدِ آدَمَ يَوْمَ الْقِيَامَةِ وَأَوَّلُ مَنْ يَنْشَقُّ عَنْهُ الْقَبْرُ وَأَوَّلُ شَافِعٍ وَأَوَّلُ مُشَفَّعٍ.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

''மறுமை நாளில் ஆதமின் மக்கள் அனைவருக்கும் தலைவன் நானே! மண்ணறை பிளந்து முதன் முதலாக (உயிர்த்து) எழுபவரும் நானே! முதன் முதலில் பரிந்துரை செய்பவரும், பரிந்துரை முதன் முதலில் ஏற்கப்படுபவரும் நானே!''

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு

நூல் : முஸ்லிம் 4575

هو الذي يفزع إليه في النوائب والشدائد فيقوم بأمرهم ويتحمل عنهم مكارههم ويدفعها عنهم

குறிப்பு: இந்த ஹதீஸில் வரும் 'ஸெய்யித்' என்ற சொல்லின் பொருள்: சிரமங்களில் அபயம் தேடப்படுபவர்; அவ்வாறு தேடப் பட்டால் அவரின் சிரமங்களை அவர்கள் நீக்குவார்கள் - இன்னும் அவர்களின் காரியங்களில் உதவி செய்வார்கள்.

أَخْرَجَ الْإِمَامُ أَبُو يَعْلَى عَنْ أَبِي هُرَيْرَةَ يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: وَالَّذِي نَفْسُ أَبِي الْقَاسِمِ بِيَدِهِ لَيَنْزِلَنَّ عِيسَى ابْنُ مَرْيَمَ إِمَامًا مُقْسِطًا وَحَكَمًا عَدْلًا، فَلَيَكْسِرَنَّ الصَّلِيبَ، وَلَيَقْتُلَنَّ الْخِنْزِيرَ، وَلَيُصْلِحَنَّ ذَاتَ الْبَيْنِ، وَلَيُذْهِبَنَّ الشَّحْنَاءَ ، وَلَيُعْرَضَنَّ عَلَيْهِ الْمَالُ فَلاَ يَقْبَلُهُ، ثُمَّ لَئِنْ قَامَ عَلَى قَبْرِي فَقَالَ: يَا مُحَمَّدُ لأُجِيبَنَّهُ.

அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்:

''நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியேற்றேன்:'' அபுல் காசிமின் (முஹம்மது) ஆன்மா யாருடைய

கைவசமுள்ளதோ அவன் மீது சத்தியமாக! நிச்சயமாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நீதமான இமாமாகவும், நேர்மையான ஆட்சியாளராகவும் இறங்குவார்கள். அவர்கள் சிலுவையை உடைப்பார்கள், பன்றிகளைக் கொல்வார்கள், மக்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவார்கள், பகைமையைப் போக்குவார்கள், அவர்களுக்கு சொத்து சுகங்கள் எடுத்துக்காட்டப்படும். ஆனால் அதனை அவர்கள் ஏற்க மாட்டார்கள். பிறகு எனது கப்ருக்கு வந்து யா முஹம்மத்! என்றழைப்பார்கள். நிச்சயமாக நான் அவர்களுக்கு பதிலுரைப்பேன்!'' நூல் : முஸ்னத் அபீ யஃலா 6577

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ سَعْدٍ قَالَ: خَدِرَتْ رِجْلُ ابْنِ عُمَرَ فَقَالَ لَهُ رَجُلٌ: أُذْكُرْ اَحَبَّ النَّاسِ اِلَيْكَ فَقَالَ: يَا مُحَمَّدُ .

அப்துர் ரஹ்மான் இப்னு ஸஃத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கறார்கள்:

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கால் உளச்சல் ஏற்பட்டது. அப்போது ஒருவர் ''மக்களில் தங்களுக்கு மிக விருப்பமானவரைக் கூறுங்கள்'' என்றார். இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் யா முஹம்மத்! என்று கூறினார்கள்.

நூல் : இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அதபுல் முப்ரத் 993.
இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அல் அத்கார்.

أَخْرَجَ اِبْنُ أَبِي شَيْبَةَ عَنْ مَالِكِ الدَّارِ قَالَ: وَكَانَ خَازِنَ عُمَرَ عَلَى الطَّعَامِ قَالَ: اَصَابَ النَّاسَ قَحْطٌ فِي زَمَنِ عُمَرَ: فَجَاءَ رَجُلٌ إِلَى قَبْرِ النَّبِيِّ ﷺ فَقَالَ: يَا رَسُولَ اللهِ، اِسْتَسْقِ لِأُمَّتِكَ فَإِنَّهُمْ قَدْ هَلَكُوا، فَأُتِيَ الرَّجُلُ فِي الْمَنَامِ فَقِيلَ لَهُ

اِيتِ عُمَرَ فَاقْرَئْهُ السَّلاَمَ وَاَخْبِرْهُ اَنَّكُمْ مُسْقَوْنَ وَقُلْ لَهُ: عَلَيْكَ الْكَيْسَ! عَلَيْكَ الْكَيْسَ! فَأَتَى عُمَرَ فَاخْبَرَهُ فَبَكَى عُمَرُ ثُمَّ قَالَ: يَا رَبِّ لاَ آلُوْ اِلَّا مَا عَجَزْتُ عَنْهُ .

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உணவுப் பாதுகாவலராக இருந்த மாலிக்குத்தார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. அப்போது ஒருவர் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரு ஷரீஃபுக்கு வந்து ''அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! தங்களின் உம்மத்துக்கு மழை தேடுங்கள். நிச்சயமாக அவர்கள் அழிவில் இருக்கின்றனர்'' என்று கூறினார்.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மனிதரின் கனவில் வந்து ''நீங்கள் உமரிடம் செல்லுங்கள், அவர்களுக்கு (எனது) ஸலாமைச் சொல்லுங்கள், நீங்கள் மழை பெறுவீர்கள் என்ற செய்தியை அவர்களிடம் கூறுங்கள். மேலும் நீங்கள் அறிவுப்பூர்வமாக செயலாற்றுங்கள் என்றும் அவர்களிடம் சொல்லுங்கள்'' என்றார்கள்.

(கனவு கண்ட) அம்மனிதர் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து (தாம் கண்ட கனவை குறித்த) செய்தியைச் சொன்னார்.

(அதைக் கேட்டு) உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதார்கள். பின்னர் ''எனது இரட்சகனே! எனக்கு இயலாததைத் தவிர வேறு எதனையும் நான் செயல்படுத்தாமல் விட்டதில்லை!'' என்று கூறினார்கள்.

நூல் : முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா 31993

قَالَ الحافظ ابن حجر ﷺ: نقلا عن صاحب الفتوح: أن الذي رأى المنام المذكور هو بلال بن الحارث المزني أَحَد الصحابة . فتح الباري ٦٠٣/٢/

ஹதீஸ் கலை விரிவுரையாளர் இமாம் ஹாஃபிழ் இப்னு ஹஜருல் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள். தமது ஃபத்ஹுல் பாரியில், ரவ்ழா ஷரீஃபுக்கு வந்து முறையிட்டவர் பிலால் இப்னுல் ஹாரிது அல்முஜ்னீ ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபிப் பெருமகனாவார் என்று குறிப்பிடுகிறார்கள்.

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسٍ رضي الله عنه أَنَّهُ حَدَّثَهُمْ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِنَّ الْـمَيِّتَ إِذَا وُضِعَ فِي قَبْرِهِ إِنَّهُ لَيَسْمَعُ خَفْقَ نِعَالِهِمْ إِذَا انْصَرَفُوا.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

ஒரு ஜனாஸா மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டு, (அடக்கம் செய்தவர்கள்) திரும்பிச் செல்லும்போது (செல்பவர்களின்) காலணி ஓசையை (அடக்கம் செய்யப்பட்ட) ஜனாஸா செவியேற்கும்''

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூல் : முஸ்லிம் 5505

الْمُعْجِزَةُ وَالْكَرَامَةُ

முஃஜிஸா, கராமத்
நபிமார்கள் மற்றும் இறைநேசர்களின் பேரற்புதங்கள்

المعجزة: أمر خارق للعادة داعية إِلَى الخير والسعادة مقرونة بدعوى النبوة قصد به إظهار صدق من ادعى أنه رسول من الله . الكرامة: هي ظهور أمر خارق للعادة من قبل شخص غير مقارن لدعوى النبوة، فما لا يكون مقرونا بالإيمان والعمل الصالح يكون استدراجا، وما يكون مقرونا بدعوى النبوة يكون معجزة اهـ التعريفات للإمام الجرجاني: ١٦١، ١٩٥

முஃஜிஸத் என்றால்: வழக்கத்துக்கு மாறாக (அதிசயமாக) நடைபெறும் ஒன்று. அதன் மூலம் நன்மையான, சீதேவித்தனமான காரியங்களின் பால் அழைப்பதாகும்.

தம்மை நபி என்றுரைப்பவர் தாம் அல்லாஹ்வின் திருத்தூதர்தான் என்ற வாதத்தை உண்மை என நிரூபிப்பதுவே இதன் நோக்கமாகும்.

கராமத் என்றால்: வழக்கத்துக்கு மாறான ஒரு காரியம் வெளிப்படுதல். தான் நபி என்று வாதம் செய்யாத ஒருவரிடமிருந்து வழக்கத்துக்கு மாறான (அதிசயமான) செயல் ஏற்படுவதற்கு கராமத் என்பர்.

ஈமானும், அமலும் சேராத நிலையில் வழக்கத்துக்கு மாறாக வெளிப்படும் செயல்களை இஸ்தித்ராஜ் எனவும், நபித்துவ வாதத்தோடு சேர்ந்த நிலையில் வழக்கத்துக்கு மாறாக நிகழும் செயல்களுக்கு முஃஜிஸத் எனவும் கூறப்படும்.

முஃஜிஸத் என்றால்: நுபுவ்வத்தை வாதிக்கும் ஒருவரிடமிருந்து நிகழும் வழக்கத்துக்கு மாறான செயல்கள். மறுப்பாளர்கள் சவால் விடுகிறபோது நிகழ்த்திக் காட்டப்படும் அற்புதங்கள். மறுப்பாளர் களால் அதைப் போன்றவற்றை நிகழ்த்திக் காட்ட முடியாது.

உதாரணமாக: நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் சூனியக்காரர்கள் நிறைந்திருந்தனர். ஃபிர்அவ்ன் நபி மூஸா அவர்களின் நுபுவ்வத்தை மறுத்து வெற்றி பெற்றிட சூனியக்காரர்களை நபியவர் களுடன் மோத விட்டான். சூனியக்காரர்கள் தம்மிடமிருந்த சிறு, சிறு கயிறுகளை தரையில் போட அவை பாம்புகளாக உருமாறின.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம்மிடம் இருந்த கம்பை அல்லாஹ்வின் ஆணைப்படி தரையில் வீச, அது பெரிய பாம்பாக மாறி சூனியக்காரர்களின் சிறிய பாம்புகளை விழுங்கியது. இப்படியொரு அற்புதத்தை சூனியக்காரர்களால் நிகழ்த்த முடிய வில்லை.

கராமத் என்றால்: நுபுவ்வத்தை வாதம் செய்யாத ஒருவரிடமிருந்து வழக்கத்துக்கு மாறாக நிகழும் செயல்களாகும்.

நூல் : அத்தாரிபாத் 161

أَخْرَجَ الْبُخَارِي عَنِ يَزِيدَ بْنِ أَبِي عُبَيْدٍ قَالَ رَأَيْتُ أَثَرَ ضَرْبَةٍ فِي سَاقِ سَلَمَةَ فَقُلْتُ يَا أَبَا مُسْلِمٍ مَا هَذِهِ الضَّرْبَةُ ؟ فَقَالَ هَذِهِ ضَرْبَةٌ أَصَابَتْنِي يَوْمَ خَيْبَرَ فَقَالَ النَّاسُ أُصِيبَ سَلَمَةُ فَأَتَيْتُ النَّبِيَّ ﷺ فَنَفَثَ فِيهِ ثَلَاثَ نَفَثَاتٍ فَمَا اشْتَكَيْتُهَا حَتَّى السَّاعَةِ.

யஸீத் இப்னு அபீ உபைதா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

ஸலமா இப்னு அக்வஃ ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலில் ஒரு வெட்டுக் காயத்தின் அடையாளத்தைப் பார்த்தேன். ‘‘அபூ முஸ்லிம் அவர்களே! இது என்ன காயம்?’’ என அவர்களிடம் கேட்டேன்.

‘‘இது கைபர் போரின்போது ஏற்பட்ட காயம். அப்போது மக்கள் ஸலமா தாக்கப்பட்டு விட்டார் என்றனர். நான் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தேன். அவர்கள் அக்காயத்தில்

மூன்று தடவைகள் சிறிது துப்பலுடன் சேர்த்து ஊதினார்கள். பின்னர் இந்த நேரம் வரை எனக்கு நோவு ஏற்பட்டதில்லை'' என்றார்கள் ஸலமா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். நூல் : புகாரி 4602

குறிப்பு : இந்த நிகழ்வை அறிவிக்கும் யசீத் இப்னு அபீ உபைதா அவர்கள் தாபிஃ ஆவார். இவர் ஸலமா இப்னு அக்வஃ அவர்களின் அடிமை. மதீனாவில் ஹிஜ்ரி 46-ல் யசீத் இப்னு அக்வஃ வஃபாத்தானார்கள்.

أَخْرَجَ الْبُخَارِي حَدَّثَنَا شَرِيْكِ بْنِ عَبْدِ اللهِ بْنِ أَبِي نَمِرٍ اَنَّهُ سَمِعَ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه يَذْكُرُ أَنَّ رَجُلًا دَخَلَ يَوْمَ الْـجُمُعَةِ مِنْ بَابٍ كَانَ وِجَاهَ الْـمِنْبَرِ وَرَسُولُ اللهِ ﷺ قَائِمٌ يَخْطُبُ فَاسْتَقْبَلَ رَسُولَ اللهِ ﷺ قَائِمًا فَقَالَ يَا رَسُولَ اللهِ هَلَكَتِ الْـمَوَاشِي وَانْقَطَعَتِ السُّبُلُ فَادْعُ اللهَ يُغِيثُنَا قَالَ فَرَفَعَ رَسُولُ اللهِ ﷺ يَدَيْهِ فَقَالَ اَللّٰهُمَّ اسْقِنَا اَللّٰهُمَّ اسْقِنَا اَللّٰهُمَّ اسْقِنَا ، قَالَ أَنَسٌ وَلَا وَاللهِ مَا نَرَى فِي السَّمَاءِ مِنْ سَحَابٍ وَلاَ قَزَعَةٍ وَلاَ شَيْئًا وَمَا بَيْنَنَا وَبَيْنَ سَلْعٍ مِنْ بَيْتٍ وَلاَ دَارٍ قَالَ فَطَلَعَتْ مِنْ وَرَائِهِ سَحَابَةٌ مِثْلُ التُّرْسِ فَلَمَّا تَوَسَّطَتِ السَّمَاءَ السَّمَاءَ انْتَشَرَتْ ثُمَّ أَمْطَرَتْ قَالَ وَاللهِ مَا رَأَيْنَا الشَّمْسَ سِتًّا ثُمَّ دَخَلَ رَجُلٌ مِنْ ذَلِكَ الْبَابِ فِي الْـجُمُعَةِ الْـمُقْبِلَةِ وَرَسُولُ اللهِ ﷺ قَائِمٌ يَخْطُبُ فَاسْتَقْبَلَهُ قَائِمًا فَقَالَ يَا رَسُولَ اللهِ هَلَكَتِ الْأَمْوَالُ وَانْقَطَعَتِ السُّبُلُ فَادْعُ اللهَ يُمْسِكْهَا، قَالَ: فَرَفَعَ رَسُولُ اللهِ ﷺ يَدَيْهِ، ثُمَّ قَالَ: اَللّٰهُمَّ حَوَالَيْنَا وَلَا عَلَيْنَا اللّٰهُمَّ عَلَى الْآكَامِ وَالْـجِبَالِ وَالْآجَامِ وَالظِّرَابِ وَالْأَوْدِيَةِ وَمَنَابِتِ الشَّجَرِ قَالَ فَانْقَطَعَتْ وَخَرَجْنَا نَمْشِي فِي الشَّمْسِ قَالَ شَرِيكٌ: فَسَأَلْتُ أَنَسًا أَهُوَ الرَّجُلُ الْأَوَّلُ؟ قَالَ: لَا أَدْرِي.

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

ஒரு ஜுமுஆ தினத்தில் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிம்பர் மீது நின்று உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது மிம்பர் திசையிலுள்ள வாசல் வழியாக வந்த ஒருவர் நின்றவாறே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி: ''இறைத்தூதர் அவர்களே! கால் நடைகள் அழிந்துவிட்டன, பாதைகள் துண்டிக்கப்பட்டு விட்டன. எனவே எங்களுக்கு மழை பொழியச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் கைகளை உயர்த்தி ''இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! வானத்தில் திரண்ட மேகத்தையோ, பிரிந்து கிடக்கும் மேகத்தையோ, (மழைக்குரிய) எந்த அறிகுறிகளையோ நாங்கள் காணவில்லை. எங்களுக்கும் (அதாவது மதீனாவுக்கும்) 'ஸலஃ' என்னும் மலைக்குமிடையே எந்த வீடும் கட்டிடமும் இருக்கவில்லை. (வெட்ட வெளியாக இருந்தது) அப்போது அம்மலைக்கு பின் புறத்திலிருந்து கேடயம் போன்று ஒரு மேகம் தோன்றி வானத்தின் மையப் பகுதிக்கு வந்து சிதறி மழை பொழிந்தது.

அல்லாஹ் மீது ஆணையாக! ஆறு நாட்கள் நாங்கள் சூரியனையே பார்க்கவில்லை. அடுத்த ஜுமுஆவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நின்று உரை நிகழ்த்தும் போது ஒருவர் அதே வாசல் வழியாக வந்தார். நின்றவாறே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி ''இறைத்தூதர் அவர்களே! செல்வங்கள் அழிந்து விட்டன, பாதைகள் துண்டிக்கப்பட்டு விட்டன. எனவே மழையை நிறுத்துமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்'' என்றார்.

உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் கையை உயர்த்தி ''இறைவா! (எங்கள் சுற்றுப் புறங்களில் இம்மழையைப் பொழியச் செய்வாயாக!) எங்களுக்கு பாதமாக இதை நீ ஆக்கிவிடாதே. இறைவா! மணற் குன்றுகள், மலைகள், ஓடைகள், விளை நிலங்கள் ஆகியவற்றின் மீது (இம்மழையைப் பொழியச் செய்வாயாக)'' என்று பிரார்த்தித்தார்கள். உடனே மழை நின்றது நாங்கள் வெளியில் நடந்து சென்றோம். ஸஹீஹ் புகாரி : 1013

ஷரீக் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்:

''இரண்டாவதாக வந்தவர் முதலில் வந்தவர் தானா?'' என அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்டேன். ''தெரியவில்லை'' என்றார்கள் அவர்கள். நூல் : புகாரி 1013

أَخْرَجَ الْبُخَارِي عَنْ عَبْدِ اللهِ بْنِ عَبَّاسٍ رضي الله عنه قَالَ انْخَسَفَتِ الشَّمْسُ عَلَى عَهْدِ رَسُولِ اللهِ ﷺ فَصَلَّى رَسُولُ اللهِ ﷺ فَقَامَ قِيَامًا طَوِيلًا نَحْوًا مِنْ قِرَاءَةِ سُورَةِ الْبَقَرَةِ ثُمَّ رَكَعَ رُكُوعًا طَوِيلًا ثُمَّ رَفَعَ فَقَامَ قِيَامًا طَوِيلًا وَهُوَ دُونَ الْقِيَامِ الْأَوَّل ثُمَّ رَكَعَ رُكُوعًا طَوِيلًا وَهُوَ دُونَ الرُّكُوعِ الْأَوَّل ثُمَّ سَجَدَ ثُمَّ قَامَ قِيَامًا طَوِيلًا وَهُوَ دُونَ الْقِيَامِ الْأَوَّل ثُمَّ رَكَعَ رُكُوعًا طَوِيلًا وَهُوَ دُونَ الرُّكُوعِ الْأَوَّل ثُمَّ رَفَعَ فَقَامَ قِيَامًا طَوِيلًا وَهُوَ دُونَ الْقِيَامِ الْأَوَّل ثُمَّ رَكَعَ رُكُوعًا طَوِيلًا وَهُوَ دُونَ الرُّكُوعِ الْأَوَّل ثُمَّ سَجَدَ ثُمَّ انْصَرَفَ وَقَدْ تَجَلَّتِ الشَّمْسُ فَقَالَ ﷺ إِنَّ الشَّمْسَ وَالْقَمَرَ آيَتَانِ مِنْ آيَاتِ اللهِ لَا يَخْسِفَانِ لِمَوْتِ أَحَد وَلاَ لِحَيَاتِهِ فَإِذَا رَأَيْتُمْ ذَلِكَ فَاذْكُرُوا اللهَ

قَالُوا يَا رَسُولَ اللهِ رَأَيْنَاكَ تَنَاوَلْتَ شَيْئًا فِي مَقَامِكَ ثُمَّ رَأَيْنَاكَ كَعْكَعْتَ
قَالَ ﷺ إِنِّي رَأَيْتُ الْجَنَّةَ فَتَنَاوَلْتُ عُنْقُودًا وَلَوْ أَصَبْتُهُ لَأَكَلْتُمْ مِنْهُ
مِنْهُ مَا بَقِيَتِ الدُّنْيَا وَأُرِيتُ النَّارَ فَلَمْ أَرَ مَنْظَرًا كَالْيَوْمِ قَطُّ أَفْظَعَ
وَرَأَيْتُ أَكْثَرَ أَهْلِهَا النِّسَاءَ قَالُوا بِمَ يَا رَسُولَ اللهِ؟ قَالَ بِكُفْرِهِنَّ قِيلَ
يَكْفُرْنَ بِاللهِ؟ قَالَ يَكْفُرْنَ الْعَشِيرَ -الزَوْجَ- وَيَكْفُرْنَ الْإِحْسَانَ لَوْ أَحْسَنْتَ
إِلَى إِحْداهُنَّ الدَّهْرَ كُلَّهُ ثُمَّ رَأَتْ مِنْكَ شَيْئًا قَالَتْ مَا رَأَيْتُ مِنْكَ خَيْرًا
قَطُّ.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டபோது தொழுதார்கள். அத்தொழுகையில் அல்பகரா அத்தியாயத்தை ஓதுமளவுக்கு நீண்ட நேரம் நின்றார்கள். பின்னர் நீண்ட நேரம் ருகூவு செய்தார்கள். (ருகூவிலிருந்து) எழுந்து நீண்ட நேரம் நின்றார்கள். இது முதல் நிலையை விடக் குறைவாக இருந்தது. பிறகு நீண்ட நேரம் ருகூவுச் செய்தார்கள். இது முதல் ருகூவை விடக் குறைவாக இருந்தது. பிறகு ஸஜ்தா செய்தார்கள், பின்னர் நீண்ட நேரம் நின்றார்கள். இது முதல் நிலையை விடக் குறைவாக இருந்தது. பிறகு நீண்ட நேரம் ருகூவுச் செய்தார்கள். இது முதல் ருகூவை விடக் குறைவாக இருந்தது பிறகு (ருகூவிலிருந்து) நிமிர்ந்து நீண்ட நேரம் நின்றார்கள். இது முதல் நிலையவிட குறைவாக இருந்தது. பிறகு ஸஜ்தா செய்தார்கள். கிரகணம் விலகிய நிலையில் தொழுது முடித்தார்கள்.

(தொழுகை முடிந்ததும்) ‘சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இரண்டு அத்தாட்சிகளாகும். எவருடைய மரணத் திற்காகவோ, வாழ்விற்காகவோ அவற்றிற்குக் கிரகணம் பிடிப்ப

தில்லை. எனவே கிரகணத்தை நீங்கள் கண்டால் அல்லாஹ்வை நினைவு கூருங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அப்போது நபித் தோழர்கள் ''இறைத்தூதர் அவர்களே! நீங்கள் எதையோ பிடிக்க முயன்று பிறகு பின் வாங்கியது போல் நாங்கள் கண்டோமே அது ஏன்?'' என்று கேட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ''நான் சொர்க்கத்தைப் பார்த்தேன். அதன் ஒரு குலையைப் பிடிக்க முயன்றேன்; அதை நான் பிடித்திருந்தால் இந்த உலகம் உள்ளளவும் நீங்கள் அதை உண்பீர்கள். மேலும் நரகத்தையும் கண்டேன். அதைவிட மோசமான காட்சியை ஒருபோதும் நான் கண்டதில்லை. மேலும் நரகவாசிகளில் பெண்களையே அதிகமாகக் கண்டேன்'' என்று கூறினார்கள்.

'இறைத்தூதர் அவர்களே! அது ஏன்?' என்று நபித் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''பெண்கள் நிராகரிப்பதின் காரணத்தினால் தான்'' என்று விடையளித்தனர். ''அல்லாஹ்வையா நிராகரித்தனர்?'' என்று கேட்கப் பட்டதற்கு ''கணவனை நிராகரிக்கிறார்கள்; காலமெல்லாம் ஒருத்திக்கு நீ உதவிகள் செய்து, உன்னிடம் ஏதேனும் ஒரு குறையைக் கண்டால் உன்னிடம் எந்த நன்மையையும் நான் காணவில்லை என்று கூறி விடுவாள்'' என்று பதிலுரைத்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்
ரழியல்லாஹு அன்ஹு
நூல் : ஸஹீஹ் புகாரி : 1052

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَابِرٍ رضي الله عنه قَالَ: تُوُفِّيَ عَبْدُ اللهِ بْـنُ عَمْـرِو بْنِ حَرَامٍ وَعَلَيْهِ دَيْنٌ، فَاسْتَعَنْتُ النَّبِيَّ صلى الله عليه وآله وسلم عَلَى غُرَمَائِهِ أَنْ يَضَعُوا مِـنْ

دَيْنِهِ ، فَطَلَبَ النَّبِيُّ ﷺ إِلَيْهِمْ فَلَمْ يَفْعَلُوا ، فَقَالَ لِيَ النَّبِيُّ ﷺ: اذْهَبْ فَصَنِّفْ تَمْرَكَ أَصْنَافًا الْعَجْوَةَ عَلَى حِدَةٍ وَعَذْقَ زَيْدٍ عَلَى حِدَةٍ ثُمَّ أَرْسِلْ إِلَيَّ فَفَعَلْتُ ثُمَّ أَرْسَلْتُ إِلَى النَّبِيِّ ﷺ فَجَاءَ فَجَلَسَ عَلَى أَعْلاَهُ أَوْ فِي وَسَطِهِ ثُمَّ قَالَ: كِلْ لِلْقَوْمِ فَكِلْتُهُمْ حَتَّى أَوْفَيْتُهُمُ الَّذِي لَهُمْ وَبَقِيَ تَمْرِي كَأَنَّهُ لَمْ يَنْقُصْ مِنْهُ شَيْءٌ.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னி ஹராம் ரழியல்லாஹ் அன்ஹு அவர்கள் கடன்பட்ட நிலையில் மரணித்து விட்டார்கள். அவருக்குக் கடன் கொடுத்தவர்கள் அவரது கடனில் சிறிது தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உதவியை நாடினேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடனை தள்ளுபடி செய்யுமாறு கோரியபோது அவர்கள் அதைச் செய்யவில்லை.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் ‘‘நீர் சென்று உம்முடைய பேரீச்சம் பழத்தில் ஒவ்வொரு ரகத்தையும் தனித் தனியாக வகைப்படுத்துவீராக! அஜ்வா எனும் ரகத்தை தனியாகவும், **அத்கஸெய்த்** எனும் ரகத்தை தனியாகவும் வகைப்படுத்துவீராக! பிறகு என்னிடம் அனுப்புவீராக!’’ என்றனர்.

அவ்வாறு நான் செய்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அனுப்பினேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து அதன் மேற்புறத்திலோ நடுப்புறத்திலோ அமர்ந்தார்கள். பிறகு என்னிடம் (கடன் கொடுத்த) ‘‘இக்கூட்டத் தினருக்கு அளந்து கொடுப்பீராக!’’ என்றார்கள். அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை முழுமையாக நான் அளந்து கொடுத்தேன். என்னுடைய பேரீச்சம் பழத்தில் எதுவும் குறையாமல் அப்படியே

இருந்தது. மற்றொரு அறிவிப்பில்: பேரீச்சம் குலையை வெட்டிக் கடனை நிறைவேற்று! என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என உள்ளது.

அறிவிப்பவர்: ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்

நூல்: ஸஹீஹ் புகாரி : 2127

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ رضي الله عنه عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا تُوَاصِلُوا تُوَاصِلُوا قَالُوا: إِنَّكَ تُوَاصِلُ قَالَ: لَسْتُ كَأَحَد مِنْكُمْ إِنِّي أُطْعَمُ وَأُسْقَى أَوْ إِنِّي أَبِيتُ أُطْعَمُ وَأُسْقَى.اهـ

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீங்கள் தொடர் நோன்பு நோற்காதீர்கள்!'' என்று கூறியபோது, ''தாங்கள் தொடர் நோன்பு நோற்கிறீர்களே!'' என நபித் தோழர்கள் வினவினர்.

''நான் உங்களைப் போன்றவன் அல்ல. நிச்சயமாக நான் உணவு ஊட்டப்படுகின்றேன், நீர் புகட்டப்படுகின்றேன். அல்லது உணவு ஊட்டப்பட்டு, நீர் புகட்டப்பட்டு இரவுப் பொழுதைக் கழிக்கின்றேன்!'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலிறுத்தனர்.

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

நூல்: புகாரி - 1961

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَابِرٍ رضي الله عنه، قَالَ: عَطِشَ النَّاسُ يَوْمَ الْحُدَيْبِيَةِ، وَرَسُولُ اللهِ ﷺ بَيْنَ يَدَيْهِ رَكْوَةٌ فَتَوَضَّأَ مِنْهَا، ثُمَّ أَقْبَلَ النَّاسُ نَحْوَهُ، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: مَا لَكُمْ؟ قَالُوا: يَا رَسُولَ اللهِ لَيْسَ عِنْدَنَا مَاءٌ

نَتَوَضَّأُ بِهِ وَلاَ نَشْـرَبُ، إِلَّا مَا فِي رَكْوَتِكَ، قَالَ: فَوَضَعَ النَّـبِيُّ ﷺ يَـدَهُ فِي الرَّكْوَةِ، فَجَعَلَ الْمَـاءُ يَفُورُ مِنْ بَيْنِ أَصَابِعِهِ كَأَمْثَالِ الْعُيُونِ . قَالَ: فَشَرِبْنَا وَتَوَضَّأْنَا فَقُلْتُ لِجَابِرٍ: كَمْ كُنْتُمْ يَوْمَئِذٍ؟ قَالَ: لَوْ كُنَّا مِائَةَ أَلْـفٍ لَكَفَانَـا، كُنَّا خَمْسَ عَشْـرَةَ مِائَةً.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது மக்களுக்குத் தாகம் ஏற்பட்டது. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் தோலால் ஆன (நீர்க்) குவளை ஒன்று இருந்தது. அதிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உளூச் செய்தார்கள். அதன் பிறகு மக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி வந்தனர். அப்போது இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘உங்களுக்கு என்ன நேர்ந்தது?’’ என்று கேட்டார்கள்.

‘‘இறைத்தூதர் அவர்களே! தங்கள் குவளையிலிருக்கும் தண்ணீரைத் தவிர நாங்கள் உளூச் செய்வதற்கோ, குடிப்பதற்கோ எங்களிடம் வேறு தண்ணீரில்லை’’ என்று கூறினர்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் கரத்தை அந்தக் குவளைக்குள் வைத்தார்கள். அவர்களின் விரல்களுக்கிடையில் இருந்த ஊற்றுக் கண் போன்று தண்ணீர் பொங்கி வரத் தொடங்கியது. அப்போது நாங்கள் அந்த தண்ணீரை அருந்தினோம், உளூவும் செய்தோம்.

அறிவிப்பாளர் சாலிம் இப்னு அபில் ஜஅத் - ரஹ்மதுல்லாஹி அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நான் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ‘‘அன்று நீங்கள் எத்தனை பேர் இருந்தீர்கள்?’’ என்று கேட்டேன் ‘‘நாங்கள் ஒரு இலட்சம் பேராக இருந்திருந்தாலும் அந்தத்

தண்ணீர் எங்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். நாங்கள் ஆயிரத்து ஐநூறு பேர்கள் இருந்தோம்'' என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் ரழியல்லாஹு

ஸஹீஹ் புகாரி : 4152

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَابِرَ بْنِ عَبْدِ اللهِ، ﵄ قَالَ: لَمَّا حُفِرَ الخَنْدَقُ رَأَيْتُ بِالنَّبِيِّ ﷺ خَمَصًا شَدِيدًا، فَانْكَفَأْتُ إِلَى امْرَأَتِي، فَقُلْتُ: هَلْ عِنْدَكِ شَيْءٌ؟ فَإِنِّي رَأَيْتُ بِرَسُولِ اللهِ ﷺ خَمَصًا شَدِيدًا، فَأَخْرَجَتْ إِلَيَّ جِرَابًا فِيهِ صَاعٌ مِنْ شَعِيرٍ، وَلَنَا بُهَيْمَةٌ دَاجِنٌ فَذَبَحْتُهَا، وَطَحَنَتِ الشَّعِيرَ، فَفَرَغَتْ إِلَى فَرَاغِي، وَقَطَّعْتُهَا فِي بُرْمَتِهَا، ثُمَّ وَلَّيْتُ إِلَى رَسُولِ اللهِ ﷺ، فَقَالَتْ: لاَ تَفْضَحْنِي بِرَسُولِ اللهِ ﷺ وَبِمَنْ مَعَهُ، فَجِئْتُهُ فَسَارَرْتُهُ، فَقُلْتُ: يَا رَسُولَ اللهِ ذَبَحْنَا بُهَيْمَةً لَنَا وَطَحَنَّا صَاعًا مِنْ شَعِيرٍ كَانَ عِنْدَنَا، فَتَعَالَ أَنْتَ وَنَفَرٌ مَعَكَ، فَصَاحَ النَّبِيُّ ﷺ فَقَالَ: يَا أَهْلَ الخَنْدَقِ، إِنَّ جَابِرًا قَدْ صَنَعَ سُؤْرًا، فَحَيَّ هَلًا بِكُمْ، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: لاَ تُنْزِلُنَّ بُرْمَتَكُمْ، وَلاَ تَخْبِزُنَّ عَجِينَكُمْ حَتَّى أَجِيءَ. فَجِئْتُ وَجَاءَ رَسُولُ اللهِ ﷺ يَقْدُمُ النَّاسَ حَتَّى جِئْتُ امْرَأَتِي، فَقَالَتْ: بِكَ وَبِكَ، فَقُلْتُ: قَدْ فَعَلْتُ الَّذِي قُلْتِ، فَأَخْرَجَتْ لَهُ عَجِينًا فَبَصَقَ فِيهِ وَبَارَكَ، ثُمَّ عَمَدَ إِلَى بُرْمَتِنَا فَبَصَقَ وَبَارَكَ، ثُمَّ قَالَ: ادْعُ خَابِزَةً فَلْتَخْبِزْ مَعِي، وَاقْدَحِي مِنْ بُرْمَتِكُمْ وَلاَ تُنْزِلُوهَا، وَهُمْ أَلْفٌ، فَأُقْسِمُ بِاللهِ لَقَدْ أَكَلُوا حَتَّى تَرَكُوهُ وَانْحَرَفُوا، وَإِنَّ بُرْمَتَنَا لَتَغِطُّ كَمَا هِيَ، وَإِنَّ عَجِينَنَا لَيُخْبَزُ كَمَا هُوَ.

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள்: (போருக்காக) அகழ் தோண்டப்பட்டுக் கொண்டிருந்த போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வயிறு பசியினால் மிகவும் ஒட்டியிருப்பதைக் கண்டேன். உடனே நான் என் மனைவியிடம் வந்து, ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வயிறு மிகவும் ஒட்டிப் போயிருப்பதை கண்டேன். உன்னிடம் ஏதேனும் உண்ண இருக்கிறதா?'' என்று கேட்டேன். உடனே என் மனைவி ஒருபையைக் கொண்டு வந்தார். அதில் ஒரு 'ஸாவு' அளவு வாற்கோதுமையிருந்தது. வீட்டில் வளரும் ஆட்டுக் குட்டி ஒன்றும் எங்களிடம் இருந்தது. அதை நான் அறுத்தேன். என் மனைவி அந்தக் கோதுமையை அரைத்தார். நான் அறுத்து முடிக்கும் போது அவரும் அரைத்து முடித்து விட்டார்.

மேலும் அதனை துண்டுகளாக்கி அதற்கான சட்டியிலிட்டேன். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் திரும்பி வந்தேன். நான் புறப்படும்போது என் மனைவி ''இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், அவர்களுடன் இருப்பவர்களுக்கும் முன்னால் என்னை நீங்கள் கேவலப்படுத்தி விடவேண்டாம். உணவு கொஞ்சம்தான் இருக்கிறது என்று கூறி விடுங்கள்'' என்று சொன்னார். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து இரகசியமாக ''இறைத்தூதர் அவர்களே! நாங்கள் எங்களுக்கு சொந்தமான ஆட்டுக்குட்டி ஒன்றை அறுத்து எங்களிடம் இருந்த ஒரு 'ஸாவு' அளவு வாற்கோதுமையை அரைத்தும் வைத்துள்ளோம். எனவே தாங்களும், தங்களுடன் ஒரு சிலரும் என் வீட்டிற்கு வாருங்கள்'' என்று அழைத்தேன்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரத்த குரலில் ''அகழ்வாசிகளே! ஜாபிர் உங்களுக்காக உணவு தயாரித்து உள்ளார் விரைந்து வாருங்கள்'' என்று கூறினார்கள்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ''நான் வரும் வரை நீங்கள் சட்டியை அடுப்பிலிருந்து இறக்க வேண்டாம். உங்களது குழைத்த மாவில் ரொட்டி சுடவும் வேண்டாம்'' என்று கூறினார்கள்.

நான் திரும்பி வந்தேன். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்கள் பலருடன் வருவதைப் பார்த்து என் மனைவி கோபமுற்று என்னைக் கடிந்துக் கொண்டாள். உடனே நான் ''நீ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சொல்லச் சொன்ன விஷயத்தை நான் அவர்களிடம் சொல்லிவிட்டேன்'' என்று கூறினேன்.

பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் என் மனைவி குழைத்த மாவைக் கொடுத்தாள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதில் தம் திருவாயினால் உமிழ்ந் தார்கள். மேலும் மாவில் பரக்கத் பெருக்கம் ஏற்படப் பிரார்த்தித்தார்கள். பிறகு எங்களின் இறைச்சிச் சட்டியை நோக்கி வந்து, அதில் உமிழ்ந்து பரக்கத் - பெருக்கம் ஏற்படப் பிரார்த்தித்தார்கள். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் மனைவியை நோக்கி ''ரொட்டி சுடுபவள் ஒருத்தியை உதவிக்கு அழை! அவள் என்னோடு ரொட்டி சுடட்டும். உன்னுடைய பாத்திரத்திலிருந்து நீ அள்ளிக்கொடுத்துக் கொண்டிரு, பாத்திரத்தை இறக்கி வைத்து விடாதே'' என்று கூறினார்கள். அங்கு வந்தவர்கள் ஆயிரம் பேர் இருந்தனர்.

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்லாஹ் மீது சத்தியமாக! அவர்கள் அனைவரும் சாப்பிட்டனர். அப்பொழுதும் எங்கள் சட்டி நிறைந்து சப்தமெழுப்பி யவாறு கொதித்துக் கொண்டிருந்தது. அது கொஞ்சமும் குறையாமல்

முன்பு இருந்தது போன்றே இருந்தது. மேலும் எங்களுடைய குழைத்த மாவும் கொஞ்சமும் குறையாமல் முன்பு போன்றே ரொட்டியாகச் சுடப்பட்டுக் கொண்டே இருந்தது.

அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : புகாரி 4102

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ﵁، سَمِعَ النَّبِيَّ ﷺ، يَقُولُ: يَوْمَ خَيْبَرَ: لَأُعْطِيَنَّ الرَّايَةَ رَجُلًا يَفْتَحُ اللهُ عَلَى يَدَيْهِ، فَقَامُوا يَرْجُونَ لِذَلِكَ أَيُّهُمْ يُعْطَى، فَغَدَوْا وَكُلُّهُمْ يَرْجُو أَنْ يُعْطَى، فَقَالَ: أَيْنَ عَلِيٌّ ؟، فَقِيلَ: يَشْتَكِي عَيْنَيْهِ، فَأَمَرَ، فَدُعِيَ لَهُ، فَبَصَقَ فِي عَيْنَيْهِ، فَبَرَأَ مَكَانَهُ حَتَّى كَأَنَّهُ لَمْ يَكُنْ بِهِ شَيْءٌ، فَقَالَ: نُقَاتِلُهُمْ حَتَّى يَكُونُوا مِثْلَنَا؟ فَقَالَ: عَلَى عَلَى رِسْلِكَ ، حَتَّى تَنْزِلَ بِسَاحَتِهِمْ، ثُمَّ ادْعُهُمْ إِلَى الإِسْلاَمِ، وَأَخْبِرْهُمْ بِمَا يَجِبُ عَلَيْهِمْ، فَوَاللهِ لَأَنْ يُهْدَى بِكَ رَجُلٌ وَاحِدٌ خَيْرٌ لَكَ مِنْ حُمْرِ النَّعَمِ.

ஸஹ்ல் இப்னு ஸஅத் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைபர் போரின் போது ‘‘அல்லாஹ் எவருடைய கரத்தில் வெற்றியைத் தரவிருக்கிறானோ அத்தகைய ஒரு மனிதரிடத்தில் நாளைக்கு நான் இஸ்லாமியச் சேனையின் கொடியைத் தருவேன்’’ என்று கூறக்கேட்டேன். உடனே நபித்தோழர்கள் அதை யாரிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொடுக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்து நின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் அது தம்மிடமே தரப்பட வேண்டும் என்று விரும்பியவர்களாக மறுநாள் வந்தனர்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘அலி ரழியல்லாஹு அன்ஹு எங்கே?’’ என்று கேட்டார்கள். அவருக்கு கண்வலி என்று கூறப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கண்களில் தம் எச்சிலை உமிழ்ந்தார்கள். உடனே அவர்களின் கண் அதற்கு முன்பு வலி எதுவுமே இல்லாதிருந்ததைப் போல் குணமாகி விட்டது.

உடனே அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘நம்மைப் போல் முஸ்லிம்களாய் ஆகும் வரை நாம் அவர்களுடன் போர் புரிவோம்’ என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிதானமாகச் சென்று அவர்களிடத்தில் இறங்குவீராக! பிறகு அவர்களை இஸ்லாத்திற்கு அழைத்து, அதை ஏற்கும் பட்சத்தில் அவர்களின் மீது கடமையாகுபவற்றை அவர்களுக்குத் தெரிவிப்பீராக; அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்கள் வாயிலாக ஒரேயொரு மனிதருக்கு நேர்வழியளிக்கப்படுவது அரபுகளின் உயரிய செல்வமான சிகப்பு ஒட்டகங்களை தர்மம் செய்வதை விட உங்களுக்குச் சிறந்ததாகும்’’ என்றார்கள். நூல்: ஸஹீஹ் புகாரி - 2942

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ رضي الله عنهما أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ يَقُومُ يَوْمَ الْجُمُعَةِ إِلَى شَجَرَةٍ أَوْ نَخْلَةٍ فَقَالَتِ امْرَأَةٌ مِنَ الْأَنْصَارِ أَوْ رَجُلٌ يَا رَسُولَ اللهِ أَلاَ نَجْعَلُ لَكَ مِنْبَرًا؟ قَالَ: إِنْ شِئْتُمْ فَجَعَلُوا لَهُ مِنْبَرًا فَلَمَّا كَانَ يَوْمَ الْجُمُعَةِ دُفِعَ إِلَى الْمِنْبَرِ فَصَاحَتِ النَّخْلَةُ صِيَاحَ الصَّبِيِّ ثُمَّ نَزَلَ النَّبِيُّ ﷺ فَضَمَّهُ إِلَيْهِ تَئِنُّ أَنِينَ الصَّبِيِّ الَّذِي يُسَكَّنُ قَالَ كَانَتْ تَبْكِي عَلَى مَا كَانَتْ تَسْمَعُ مِنَ الذِّكْرِ عِنْدَهَا.

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜுமுஆ நாளின் போது பள்ளிவாசலில் தூணாக இருந்த ஒரு மரம் அல்லது பேரீச்ச மரத்தின் அடிப்பாகத்தின் மீது சாய்ந்தபடி உரையாற்றிய வண்ணம் நின்றிருந்தார்கள். அப்போது ஒரு அன்சாரிப் பெண்மணி அல்லது ஒரு அன்சாரித் தோழர் ''இறைத் தூதர் அவர்களே! நாங்கள் உங்களுக்கு ஒரு உரை மேடை (மிம்பர்) செய்து தரலாமா?'' என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீங்கள் விரும்பினால் செய்து கொடுங்கள்'' என்று பதிலளித்தார்கள். அவ்வாறே அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு (மிம்பர்) உரைமேடை ஒன்றைச் செய்து கொடுத்தனர்.

ஜுமுஆ நாள் வந்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரை நிகழ்த்திட உரைமேடைக்குச் சென்றார்கள். உடனே அந்த பேரீச்ச மரக்கட்டை குழந்தையைப் போல் தேம்பியபடி இருந்தது. பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கீழே இறங்கி வந்து அந்த பேரீச்ச மரக்கட்டையை தன்னோடு அணைத்தார்கள், அது அமைதியாகி விட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''தன் மீது இருந்தபடி உரை நிகழ்த்தியபோது கேட்டுக் கொண்டிருந்த நல்லுபதேசத்தை நினைத்து இப்போது நம்மீது அப்படி உபதேச உரைகள் நிகழ்த்தப்படுவதில்லையே என்று ஏங்கி அழுது கொண்டிருந்தது'' என்று கூறினார்கள்.

நூல்: ஸஹீஹ் புகாரி - 3584

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: كَانَ رَجُلٌ فِي بَنِي إِسْرَائِيلَ يُقَالَ لَهُ جُرَيْجٌ الرَّاهِبُ يُصَلِّ فَجَاءَتْهُ أُمُّهُ فَدَعَتْهُ فَأَبَى أَنْ يُجِيبَهَا فَقَالَ : أُجِيبُهَا أَوْ أُصَلِّ؟ ثُمَّ اَتَتْهُ فَقَالَتْ: اَللّٰهُمَّ لاَ تُمِتْهُ

تُمِتْهُ حَتَّى تُرِيَهُ وُجُوهَ الْـمُومِسَاتِ وَكَانَ جُـرَيْجٌ فِي صَـوْمَعَتِهِ فَقَالَـتِ امْرَأَةٌ: لَأَفْتِنَنَّ جُرَيْجًا فَتَعَرَّضَتْ لَهُ فَكَلَّمَتْهُ فَأَبَى فَأَتَتْ رَاعِيًا فَأَمْكَنَتْهُ مِنْ مِنْ نَفْسِهَا فَوَلَدَتْ غُلَامًا فَقَالَـتْ: هُـوَ مِـنْ جُـرَيْجٍ فَـأَتَوْهُ وَكَسَرُـوا صَوْمَعَتَهُ فَأَنْزَلُوهُ وَسَبُّوهُ فَتَوَضَّأَ وَصَلَّى ثُمَّ أَتَى الْغُـلَامَ فَقَـالَ: مَـنْ أَبُـوكَ يَـا غُلَامُ؟ قَالَ: الرَّاعِي قَالُوا: نَبْنِي صَوْمَعَتَكَ مِنْ ذَهَبٍ؟ قَـالَ: لاَ إِلَّا مِـنْ طِينٍ.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘‘பனூ இஸ்ராயீல் சமுதாயத்தைச் சேர்ந்த ‘ஜுரைஜ்’ என்று அழைக்கப்பட்டு கொண்டிருந்த ஒருவர் தொழுது கொண்டிருந்தார். அப்போது அவரின் தாயார் வந்து, அவரை அழைத்தார். அவருக்கு பதில் கூற ஜுரைஜ் மறுத்து விட்டார். நான் அவருக்கு பதில் அளிப்பதா? அல்லது தொழுவதா? என்று மனதிற்குள் கூறினார். பின்னர் மீண்டும் தன் மகனிடம் வந்தார் (அப்பொழுதும்) தன் மகன் பதிலளிக்கவில்லையே என்ற கோபத்தில் ‘‘இறைவா! விபச்சாரிகளின் முகத்தில் விழிக்கச் செய்யாத வரை அவனுக்கு (ஜுரைஜுக்கு) மரணத்தை தராதே!’’ என்று கூறினார்.

ஒரு நாள் ஜுரைஜ் தன் ஆசிரமத்தில் இருந்தார். அப்போது ஒரு பெண் ‘‘நான் ஜுரைஜை நிச்சயமாக சோதனைக்குள்ளாக்குவேன்’’ என்று கூறினாள். அதற்காக ஜுரைஜின் முன்பு வந்து அவருடன் தகாத உறவு கொள்ள அழைத்துப் பேச முனைந்தாள். அவர் இணங்க மறுத்துவிட்டார். எனவே அவள் ஓர் இடையனிடம் சென்று தன்னை அவனுடைய ஆளுமைக்குள் ஒப்படைத்துவிட்டாள். அதன் காரணமாக ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். பிறகு இவள் (அக்குழந்தை) ஜுரைஜுக்கு பிறந்தவன் என்று கூறினாள்.

இதைக் கேட்ட மக்கள் (வெகுண்டெழுந்து) ஜுரைஜிடம் வந்தனர். கோபாவேசத்தில் அவரின் ஆசிரமத்தை தகர்த்து உடைத்துவிட்டனர்.

அவரின் அறையிலிருந்து அவரை இறக்கி ஏசினர். ஜுரைஜ் உளூச் செய்து தொழுதார். பிறகு அந்த குழந்தையிடம் வந்து குழந்தையே! உன் தந்தை யார்? என்று கேட்டார். அந்தக் குழந்தை வாய் திறந்து ''இன்ன இடையன்'' என்று கூறியது. இதை செவியுற்ற மக்கள் உங்கள் ஆசிரமத்தைத் தங்கத்தால் நாங்கள் கட்டித் தருகிறோம் என்று ஜுரைஜிடம் அனுமதி கேட்டனர். அதற்கு ஜுரைஜ் ''இல்லை களிமண்ணால் கட்டித் தந்தாலே போதும்'' என்று கூறிவிட்டார்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல் : ஸஹீஹ் புகாரி - 2482

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ حُمَيْدٍ أَنَّ أَنَسًا رضي الله عنه حَدَّثَهُمْ أَنَّ الرُّبَيِّعَ وَهِيَ ابْنَةُ النَّضْرِ كَسَرَتْ ثَنِيَّةَ جَارِيَةٍ فَطَلَبُوا الْأَرْشَ وَطَلَبُوا الْعَفْوَ فَأَبَوْا فَأَتَوُا النَّبِيَّ صلى الله عليه وسلم فَأَمَرَهُمْ بِالْقِصَاصِ فَقَالَ: أَنَسُ بْنُ النَّضْرِ أَتُكْسَرُ ثَنِيَّةُ الرُّبَيِّعِ يَا رَسُولَ اللهِ لاَ وَالَّذِي بَعَثَكَ بِالْحَقِّ لاَ لاَ تُكْسَرُ ثَنِيَّتُهَا فَقَالَ: يَا أَنَسُ كِتَابُ اللهِ الْقِصَاصُ فَرَضِيَ الْقَوْمُ وَعَفَوْا فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم: إِنَّ مِنْ عِبَادِ اللهِ مَنْ لَوْ أَقْسَمَ عَلَى اللهِ لَأَبَرَّهُ ، زَادَ الْفَزَارِيُّ عَنْ حُمَيْدٍ عَنْ أَنَسٍ فَرَضِيَ الْقَوْمُ وَقَبِلُوا الْأَرْشَ.

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள்: என் தந்தையின் சகோதரி ருபய்யிஉ பின்த்து நள்ர் ஓர் இளம் பெண்ணின் முன் பல்லை உடைத்து விட்டார். அப்பெண்ணின் குலத்தாரிடம் என் குலத்தார் இழப்பீட்டுத் தொகையை பெறுங்கள். அல்லது (ருபய்யிஉவை) மன்னித்து விடுங்கள்'' என்று கோரினர். அவர்கள் இரண்டில் எதற்குமே ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டனர்.

எனவே எங்கள் குலத்தார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் விபரம் கூறி தீர்ப்புப்பெற வந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ருபய்யிஉவைப் பழி வாங்கும்படி அவர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

அப்போது என் தந்தையின் சகோதரர் அனஸ் இப்னு நள்ரு ரழியல்லஹு அன்ஹு அவர்கள் ''இறைத்தூதர் அவர்களே! என் சகோதரி ருபய்யிஉவின் முன்பல் உடைக்கப்படுமா? அப்படி நடக்காது. தங்களை சத்திய மார்க்கத்துடன் அனுப்பி வைத்தவன் மீது சத்தியமாக அவருடைய முன்பல் உடைக்கப்படாது'' என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அனஸே! அல்லாஹ்வின் சட்டம் பழி வாங்குவதாகும். எனவே அதை வெறுக்கவோ, மறுக்கவோ வேண்டாம்'' என்று கூறினார்கள்.

பிறகு அந்த இளம் பெண்ணின் குலத்தார் ஈட்டுத்தொகை பெற ஒப்புக்கொண்டு ருபய்யிஉவை மன்னித்தனர். அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு எதையேனும் கூறி விடுவார்களாயின் அதை அல்லாஹ் நிறைவேற்றி விடுகிறான் என்றார்கள்.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு வழியாக அறிவிக்கப்படும் மற்றோர் அறிவிப்பில்: அந்த வாலிபப் பெண்ணின் குலத்தார் பழி வாங்காமல் விட்டுவிட ஒப்புக்கொண்டு ஈட்டுத் தொகையை ஏற்றார்கள் என்று வந்துள்ளது. நூல்: ஸஹீஹ் புகாரி - 2703

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ رضي الله عنه : أَنَّ رَجُلَيْنِ مِنْ أَصْحَابِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم، خَرَجَا مِنْ عِنْدِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم فِي لَيْلَةٍ مُظْلِمَةٍ وَمَعَهُمَا مِثْلُ

الْـمِصْبَاحَيْنِ يُضِيئَانِ بَيْنَ أَيْدِيهِمَا فَلَمَّاافْتَرَقَا صَارَ مَـعَ كُلِّ وَاحِـد مِنْهُمَـا وَاحِدٌ حَتَّى اَتَى أَهْلَهُ. وفي آخِـرِ رِوَايَةٍ أُخْـرَى لِلْبُخَـارِي وَإِذَا نُـورٌ بَـيْنَ أَيْدِيهِمَا، حَتَّى تَفَرَّقَا، فَتَفَرَّقَ النُّورُ مَعَهُمَا.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள்: நபித்தோழர்களில் இருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து பள்ளிவாசலை விட்டும் இருள்சூழ்ந்த இரவில் தங்கள் இல்லங்களுக்கு புறப்பட்டார்கள். அவ்விருவருக்கும் முன்னால் இரண்டு விளக்குகள் போன்று எதுவோ ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவ்விருவரும் தத்தம் வழியில் பிரிந்து சென்றபோது ஒவ்வொருவருடனும் விளக்கு போன்று ஒன்று அவர்கள் தம் இல்லங்களை அடையும் வரை ஒளி வீசிக் கொண்டிருந்தது.

நூல்: ஸஹீஹ் புகாரி - 465

اَلْغَيْبُ: عِلْمُهُ وَالإِخْبَارُ بِهِ

மறைவான ஞானம்

الغيب: هو الذي لا يدركه الحس ولا تقتضيه بديهة العقل، وهو قسمان قسم لا دليل عليه وهو المعني بقوله تعالى: وعنده مفاتيح الغيب لا يعلمها إلا هو . وقسم نصب عليه دليل كالصانع وصفاته واليوم الآخر واحواله وهو المراد به في هذه الآية (يؤمنون بالغيب) قَالَه القاضي البيضاوي في تفسيره / والمراد به هنا القسم الثاني

மறைவானவை என்றால்: ஆறறிவால் பெற்றுக் கொள்ள முடியாதவையும், புத்தியால் சிந்தித்து கண்டுபிடிக்க இயலாதவையும் ஆகும்.

இது இரண்டு வகைப்படும். 1) அதன் மீது எந்த ஆதாரமும் இல்லை. அதாவது எந்த ஆதாரத்தை வைத்தும் அதனை அறிந்திட முடியாது.

‘‘மறைவானவற்றின் திறவுகோல்கள் அல்லாஹ்விடம் உள்ளது. அதனை அவனைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார்’’ என்ற அல்லாஹ்வின் திருவசனத்தைக் கொண்டு இவ்வகை நாடப் பட்டுள்ளது.

2) அதன் மீது ஆதாரம் நிறுவப்பட்டுள்ளது. அதாவது ஆதாரத்தை வைத்து விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணமாக: அல்லாஹ்வின் தன்மைகளைக் கொண்டு அல்லாஹ்வை அறிதல்.

மறுமை நாளை அதன் அடையாளங்களைக் கொண்டு தெரிந்துக் கொள்ளுதல் போன்றவையாகும்.

‘‘மறைவானவற்றை அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள்’’ என்ற இறைவசனத்தைக் கொண்டு இவ்வகை நாடப்பட்டுள்ளது.

‘‘மறைவானவற்றை அவர்கள் நம்பிக்கை கொள்வர்’’ என்ற இறை வசனம், இரண்டாவது வகையைச் சுட்டுகிறது என மாபெரும் மேதை இமாம் பைளாவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தஃப்ஸீரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

وقد تقرر في عقائد أهْل السنة أنه يكون للأنبياء و الأَوْلياء العلم بالغيب من حيث المعجزة والكرامة ويكون بإعلام الله تعالى وإذنه وإرادته كما هو شأن العلوم العادية الإختيارية وقد يكون بالوحي والإلهام وقد يكون باستعداد مخصوص واستطاعة مخصوصة ويكون مع ذلك باذن الله تعالى وإرادته

முஃஜிஸா மற்றும் கராமத்தின் அடிப்படையில் நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் மறைவான ஞானம் உண்டு என்பது ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கையாகும்.

அல்லாஹ் அறிவித்துக் கொடுப்பதன் மூலமும், அவனுடைய அனுமதி மற்றும் நாட்டத்தைக் கொண்டும் மறைவான அறிவு உண்டாகும். சுலபமாக உண்டாகக்கூடிய சாதாரண அறிவும் இப்படித் தான். அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தல், மற்றும் அவனுடைய அனுமதி, நாட்டம் கொண்டல்லாமல் ஏற்படாது.

மறைவானவற்றை அறிந்துக் கொள்ளுதல் என்பது (நபிமார்களுக்கு) வஹியின் மூலமும், (வலிமார்களுக்கு) இல்ஹாம் உள்ளத்தில் உதிப்பை ஏற்படுத்துவதன் மூலமும் உண்டாகும்.

சில நேரங்களில் பிரத்யேகமான ஒரு சக்தி மூலம் (நபிமார்கள், வலிமார்கள் அறிய வேண்டுமென நாடுகிறபோது) அல்லாஹ்வின் நாட்டம் மற்றும் உத்தரவு வழி மறைவான அறிவு உண்டாகும்.

تنبيه: أَهْل السنة والجماعة وأَهْل البدعة موافقون على أن الأنبياء و الْأَوْلياء يعلمون الغيب بإعلام الله لهم به ككل وَاحِد منا - ولكن منشأ الخلاف بيننا و بينهم أن الأنبياء و الْأَوْلياء هل لهم استطاعة واستعداد خاص فوق الإستطاعة والإستعداد العام على سائر البشر /وهل يعلمونه مع القصد والإختيار ؟ فنقول معاشر أَهْل السنة "نعم" ويقولون " لا" وإستطاعتهم كسائر البشر ولا يوجد علم الغيب منهم بالقصد والإختيار، فان علموا الغيب فبالوحي فقط .كذا قَالَوا، وهذا منشأ الخلاف، والادلة المذكورة في الكتاب والسنة شاهدة لأَهْل السنة والجماعة اهـ من عقيدة السنة: ﷺ: ٤٦٨،٤٦٩ والحديث الْأَوَّل ينادي بصوته أن لهم استطاعة مخصوصة، لأيديهم ولأرجلهم ولأسماعهم ولأبصارهم ولسائر جوارحهم

ஓர் உணர்த்துதல்: அல்லாஹ் அறிவித்துக் கொடுப்பது மூலமாக நபிமார்களும், வலிமார்களும் மறைவானவற்றை அறிவர் என்பதில் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரும், பித்அத்வாதிகளும் ஒன்று படுகின்றனர்.

ஆனால் நமக்கும் அவர்களுக்கும் மத்தியிலான கருத்து வேறுபாட்டின் மையப் புள்ளி: பொதுவான சக்திக்கு மேலான ஆற்றல் நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் உண்டா? சாதாரண மனிதர்களை விட மேலான சக்தி அவர்களுக்கு உண்டா? என்பதி லாகும்.

‘‘அன்பியாக்களும், அவ்லியாப்பெருமக்களும் அவர்கள் நாடுவதையும், விரும்புவதையும் அறிய முடியுமா? மற்ற மனிதர்களை விட அவர்களுக்கு ஆற்றல் உண்டா?’’ என்று கேட்டால் ‘‘ஆம், உண்டு!’’ என்பது ஸுன்னத் வல் ஜமாஅத்தினராகிய நம்முடைய பதில்.

‘‘அன்பியாக்களும், அவ்லியாக்களும் அவர்கள் நாடும், விரும்பும் மறைவானவற்றை அறிய முடியாது. ஏனைய மனிதர்களுக்கு உள்ள சக்தி போன்றதே அவர்களுக்கும் உண்டு. வஹீ மூலம் மட்டுமே அவர்கள் மறைவானவற்றை அறிவர்’’ என்பது பித்அத் வாதிகளின் வாதம்.

இதுவே நமக்கும், அவர்களுக்குமிடையிலான கருத்து வேறுபாடு ஆகும்.

ஆனால் ஆதாரங்கள் ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கை யையே நிறுவுகிறது. கீழ்வரும் ஹதீஸ் அன்பியாக்களுக்கும், அவ்லியாப்பெருமக்களுக்கும் பிரத்யேக ஆற்றல் உள்ளது என்பதை ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கிறது.

அவர்களுடைய கைகளுக்கும், கால்களுக்கும், செவிகளுக்கும், பார்வைக்கும், ஏனைய உறுப்புகளுக்கும் தனித்துவமான ஆற்றல் உண்டு என்பதைத் தெரிவிக்கிறது.

أَخْرَجَ الْبُخَارِي عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: إِنَّ اللهَ قَالَ: مَنْ عَادَى لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ وَمَا تَقَرَّبَ إِلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إِلَيَّ مِمَّا افْتَرَضْتُ عَلَيْهِ وَمَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ فَإِذَا أَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا وَإِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ وَلَئِنِ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ وَمَا تَرَدَّدْتُ عَنْ شَيْءٍ أَنَا فَاعِلُهُ تَرَدُّدِي عَنْ نَفْسِ الْمُؤْمِنِ يَكْرَهُ الْمَوْتَ وَأَنَا أَكْرَهُ مَسَاءَتَهُ .اهـ

அல்லாஹ் கூறுவதாக இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

‘‘எவன் என் நேசரை பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். எனக்கு விருப்பமான செயல்களில் நான்

கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்துக் கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நான் நேசித்துவிடும் போது அவன் கேட்கிற செவியாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். அவன் என்னிடம் பாதுகாப்பு கோரினால் நான் நிச்சயம் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறை நம்பிக்கையாளரின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று நான் செய்யும் எச்செயலிலும் நான் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் மரணத்தின் மூலம் அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஸஹீஹ் புகாரி: 6502

أَخْرَجَ الْبُخَارِي عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ أَنَّ النَّبِيَّ ﷺ خَرَجَ يَوْمًا فَصَلَّى عَلَى أَهْلِ أُحدٍ صَلَاتَهُ عَلَى الْمَيِّتِ ثُمَّ انْصَرَفَ إِلَى الْمِنْبَرِ فَقَالَ إِنِّي فَرَطٌ لَكُمْ وَأَنَا شَهِيدٌ عَلَيْكُمْ وَإِنِّي وَاللهِ لَأَنْظُرُ إِلَى حَوْضِي الْآنَ وَإِنِّي أُعْطِيتُ مَفَاتِيحَ خَزَائِنِ الْأَرْضِ أَوْ مَفَاتِيحَ الْأَرْضِ وَإِنِّي وَاللهِ مَا أَخَافُ عَلَيْكُمْ أَنْ تُشْرِكُوا بَعْدِي وَلَكِنْ أَخَافُ عَلَيْكُمْ أَنْ تَنَافَسُوا فِيهَااه.

ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஹதுக்குச் சென்று போரில் கொல்லப்பட்டவர்களுக்காக ஜனாஸாவை முன்னால் வைத்துத் துஆச் செய்வதைப் போன்று

துஆச் செய்தார்கள். பிறகு மிம்பருக்கு வந்து, ‘‘நிச்சயமாக நான் உங்களுக்காகக் காத்திருப்பேன். உங்களுக்கு நான் சாட்சியும் கூறுவேன். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்போது (கவ்ஸர் எனும்) என்னுடைய தடாகத்தைக் காண்கிறேன்.

எனக்கு பூமியின் கருவூலங்களின் திறவுகோல்கள் அல்லது பூமியின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக எனது மரணத்துக்குப் பின்னால் நீங்கள் இணைவைப்பவர்களாக ஆகி விடுவீர்களோ என்று அஞ்சவில்லை. எனினும் (உலகிற்காக) பரஸ்பரம் நீங்கள் மோதிக் கொள்வீர்களோ என்றே அஞ்சுகின்றேன்’’ என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: உக்பத் இப்னு ஆமிர் ரழியல்ஹுஅன்ஹு
நூல்: ஸஹீஹ் புகாரி: 1344

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَبِي زَيْدٍ رضي الله عنه قَالَ: صَلَّى بِنَا رَسُولُ اللهِ ﷺ الْفَجْـرَ وَصَعِدَ الْمِنْبَرَ فَخَطَبَنَا حَتَّىٰ حَضَرَتِ الظُّهْرُ فَنَزَلَ فَصَلَّى ثُـمَّ صَـعِدَ الْمِنْـبَرَ فَخَطَبَنَا حَتَّى حَضَرَتِ الْعَصْرُ ثُمَّ نَزَلَ فَصَلَّىٰ ثُمَّ صَعِدَ الْـمِنْبَرَ فَخَطَبَنَا حَتَّىٰ غَرُبَتِ الشَّمْسُ فَأَخْبَرَنَا بِمَا كَانَ وَبِمَا هُوَ كَائِنٌ فَأَعْلَمُنَا أَحْفَظُنَا.

அபூஸைத் (அம்ர் பின் அக்தப்) ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுவித்து விட்டு சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதேறி எங்களுக்கு உரையாற்றி னார்கள். ளுஹர் தொழுகை நேரம் வந்தபோது மேடையிலிருந்து இறங்கி தொழுவித்துவிட்டு மீண்டும் மேடை மீது ஏறி அஸ்ர் தொழுகை வரை உரையாற்றினார்கள். பிறகு மேடையிலிருந்து இறங்கி அஸ்ர் தொழுகை தொழுவித்துவிட்டு, மறுபடியும் மேடை மீதேறி சூரியன் மறையும் வரை உரையாற்றினார்கள். நடந்தவை, நடக்கவிருப்பவை அனைத்தையும் அன்று எங்களுக்குத்

தெரிவித்தார்கள். எங்களில் நன்கறிந்தவர் (அவற்றை) நன்கு மனன மிட்டவர் ஆவார்.

அறிவிப்பவர்: அபூசெய்த் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஸஹீஹ் முஸ்லிம்: 5544

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ هَلْ تَرَوْنَ قِبْلَتِي هَهُنَا؟ وَاللهِ مَا يَخْفَى عَلَيَّ رُكُوعُكُمْ وَلَا خُشُوعُكُمْ وَإِنِّي لَأَرَاكُمْ وَرَاءَ ظَهْرِي. اهـ

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘‘கிப்லாத் திசையில் மட்டும்தான் கவனித்துக் கொண்டு இருக்கிறேன் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களின் ருகூவும், பணிவும் எனக்கு தெரியாமல் போவதில்லை. என் முதுகுக்குப் பின் புறமாகவும் நான் உங்களைப் பார்க்கிறேன்.’’

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஸஹீஹ் புகாரி 741

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ ﵄ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: لَمَّا كَذَّبَتْنِي قُرَيْشٌ قُمْتُ فِي الْحِجْرِ فَجَلَّا اللهُ لِي بَيْتَ الْمَقْدِسِ فَطَفِقْتُ أُخْبِرُهُمْ عَنْ آيَاتِهِ وَأَنَا أَنْظُرُ إِلَيْهِ اهـ.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ‘‘(நான் இரவின் சிறு பகுதியில் கஅபாவிலிருந்து பைத்துல் மக்திஸ் வரை சென்றதாகச் சொன்ன போது) என்னை குறைஷிகள் நம்ப மறுத்தனர். நான் கஅபாவின் ‘ஹிஜ்ர்’ என்னும்

வளைந்த பகுதியில் நின்றேன். அல்லாஹ் எனக்கு பைத்துல் மக்தஸைக் காட்சியளிக்கச் செய்தான். அதைப் பார்த்தபடியே நான் அவர்களுக்கு அதன் அடையாளங்களை விவரிக்கலானேன்.''

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஸஹீஹ் புகாரி: 3886

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه وَهُوَ يُحَدِّثُ عَنْ أَهْلِ بَدْرٍ رضي الله عنهم فَقَالَ:

إِنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ يُرِينَا مَصَارِعَ أَهْلِ بَدْرٍ بِالْأَمْسِ يَقُولُ: "هَذَا مَصْرَعُ فُلَانٍ غَدًا إِنْ شَاءَ اللهُ قَالَ فَقَالَ عُمَرُ: فَوَالَّذِي بَعَثَهُ بِالْحَقِّ! مَا أَخْطَؤُا الْحُدُودَ الَّتِي حَدَّ رَسُولُ اللهِ ﷺ، قَالَ فَجُعِلُوا فِي بِئْرٍ بَعْضُهُمْ عَلَى بَعْضٍ فَانْطَلَقَ رَسُولُ اللهِ ﷺ حَتَّى انْتَهَى إِلَيْهِمْ فَقَالَ يَا فُلَانُ بْنُ فُلَانٍ! وَيَا فُلَانُ بْنُ فُلَانٍ! هَلْ وَجَدْتُمْ مَا وَعَدَكُمُ اللهُ وَرَسُولُهُ حَقًّا؟ فَإِنِّي قَدْ وَجَدْتُ مَا وَعَدَنِي اللهُ حَقًّا قَالَ عُمَرُ يَا رَسُولَ الله! كَيْفَ تُكَلِّمُ أَجْسَادًا لَا أَرْوَاحَ فِيهَا ؟ قَالَ مَا أَنْتُمْ بِأَسْمَعَ لِمَا أَقُولُ مِنْهُمْ غَيْرَ أَنَّهُمْ لَا يَسْتَطِيعُونَ أَنْ يَرُدُّوا عَلَيَّ شَيْئًا اهـ.

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பத்ருப் போரில் கலந்துக் கொண்டவர்களைக் குறித்து கூறலானார்கள்: பத்ருப் போருக்கு முந்தைய நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களிடம் பத்ருப் போரில் எதிரிகள் மாண்டு கிடக்கவிருக்கும் இடங்களைக் காட்டினார்கள், ''அல்லாஹ் நாடினால் இதுதான் நாளை இன்ன மனிதன் மாண்டு கிடக்கும் இடம்'' என்று குறிப்பிட்டார்கள்.

உமர் ரழியல்லாஹு கூறுகிறார்கள்: சத்திய மார்க்கத்துடன் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பியவன் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் பிசகாமல் சரியாக அவர்கள் மாண்டு கிடந்தனர்.

பிறகு அவர்கள் அனைவரும் ஒரு கிணற்றில் ஒவ்வொருவராகப் போடப்பட்டனர். அவர்களின் சடலங்களை நோக்கிச் சென்ற அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவற்றைப் பார்த்து இன்னாரின் மகன் இன்னாரே! இன்னாரின் மகன் இன்னாரே! அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உங்களுக்கு வாக்களித்ததை நீங்கள் உண்மையானதாகக் கண்டீர்களா? ஏனெனில் அல்லாஹ் எனக்கு வாக்களித்ததை நான் உண்மையானதாகக் கண்டேன்'' என்று கூறினார்கள்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! ''உயிரற்ற சடலங்களிடம் எப்படி பேசுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நான் கூறுவதை இவர்களை விட நன்கு செவியேற்பவர்களாக நீங்கள் இல்லை. எனினும் அவர்களால் எனக்குப் பதிலேதும் கூற முடியாது'' என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 5511

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ جَابِرٍ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَدِمَ مِنْ سَفَرٍ فَلَمَّا كَانَ قُرْبَ الْمَدِينَةِ هَاجَتْ رِيحٌ شَدِيدَةٌ تَكَادُ أَنْ تَدْفِنَ الرَّاكِبَ، فَزَعَمَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: بُعِثَتْ هَذِهِ الرِّيحُ لِمَوْتِ مُنَافِقٍ فَلَمَّا قَدِمَ الْمَدِينَةَ فَإِذَا مُنَافِقٌ عَظِيمٌ مِنَ الْمُنَافِقِينَ قَدْ مَاتَ.

ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு பயணத்தை முடித்துவிட்டு வந்துக் கொண்டிருந்தார்கள். மதீனாவுக்கு அருகில் அவர்கள் வந்த போது கடுமையான சூறாவளிக் காற்று வீசியது. அது பயணிகளை மண்ணுக்குள் புதைத்து விடப் பார்த்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இந்தக் காற்று ஒரு நயவஞ்சகனைக் கொல்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது'' என்று கூறினார்கள். மதீனாவுக்குள் வந்த போது நயவஞ்சகர்களின் பெருந்தலைவன் ஒருவன் இறந்துவிட்டிருந்தான்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம்:5376

أَحْبَابُ اللهِ بَعْدَ الْمَوْتِ

மரணத்திற்குப் பின் இறைநேசர்கள்

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ، أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: أُتِيتُ بِالْبُرَاقِ (وَهُوَ دَابَّةٌ أَبْيَضُ طَوِيلٌ فَوْقَ الْحِمَارِ وَدُونَ الْبَغْلِ . يَضَعُ حَافِرَهُ عِنْدَ مُنْتَهَى طَرْفِهِ) قَالَ، فَرَكِبْتُهُ حَتَّى أَتَيْتُ بَيْتَ الْمَقْدِسِ. قَالَ، فَرَبَطْتُهُ بِالْحَلْقَةِ الَّتِي يَرْبِطُ بِهِ الأَنْبِيَاءُ. قَالَ: ثُمَّ دَخَلْتُ الْمَسْجِدَ فَصَلَّيْتُ فِيهِ رَكْعَتَيْنِ. ثُمَّ خَرَجْتُ. فَجَاءَنِي جِبْرِيلُ عليه السلام بِإِنَاءٍ مِنْ خَمْرٍ، وَإِنَاءٍ مِنْ لَبَنٍ. فَاخْتَرْتُ اللَّبَنَ. فَقَالَ جِبْرِيلُ عليه السلام: اخْتَرْتَ الْفِطْرَةَ ثُمَّ عَرَجَ بِنَا إِلَى السَّمَاءِ . فَاسْتَفْتَحَ جِبْرِيلُ عليه السلام فَقِيلَ: مَنْ أَنْتَ؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ ﷺ. قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ . فَفُتِحَ لَنَا. فَإِذَا أَنَا بِآدَمَ عليه السلام، فَرَحَّبَ بِي وَدَعَا لِي بِخَيْرٍ. ثُمَّ عَرَجَ بِنَا إِلَى السَّمَاءِ الثَّانِيَةِ، فَاسْتَفْتَحَ جِبْرِيلُ عَلَيْهِ السَّلاَمُ. فَقِيلَ: مَنْ أَنْتَ؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ ﷺ. قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا. فَإِذَا أَنَا بِابْنَيِ الْخَالَةِ: عِيسَى ابْنِ مَرْيَمَ، وَيَحْيَى بْنِ زَكَرِيَّاءَ صَلَوَاتُ اللهِ عَلَيْهِمَا، فَرَحَّبَا، وَدَعَوَا لِي بِخَيْرٍ.

ثُمَّ عَرَجَ بِي إِلَى السَّمَاءِ الثَّالِثَةِ، فَاسْتَفْتَحَ جِبْرِيلُ. فَقِيلَ: مَنْ أَنْتَ؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ ﷺ . قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا، فَإِذَا أَنَا بِيُوسُفَ ﷺ، وَقَدْ أُعْطِيَ شَطْرَ الْحُسْنِ ، فَرَحَّبَ وَدَعَا لِي بِخَيْرٍ. ثُمَّ عَرَجَ بِنَا إِلَى السَّمَاءِ الرَّابِعَةِ، فَاسْتَفْتَحَ جِبْرِيلُ عَلَيْهِ السَّلاَمُ. قِيلَ: مَنْ هٰذَا قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ ﷺ. قَالَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ. قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا فَإِذَا أَنَا بِإِدْرِيسَ، فَرَحَّبَ وَدَعَا لِي بِخَيْرٍ. قَالَ اللهُ عَزَّ وَجَلَّ : أَنَّهُمْ وَإِن كُلٌّ لَّمَّا جَمِيعٌ اُلْقُرُونِ وَاذْكُرْ فِى الْكِتٰبِ اِدْرِيْسَ اِنَّهٗ كَانَ صِدِّيْقًا نَّبِيًّا وَّرَفَعْنٰهُ مَكَانًا عَلِيًّا ثُمَّ عَرَجَ بِنَا إِلَى السَّمَاءِ الْخَامِسَةِ، فَاسْتَفْتَحَ جِبْرِيلُ. قِيلَ: مَنْ هٰذَا؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ. قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا، فَإِذَا أَنَا بِهٰرُونَ عليه السلام، فَرَحَّبَ وَدَعَا لِي بِخَيْرٍ. ثُمَّ عَرَجَ بِنَا إِلَى السَّمَاءِ السَّادِسَةِ. فَاسْتَفْتَحَ جِبْرِيلُ عليه السلام. قِيلَ: مَنْ هٰذَا؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ . قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا، فَإِذَا أَنَا بِمُوسَى ﷺ، فَرَحَّبَ وَدَعَا لِي بِخَيْرٍ. ثُمَّ عَرَجَ إِلَى السَّمَاءِ السَّابِعَةِ. فَاسْتَفْتَحَ جِبْرِيلُ. فَقِيلَ: مَنْ هٰذَا؟ قَالَ: جِبْرِيلُ. قِيلَ: وَمَنْ مَعَكَ؟ قَالَ: مُحَمَّدٌ ﷺ. قِيلَ: وَقَدْ بُعِثَ إِلَيْهِ؟ قَالَ: قَدْ بُعِثَ إِلَيْهِ. فَفُتِحَ لَنَا فَإِذَا أَنَا بِإِبْرَاهِيمَ ﷺ، مُسْنِدا ظَهْرَهُ إِلَى الْبَيْتِ الْمَعْمُورِ. وَإِذَا هُوَ يَدْخُلُهُ كُلَّ يَوْمٍ سَبْعُونَ أَلْفَ ملك لاَ يَعُودُونَ إِلَيْهِ. ثُمَّ ذَهَبَ بِي إِلَى سِدْرَةِ الْمُنْتَهَى وَإِذَا وَرَقُهَا

كَآذَانِ الْفِيَلَةِ . وَإِذَا ثَمَرُهَا كَالْقِلاَلِ . قَالَ، فَلَمَّا غَشِيَهَا مِنْ أَمْرِ اللّٰهِ مَا غَشِيَ تَغَيَّرَتْ. فَمَا أَحَد مِنْ خَلْقِ اللّٰهِ يَسْتَطِيعُ أَنْ يَنْعَتَهَا مِنْ حُسْنِهَا. فَأَوْحَى اللّٰهُ إِلَيَّ مَا أَوْحَى. فَرَضَ عَلَيَّ خَمْسِينَ صَلاَةً فِي كُلِّ يَوْمٍ وَلَيْلَةٍ. فَنَزَلْتُ إِلَى مُوسَى عليه السلام . فَقَالَ: مَا فَرَضَ رَبُّكَ عَلَىٰ أُمَّتِكَ ؟ قُلْتُ: خَمْسِينَ صَلاَةً. قَالَ: ارْجِعْ إِلَى رَبِّكَ. فَاسْأَلْهُ التَّخْفِيفَ. فَإِنَّ أُمَّتَكَ لاَ يُطِيقُونَ ذٰلِكَ. فَإِنِّي قَدْ بَلَوْتُ بَنِي إِسْرَائِيلَ وَخَبَرْتُهُمْ . قَالَ، فَرَجَعْتُ إِلَى رَبِّي فَقُلْتُ: يَا رَبِّ خَفِّفْ عَلَى أُمَّتِي، فَحَطَّ عَنِّي خَمْسا. فَرَجَعْتُ إِلَى مُوسَىٰ فَقُلْتُ: حَطَّ عَنِّي خَمْسا. قَالَ: إِنَّ أُمَّتَكَ لاَ يُطِيقُونَ ذٰلِكَ فَارْجِعْ إِلَى رَبِّكَ فَاسْأَلْهُ التَّخْفِيفَ. قَالَ، فَلَمْ أَزَلْ أَرْجِعُ بَيْنَ رَبِّي تَبَارَكَ وَتَعَالَى وَبَيْنَ مُوسَى عليه السلام حَتَّى قَالَ: يَا مُحَمَّدُ! إِنَّهُنَّ خَمْسُ صَلَوَاتٍ كُلَّ يَوْمٍ وَلَيْلَةٍ. لِكُلِّ صَلاَةٍ عَشْرٌ. فَذٰلِكَ خَمْسُونَ صَلاَةً. وَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهَا كُتِبَتْ لَهُ حَسَنَةً. فَإِنْ عَمِلَهَا كُتِبَتْ لَهُ عَشْرًا. وَمَنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهَا لَمْ تُكْتَبْ شَيْئًا. فَإِنْ عَمِلَهَا كُتِبَتْ سَيِّئَةً وَاحِدَةً. قَالَ: فَنَزَلْتُ حَتَّى انْتَهَيْتُ إِلَى مُوسَى ﷺ فَأَخْبَرْتُهُ. فَقَالَ: ارْجِعْ إِلَى رَبِّكَ فَاسْأَلْهُ التَّخْفِيفَ. فَقَالَ رَسُولُ اللّٰهِ ﷺ فَقُلْتُ: قَدْ رَجَعْتُ إِلَى رَبِّي حَتَّى اسْتَحْيَيْتُ مِنْهُ.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: (விண்ணுலகப் பயணத்தின் போது) என்னிடம் கோவேறு கழுதையை விட சிறியதும், கழுதையை விட பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் மின்னல் வேக வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அது பார்வை எட்டுகிற

தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து எட்டு வைக்கும். அதிலேறி நான் பைத்துல் மக்திஸ் (ஜெருசலேம்) இறை ஆலையம் வரை சென்றேன். பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தை கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தை கட்டி வைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன்.

பிறகு நான் அங்கிருந்து புறப்பட்ட போது (வானவர்) ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் என்னிடம் ஒரு பாத்திரத்தில் மதுவும், மற்றொரு பாத்திரத்தில் பாலும் கொண்டு வந்து விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு கூறினார்கள். நான் பால் பாத்திரத்தை தேர்ந்தெடுத்தேன். அப்போது ஜிப்ரீல் ''இயற்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்'' என்று கூறினார். பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு முதல் வானத்திற்கு உயர்ந்தார். அதன் கதவை திறக்கும் படி கூறினார். அப்போது நீங்கள் யார்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் 'ஜிப்ரீல்' என்று பதிலளித்தார்கள். ''உங்களுடன் இருப்பவர் யார்?'' என்று கேட்கப்பட 'முஹம்மத்' என்று கூறினார். 'அவரை அழைத்து வர அவரிடம் ஆள் அனுப்பப்பட்டதா?' என்று கேட்கப் பட்டது. 'அவரை அழைத்து வர நான் அனுப்பப்பட்டேன்' என்றார்கள் ஜிப்ரீல். அப்போது எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. நான் அங்கு ஆதி மனிதர் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை வாழ்த்தி வரவேற்று எனது நன்மைக் காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு இரண்டாம் வானத் திற்கு உயர்ந்தார். அதன் கதவை திறக்கும்படி சொன்னார். அப்போது ''நீங்கள் யார்?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''ஜிப்ரீல்'' என்று பதிலளித்தார்கள். ''உங்களுடன் இருப்பவர் யார்?'' என்று கேட்கப்பட்டது. ''முஹம்மது'' என்று பதிலளித்தார்கள். ''அவரை

அழைத்துவரும்படி அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?'' என்று கேட்கப்பட்டது. ''ஆம்! அவரை அழைத்து வரும்படி அவரிடம் என்னை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது'' என்று பதிலளித்தார்கள். அப்போது எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அங்கு சகோதரிகளின் புதல்வர்களான ஈசா பின் மர்யம் அலைஹிஸ்ஸலாம், யஹ்யா பின் ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் ஆகியோரை நான் கண்டேன். அவர்கள் இருவரும் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிராத்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு மூன்றாம் வானத்திற்கு உயர்ந்தார்கள். அதன் கதவை திறக்கும்படி கூறினார்கள். அப்போது ''நீங்கள் யார்?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''ஜிப்ரீல்'' என்று பதிலளித்தார்கள். ''உங்களுடன் இருப்பவர் யார்?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''முஹம்மது'' என்று பதிலளித்தார்கள். ''அவரை அழைத்துவரும்படி அவரிடம் ஆள் அனுப்பப்பட்டிருந்ததா?'' என்று கேட்கப்பட்டது. அவர் ''ஆம்! அவரை அழைத்துவரும்படி அவரிடம் என்னை அனுப்பி வைக்கப் பட்டிருந்தது'' என்று பதிலளித்தார்கள். உடனே எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அங்கு நான் யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைக் கண்டேன். மொத்த அழகில் பாதி அவர்களுக்கு வழங்கப் பெற்றிருந்தது. அன்னாரும் என்னை வரவேற்று எனது நன்மைக்காக பிரார்த்தனை செய்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு நான்காம் வானத்திற்கு உயர்ந்தார்கள். கதவை திறக்கும்படி கூறினார்கள். அப்போது யார் அது? என்று கேட்கப்பட்டது அவர் ''ஜிப்ரீல்'' என்று பதிலளித்தார்கள். ''உம்முடன் இருப்பவர் யார்?'' என்று கேட்கப் பட்டது. அவர் ''முஹம்மது'' என்று பதிலளித்தார்கள். ''அவரை அழைத்து வரும்படி ஆளனுப்பப்பட்டிருந்ததா?'' என்று கேட்கப்

பட்டது. அவர் ‘‘ஆம்! அவரை அழைத்துவரும்படி அவரிடம் என்னை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்று பதிலளித்தார்கள். அப்போது எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அங்கு நான் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை கண்டேன். அவர்கள் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னை அழைத்துக் கொண்டு ஐந்தாம் வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவை) திறக்கும்படி கூறினார். அப்போது ‘‘யார் அது?’’ என்று கேட்கப்பட்டது. அவர் ஜிப்ரீல் என்று பதிலளித்தார்கள். ‘‘உம்முடன் இருப்பவர் யார்?’’ என்று கேட்கப்பட்டது அவர் ‘‘முஹம்மது’’ என்று பதிலளித்தார்கள். ‘‘அவரை அழைத்து வருமாறு ஆளனுப்பப்பட்டிருந்ததா?’’ என்று கேட்கப்பட்டது. அவர் ‘‘ஆம்! அவரை அழைத்துவருமாறு என்னை அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது என்று பதிலளித்தார்கள். அப்போது எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அங்கு நான் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிராத்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு ஆறாம் வானத்தில் ஏறினார். அந்த வானத்தின் கதவை திறக்கும்படி கூறினார். ‘‘யார் அது?’’ என்று கேட்கப்பட்டது. அவர் ‘‘ஜிப்ரீல்’’ என்று பதில் கூறினார்கள். ‘‘உம்முடன் இருப்பவர் யார்?’’ என்று கேட்கப்பட்டது. அவர் ‘‘முஹம்மது’’ என்று பதிலளித்தார்கள். ‘‘அவரை அழைத்து வரும்படி அவரிடம் அனுப்பப்பட்டிருந்ததா?’’ என்று கேட்கப்பட்டது. அவர் ‘‘ஆம்! அவரை அழைத்து வரும்படி என்னை அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது’’ என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்கான கதவு திறக்கப்பட்டது. அங்கு நான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு ஏழாம் வானத்தில் ஏறினார்கள். அந்த வானத்தை கதவைத் திறக்கும்படி கூறினார்கள். ''யார் அது?'' என்று கேட்கப்பட்டது. ''ஜிப்ரீல்'' என்று பதிலளித்தார்கள். ''உம்முடன் இருப்பவர் யார்?'' என்று கேட்கப்பட்டது அதற்கு ''முஹம்மது'' என்று பதிலளித்தார்கள். ''அவரை அழைத்துவரும்படி அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?'' என்று கேட்கப்பட்டது. ''ஆம்! அவரை அழைத்து வரும்படி என்னை அவரிடம் அனுப்பப் பட்டிருந்தது'' என்று பதிலளித்தார். பிறகு எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அங்கு நான் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டேன். அவர்கள் அல்பைத்துல் மஃமூர் (எனும் வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும்) இறையில்லத்தில் தமது முதுகைச் சாய்த்து அமர்ந்துக் கொண்டிருந்தார்கள். அந்த இறையில்லத்தில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் இறைவனை வணங்கச் செல்வார்கள். அவர்கள் அங்கிருந்து வெளியேறுவ தில்லை. (அடுத்த நாள் புதியவர்கள் நுழைவார்கள்.)

பிறகு வான் எல்லையிலுள்ள இலந்தை மரமான ''சித்ரதுல் முன்தஹா'' எனும் இடத்திற்கு என்னை ஜிப்ரீல் அழைத்துச் சென்றார்கள். அதன் இலைகள் யானைகளின் காதுகளைப் போன்றிருந்தன. ''அதன் பழங்கள் கூஜாக்களைப் போன்றிருந்தன.'' அல்லாஹ்வின் கட்டளையால் இனம் புரியாத நிறங்கள் அதைச் சூழ்ந்து கொண்ட போது அதன் அமைப்போ முற்றிலும் மாறிவிட்டது. அல்லாஹ்வின் படைப்புகளில் எவராலும் அதன் அழகை விவரித்துக் கூற முடியாது. அப்போது அல்லாஹ் அறிவிக்க வேண்டிய சிலவற்றை எனக்கு அறிவித்தான். என் மீது இரவிலும் பகலிலும் (நாள் ஒன்றுக்கு) ஐம்பது தொழுகையைக் கடமையாக்கினான்.

பிறகு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இறங்கினேன். அப்போது அவர்கள் ''உங்கள் சமுதாயத்தாருக்கு உம்முடைய

இறைவன் என்ன கடமையாக்கினான்?'' என்று கேட்டார்கள். ''ஐம்பது வேளைத் தொழுகையை கடமையாக்கினான்'' என்றேன். ''உங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று உங்கள் சமுதாயத்திற்காக தொழுகையின் எண்ணிக்கையை குறைக்கும்படி கேளுங்கள். ஏனெனில் உங்கள் சமுதாயத்தார் இதைத் தாங்கமாட்டார்கள். நான் என்னுடைய பனூ இஸ்ராயீல் மக்களிடம் பழகி அனுபவப் பட்டிருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

நான் என் இறைவனிடம் திரும்பிச் சென்று ''என் இறைவா! என் சமுதாயத்தார் மீது (ஐம்பது வேளை தொழுகையை) குறைப்பாயாக!'' என்று கேட்டேன். இறைவன் ஐம்பதில் இருந்து ஐந்தை எனக்கு குறைத்தான். நான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் திரும்ப வந்து ஐந்தை எனக்குக் குறைத்தான் என்று கூறினேன். அப்போது அவர்கள் ''உங்கள் சமுதாயத்தார்கள் இதையும் தாங்க மாட்டார்கள். எனவே உம் இறைவனிடம் திரும்பிச் சென்று இன்னும் குறைக்கும்படி கேளுங்கள் என்றார்கள். இவ்வாறே நான் என் இறைவனுக்குமிடையே திரும்பிச் சென்று கொண்டிருந்தேன். இறுதியாக ''முஹம்மதே! இவை இரவிலும் பகலிலும் நிறைவேற்ற வேண்டிய ஐவேளைத் தொழுகையாகும். ஒவ்வொரு தொழுகைக்கும் பத்து நற்பலன் உண்டு. நற்பலனில் இவை ஐம்பது வேளைத் தொழுகைக்கு ஈடு ஆகும். ஒருவர் ஒரு நன்மை செய்ய வேண்டும் என மனதில் எண்ணி விட்டாலே அதைச் செயல்படுத்தாவிட்டாலும் அவருக்கு ஒரு நன்மை பதிவு செய்யப்படும். அதை அவர் செய்து முடித்துவிட்டால் அவருக்காக பத்து நன்மைகள் பதிவு செய்யப்படும். ஒருவர் ஒரு தீமையைச் செய்ய எண்ணி அல்லாஹ்வுக்கு அஞ்சி அதைச் செய்யாமல் இருந்துவிட்டால் குற்றம் எதுவும் பதியப்படுவதில்லை. எண்ணியபடி அதை அவர் செய்து முடித்துவிட்டால் ஒரு குற்றமாகவே அது பதிவுச் செய்யப்படும்'' என்று கூறினான்.

பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து சேர்ந்தேன். அல்லாஹ் கூறியதை அவர்களிடம்

தெரிவித்தேன். அப்போது அவர்கள் ‘‘உங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று இன்னும் குறைக்கும்படி கேளுங்கள்.’’ என்று கூறினார்கள். உடனே நான் ‘‘பலமுறை என் இறைவனிடம் திரும்பிச் சென்றுவிட்டேன். இன்னும் அவனிடம் குறைத்துக் கேட்க நான் வெட்கப்படுகிறேன்’’ என்று கூறிவிட்டேன்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: ஸஹீஹ் முஸ்லிம்: 259

أَخْرَجَ أَحْمَد بْنُ حَنْبَلٍ عَنْ أَنَسٍ ﷺ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَرَرْتُ لَيْلَةَ أُسْرِيَ بِي عَلَى مُوسَى، فَرَأَيْتُهُ قَائِمًا يُصَلِّي فِي قَبْرِهِ.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். ‘‘மிஃராஜின் இரவில் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கப்ருக்கருகில் நடந்து சென்றேன். அவர்கள் கப்ரில் தொழுதுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.’’

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் 4736

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ اِبْنِ عَبَّاسٍ ﷺ قَالَ: قَالَ النَّبِيُّ ﷺ: رَأَيْتُ عِيسَى ومُوسَى وَإِبْرَاهِيمَ، فَأَمَّا عِيسَى فَأَحْمَرُ جَعْدٌ عَرِيضُ الصَّدْرِ، وَأَمَّا مُوسَى، فَآدَمُ جَسِيمٌ سَبْطٌ كَأَنَّهُ مِنْ رِجَالِ الزُّطِّ.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘‘மிஃராஜ் இரவில் ஈஸா, மூஸா, இப்ராஹீம் அலைஹிமுஸ்ஸலாம் ஆகியோரைப் பார்த்தேன். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிவப்பு

நிறம் கொண்டவர்களாக, சுருள் முடியுடையவர்களாக, அகன்ற மார்பு பெற்றவர்களாக இருந்தார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மாநிறம் உடையவர்களாக, உயரமான, படிந்த முடியுடைய வர்களாக, சூடானிய இனத்தைச் சார்ந்தவரைப் போன்று நீண்டு, மெலிந்தவர்களாக இருந்தார்கள்.''

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி, 3438

أَخْرَجَ إِبْنُ أَبِي شَيْبَةَ عَنْ أَوْسِ بْنِ أَوْسٍ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: إِنَّ مِنْ أَفْضَلِ أَيَّامِكُمْ يَوْمَ الْجُمُعَةِ، فِيهِ خُلِقَ آدَمُ وَفِيهِ النَّفْخَةُ وَفِيهِ الصَّعْقَةُ فَأَكْثِرُوا عَلَيَّ مِنَ الصَّلاَةِ فِيهِ فَإِنَّ صَلاَتَكُمْ مَعْرُوضَةٌ عَلَيَّ. فَقَالَ رَجُلٌ: يَا رَسُولَ اللهِ كَيْفَ تُعْرَضُ صَلَاتُنَا عَلَيْكَ وَقَدْ أَرَمْتَ؟ – يَعْنِي بَلَيْتَ – فَقَالَ: إِنَّ اللهَ حَرَّمَ عَلَى الأَرْضِ أَنْ تَأْكُلَ أَجْسَادَ الأَنْبِيَاءِ.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''உங்களின் நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும், அந்நாளில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் படைக்கப்பட்டார்கள். அந்நாளில் அவர்களில் உயிர் ஊதப்பட்டது. அந்நாளில் ஸூர் ஊதப்படும். அந்நாளில் என் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்லுங்கள். நிச்சயமாக நீங்கள் சொல்லும் ஸலவாத்துகள் எனக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.''

அப்போது தோழரொருவர் கேட்டார். ''அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! எங்களுடைய ஸலவாத்துகள் எவ்வாறு தங்களுக்கு எடுத்துக் காட்டப்படும்? தாங்கள் மண்ணோடு மண்ணாக மக்கிப் போய் விடுவீர்களே!''

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். ‘‘நபிமார்களின் உடல்களைத் தின்பதை மண்ணுக்கு அல்லாஹ் ஹரமாக்கி இருக்கின்றான்!’’

அறிவிப்பவர்: அவ்ஸ் இப்னி அவ்ஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: மிஷ்காத் 120

أَخْرَجَ الْبُخَارِيُّ فِي صَحِيحِهِ مِنْ حَدِيثِ هِشَامِ بنِ عُـروةَ عَـنْ أَبِيـهِ قَالَ: لَمَّا سَقَطَ عَلَيْهِمُ الْحَائِطُ فِي زَمَانِ الْوَلِيدِ بْنِ عَبْدِ الْـمَلِكِ أَخَـذُوا فِي بِنَائِهِ، فَبَدَتْ لَهُمْ قَدَمٌ، فَفَزِعُوا وَظَنُّوا أَنَّهَا قَدَمُ النَّبِيِّ ﷺ، فَمَا وَجَـدُوا أَحَدًا يَعْلَمُ ذَلِكَ حَتَّى قَالَ لَهُمْ عُرْوَةُ: لَا وَاللهِ، مَا هِيَ قَدَمُ النَّبِيِّ ﷺ، مَا مَا هِيَ إِلَّا قَدَمُ عُمَرَ رضي الله عنه.

கலீஃபா வலீத் இப்னு அப்துல் மலிகின் ஆட்சி காலத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அடக்கம் செய்யப் பட்டிருந்த அறையின் சுவரொன்று இடிந்து விழுந்தது. அதனை புனர் நிர்மாணம் செய்த போது ஒரு பாதம் வெளியே தெரிந்தது. மக்கள் பதறிப் போய் அது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பாதமாக இருக்குமோ என நினைத்தனர். அது குறித்து தெரிந்தவர் யாரும் இல்லாமலிருந்த நிலையில், உர்வா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். ‘‘அல்லாஹ் மீது சத்தியமாக! இது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திருப்பாதம் அல்ல! இது உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பாதமாகும்.’’

அறிவிப்பவர்: ஹிஷாம் இப்னு உர்வா ரழியல்லாஹு அன்ஹு
நூல் புகாரி 1390

أَخْرَجَ الحافِظُ أَبُوبَكْرِ الْبَزَّارِ عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ رضي الله عنه عَنِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم: حَيَاتِي خَيْرٌ لَكُمْ تُحَدِّثُونَ وَتُحَدَّثُ لَكُمْ، وَوَفَاتِي خَيْرٌ لَكُمْ تُعْرَضُ عَلَيَّ أَعْمَالُكُمْ، فَمَا رَأَيْتُ مِنْ خَيْرٍ حَمِدْتُّ اللهَ عَلَيْهِ، وَمَا رَأَيْتُ مِنْ شَرٍّ اسْتَغْفَرْتُ اللهَ لَكُمْ.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள்: ‘‘என்னுடைய வாழ்வு உங்களுக்கு நலமானதே! நீங்கள் செய்தி சொல்கிறீர்கள், உங்களுக்கு செய்தி அறிவிக்கப்படுகிறது. என்னுடைய வஃபாத்தும் உங்களுக்கு நலமானதே! உங்களுடைய அமல்கள் எனக்குக் காட்டப்படும். அவற்றில் நன்மையை நான் கண்டால் அதற்காக அல்லாஹ்வைப் புகழ்வேன். தீமையானவற்றைப் பார்க்கும் போது உங்களுக்காக அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத்தேடுவேன்.’’

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்
ரழியல்லாஹு அன்ஹு
நூல்: அல்பஸ்ஸார் 1925

أَخْرَجَ الدَّارِمِيُّ عَنْ سَعِيدِ بْنِ عَبْدِالعَزِيزِ قَالَ: لَمَّا كَانَ أَيَّامُ الْحَرَّةِ، لَمْ يُؤَذَّنْ فِي مَسْجِدِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم ثَلاَثًا وَلَمْ يُقَمْ وَلَمْ يَبْرَحْ سَعِيدُ بْنِ الْمُسَيِّبِ مِنَ الْمَسْجِدِ، وَكَانَ لاَ يَعْرِفُ وَقْتَ الصَّلاَةِ إِلَّا بِهَمْهَمَةٍ يَسْمَعُهَا مِنْ قَبْرِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم فَذَكَرَ مَعْنَاهُ.

மதீனாவாசிகளுக்கும், யஸீதுக்குமிடையில் நடைபெற்ற ஹர்ரா போர் சமயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மஸ்ஜிதில் மூன்று நாட்கள் பாங்கும், இகாமத்தும் சொல்லப்படவில்லை.

மஸ்ஜிதிலேயே இருந்த ஸஈத் இப்னு முஸய்யப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு தொழுகை நேரங்கள் தெரியவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய கப்ர் ஷரீஃபிலிருந்து வருகிற கனைப்பு சப்தத்தைக் கொண்டு தொழுகை நேரங்களை அறிந்தார்கள்.

அறிவிப்பவர்: ஸயீத் இப்னு அப்துல் அஸீஸ்
ரழியல்லாஹு அன்ஹு
நூல்: தாரமி 94

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: إِذَا أَحَبَّ اللهُ الْعَبْدَ نَادَى جِبْرِيلَ: إِنَّ اللهَ يُحِبُّ فُلَانًا فَأَحْبِبْهُ، فَيُحِبُّهُ جِبْرِيلُ عليه السلام، فَيُنَادِي جِبْرِيلُ فِي أَهْلِ السَّمَاءِ: إِنَّ اللهَ يُحِبُّ فُلَانًا فَأُحِبُّوهُ، فَيُحِبُّهُ أَهْلُ السَّمَاءِ ثُمَّ يُوضَعُ لَهُ الْقَبُولُ فِي الْأَرْضِ.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ் ஓர் அடியானை நேசிக்கும் போது ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அழைத்து ''அல்லாஹ் இன்னாரை நேசிக்கின்றான், எனவே அவரை நீங்களும் நேசியுங்கள்!'' என்பான்.

அவரை நேசிக்கின்ற ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், விண்ணிலுள்ளவர்களை அழைத்து ''அல்லாஹ் இன்னாரை நேசிக் கின்றான். அவரை நீங்களும் நேசியுங்கள்!'' என்றுரைப்பார். விண்ணிலுள்ளவர்கள் அவரை நேசிப்பர். பின்னர் அவருக்கு பூமியிலும் அங்கீகாரம் வழங்கப்படும்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி, 3209

أَخْرَجَ الْبَزَّارُ عَن أَنَسٍ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: اَلأَنْبِيَاءُ أَحْيَـاءٌ فِي قُبُورِهِمْ يُصَلُّونَ .

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘‘நபிமார்கள் கபுறுகளில் உயிருடன் தொழுதுக் கொண்டிருக்கின்றனர்.’’

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூல்: அபூயஃலா 3425

رواه أبو يعلى والبزار ورجال أبي يعلى ثقات اهـ مجمع الزوائد: ٢١١/٨

குறிப்பு: அபூயஃலா பதிவு செய்துள்ள இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என ஹாஃபிழ் நூறுத்தீன் அல்ஹைதமீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மஜ்மவுஸ் ஸவாயித் என்ற நூலில் கூறியுள்ளார்கள்.

قَالَ ملا علي القاري: وصح خبر: الأنبياء احياء في قبورهم يصلون . مرقاة المفاتيح ٤٦٠/٣

‘‘நபிமார்கள் கபுறுகளில் உயிருடன் தொழுதுக் கொண்டிருக் கின்றனர் என்ற இந்த ஹதீஸ் ஸஹீஹானது’’ என முல்லா அலீ காரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது மிர்காதுல் மஃபாதீஹ் எனும் நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

قَالَ الإمام ابن حجر الهيتمي: ... فنحن نؤمن ونصدق بأنه ﷺ حي يرزق وأن جسده الشريف لا تأكله الأرض، والإجماع على هذا. الدرالمنضود في الصلاة والسلام على صاحب المقام المحمود: ١٥٨.

இப்னுஹஜருல் ஹைதமீ ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உயிருடன்

உள்ளார்கள், ரிஸ்கு வழங்கப்படுகிறார்கள், அவர்களது புனித உடலை மண் தின்னாது என்பது ஏகோபித்த கருத்தாகும் என்பதை நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம், உண்மைபடுத்துகின்றோம்.''

நூல்: துர்ருல் மன்ளூத் 158

قَالَ ابن حجر العسقلاني: وقد جمع البيهقي كتابا لطيفا في حياة الأنبياء في قبورهم أورد فيه حديث أنس: الأنبياء أحياء في قبورهم يصلون. أخرجه من طريق يحيى بن أبي كثير وهو من رجال الصحيح. فتح الباري ٥٨٩/٦ /كتاب أحاديث الأنبياء .

இப்னுல் ஹஜருல் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: ''இமாம் பைஹகீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 'நபிமார்கள் தமது கப்ருகளில் உயிரோடு இருக்கின்றனர்' என்ற தலைப்பில் அருமையான நூல் எழுதியுள்ளார்கள். அந்நூலில் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் மேற்சொன்ன ஹதீஸையும் பதிவு செய்துள்ளார்கள். நூல்: ஃபத்ஹுல் பாரி 589

اَلتَّبَرُّكُ

பரகத் எடுப்பது

قَالَ العلامة المحقق المؤرخ محمد طاهر بن عبد القادر الكردي المكي: واعلم: أرشدنا الله تعالى وإياك: أن التبرك بآثار الأنبياء صلوات الله وسلامه عليهم أجمعين سنة مأثورة عند المؤمنين منذ القِدم، لما لهم من الفضل على سائر الامم، والكرامة عند الله. ... ولا شك أن آثار رسول الله ﷺ صفوة خلق الله وافضل النبيين اثبت وجودا واشهر ذكرا واظهر بركة فهي اولى بذلك وأحرى. وقد شهدها الجم الغفير من اصحابه، وأجمعوا على التبرك بها، والاهتمام بجمعها، وهم الهداة المهديون والقدوة الصالحون فتبركوا بشعراته ﷺ، وبفضل وَضوئه، وبعرقه، وبثيابه، وآنيته، وبمس جسده الشريف وبغير ذلك ممّا عرف من آثاره الشريفة التي صحت بها الأخبار عن الاخيار. فلا جرم أن كان التبرك بها سنة الصحابة رضي الله عنهم، واقتفى آثارهم في ذلك من نهج نهجهم من التابعين، وصلحاء المؤمنين . وقد وقع التبرك ببعض آثاره ﷺ في عهده وأقره، ولم ينكر عليه، فدل ذلك دلالة قاطعة على مشروعيته، ولو لم يكن مشروعا لنهى عنه ﷺ، وحذر منه . وكما تدل الاخبار الصحيحة واجماع الصحابة على مشروعيته تدل على قوة إيمان الصحابة وشدة محبتهم وموالاتهم ومتابعتهم للرسول الأعظم ﷺ ـ تبرك الصحابة بآثار رسول الله ﷺ: ٤٤،٤٥

பேரறிஞரும், சரித்திர ஆசிரியருமான அல்லாமா முஹம்மத் தாஹிர் இப்னு அப்துல்காதிர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: அறிந்துக் கொள். அல்லாஹ் உனக்கும், எமக்கும் நேர்வழிகாட்டுவானாக! நபிமார்களுடைய ஆதார்கள் மூலம் பரகத் எடுப்பது பண்டைய காலம் முதல் முஃமின்களிடம் ஸுன்னத்தான நடைமுறையாகும்.

ஏனைய மக்களை விட நபிமார்களுக்கு அல்லாஹ்விடத்தில் சிறப்பும், கண்ணியமும் இருக்கின்ற காரணத்தால்!

அல்லாஹ்வின் படைப்புகளில் மிகச் சிறந்தவரான நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஆதார்கள் பரிசுத்த மானவை என்பது உறுதி. பரகத்தால் அவை தூய்மைமிக்கவை. பரகத் பெறுவதற்கு மிக்கத் தகுதியானவை என்பதில் ஐயமில்லை.

ஸஹாபாப் பெருமக்களில் பெரும் பகுதியினர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஆதார்களுக்குச் சாட்சியாளர் களாக இருந்துள்ளனர். அவற்றின் மூலமாக பரகத் எடுக்கும் விஷயத்தில் ஏகோபித்த கருத்தையும் கொண்டுள்ளனர்.

அல்லாஹ்விடம் ஏனைய மக்களைவிட (நபிமார்களுக்கு) சிறப்பும், கண்ணியமும் இருக்கிற காரணத்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆதார்களை சேகரிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கிய ஸஹாபாக்கள் நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழி காட்டக்கூடியவர்களாகவும், பின்பற்றத் தகுந்த நல்லவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருமுடிகளைக் கொண்டு பரகத் எடுப்பவர்களாகவும் இருந்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உளூச் செய்த மிச்சத் தண்ணீர், அவர்களின் வியர்வை, ஆடை, பாத்திரங்கள் கொண்டும், அன்னாரின் புனிதமேனியைத் தொடுதல் மற்றும் அவர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு பொருட்களைக் கொண்டும் ஸஹாபாக்கள் பரகத் எடுத்தனர் என்பதற்கு உன்னதமிக்க நல்லடியார்கள் அறிவிக்கும் ஸஹீஹான ஹதீஸ்கள் ஆதாரமாக உள்ளன.

எனவே ஆதார்களைக் கொண்டு பரகத் எடுத்தல் ஸஹாபாப் பெருமக்களின் ஸுன்னத் ஆகும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

இவ்வாறு அவர்கள் பரகத் எடுத்தார்கள் என்பது ஸஹீஹான நல்லடியார்களைக் கொண்டுள்ள ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

ஸஹாபாப் பெருமக்களின் வழியொற்றி நடந்த தாபிஈன்களும், முஃமின்களான ஸாலிஹீன்களும் ஸஹாபாக்களைப் பின்பற்றி ஆதார்களைக் கொண்டு பரகத் எடுத்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் காலத்திலேயே அவர்களது ஆதார்களைக் கொண்டு பரகத் எடுப்பது நடைபெற்றது. அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தடுக்கவில்லை, மட்டுமின்றி அதனை அங்கீகரிக்கவும் செய்தார்கள்.

ஆதார்களைக் கொண்டு பரகத் எடுத்தல் ஷரீஅத்தில் ஆகுமானது என்பதை உறுதியான ஆதாரங்கள் அறிவிக்கின்றன. ஆதார்களைக் கொண்டு பரகத் எடுத்தல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல என்றிருந்தால் அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் விலக்கி இருப்பார்கள், எச்சரிக்கை விடுத்து மிருப்பார்கள்.

ஸஹாபாக்களின் செய்திகளும், ஸஹாபாக்களின் ஏகோபித்த கருத்தும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஆதார்களைக் கொண்டு பரகத் எடுத்தல் மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்டது என்பதை அறிவிப்பது போன்று ஸஹாபாக்களின் ஈமானின் உறுதியையும், அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது கொண்டுள்ள நேசத்தின் வலிமையையும், கண்ணியத் திற்குரிய திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதின் மனத்திடத்தையும் அறிவிக்கிறது.

நூல்: முஹம்மத் தாஹிர் இப்னு அப்துல் காதிர் குர்திய்யி அவர்களின்
தபர்ருக்குஸ் ஸஹாபா ஃபீ ஆதாரி ரஸூல்
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் 44,45

أَخْرَجَ الشيخان في "صحيحهما" عَنْ أَبِي مُوسَى ﷺ، قَالَ: كُنْتُ عِنْدَ النَّبِيِّ ﷺ وَهُوَ نَازِلٌ بِالْجِعْرَانَةِ بَيْنَ مَكَّةَ وَالمَدِينَةِ، وَمَعَهُ بِلاَلٌ فَأَتَى النَّبِيَّ ﷺ أَعْرَابِيٌّ فَقَالَ: أَلاَ تُنْجِزُ لِي مَا وَعَدتَنِي؟ فَقَالَ لَهُ: أَبْشِرْ فَقَالَ: قَدْ أَكْثَرْتَ عَلَيَّ مِنْ أَبْشِرْ، فَأَقْبَلَ عَلَى أَبِي مُوسَى وَبِلاَلٍ كَهَيْئَةِ الغَضْبَانِ، فَقَالَ: رَدَّ البُشْرَى، فَاقْبَلاَ أَنْتُمَا قَالاَ: قَبِلْنَا، ثُمَّ دَعَا بِقَدَحٍ فِيهِ مَاءٌ، فَغَسَلَ يَدَيْهِ وَوَجْهَهُ فِيهِ وَمَجَّ فِيهِ، ثُمَّ قَالَ: اشْرَبَا مِنْهُ، وَأَفْرِغَا عَلَى وُجُوهِكُمَا وَنُحُورِكُمَا وَأَبْشِرَا . فَأَخَذَا القَدَحَ فَفَعَلاَ، فَنَادَتْ أُمُّ سَلَمَةَ مِنْ وَرَاءِ السِّتْرِ: أَنْ أَفْضِلاَ لِأُمِّكُمَا، فَأَفْضَلاَ لَهَا مِنْهُ طَائِفَةً.

அபூ மூஸா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையே உள் ஜிஃரானா எனுமிடத்தில் பிலால் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கி இருந்த போது நானும் அவர்களுடன் இருந்தேன்.

அங்கே வந்த கிராமவாசி ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், தாங்கள் எனக்கு வாக்களித்ததைத் தர மாட்டீர்களா? எனக் கேட்டார்.

‘‘நற்செய்தியைப் பெற்றுக் கொள்!’’ என்றார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்,

‘‘நற்செய்தியை பன்முறை எனக்குச் சொல்லி விட்டீர்களே!’’ என்றார் அவர்.

உடனே என்னையும், பிலால் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் நோக்கி கோபம் கொண்டவர்களைப் போல வந்த நபி ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லம் அவர்கள், ‘‘இவர் (எனது) நற்செய்தியை ஏற்க மறுத்து விட்டார். நீங்களிருவரும் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்’’ என்கிறார்கள். நாங்கள் இருவரும் ‘‘ஏற்றுக் கொண்டோம்!’’

பின்னர் தண்ணீருள்ள ஒரு பாத்திரத்தைக் கொண்டு வரச்சொல்லி, அத்தண்ணீரில் தமது கரங்களையும், முகத்தையும் கழுகி அதில் உமிழ்ந்தார்கள்.

பிறகு ‘‘இதிலிருந்து சிறிது அருந்திவிட்டு உங்கள் முகங்களிலும், மார்புகளிலும் ஊற்றிக் கொள்ளுங்கள். நற்செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்’’ என்றார்கள்.

இருவரும் அப்பாத்திரத்தைப் பெற்று (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியதைப் போன்று) செய்தனர்.

அப்போது (நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மனைவி) உம்முஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் திரைக்குப் பின்னாலிருந்து அழைத்து (இறை நம்பிக்கையாளர்களான) ‘‘உங்களின் தாயாருக்கும் (எனக்கும்) சிறிது மீதம் வையுங்கள்’’ என்று கூறினார்கள். அவர்களுக்காக அதில் கொஞ்சத்தை மீதம் வைத்தோம்.

நூல்: ஸஹீஹ் புகாரி 4238

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ ابْنِ شِهَابٍ، قَالَ: أَخْبَرَنِي مَحْمُودُ بْنُ الرَّبِيعِ، قَالَ : وَهُوَ الَّذِي مَجَّ رَسُولُ اللهِ ﷺ فِي وَجْهِهِ وَهُوَ غُلَامٌ مِنْ بِئْرِهِمْ . وَ قَالَ عُرْوَةُ عَنِ الْمِسْوَرِ، وَغَيْرِهِ يُصَدِّقُ كُلُّ وَاحِدٍ مِنْهُمَا صَاحِبَهُ : وَإِذَا تَوَضَّأَ النَّبِيُّ ﷺ كَادُوا يَقْتَتِلُونَ عَلَى وَضُوئِهِ.

இப்னு ஷிஹாப் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘தாம் குழந்தையாக இருந்த போது தமது வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர்

எடுத்து தம் மீது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உமிழ்ந்தார்கள்'' என மஹ்மூது இப்னு ரபீஉ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

''நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உளூச் செய்தால் மீதம் வரும் தண்ணீரை எடுத்துக் கொள்வதில் (ஸஹாபாக்கள்) போட்டி இடுவர்'' என உர்வா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், மிஸ்வர் மற்றும் வேறு ஒருவர் வழியாக அறிவித்துள்ளார்கள். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மெய்ப்பிக்கின்றனர்.

நூல்: ஸஹீஹ் புகாரி 189

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ: دَخَلَ عَلَيْنَا النَّبِيُّ ﷺ فَقَالَ عِنْدَنَا، فَعَرِقَ، وَجَاءَتْ أُمِّي بِقَارُورَةٍ، فَجَعَلَتْ تَسْلِتُ الْعَرَقَ فِيهَا، فَاسْتَيْقَظَ النَّبِيُّ ﷺ فَقَالَ: يَا أُمَّ سُلَيْمٍ مَا هَذَا الَّذِي تَصْنَعِينَ ؟ قَالَتْ: هَذَا عَرَقُكَ نَجْعَلُهُ فِي طِيبِنَا، وَهُوَ مِنْ أَطْيَبِ الطِّيبِ.

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எங்களது வீட்டுக்கு வந்து மதியம் ஓய்வெடுத்தார்கள். அப்போது அவர்களது உடலில் வியர்வை வழிந்தது. என் தாயார் (உம்மு சுலைம் ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஒரு கண்ணாடி குடுவையுடன் வந்து வியர்வை துளிகளை அந்த குடுவையில் சேகரித்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து ''உம்மு சுலைமே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்கள், என் தாயார். 'இது தங்களின் வியர்வை, இதை எங்கள் நறுமணப் பொருளில் சேர்ப்போம். இது வாசனைப் பொருட்களில் மிகச் சிறந்த வாசனைப் பொருள்!' என்றார்கள்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 4655

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ، يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ، يَقُولُ: إِنَّمَا يَلْبَسُ الْحَرِيرَ مَنْ لاَ خَلَاقَ لَهُ، فَخِفْتُ أَنْ يَكُونَ الْعَلَمُ مِنْهُ، وَأَمَّا مِيثَرَةُ الْأُرْجُوَانِ ، فَهَذِهِ مِيثَرَةُ عَبْدِ اللهِ، فَإِذَا هِيَ أُرْجُوَانٌ. فَرَجَعْتُ إِلَى أَسْمَاءَ فَخَبَّرْتُهَا، فَقَالَتْ: هَذِهِ جُبَّةُ رَسُولِ اللهِ ﷺ، فَأَخْرَجَتْ إِلَيَّ جُبَّةَ طَيَالِسَةٍ كِسْرَوَانِيَّةٍ لَهَا لِبْنَةُ دِيبَاجٍ، وَفَرْجَيْهَا مَكْفُوفَيْنِ بِالدِّيبَاجِ، فَقَالَتْ: هَذِهِ كَانَتْ عِنْدَ عَائِشَةَ حَتَّى قُبِضَتْ، فَلَمَّا قُبِضَتْ قَبَضْتُهَا، وَكَانَ النَّبِيُّ ﷺ يَلْبَسُهَا، فَنَحْنُ نَغْسِلُهَا لِلْمَرْضَى يُسْتَشْفَى بِهَا.

அஸ்மா பின்த் அபீபக்ர் ரழியல்லாஹுஅன்ஹா அவர்களின் அடிமையும், அதாஉ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் பிள்ளையின் மாமாவுமான அப்துல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் என்னை அப்துல்லாஹ் பின் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அனுப்பி ஆடைகளில், சிறிது பட்டு வேலைப்பாடுகள் உள்ளதையும், சிவப்பு நிற மென்பட்டுத் திண்டுகளைப் பயன்படுத்துவதையும், ரஜப் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதையும் தாங்கள் தடை செய்து வருவதாக எனக்குச் செய்தி எட்டியுள்ளது, அது உண்மையா? என்று கேட்கச் சொன்னார்கள். அதற்கு என்னிடம் அப்துல்லாஹ் பின் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஜப் மாதத்தில் நோன்பு நோற்பதை பற்றி நீங்கள் குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில் நீங்கள் கேள்விப்பட்டது சரியல்ல. எல்லாக் காலங்களிலும் நோன்பு நோற்கும் ஒருவனான என்னைப் பற்றி எப்படி இதைச் சொல்ல முடியும்?

ஆடைகளில் பட்டு வேலைப்பாடுகள் உள்ளதைப் பொறுத்த வரையில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்கள் கூறியதாக என் தந்தை உமர் பின் அல்கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மறுமையில் எந்த நற்பேறும் இல்லாதவர் தாம் இம்மையில் பட்டாடை அணிவர் என்று கூறியதை நான் கேட்டுள்ளேன். பட்டு வேலைப்பாடுகள் உள்ளதும் இத்தடைக்குள் அடங்கும் என்று நான் அஞ்சினேன்.

சிவப்பு நிறத்தில் அமைந்த மென்பட்டுத் திண்டைப் பொறுத்தவரையில் இதுதான் அப்துல்லாஹ் பின் உமரின் திண்டாகும். இதுவும் சிவப்பு நிறத்தில் அமைந்த திண்டுதான் என்று கூறினார்கள். நான் அஸ்மா ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் திரும்பி வந்து இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதைச் சொன்னேன்.

அப்போது அஸ்மா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இதுதான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நீளஅங்கியாகும் எனக்கூறி கோடுபோட்ட பாரசீக மன்னர்கள் அணியும் பட்டு நீள அங்கி ஒன்றை வெளியே எடுத்தார்கள். அதன் கழுத்துப் பகுதியில் அலங்காரப்பட்டு வேலைபாடு இருந்தது. அதன் முன்பின் திறப்புகளில் அலங்காரப் பட்டு வேலைப்பாடுகள் இருந்தன.

அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ''இது ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் அவர்கள் இறக்கும் வரை இருந்தது. அவர்கள் இறந்த பின்னர் அதை நான் எடுத்து வைத்துக் கொண்டேன். இதை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அணிந்து வந்தார்கள். பின்னர் நாங்கள் அருள் வளம் கருதி தண்ணீரில் கழுவி அதைக் கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறோம்'' என்று கூறினார்கள்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம்: 4201

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ: لَمَّا رَمَى رَسُولُ اللهِ ﷺ الْجَمْرَةَ وَنَحَرَ نُسُكَهُ وَحَلَقَ نَاوَلَ الْحَالِقَ شِقَّهُ الْأَيْمَنَ فَحَلَقَهُ، ثُمَّ دَعَا أَبَا طَلْحَةَ الْأَنْصَارِيَّ فَأَعْطَاهُ إِيَّاهُ، ثُمَّ نَاوَلَهُ الشِّقَّ الْأَيْسَرَ، فَقَالَ: احْلِقْ فَحَلَقَهُ، فَأَعْطَاهُ أَبَا طَلْحَةَ، فَقَالَ: اقْسِمْهُ بَيْنَ النَّاسِ.

அனஸ் பின் மாலிக் ரழியல்ஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விடைபெறும் ஹஜ்ஜில் மினாவுக்குச் சென்ற போது முதலில் ஜம்ரத்துல் அகபாவுக்குச் சென்று கற்களை எறிந்தார்கள். பின்னர் மினாவிலிருந்து தமது கூடாரத்திற்கு வந்து அறுத்துப் பலியிட்டார்கள். பிறகு நாவிதரிடம் தமது தலையின் வலப்பக்கத்தையும், பின்னர் இடப்பக்கத்தையும் மழிக்கச் சொன்னார்கள். பிறகு அந்த முடியை அபூதல்ஹா ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுத்து மக்க ளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னார்கள்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 2510

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسٍ، قَالَ: لَقَدْ رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ وَالْحَلَّاقُ يَحْلِقُهُ، وَأَطَافَ بِهِ أَصْحَابُهُ، فَمَا يُرِيدُونَ أَنْ تَقَعَ شَعْرَةٌ إِلَّا فِي يَدِ رَجُلٍ.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நான் அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பார்த்தேன். நாவிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முடியை மழித்துக் கொண்டிருக்க, ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சூழ்ந்து சுற்றிக் கொண்டிருந்தனர். மழிக்கப்படுகிற முடிகள் தம் கைகளில் விழுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் நாடவில்லை.’’

நூல்: முஸ்லிம் 2512

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ: كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا صَلَّى الْغَدَاةَ جَاءَ خَدَمُ الْمَدِينَةِ بِآنِيَتِهِمْ فِيهَا الْمَاءُ، فَمَا يُؤْتَى بِإِنَاءٍ إِلَّا غَمَسَ يَدَهُ فِيهَا، فَرُبَّمَا جَاؤُوهُ فِي الْغَدَاةِ الْبَارِدَةِ، فَيَغْمِسُ يَدَهُ فِيهَا.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அதிகாலைத் தொழுகைக்குப் பின்னர் தண்ணீருள்ள பாத்திரங்களை மதீனத்துப் பணியாளர்கள் கொண்டு வருவர். தண்ணீருள்ள அப்பாத்திரங்களில் நபி ஸல்லல்லாஹுவஸல்லம் அவர்கள் கை விடுவார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் 4646

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عُثْمَانَ بْنِ عَبْدِ اللهِ رضي الله عنه : أَرْسَلَنِي أَهْلِي إِلَى أُمِّ سَلَمَةَ (زَوْجِ النَّبِيِّ ﷺ)بِقَدَحٍ مِنْ مَاءٍ، وَقَبَضَ إِسْرَائِيلُ ثَلَاثَ أَصَابِعَ - مِنْ قُصَّةٍ فِيهِ شَعَرٌ مِنْ شَعَرِ النَّبِيِّ ﷺ وَكَانَ إِذَا أَصَابَ الْإِنْسَانَ عَيْنٌ أَوْ شَيْءٌ بَعَثَ إِلَيْهَا مِخْضَبَهُ ، فَاطَّلَعْتُ فِي الْجُلْجُلِ فَرَأَيْتُ شَعَرَاتٍ حُمْرًا.

உஸ்மான் இப்னி அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மனைவி உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் என் குடும்பத்தினர் ஒரு தண்ணீர் பாத்திரத்தை என்னிடம் தந்து அனுப்பினர்.

உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வெள்ளியிலான ஒரு சிமிழ் கொண்டு வந்தார்கள்.

யாராவது ஒருவருக்கு கண் திருஷ்டி அல்லது ஏதாவது நோய் ஏற்பட்டால் அவர்கள் தண்ணீர் பாத்திரத்தை உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் அனுப்பி வைப்பர். அவர்கள் தம்மிடம் இருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முடியை அத்தண்ணீரில் முக்கி அனுப்புவார்கள். நோயாளி அதைக்குடிப்பார்.

அந்தச் சிமிழை நான் எட்டிப் பார்த்தேன். அதனுள் சில சிகப்பு முடிகளைக் கண்டேன்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான இஸ்ராயீல் இப்னு யூனுஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சிமிழின் அளவைக் காட்டும் விதத்தில தமது மூன்று விரல்களை மடித்துக் காட்டினார்கள்.

நூல்: ஸஹீஹ் புகாரி 5896

ஆஸாரே முபாரக் - அருள் நிறைந்த நினைவுச்சின்னங்கள்

அருள் நிறைந்த அழியா நினைவுச் சின்னங்கள் குறித்து அல்லாஹ் திருமறையில்,

மேலும், யார் அல்லாஹ்வின் சின்னங்களுக்கு மதிப்பளிக்கிறார்களோ நிச்சயமாக அது இதயங்களுக்கு இறையச்சத்தை அளிக்கக்கூடியதாகும். (அல்குர்ஆன் 32 : 22) என்று கூறுகிறான்.

அல்லாஹ்வின் சின்னங்கள் என்பது அவனுடைய நேசத்தையும் திருப்தியையும் பெற்ற நல்லடியார்கள் வாழ்ந்த இடங்கள், அவர்கள் பயன்படுத்திய நினைவுப் பொருட்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பொருட்களுமாகும்.

மேலும் இது குறித்து ஏராளமான நபிமொழிகள் இருந்தாலும் ஒரே ஒரு ஹதீஸ் மட்டும் இங்கே குறிப்பிடப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஹஜ்ஜின் போது) ஷைத்தான்மீது கல் எறிந்த பின் ஹஜ்ஜுடைய குர்பானியை நிறைவேற்றினார்கள். பிறகு முடிதிருத்துபவரிடம் தனது வலது புறத்தின் முடிகளை எடுக்குமாறு கூறினார்கள். அவரும் அவ்வாறே செய்தார். பிறகு அந்த வலதுபுற முடிகளை ஹள்ரத் அபூதல்ஹா(ரளி) அவர்களை அழைத்துக் கொடுத்தார்கள். அடுத்து இடதுபுற முடிகளை எடுத்தபோதும் அபூதல்ஹா (ரளி) அவர்களிடம் கொடுத்து 'இந்த (எனது புனிதமான) முடிகளை மக்களுக்கு பங்கிட்டுக் கொடுங்கள்' என்றார்கள். (அறிவிப்பாளர்: அனஸ் (ரளி), நூல்: முஸ்லிம்)

اَلشَّفَاعَةُ

ஷஃபாஅத் - பரிந்துரை

قَالَ الإمام النووي رحمه الله:الشفاعة خمسة اقسام . أولها: مختصة بنبينا ﷺ وهي الإراحة من هول الموقف وتعجيل الحساب . والثانية: في إدخال قوم الجنة بغير حساب وهذه أيضا وردت لنبينا ﷺ. والثالثة: الشفاعة لقوم استوجبوا النار فيشفع فيهم نبينا ﷺ ومن شاء الله . والرابعة: فيمن دخل النار من المذنبين هي لنبينا ﷺ والملائكة وإخوانهم من المؤمنين . والخامسة: الشفاعة في زيادة الدرجات اه ملخصا من شرح مسلم ١٠٤/١

இமாம் நவவீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.

ஷஃபாஅத் ஐந்து வகைப்படும்.

1. நம்முடைய திருநபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குக் குறிப்பானது. மறுமை அச்சத்திலிருந்து நிம்மதியின் பால் திருப்புவதும், கேள்வி கணக்கைத் துரிதப்படுத்துவதுமாகும்.

2. கேள்வி கணக்கின்றி சுவனத்தில் நுழைய வைத்தல். இதுவும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு மட்டும் உரியது. இது விஷயமாக முஸ்லிம் ஷரீஃபில் அறிவிப்புகள் உள்ளன.

3. நரகம் விதிக்கப்பட்டவர்களுக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அல்லாஹ் நாடியவர்களும் செய்கின்ற ஷஃபாஅத்.

4. நரகிலுள்ள பாவிகளை அதிலிருந்து வெளியேற்றுவதற்காகச் செய்யப்படும் ஷஃபாஅத். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்கள் நரகிலுள்ள பாவிகளை வெளியேற்ற ஷஃபாஅத் செய்வார்கள் என ஹதீஸ்கள் வந்துள்ளன.

மேலும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கலிமா சொன்ன அனைவரையும் மலக்குகள் மற்றும் சகோதர முஃமின்களின் ஷஃபாஅத்தை ஏற்று அல்லாஹ் நரகிலிருந்து விடுதலை செய்வான். இறை நிராகரிப்பாளர்களைத் தவிர வேறு யாரும் நரகில் நிரந்தரமாகத் தங்கமாட்டார்கள் எனவும் ஹதீஸ்கள் வந்துள்ளன.

5. சுவனத்திலுள்ளவர்களின் அந்தஸ்துகள் உயர்த்தப்படுவதற்காகச் செய்யப்படும் ஷஃபாஅத்.

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ، عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: كُلُّ نَبِيٍّ سَأَلَ سُؤْلًا أَوْ قَالَ: لِكُلِّ نَبِيٍّ دَعْوَةٌ قَدْ دَعَا بِهَا فَاسْتُجِيبَ، فَجَعَلْتُ دَعْوَتِي شَفَاعَةً لِأُمَّتِي يَوْمَ القِيَامَةِ.

இறைத்தூதர் ஸல்லல்ஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''ஒவ்வொரு இறைத் தூதரும் ஒரு பிரத்யேக வேண்டுதல் செய்து விட்டனர். அல்லது ஒவ்வொரு இறைத்தூதருக்கும் (தம் சமுதாயத்தார் தொடர்பாக ஒரு விசேசப்) பிரார்த்தனை உண்டு. அதனை அவர்கள் இம்மையிலேயே கேட்டுவிட்டனர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. நான் என்னுடைய பிரார்த்தனையை மறுமை நாளில் என் சமுதாயத்தாருக்குப் பரிந்துரை செய்வதற்காக ஆக்கியுள்ளேன்.''

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி 6305

أَخْرَجَ التِرْمُذِي عَنْ أَبِي سَعِيدٍ، أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِنَّ مِنْ أُمَّتِي مَنْ يَشْفَعُ لِلْفِئَامِ مِنَ النَّاسِ وَمِنْهُمْ مَنْ يَشْفَعُ لِلْقَبِيلَةِ ، وَمِنْهُمْ

مَنْ يَشْفَعُ لِلْعُصْبَةِ ، وَمِنْهُمْ مَنْ يَشْفَعُ لِلرَّجُلِ حَتَّى يَدْخُلُوا الْـجَنَّةَ: قَـالَ أَبُو عِيسَى هَذَا حَدِيثٌ حَسَنٌ.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘என் உம்மத்தில் - மனிதர்களில் ஒரு பெரும் கூட்டத்திற்கு ஷஃபாஅத் செய்பவர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு சிறு கூட்டத்திற்கு ஷஃபாஅத் செய்பவர்களும் உண்டு. மேலும் அவர்களில் ஒரே ஒரு மனிதனுக்கு மட்டும் ஷஃபாஅத் செய்பவர்களும் இருக்கின்றனர். எதுவரை எனில் அவர்கள் சுவனம் நுழையும் வரை.’’

அறிவிப்பவர்: அபூஸஈத் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: திர்மிதி 2439

அபூ ஈஸா திர்மிதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த ஹதீஸ் ‘ஹஸன்’ என்று கூறுகிறார்கள்.

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ ﵁ عَـنِ النَّـبِيِّ ﷺ قَـالَ: يَخْرُجُ قَوْمٌ مِنَ النَّـارِ بِشَـفَاعَةِ مُحَمَّـدٍ ﷺ فَيَـدْخُلُونَ الْـجَنَّةَ، يُسَـمَّوْنَ الْـجَهَنَّمِيِّينَ.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஷஃபாஅத் காரணமாக ஒரு பெரும் கூட்டத்தினர் நரகிலிருந்து வெளியேறி சுவனத்தில் நுழைவர். இவர்களுக்கு ஜஹனமிய்யீன் என்று பெயர் கூறப்படும்.’’ நூல்: புகாரி 6566

أَخْرَجَ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ عَنْ أَنَسٍ ؓ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: إِذَا كَانَ يَوْمُ القِيَامَةِ مَاجَ النَّاسُ بَعْضُهُمْ فِي بَعْضٍ فَيَأْتُونَ آدمَ فَيَقُولُونَ: اشْفَعْ لَنَا إِلَى رَبِّكَ فَيَقُولُ: لَسْتُ لَهَا، وَلَكِنْ عَلَيْكُمْ بِإِبْرَاهِيمَ فَإِنَّهُ خَلِيلُ الرَّحْمنِ، فَيَأْتُونَ إِبْرَاهِيمَ فَيَقُولُ: لَسْتُ لَهَا، وَلَكِنْ عَلَيْكُمْ بِمُوسَى فَإِنَّهُ كَلِيمُ اللهِ فَيَأْتُونَ مُوسَى. فَيَقُولُ: لَسْتُ لَهَا وَلَكِنْ عَلَيْكُمْ بِعِيسَى فَإِنَّهُ رُوحُ اللهِ وَكَلِمَتُهُ، فَيَأْتُونَ عِيسَى عَلَيْهِ السَّلام فَيَقُولُ: لَسْتُ لَهَا وَلَكِنْ عَلَيْكُمْ بِمُحَمَّدٍ ﷺ فَيَأْتُونِي فَأَقُولُ: أَنَا لَهَا ، فَأَسْتَأْذِنُ عَلَى رَبِّي، فَيُؤْذَنُ لِي وَيُلْهِمُنِي مَحَامِدَ، أَحْمَدُهُ بِهَا لَا تَحْضُرُنِي الْآنَ فَأَحْمَدُهُ بِتِلْكَ الْمَحَامِدِ وَأَخِرُّ لَهُ سَاجِدًا، فَيُقَالُ: يَا مُحَمَّدُ ارْفَعْ رَأْسَكَ، وَقُلْ يُسْمَعْ لَكَ، وسَلْ تُعْطَ، وَاشْفَعْ تُشَفَّعْ ، فَأَقُولُ: يَا رَبِّ أُمَّتِي أُمَّتِي! فَيُقَالُ: انْطَلِقْ فَأَخْرِجْ مِنْهَا مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ شَعِيرَةٍ مِنْ إِيمَانٍ فَأَنْطَلِقُ فَأَنْطَلِقُ فَأَفْعَلُ ثُمَّ أَعُودُ فَأَحْمَدُهُ بِتِلْكَ الْمَحَامِدِ ثُمَّ أَخِرُّ لَهُ سَاجِدًا، فَيُقَالُ: يَا مُحَمَّدُ ارْفَعْ رَأْسَكَ، وَقُلْ يُسْمَعْ لَكَ، وَسَلْ تُعْطَ، وَاشْفَعْ تُشَفَّعْ فَأَقُولُ: يَا رَبِّ أُمَّتِي أُمَّتِي! فَيُقَالُ: انْطَلِقْ فَأَخْرِجْ مِنْهَا مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ اَوْ خَرْدَلَةٍ مِنْ إِيمَانٍ فَأَنْطَلِقُ فَأَفْعَلُ ثُمَّ أَعُودُ فَأَحْمَدُهُ بِتِلْكَ الْمَحَامِدِ ثُمَّ أَخِرُّ لَهُ سَاجِدًا، فَيُقَالُ: يَا مُحَمَّدُ ارْفَعْ رَأْسَكَ، وَقُلْ يُسْمَعْ لَكَ، وَسَلْ تُعْطَ وَاشْفَعْ تُشَفَّعْ، فَأَقُولُ: يَا رَبِّ أُمَّتِي أُمَّتِي! فَيُقَالُ: انْطَلِقْ فَأَخْرِجْ مَنْ كَانَ فِي قَلْبِهِ أَدْنَى أَدْنَى أَدْنَى مِثْقَال حَبَّةِ خَرْدَلٍ مِنْ إِيمَانٍ فَأَخْرِجْهُ مِنَ النَّارِ، فَأَنْطَلِقُ فَأَفْعَلُ. ثُمَّ أَعُودُ الرَّابِعَةَ فَأَحْمَدُهُ بِتِلْكَ ، ثُمَّ

أَخِرُّ لَهُ سَاجِدًا، فَيُقَالُ: يَا مُحَمَّدُ ارْفَعْ رَأْسَكَ، وَقُلْ يُسْمَعْ، وَسَلْ تُعْطَ، وَاشْفَعْ تُشَفَّعْ، فَأَقُولُ: يَا رَبِّ إِئْذَنْ لِي فِيمَنْ قَالَ لَاإِلَهَ إِلَّااللهُ فَيَقُولُ: وَعِزَّتِي وَجَلَالِي وَكِبْرِيَائِي وَعَظَمَتِي لَأُخْرِجَنَّ مِنْهَا مَنْ قَالَ: لَاإِلَهَ إِلَّااللهُ .

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். ‘‘பீதி மிகுந்த மறுமை நாள் நிகழும் போது மக்கள் சிலர் சிலரோடு அலைமோதுவார்கள். அவர்கள், ‘‘ஆதி மனிதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று இந்தச் சோதனையான கட்டத்திலிருந்து எங்களைக் காக்க எங்களுக்காக உங்களுடைய இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள்’’ என்று சொல்வார்கள். அதற்கு ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ‘‘அந்தத் தகுதி எனக்கு இல்லை. நீங்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போய் பாருங்கள். ஏனென்றால் அவர் அளவிலா அருளாளனான இறைவனின் உற்ற நண்பராவார்’’ என்று கூறுவார்கள்.

உடனே மக்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்வர். அப்போது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ‘‘எனக்கு தகுதி இல்லை; நீங்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்லுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வுடன் உரையாடியவராவார்’’ என்று சொல்வார்கள். உடனே மக்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்வார்கள். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ‘‘அதற்குத் தகுதியானவன் நான் அல்லன். நீங்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை போய் பாருங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் ஆவியும், அவனு டைய வார்த்தையும் ஆவார்’’ என்று சொல்வார்கள். உடனே மக்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்வார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ‘‘அதற்குத் தகுதியானவன் நான்

அல்லன், நீங்கள் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போய் பாருங்கள்'' என்று சொல்வார்கள். உடனே மக்கள் என்னிடம் வருவார்கள்.

அப்போது நான் அதற்குரியவன்தான் என்று சொல்விட்டு மக்களுக்காக பரிந்துரைக்க என் இறைவனிடம் அனுமதி கேட்பேன். அப்போது எனக்கு அனுமதியளிக்கப்படும், தற்போது எனக்குத் தோன்றாத புகழ் மாலைகளையெல்லாம் அப்போது நான் இறைவனைப் போற்றி புகழும் வகையில் எனக்கு அவன் என்னுடைய எண்ணத்தில் உதயமாக்குவான். அந்த புகழ்மாலைகளால் நான் அவனைப் போற்றிப் புகழ்வேன். அவனுக்காக அவன் முன் நான் ஸஜ்தாவில் (சிரவணக்கத்தில்) விழுவேன். அப்போது இறைவன் தரப்பிலிருந்து ''முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள்; சொல்லுங்கள், உங்களுக்காக செவியேற்கப்படும், கேளுங்கள் தரப்படும், பரிந்துரை செய்யுங்கள் உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்'' என்று சொல்லப்படும்.

அப்போது நான் ''என் இறைவா! என் சமுதாயம்! என் சமுதாயம்! என்பேன்'' அப்போது, சொல்லுங்கள். ''எவருடைய உள்ளத்தில் வாற் கோதுமையின் எடையளவு இறைநம்பிக்கை இருக்கிறதோ அவரை நரகத்திலிருந்து அப்புறப்படுத்துங்கள்!'' என்று சொல்லப்படும். நான் சென்று அவ்வாறே செய்வேன்.

பிறகு திரும்பி வந்து அந்த புகழ்மலைகளைக் கூறி மீண்டும் அவனை போற்றிப் புகழ்வேன். பிறகு அவனுக்காக ஸஜ்தாவில் நான் விழுவேன். அப்போதும் ''முஹம்மதே! தலையை உயர்த்துங்கள்! சொல்லுங்கள், உங்கள் சொல் செவியேற்கப்படும், கேளுங்கள் தரப்படும், பரிந்துரை செய்யுங்கள், உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்'' என்று கூறப்படும். நான் ''என் இறைவா! என் சமுதாயம், என்

சமுதாயம்!'' என்று சொல்வேன். அப்போது ''யாருடைய உள்ளத்தில் அணுவளவு அல்லது கடுகளுளவு இறை நம்பிக்கை இருக்கிறதோ அவர்களை நரகத்திலிருந்து வெளியேற்றுங்கள் என்று சொல்லப் படும்.'' நான் சென்று அவ்வாறே செய்துவிட்டு மீண்டும் திரும்பி வந்து அதே புகழ் மாலைகளைக் கூறி அவனைப் போற்றிப் புகழ்வேன். பிறகு அவனுக்காக ஸஜ்தாவில் விழுவேன். அப்போது ''முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள். சொல்லுங்கள், உங்கள் சொல் செவியேற்கப்படும். கேளுங்கள், தரப்படும் பரிந்துரை செய்யுங்கள், உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்! என்று இறைவன் தரப்பிலிருநது சொல்லப்படும். அப்போது நான் ''என் இறைவா! என் சமுதாயம்! என் சமுதாயம்!'' என்பேன். அதற்கு அவன் ''எவருடைய உள்ளத்தில் கடுகு மணியை விட மிக மிகச் சிறிய அளவில் இறைநம்பிக்கை இருக்கிறதோ அவரை நரகத்திலிருந்து வெளியேற்றுங்கள்! என்று சொல்வான். அவ்வாறே நான் சென்று அத்தகையோரை நரகத்திலிருந்து வெளியேற்றுவேன் என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

பிறகு நான்காம் முறையாக நான் இறைவனிடம் சென்று அதே புகழ் மாலைகளைக் கூறி இறைவனைப் போற்றிப் புகழ்வேன். பிறகு அவனுக்காக ஸஜ்தாவில் விழுவேன். அப்போது ''முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள். சொல்லுங்கள், செவியேற்கப்படும். கேளுங்கள் அது உங்களுக்குத் தரப்படும். பரிந்துரை செய்யுங்கள், உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்! என்று இறைவனின் தரப்பிலிருந்து சொல்லப்படும். அப்போது நான் என் இறைவா! உலகில் (லா இலாஹ இல்லல்லாஹு - 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை') என்று சொன்னவர்களின் விஷயத்தில் பரிந்துரை

செய்ய எனக்கு அனுமதி வழங்குவாயா!'' என்று கேட்பேன். அதற்கு இறைவன் ''என் கண்ணியத்தின் மீதும் மகத்துவத்தின் மீதும், பெருமையின் மீதும் ஆணையாக! லா இலாஹ இல்லல்லாஹு என்று சொன்னவர்களை நான் நரகத்திலிருந்து நிச்சயமாக வெளியேற்றுவேன்! என்று சொல்வான்.

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி 7510

أَخْرَجَ التِّرْمِذِيُّ وَ أَبُودَاوُدَ عَنْ أَنَسٍ رضي الله عنه، أَنَّ نَبِيَّ اللهِ صلى الله عليه وسلم قَالَ: شَفَاعَتِي لأَهْلِ الكَبَائِرِ مِنْ أُمَّتِي.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள். ''என்னுடைய பரிந்துரையானது என்னுடைய உம்மத்திலிருந்து பெரும்பாவங்கள் செய்த சமுதாயத்தினருக்காகவும்'' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்
நூல்:திர்மிதி 2435

أَخْرَجَ اِبْنُ مَاجَه عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانٍ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ: يَشْفَعُ يَوْمَ الْقِيَامَةِ ثَلاَثَةٌ: الأَنْبِيَاءُ ثُمَّ الْعُلَمَاءُ ثُمَّ الشُّهَدَاءُ.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மறுமையில் மூன்று பிரிவினர்கள் ஷஃபாஅத் செய்வார்கள். முதலாவது நபிமார்கள். பிறகு உலமாப்பெருமக்கள் (மார்க்க அறிஞர்கள்) பிறகு ஷுஹதாக்கள்.

அறிவிப்பவர்: உஸ்மான் இப்னு அஃப்பான் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: இப்னு மாஜா 4303

ஷஹீது: அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்தவர்.

اَلْمَقَابِرُ وَزِيَارَتُهَا

கப்ருகளும் அதனை ஸியாரத் செய்வதும்

قَالَ العلامة إسماعيل الحقي البروسوي في تفسير قوله تعالى: إنما يعمر مساجد الله إلخ (سورة التوبة: ١٨) قَالَ الشيخ عبد الغني النابلسي في كشف النور عن أصحاب القبور: فبناء القباب على قبور العلماء و الْأَوْلياء والصلحاء ووضع الستور والعمائم والثياب على قبورهم أمر جائز إذَا كان القصد بذلك التعظيم في أعين العامة حتى لا يحتقروا صاحب هذا القبر وكذا إيقاد القناديل والشمع عند قبور الْأَوْلياء والصلحاء من باب التعظيم والإجلال ايضا للاولياء . فالمقصد فيها مقصد حسن ونذر الزيت والشمع للأولياء يوقد عند قبورهم تعظيما لهم ومحبة فيهم جائز أيضا لا ينبغي النهي عنه اه تفسير روح البيان ٣/٤٠٠، وكشف النور عن أصحاب القبور . للشيخ عبد الغني النابلسي

மேதை அப்துல் கனீ அந்நாபில் ஸீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது ‘கஷ்புன் நூர் அன் அஸ்ஹாபில் குபூர்’ என்ற நூலில் கூறுகிறார்கள்.

‘‘மார்க்கத்தின் நோக்கத்தோடு ஒத்துப் போகும் நற்செயல்கள் ஸுன்னத் ஆகும். உலமாப்பெருமக்கள், அவ்லியாப்பெருமக்கள், நல்லடியார்களின் கபுறுகள் மீது குப்பா கட்டுதல், அந்த கப்றுகள் மீது திரைகள், மற்றும் தலைப்பாகைகள் அணிவித்தல், போர்வை போர்த்துதல் ஆகியன பொதுமக்களின் பார்வையில் கண்ணியம் ஏற்படுத்துவதும், அந்த கப்றுகளில் உள்ளவர்களை அவமரியாதை செய்யாமலிருப்பதையும் நோக்கமாகக் கொண்டால் அது ஆகுமான செயல்களாகும்.

இவ்வாறே அவ்விடங்களில் விளக்குகள் மற்றும் மெழுகு திரிகள் எரிய வைப்பதும் ஆகுமானதாகும். இவை அந்த இறைநேசர்களை கண்ணியப்படுத்துவதும், மரியாதை செய்வதுமாகும். இவ்வாறு செய்வது நல்லெண்ணத்தை நோக்கமாகக் கொண்டதாகும்.''

''இறையருள் பெற்ற அவ்லியாப்பெருமக்களின் கப்ருகளுக்கருகில் ஒளியேற்றுவதற்காக எண்ணெய், மெழுகுதிரி போன்றவற்றை அவர்களைக் கண்ணியப்படுத்தும் நோக்கில் நேர்ச்சை செய்வது ஆகுமானது. இதைத் தடுக்க வேண்டியதில்லை.''

நூல்: தஃப்ஸீர் ரூஹுல் பயான் 400/3

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَمْرِو بْنِ مَيْمُونِ الأَوْدِيِّ قَالَ: رَأَيْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رضي الله عنه قَالَ: يَا عَبْدَ اللهِ بْنَ عُمَرَ رضي الله عنهما اِذْهَبْ إِلَى أُمِّ الْمُؤْمِنِينَ عَائِشَةَ رضي الله عنها فَقُلْ: يَقْرَأُ عُمَرُ بْنُ الْخَطَّابِ عَلَيْكِ السَّلَامَ، ثُمَّ سَلْهَا أَنْ أُدْفَنَ مَعَ صَاحِبَيَّ . قَالَتْ: كُنْتُ أُرِيدُهُ لِنَفْسِي، فَلَأُوثِرَنَّهُ الْيَوْمَ عَلَى نَفْسِي. فَلَمَّا أَقْبَلَ قَالَ لَهُ: مَا لَدَيْكَ ؟ قَالَ: أَذِنَتْ لَكَ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ. قَالَ: مَا كَانَ شَيْءٌ أَهَمَّ إِلَيَّ مِنْ ذَلِكَ الْمَضْجَعِ، فَإِذَا قُبِضْتُ فَاحْمِلُونِي، ثُمَّ سَلِّمُوا، ثُمَّ قُلْ: يَسْتَأْذِنُ عُمَرُ بْنُ الْخَطَّابِ، فَإِنْ أَذِنَتْ لِي فَادْفِنُونِي، وَإِلَّا فَرُدُّونِي إِلَى مَقَابِرِ الْمُسْلِمِينَ، إِنِّي لَا أَعْلَمُ أَحَدًا أَحَقَّ بِهَذَا الْأَمْرِ مِنْ هَؤُلَاءِ النَّفَرِ الَّذِينَ تُوُفِّيَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم وَهُوَ عَنْهُمْ رَاضٍ، فَمَنِ اسْتَخْلَفُوا بَعْدِي فَهُوَ الْخَلِيفَةُ فَاسْمَعُوا لَهُ وَأَطِيعُوا. فَسَمَّى عُثْمَانَ وَعَلِيًّا وَطَلْحَةَ وَالزُّبَيْرَ وَعَبْدَ الرَّحْمَنِ بْنَ عَوْفٍ وَسَعْدَ بْنَ أَبِي وَقَّاصٍ. وَوَلَجَ

عَلَيْهِ شَابٌّ مِنَ الْأَنْصَارِ فَقَالَ: أَبْشِرْ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ بِبُشْرَى اللَّهِ، كَانَ لَكَ مِنَ الْقِدَمِ فِي الْإِسْلَامِ مَا قَدْ عَلِمْتَ، ثُمَّ اسْتُخْلِفْتَ فَعَدَلْتَ، ثُمَّ الشَّهَادَةُ بَعْدَ هَذَا كُلِّهِ. فَقَالَ: لَيْتَنِي يَا ابْنَ أَخِي وَذَلِكَ كَفَافًا لَا عَلَيَّ وَلَا لِي . أُوصِي الْخَلِيفَةَ مِنْ بَعْدِي بِالْمُهَاجِرِينَ الْأَوَّلِينَ خَيْرًا، أَنْ يَعْرِفَ لَهُمْ حَقَّهُمْ، وَأَنْ يَحْفَظَ لَهُمْ حُرْمَتَهُمْ. وَأُوصِيهِ بِالْأَنْصَارِ خَيْرًا، الَّذِينَ تَبَوَّؤُوا الدَّارَ وَالْإِيمَانَ أَنْ يُقْبَلَ مِنْ مُحْسِنِهِمْ وَيُعْفَى عَنْ مُسِيئِهِمْ. وَأُوصِيهِ بِذِمَّةِ اللَّهِ وَذِمَّةِ رَسُولِهِ ﷺ أَنْ يُوفَى لَهُمْ بِعَهْدِهِمْ وَأَنْ يُقَاتَلَ مِنْ وَرَائِهِمْ، وَأَنْ لَا يُكَلَّفُوا فَوْقَ طَاقَتِهِمْ.

அம்ரு இப்னு மைமூன் அல்அவ்தீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

''மரணத் தருவாயில் உமர் இப்னுல் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தம் மகனாரிடம் சொன்னார்கள், அப்துல்லாஹ்! இறைநம்பிக்கையாளர்களின் தாயார் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்று உமர் தங்களுக்கு ஸலாம் சொல்கிறார்கள். என்னுடைய இரண்டு தோழர்களுடன் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மற்றும் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு) நான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என நான் விரும்புவதாக அவர்களிடம் கேளுங்கள்'' எனக்கூறி அனுப்பினார்கள்.

(அன்னை அவர்களிடம் கேட்கப்பட்டதும்) 'நான் எனக்காக அந்த இடத்தை நாடி இருந்தேன். எனினும் இன்று அவர்களுக்காக அவ்விடத்தை விட்டுக் கொடுக்கின்றேன்!' என்றார்கள் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.

திரும்பி வந்த இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் 'என்ன ஆயிற்று?' எனக் கேட்க, 'அமீருல் முஃமினீன் அவர்களே! தங்களுக்கு அனுமதி தந்துள்ளார்கள்' என்று பதிலுரைக்க, உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். 'நான் உறங்க இருக்கும் அவ்விடத்தைத் தவிர வேறு எதுவுமே எனக்கு முக்கிய மானதல்ல. நான் மரணித்துவிட்டால் என்னைச் சுமந்து சென்று, மீண்டும் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு எனது ஸலாம் கூறி, உமர் அனுமதி கேட்கிறார் என்று கூறுங்கள். அவர் அனுமதி அளித்தால் என்னை அங்கு அடக்கம் செய்யுங்கள். இல்லையெனில் முஸ்லிம்களை அடக்கம் செய்யும் பொது மையவாடியில் அடக்கம் செய்யுங்கள்.'

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மரணிக்கும் வரை எவர்களைத் திருப்தி கொண்டிருந்தார்களோ அவர்களைத் தவிர வேறு எவரும் ஆட்சிப் பொறுப்புக்குத் தகுதியுடையவர்களாக எனக்குத் தெரியவில்லை. எனவே எனக்குப் பின்னர் யாரை கலீஃபாவாக நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்களோ அவர்தாம் கலீஃபா! அவர் கூறுவதை அனுசரித்து, அவருக்குக் கட்டுப்படுங்கள்! என்று கூறிவிட்டு உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப், ஸஃத் இப்னு அபீவக்காஸ் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டார்கள்.

அப்போது ஒரு அன்ஸாரி இணைஞர் வந்து 'அமீருல் முஃமினீன்! அல்லாஹ்வின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள். இஸ்லாமில் தங்களுக்கிருந்த அந்தஸ்தை தாங்கள் அறிவீர்கள். பின்னர் நீங்கள் கலீஃபாவாக ஆகி நீதி, நேர்மையை நிலை நாட்டினீர்கள். பின்னர் இதற்கெல்லாம் மேலாக ஷஹாதத் வீரமரணமும் கிடைத்துள்ளது' என்று சொன்னார்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். 'என் சகோதரர் மகனே! இந்த ஆட்சிப் பொறுப்பு எனக்கு நன்மையைத் தேடித்

தராவிட்டாலும், தீமையைத் தந்து விடாமல் இருந்தால் அதுவே எனக்குப் போதுமானது.'

எனக்குப் பின்னர் கலீஃபாவாக வருபவருக்கு நான் கூறுவது யாதெனில் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்து வந்த முஹாஜிர்கள் விஷயத்தில் நல்லபடி நடந்துக் கொள்ள வேண்டும். அவர்களின் உரிமைகளை அறிந்து அவர்களின் கண்ணியத்தையும், கவுரவத் தையும் காப்பாற்ற வேண்டும். அது போன்றே அன்சாரிகளிடமும் நல்ல விதமாக நடந்துக் கொள்ள வேண்டும். அவர்கள் மதீனாவின் இருப்பிடத்தையும், நம்பிக்கையையும் தக்க வைத்தவர்கள். அவர்களில் நல்லவர்களின் நற்செயல்களை ஏற்று மதிப்பளித்து, தவறிழைப்பவர்களை மன்னித்து விட வேண்டும்.

மேலும் அல்லாஹ் மற்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகியோரின் பொறுப்பிலுள்ள முஸ்லிமல்லாதவர்களின் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அவர்களின் சக்திக்கு மேல் அவர்களை சிரமப்படுத்தக் கூடாது. நூல் புகாரி 1392

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ أُرْسِلَ مَلَكُ الْمَوْتِ إِلَى مُوسَى عَلَيْهِمَا السَّلَامُ، فَلَمَّا جَاءَهُ صَكَّهُ ، فَرَجَعَ إِلَى رَبِّهِ فَقَالَ: أَرْسَلْتَنِي أَرْسَلْتَنِي إِلَى عَبْدٍ لَا يُرِيدُ الْمَوْتَ. فَرَدَّ اللهُ عَلَيْهِ عَيْنَهُ وَ قَالَ: ارْجِعْ فَقُلْ لَهُ يَضَعُ يَدَهُ عَلَى مَتْنِ ثَوْرٍ، فَلَهُ بِكُلِّ مَا غَطَّتْ بِهِ يَدُهُ بِكُلِّ شَعْرَةٍ سَنَةٌ. قَالَ: أَيْ رَبِّ ، ثُمَّ مَاذَا ؟ قَالَ: الْمَوْتُ . قَالَ: فَالْآنَ . فَسَأَلَ اللهَ اللهَ أَنْ يُدْنِيَهُ مِنَ الْأَرْضِ الْمُقَدَّسَةِ رَمْيَةً بِحَجَرٍ. قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم: فَلَوْ كُنْتُ ثَمَّ، لَأَرَيْتُكُمْ قَبْرَهُ إِلَى جَانِبِ الطَّرِيقِ عِنْدَ الْكَثِيبِ الْأَحْمَرِ

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: உயிர் பறிக்கும் வானவர் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அனுப்பட்டார். நபி அவர்கள் கண் பிதுங்கும் அளவுக்கு அவரை அடித்து விட்டார்கள்.

அவர் இறைவனிடம் சென்று ''இறைவா! மரணிக்க விரும்பாத ஒருஅடியாரிடம் என்னை நீ அனுப்பி விட்டாய்!'' என்றார்.

அல்லாஹ் அவரது கண்ணைச் சரி செய்துவிட்டு ''மீண்டும் நீர் அவரிடம் சென்று, அவரை ஒரு மாட்டின் முதுகு மீது கை வைக்கச் சொல்லி, அவரது கை எத்தனை ரோமங்களை அடக்கிப் பிடிக்கிறதோ அத்தனை ஆண்டுகள் உயிர் வாழலாம் என்று கூறும்'' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

(நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அவர் வந்து அல்லாஹ் சொன்னதைச் சொன்ன போது) நபி அவர்கள் கேட்டார்கள் 'அதற்குப் பின் (என்ன நிகழும் இறைவா?)'

''பிறகு மரணம்தான்!'' என்றான் அல்லாஹ். நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்: ''இப்பொழுதே (மரணத்தைத் தழுவ நான்) தயார்'' பைத்துல் முகத்தஸிலிருந்து கல்லெறியும் தூரத்திலுள்ள (பைத்துல் முகத்தஸிக்கு அருகிலுள்ள) இடத்தில் வைத்து தம் உயிரைக் கைப்பற்ற அல்லாஹ்விட வேண்டினார்கள் நபி அவர்கள்.

(இந்நிகழ்வைக் கூறிவிட்டு) நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

''நான் அவ்விடத்தில் இப்போது இருந்தால் (பைத்துல் முகத்தஸின்) செம்மண் குன்றுக்கு அருகிலுள்ள பாதையோரத்திலுள்ள மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்ரைக் காட்டித் தந்திருப்பேன்''

நூல் : ஸஹீஹ் புகாரி 1339

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ عَائِشَةَ ﵂، أَنَّهَا قَالَتْ: كَانَ رَسُولُ اللهِ ﷺ كُلَّمَا كَانَ لَيْلَتُهَا مِنْ رَسُولِ اللهِ ﷺ يَخْرُجُ مِنْ آخِرِ اللَّيْلِ إِلَى الْبَقِيعِ. فَيَقُولُ: اَلسَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِينَ. وَأَتَاكُمْ مَا تُوعَدُونَ غَدًا مُؤَجَّلُونَ. وَإِنَّا، إِنْ شَاءَ اللهُ، بِكُمْ لَاحِقُونَ. اللّٰهُمَّ اغْفِرْ لِأَهْلِ بَقِيعِ الْغَرْقَدِ وَلَمْ يُقِمْ قُتَيْبَةُ قَوْلَهُ وَأَتَاكُمْ.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம்முடன் தங்கும் நாட்களின் ஒவ்வொரு இரவின் பிற்பகுதியிலும் (மதீனாவின்) பகீவுல் கர்கத் மையவாடிக்குச் சென்று, அஸ்ஸலாமு அலைக்கும் தார கவ்மின் முஃமினினீன் வ அதாக்கும் மா தூஅதூன கதன் முஅஜ்ஜலூன்; வ இன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்; அல்லாஹும்மஃபிர் லிஅஹ்லி பகீஇல் கர்கத்'' என்று கூறுவார்கள்.

பொருள்: இந்த அடக்கத்தலத்தில் உள்ள இறை நம்பிக்கை யாளர்களே! நாளை சந்திக்கப் போவதாக உங்களுக்கு வாக்களிக்கப் பட்ட ஒன்று தவணை அளிக்கப்பட்ட பின்னர் உங்களிடம் வந்து விட்டது. அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாங்கள் உங்களைச் சந்திப்பவர்களாக உள்ளோம். இறைவா! பகீவுல் கர்கதில் உள்ளவர்களை மன்னிப்பாயாக!

இந்நபிமொழி மூன்று அறிவிப்பாளர் தொடரில் வந்துள்ளது. அவற்றில் குதைஃபா ரழியல்லாஹு அன்ஹு அவர்களது அறிவிப்பில் அதாகும் உங்களிடம் வந்துவிட்டது என்ற வாக்கியம் இடம் பெறவில்லை.

நூல்: முஸ்லிம் 1773

أَخْرَجَ أَحْمَد عَنْ عَـائِشَـةَ ﵂ قَالَتْ: كُنْتُ أَدْخُلُ بَيْتِي الَّذِي دُفِـنَ فِيهِ رَسُولُ اللهِ ﷺ وَأَبِي فَأَضَعُ ثَوْبِي فَأَقُولُ: إِنَّمَـا هُـوَ زَوْجِي وَأَبِي فَلَمَّـا دُفِـنَ عُمَـرُ ﵁ مَعَهُمْ فَوَاللهِ مَا دَخَلْتُهُ إِلَّا وَأَنَا مَشْدُودَةٌ عَلَيَّ ثِيَابِي حَيَاءً مِنْ عُمَـرَ ﵁.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்: ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், எனது தந்தையவர்களும் அடக்கம் செய்யப்பட்டிருந்த எனது வீட்டினுள் சாதாரண ஆடையுடன் (புர்கா இன்றி) செல்வேன். (யாராவது கேட்டால்) ஒருவர் என்னுடைய கணவர், இன்னொருவர் என்னுடைய தந்தை என்பேன். அவ்விருவருடன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் அல்லாஹ் மீது ஆணையாக! உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மீது வெட்கம் கொண்டவளாக அங்கே செல்லும் போது ஆடையால் என்னை முழுமையாக மறைத்துக் கொள்வேன்.''

நூல்: முஸ்னத் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் 25132

أَخْرَجَ الْبُخَارِي عَنْ خَارِجَةَ بْنِ زَيْدٍ قَالَ: رَأَيْتُنِي وَنَحْنُ شُبَّانٌ فِي زَمَنِ عُثْمَانَ ﵁، وَإِنَّ أَشَدَّنَا وَثْبَةً الَّذِي يَثِبُ قَبْرَ عُثْمَانَ بْـنِ مَظْعُـونٍ حَـتَّى يُجَاوِزَهُ.

காரிஜா இப்னு ஜெய்த் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில், வாலிபர்களாக இருந்த எங்களில் யார் உஸ்மான் இப்னு மழ்வூன் ரழியல்லாஹு

அன்ஹு அவர்களின் கப்ரை உயரம் தாண்டுகிறாரோ அவரே எங்களில் அதிக உயரம் தாண்டுபவராக இருந்தார்.'' நூல்: புகாரி 1360

குறிப்பு: கலீஃபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்திலேயே கப்ருகள் உயரமாக அமைக்கப்பட்டிருந்தன என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

ஆரம்ப காலத்தில் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரு ஷரீஃபும், ஸஹாபாக்களின் கப்ருகளும் உயரமாகவே இருந்தன. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய குழப்ப குதர்க்கவாதிகளால் அவை தகர்க்கப்பட்டன என்பது மறுக்க முடியாத உண்மை.

அம்ர் இப்னு ஹஸ்மு ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''ஒரு கப்ரின் மீது சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்த என்னைக் கண்ட இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், விலகு! (கப்ரின் மீது சாய்ந்து) அந்த கப்ர் வாசியை நோவினை செய்யாதே!'' என்றுரைத்தார்கள். நூல்: முஸ்னத் அஹ்மது

أَخْرَجَ الْإِمَامُ عَبْدُ الرَّزَّاقِ عَنْ مُحَمَّدِ بْنِ إِبْرَاهِيمَ التَّيْمِي قَالَ كَانَ النَّبِيُّ ﷺ يَأْتِي قُبُورَ الشُّهَدَاءِ عِنْدَ رَأْسِ الْحَوْلِ، فَيَقُولُ: اَلسَّلَامُ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ فَنِعْمَ عُقْبَى الدَّارِ، وَكَانَ أَبُو بَكْرٍ وَعُمَرُ وَعُثْمَانُ يَفْعَلُونَ ذَلِكَ.

முஹம்மது இப்னு இப்ராஹீம் அத்தைமிய்யா ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு வருடத்தின் துவக்கத்திலும் ஷுஹதாப்பெருமக்களின் கப்ருகளை ஸியாரத்துச் செய்வார்கள்.

மேலும் அந்த கப்ருவாசிகளை நோக்கி நீங்கள் பொறுமை காத்தமைக்காக உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! உங்களின் மறுமை வீடு மிக்கச் சிறந்ததாக ஆகிவிட்டது என்று கூறுவார்கள்.''

அபூபக்ர், உமர், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரும் இவ்வாறு செய்பவர்களாக இருந்தனர்.

நூல்: முஸன்னஃப் அப்துர் ரஜ்ஜாக் 6716

اَلْقِرَاءَةُ وَالدُّعَاءُ لِلْمَيِّتِ

மரணித்தவர்களுக்காக குர்ஆன் ஓதுதல் மற்றும் பிரார்த்தனை செய்தல்

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أُمِّ سَلَمَةَ، قَالَتْ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: إِذَا حَضَـرْتُمُ الْـمَرِيضَ، أَوِ الْـمَيِّتَ، فَقُولُوا خَـيْرًا. فَـإِنَّ الْـمَلٰئِكَةَ يُؤَمِّنُـونَ عَلَى مَـا تَقُولُونَ. قَالَتْ : فَلَمَّا مَاتَ أَبُو سَلَمَةَ أَتَيْتُ النَّبِيَّ ﷺ. فَقُلْتُ: يَا رَسُـولَ اللهِ إِنَّ أَبَا سَلَمَةَ قَدْ مَاتَ. قَالَ: قُولِي اَللّٰهُمَّ اغْفِـرْ لِي وَلَهُ. وَأَعْقِبْـنِي مِنْـهُ عُقْبَى حَسَنَةً. قَالَتْ فَقُلْتُ: فَأَعْقَبَنِي اللهُ مَنْ هُوَ خَـيْرٌ لِي مِنْـهُ مُحَمَّـدًا ﷺ.

உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நீங்கள் நோயாளியையோ, இறந்தவரையோ சந்திக்கச் சென்றால் நல்லதைச் சொல்லுங்கள். ஏனெனில் நீங்கள் சொல்வதற்கு வானவர்கள் ஆமீன் கூறுகிறார்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

எனது கணவர் அபூஸலமா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இறந்தபோது, நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று ‘‘அல்லாஹ்வின் தூதரே! அபூஸலமா இறந்து

விட்டார்'' என்று கூறினேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இறைவா! என்னையும் அவரையும் மன்னிப்பாயாக! அவருக்கு மாற்றாக அவரைவிடச் சிறந்த துணையை எனக்கு வழங்குவாயாக!'' என்று கூறுமாறு என்னிடம் சொன்னார்கள. நான் அவ்வாறே பிரார்த்தித்தேன். அவரை விட சிறந்தவரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே எனக்குத் துணையாக வழங்கினான்.'' நூல்: முஸ்லிம்:1637

''நீங்கள் நோயாளிகள் அல்லது ஜனாஸா வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு வந்தால் நல்லதைக் கூறுங்கள். நீங்கள் சொல்வதற்கு மலக்குகள் ஆமீன் கூறுகின்றனர்'' என்ற இந்த ஹதீஸை விளக்கிக் கூறுமிடத்தில் இமாம் நவவீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது ஷரஹ் முஸ்லிமில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்கள்.

இந்த ஹதீஸ் மூலம் மய்யித் இருக்குமிடம் அல்லது நோயாளி களிடம் வந்தால், நல்லதைக் கூறுதல் ஸுன்னத் எனப் புரிந்துக் கொள்ளலாம். அவர்களுக்காக துஆச் செய்தல், பாவமன்னிப்புத் தேடுதல், அவர்களுடன் மென்மையாக நடந்துக் கொள்ளுதல், அவர்களின் சிரமங்கள் லேசாவதற்காக துஆச் செய்தல் போன்றவை ஸுன்னத் என்பதும், அவ்விடங்களுக்கு மலக்குகள் வருகை தந்து, ஆமீன் கூறுகின்றனர் என்பதும் தெளிவாகிறது.

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنْ مَعْقِلِ بْنِ يَسَارٍ، قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِقْـرَؤُوا يٰس عَلَى مَوْتَاكُمْ.

அல்லாஹ்வின் திருத்தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''உங்களில் ஒருவர் மரணித்துவிட்டால் யாஸீன் ஸூராவை ஓதுங்கள்.''

அறிவிப்பவர்: மஃகல் இப்னு யஸார் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: அபூதாவூத், 2814

أَخْرَجَ الْإِمَامُ ابْنُ أَبِي شَيْبَةَ عَنِ الشَّعْبِيِّ قَالَ: كَانَتِ الْأَنْصَارُ يَقْرَءُونَ عِنْدَ الْـمَيِّتِ بِسُورَةِ الْبَقَرَةِ.

ஷஃபிய்யி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: அன்சாரித் தோழர்கள் மய்யித்துகளுக்கருகில் பகரா ஸூராவை ஓதுபவர்களாக இருந்தனர்.

நூல்: இப்னு அபீஷைபா 10848

أَخْرَجَ الْبَيْهَقِيُّ فِي شُعَبِ الْإِيمَانِ عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ، ا قَالَ: سَمِعْتُ النَّبِيَّ يَقُولُ: إِذَا مَاتَ أَحَد كُمْ فَلَا تَحْبِسُوهُ ، وَأَسْرِعُوا بِهِ إِلَى قَبْرِهِ، وَلْيُقرَأْ عِنْدَ رَأْسِهِ فَاتِحَةَ الْبَقَرَةِ ، وَعِنْدَ رِجْلَيْهِ بِخَاتِمَةِ الْبَقَرَةِ . و قَالَ البيهقي: والصحيحُ أنَّه موقوف عليه .

அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள் ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக் கேட்டேன். உங்களில் ஒருவர் மரணமடைந்து விட்டால் தாமதப்படுத்தாதீர்கள். விரைவாக அவரது கப்ருக்குக் கொண்டு செல்லுங்கள். (விரைவாக அடக்கம் செய்யுங்கள்) அந்த கப்ர் வாசியின் தலைமாட்டில் ஸூரத்துல் பகராவின் தொடக்கத்தையும் (முஃப்லிஹூன் வரை) கால்மாட்டில் ஸூரத்துல் பகராவின் கடைசி யையும் (ஆமனர் ரஸூலு வரை) ஓதுங்கள்.’’ நூல்: பைஹகீ

اَلتَّصَدُّقُ لِلمَوْتَى

மரணித்தவர்களுக்காக தானதர்மங்கள் செய்தல்

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَائِشَةَ رضي الله عنها: أَنَّ رَجُلًا قَالَ لِلنَّبِيِّ صلى الله عليه وآله وسلم: إِنَّ أُمِّي افتُلِتَتْ نَفْسُهَا، وَأُرَاهَا لَوْ تَكَلَّمَتْ تَصَدَّقَتْ، أَفَأَتَصَدَّقُ عَنْهَا ؟ قَالَ: نَعَمْ، تَصَدَّقْ عَنْهَا.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: ''ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், என் தாயார் திடீரென இறந்துவிட்டார். அவர் (மரணமடையும் முன்பு) பேச முடிந்திருந்தால் தர்மம் செய்யச் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். அவர் சார்பாக நான் தர்மம் செய்யலாமா? என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆம்' அவர் சார்பாக தர்மம் செய்! என்று கூறினார்கள்.

நூல் புகாரி; 2760

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ ابْنِ عَبَّاسٍ أَنَّ سَعْدَ بْنَ عُبَادَةَ رضي الله عنه ـ أَخَا بَنِي سَاعِدَةَ ـ تُوُفِّيَتْ أُمُّهُ وَهُوَ غَائِبٌ، فَأَتَى النَّبِيَّ صلى الله عليه وآله وسلم فَقَالَ: يَا رَسُولَ اللّٰهِ، إِنَّ أُمِّي تُوُفِّيَتْ وَأَنَا غَائِبٌ عَنْهَا، فَهَلْ يَنفَعُهَا شَيْءٌ إِنْ تَصَدَّقْتُ بِهِ عَنْهَا ؟ قَالَ: نَعَمْ. قَالَ: فَإِنِّي أُشْهِدُكَ أَنَّ حَائِطِي الْمِخْرَافَ صَدَقَةٌ عَلَيْهَا.

பனீ ஸாயிதா குடும்பத்தைச் சார்ந்த ஸஃத் இப்னு உபாதா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியூர் சென்றிருந்தபோது, அவர்களது தாயார் மரணித்து விட்டார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமூகத்துக்கு வருகை தந்து ஸஃது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘‘அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்கள்! நான் இல்லாத நேரத்தில் எனது தாயார் மவ்த்தாகி விட்டார். அவர் சார்பாக நான் தர்மம் ஏதும் செய்தால் அவருக்கு அது பயன் தருமா?’’ என்று கேட்டார்கள். ‘‘ஆம்! பயனளிக்கும்’’ என்றார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். ஸஃத் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள் ‘‘(நாயகமே!) தங்களை சாட்சியாக வைத்து என்னுடைய மிஹ்ராஃப் எனும் தோட்டத்தை என் தாயாருக்காக நான் தர்மம் செய்து விட்டேன்!’’

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி 2756

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَائِشَةَ رضي الله عنها قَالَتْ: مَا غِـرْتُ عَلَى أَحَـدٍ مِـنْ
نِسَاءِ النَّبِيِّ ﷺ مَا غِرْتُ عَلَى خَدِيجَةَ، وَمَا رَأَيْتُهَـا، وَلَكِـنْ كَانَ النَّـبِيُّ
ﷺ يُكْثِرُ ذِكْرَهَا، وَرُبَّمَا ذَبَحَ الشَّاةَ ثمَّ يُقَطِّعُهَـا أَعْضَـاءً ثُـمَّ يَبْعَثُهَـا فِي
صَدَائِقِ خَدِيجَةَ، فَرُبَّمَا قُلْتُ لَهُ: كَأَنَّه لَمْ يَكُنْ فِي الدُّنْيَا امْرَأَةٌ إِلَّا خَدِيجَةُ
؟ فَيَقُولُ: إِنَّهَا كَانَتْ وَكَانَتْ . وَكَانَ لِي مِنْهَا وَلَدٌ.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்: கதீஜா நாயகி ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது ரோஷப்பட்டதைப் போல, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வேறு எந்த மனைவியர் மீதும் நான் ரோஷப்பட்டதில்லை. அவரை (கதீஜா அம்மையார்) நான் பார்த்ததுமில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை அதிகமாக (புகழ்ந்துரைத்து) நினைவு கூறுவார்கள். சில நேரம் ஆட்டை அறுத்து, பல துண்டுகளாக்கி கதீஜா அவர்களின் தோழியருக்குக் கொடுத்தனுப்புவார்கள்.

உலகில் கதீஜா அவர்களைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் இல்லாததைப் போல நடந்துக் கொள்கிறீர்களே! என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சில வேளை களில் நான் கேட்பதுண்டு.

'அவர்கள் (கதீஜா அம்மையார்) புத்திசாலியாக இருந்தார், சிறந்த குணமுடையவராக இருந்தார், அவர் மூலமாகத்தான் எனக்கு பிள்ளைச் செல்வமும் கிடைத்தது!' என்று பதில் தந்தார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். நூல்: புகாரி 3818

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنْ سَعْدِ بنِ عُبَادَةَ، أَنَّهُ قَالَ: يَارَسُولَ اللهِ إِنَّ أُمَّ سَعْدٍ مَاتَتْ فَأَيُّ الصَّدَقَةِ أَفْضَلُ؟ قَالَ: الْمَاءُ . قَالَ: فَحَفَرُوا بِئْرًا وَ قَالَ: هٰذِهِ لِأُمِّ سَعْدٍ.

ஹழ்ரத் ஸஃது்ப்னு உபாதா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! ஸஃது ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய தாய் வஃபாத்தாகி விட்டார்கள். அவர்களுக்காக எந்த ஸதகா செய்வது சிறப்பானது?'' என கேட்க, அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''தண்ணீர்'' என்றார்கள். ஹழ்ரத் ஸஃது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கிணறு தோண்டி இது உம்மு ஸஃதுக்கு என்றார்கள்.'' நூல்: அபூதாவூது 1678

أَخْرَجَ أَبُو دَاوُدَ وَالْبَيْهَقِيُّ عَنْ عَاصِمِ بْنِ كُلَيْبٍ، عَنْ أَبِيهِ، عَنْ رَجُلٍ مِنَ الْأَنْصَارِ، قَالَ: خَرَجْنَا مَعَ رَسُولِ اللهِ ﷺ فِي جَنَازَةٍ، فَرَأَيْتُ رَسُولَ اللهِ وَهُوَ عَلَى الْقَبْرِ يُوصِي الْحَافِرَ يَقُولُ: أَوْسِعْ مِنْ قِبَلِ رِجْلَيْهِ، أَوْسِعْ مِنْ قِبَلِ رَأْسِهِ. فَلَمَّا رَجَعَ اسْتَقْبَلَهُ دَاعِي امْرَأَتِهِ ، فَأَجَابَ وَنَحْنُ مَعَهُ، فَجِيءَ بِالطَّعَامِ، فَوَضَعَ يَدَهُ، ثُمَّ وَضَعَ الْقَوْمُ، فَأَكَلُوا، فَنَظَرْنَا إِلَى رَسُولِ اللهِ ﷺ يَلُوكُ لُقْمَةً فِي فِيهِ. ثُمَّ قَالَ: أَجِدُ لَحْمَ شَاةٍ أُخِذَتْ بِغَيْرِ إِذْنِ أَهْلِهَا. فَأَرْسَلَتِ الْمَرْأَةُ تَقُولُ: يَا رَسُولَ اللهِ! إِنِّي أَرْسَلْتُ إِلَى النَّقِيعِ / وَهُوَ مَوْضِعٌ يُبَاعُ فِيهِ الْغَنَمُ / لِيُشْتَرَي لِي شَاةٌ، فَلَمْ تُوجَدْ، فَأَرْسَلْتُ إِلَى جَارٍ لِي قَدْ اشْتَرَى شَاةً أَنْ يُرسِلَ بِهَا إِلَيَّ بِثَمَنِهَا، فَلَمْ يُوجَدْ، فَأَرْسَلْتُ إِلَى امْرَأَتِهِ ، فَأَرْسَلَتْ إِلَيَّ بِهَا فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: أَطْعِمِي هَذَا الطَّعَامَ الْأَسْرَى .

ஆஸிம் இப்னு குலைப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது தந்தையாரிடமிருந்து அறிவிக்கிறார்கள். ‘‘அன்சாரித் தோழரொருவர் கூறுகிறார். நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒரு ஜனாஸாவில் கலந்துக் கொண்டோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ரு தோண்டு பவரிடம் கால் மாட்டிலும், தலைமாட்டிலும் சற்று அகலமாகத் தோண்டுங்கள் எனச் சொன்னதைக் கண்டேன்.

அடக்கம் முடிந்து திரும்பும் போது மவுத்தானவரின் மனைவியின் அழைப்பாளர் நபியவர்களை வீட்டுக்கு அழைத்தார். அழைப்பை ஏற்றுக் கொண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நாங்களும் அவரது வீட்டுக்குச் சென்றோம்.

உணவு கொண்டு வரப்பட்டது. நபியவர்கள் அவ்வுணவில் கை வைத்தார்கள். ஜனங்களும் கை வைத்தனர். உணவை உண்ணத் தொடங்கினர்.

நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாயைப் பார்த்தோம். அவர்கள் உணவை வாயில் வைத்து மென்றவர்களாக இந்த ஆட்டுக்கறி உரிமையாளரின் அனுமதி பெறாத கறியாகும் என்றார்கள்.

அந்தப் பெண் ஒரு நபரை அனுப்பிக் கூறினார்: ‘‘அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! ஆடுகள் விற்பனை செய்யப்படும் சந்தைக்கு ஆடொன்று வாங்கி வர ஆள் அனுப்பினேன். அங்கே ஆடு கிடைக்கவில்லை. அண்டை வீட்டுக்காரரிடமிருந்து ஆடொன்று வாங்கி வர ஆட்டுக்கான விலையைக் கொடுத்தனுப்பினேன். வீட்டுக்காரர் வீட்டில் இல்லாததால் அவரது மனைவியிடம் ஆளனுப்பினேன். அவர் இந்த ஆட்டை அனுப்பி வைத்தார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த உணவை கைதிகளுக்குக் கொடுத்து விடுங்கள்! என்றார்கள்.

நூல்: அபூதாவூத் 333

خُرُوجُ النِّسَاءِ إِلَى الْجُمُعَةِ وَالْجَمَاعَةِ

ஜமாஅத், ஜுமுஆ தொழுகைகளுக்கு பெண்கள் செல்தல்

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ عَبْدِ اللهِ رضي الله عنه أَنَّ النَّبِيَّ قَالَ لِقَوْمٍ يَتَخَلَّفُونَ عَنِ الْجُمُعَةِ: لَقَدْ هَمَمْتُ أَنْ آمُرَ رَجُلًا يُصَلِّي بِالنَّاسِ. ثُمَّ أُحَرِّقَ عَلَى رِجَالٍ يَتَخَلَّفُونَ عَنِ الْجُمُعَةِ، بُيُوتَهُمْ.

ஜுமுஆத் தொழுகையில் கலந்துக் கொள்ளாத சிலரைக் குறித்து, ‘‘மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு ஒருவரிடம் கூறிவிட்டு, ஜுமுஆ தொழுகையில் கலந்துக் கொள்ளாமல் வீட்டிலிருப்பவர்களை வீட்டோடு சேர்த்து எரித்து விட வேண்டும் என நான் எண்ணியதுண்டு’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் 1156

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில தொழுகைகளுக்கு சிலர் வராமலிருந்ததைக் கண்டு, ‘‘மக்களுக்குத் தொழுகை நடத்த ஒருவரை ஏவிவிட்டு, விறகுக் கட்டைகளைக் கொண்டு வரச் சொல்லி கூட்டுத் தொழுகைகளில் கலந்துக் கொள்ளாத ஆண்களை வீட்டோடு சேர்த்து தீயிட்டுக் கொளுத்த ஆணையிட வேண்டும் என நான் எண்ணியதுண்டு. அவர்களில் ஒருவர் சதைத் திரட்சியுள்ள எலும்பு கிடைக்கும் எனத் தெரிந்தால்

அத்தொழுகையில் அவர் கலந்துக் கொள்வார் என இடித்துரைத் தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் 1153

أَخْرَجَ الْإِمَامُ أَحْمَد عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لَوْلَا مَا فِي الْبُيُوتِ مِنَ النِّسَاءِ وَالذُّرِّيَّةِ، لَأَقَمْتُ صَلَاةَ الْعِشَاءِ وَأَمَرْتُ فُتْيَانِي يُحَرِّقُونَ مَا فِي الْبُيُوتِ بِالنَّارِ.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''வீடுகளில் பெண்களும் குழந்தைகளும் இல்லாமலிருந்தால் இஷாவுடைய ஜமாஅத் தொழுகையை (ஸஹாபிகளிடம்) நடத்துமாறு சொல்லிவிட்டு என்னுடைய இளைஞர்களிடம் (தொழுகைக்கு வராதவர்களின்) வீடுகளைத் தீயிடுமாறு கூறியிருப்பேன்.''

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்னத் அஹ்மத் 8796

குறிப்பு: பெண்களும், குழந்தைகளும் வீட்டில் இருப்பதால் தீயிடவில்லை என்ற இந்த ஹதீஸ் மூலம் தொழுகைக்கு ஆண்கள் மட்டுமே வரவேண்டுமென்பதும், பெண்கள் குழந்தைகள் வரத் தேவையில்லை என்பதும் தெளிவாக உள்ளது.

أَخْرَجَ إِبْنُ خُزَيْمَةَ عَنْ إِمْرَأَةِ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ، أَنَّهَا جَاءَتْ إِلَى النَّبِيِّ ص، فَقَالَتْ: يَا رَسُولُ اللهِ إِنِّي أُحِبُّ الصَّلاَةَ مَعَكَ . قَالَ: قَدْ عَلِمْتُ أَنَّكِ تُحِبِّينَ الصَّلاةَ مَعِي، وَصَلاَتُكِ فِي بَيْتِكِ خَيْرٌ لَكِ مِنْ صَلاتِكِ فِي

حُجْرَتِكِ، وَصَلاَتُكِ فِي حُجْرَتِكِ خَيْرٌ مِنْ صَلاَتِكِ فِي دَارِكِ، وَصَـلاَتُكِ فِي دَارِكِ خَيْرٌ لَكِ مِنْ صَلاتِكِ فِي مَسْجِدِ قَوْمِكِ، وَصَلاتُكِ فِي مَسْجِدِ قَوْمِكِ خَيْرٌ لَكِ مِنْ صَلاتِكِ فِي مَسْجِدِي . قَالَ: فَأَمَرَتْ ، فَبُنِيَ لَهَـا مَسْـجِدٌ فِي أَقْصَى شَيْءٍ مِنْ بَيْتِهَا وَأَظْلَمِهِ، فَكَانَتْ تُصَلِّي فِيهِ حَـتَّى لَقِيَـتِ اللَّهَ عَـزَّ وَجَلَّ.

அபூஹுமைத் அஸ்ஸாயிதி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ''யாரஸூலல்லாஹ்! தங்களுடன் தொழ வேண்டும் என ஆசைப்படுகின்றேன்'' என்றார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''என்னுடன் தாங்கள் தொழ விரும்புவதை நான் அறிவேன். உங்களுடைய வீட்டின் வெளி அறையில் தொழுவதை விட உமது தனியறையில் தொழுவது சிறந்தது. உங்களுடைய ஹாலில் தொழுவதைவிட உமது பொது அறையில் தொழுவது சிறந்தது. உமது குடும்பப் பள்ளியில் தொழுவதைவிட உங்கள் ஹாலில் தொழுவது சிறந்தது. எனது பள்ளியில் தொழுவதைவிட உமது குடும்பப் பள்ளியில் தொழுவது சிறந்தது''

உம்மு ஸாயிதீ ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தமது வீட்டில் தமக்குத் தொழுவதற்கென ஒரு அறை கட்ட உத்தரவிட்டார்கள். அவர்கள் மவ்த்தாகும்வரை அந்தத் தனியறையிலேயே தொழுது வந்தார்கள். நூல்: ஸஹீஹ் இப்னு குஸைமா 95

குறிப்பு: ஆயிரம் நன்மைகளைப் பெற்றுத் தரும் மஸ்ஜிதுன் நபவியில், அண்ணல் நபியவர்களுடன் சேர்ந்து தொழ அனுமதி கேட்ட ஸஹாபிப் பெண்மணிக்கு அனுமதி தர மறுத்து விட்டார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

وَأَخْرَجَ الْبَيْهَقِيُّ عَنْ أَسْمَاءَ بِنْتِ يَزِيدَ الْأَنْصَارِيَّةِ أَنَّهَا أَتَتِ النَّبِيَّ ﷺ وَهُوَ بَيْنَ أَصْحَابِهِ، فَقَالَتْ: بِأَبِي[١] أَنْتَ وَأُمِّي إِنِّي وَافِدَةُ[٢] النِّسَاءِ إِلَيْكَ وَأَعْلَمُ نَفْسِي - لَكَ الْفِدَاءُ - أَنَّهُ مَا مِن امْرَأَةٍ كَائِنَةٍ[٣] فِي شَرْقٍ وَلَا غَرْبٍ سَمِعَتْ بِمَخْرَجِي هَذَا إِلَّا وَهِيَ[٤] عَلَى مِثْلِ رَأْيِي، إِنَّ اللهَ بَعَثَكَ بِالْحَقِّ إِلَى الرِّجَالِ وَالنِّسَاءِ فَآمَنَّا بِكَ وَبِإِلَهِكَ الَّذِي أَرْسَلَكَ وَإِنَّا مَعْشَرَ النِّسَاءِ مَحْصُورَاتٌ، مَقْصُورَاتٌ[٥] قَوَاعِدُ[٦] بُيُوتِكُمْ، وَمَقْضِيُّ شَهَوَاتِكُمْ، وَحَامِلَاتُ أَوْلَادِكُمْ، وَإِنَّكُمْ مَعَاشِرَ الرِّجَالِ فُضِّلْتُمْ عَلَيْنَا بِالْجُمُعَةِ، وَالْجَمَاعَاتِ، وَعِيَادَةِ الْمَرْضَى[٧]، وَشُهُودِ الْجَنَائِزِ، وَالْحَجِّ بَعْدَ الْحَجِّ، وَأَفْضَلُ مِنْ ذَلِكَ الْجِهَادُ فِي سَبِيلِ اللهِ، وَإِنَّ الرَّجُلَ مِنْكُمْ إِذَا خَرَجَ حَاجًّا أَوْ مُعْتَمِرًا أَوْ مُرَابِطًا[٨] حَفِظْنَا لَكُمْ أَمْوَالَكُمْ وَغَزَلْنَا[٩] لَكُمْ أَثْوَابَكُمْ وَرَبَّيْنَا لَكُمْ أَمْوَالَكُمْ، فَمَا[١٠] نُشَارِكُكُمْ فِي الْأَجْرِ يَا رَسُولَ اللهِ؟ فَالْتَفَتَ النَّبِيُّ ﷺ إِلَى أَصْحَابِهِ بِوَجْهِهِ كُلِّهِ ثُمَّ قَالَ: هَلْ سَمِعْتُمْ مَقَالَةَ امْرَأَةٍ قَطُّ أَحْسَنَ مِنْ مُسَاءَلَتِهَا فِي أَمْرِ دِينِهَا مِنْ هَذِهِ؟ فَقَالُوا: يَا رَسُولَ اللهِ مَا ظَنَنَّا أَنَّ امْرَأَةً تَهْتَدِي إِلَى مِثْلِ هَذَا؟ فَالْتَفَتَ النَّبِيُّ ﷺ إِلَيْهَا ثُمَّ قَالَ لَهَا: اِنْصَرِفِي أَيَّتُهَا الْمَرْأَةُ وَأَعْلِمِي مَنْ خَلْفَكِ مِنَ النِّسَاءِ أَنَّ حُسْنَ تَبَعُّلِ إِحْدَاكُنَّ لِزَوْجِهَا، وَطَلَبَهَا مَرْضَاتِهِ، وَاتِّبَاعَهَا مُوَافَقَتَهُ، يَعْدِلُ ذَلِكَ كُلَّهُ. فَأَدْبَرَتِ الْمَرْأَةُ وَهِيَ تُهَلِّلُ وَتُكَبِّرُ اسْتِبْشَارًا.

அஸ்மா பின்த் யஸீத் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருச்சமூகத்துக்கு வந்து சொன்னார்கள்: ‘‘என்னுடைய தந்தையும், தாயும் தங்களுக்கு அர்ப்பணம் ! பெண்களின் பிரதிநிதியாகத் தங்களிடம் வந்துள்ளேன். (நபியே!) எனதுயிர் தங்களுக்கு அர்ப்பணம்!

கிழக்கிலும், மேற்கிலும் உள்ள பெண்கள் நான் தங்களிடம் கேட்க வந்த விஷயத்தைப் போன்றே எண்ணுவர். மேலும் என்னுடைய இச்செய்தியைக் கேட்ட எப்பெண்ணும் எனது கருத்தைப் போன்ற கருத்துடையவர்களாகவே இருப்பர்.

நபியே! அல்லாஹ் தங்களை ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்மையைக் கொண்டு அனுப்பினான். நாங்கள் தங்களை ஈமான் கொண்டோம், உங்களை (எங்களிடம்) அனுப்பி வைத்த அல்லாஹ்வையும் ஈமான் கொண்டோம்.

பெண்களாகிய நாங்கள் எங்கள் வீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளோம், முடக்கப்பட்டுள்ளோம். உங்கள் வீடுகளில் தங்கி அதனைப் பாதுகாக்கின்றோம். உங்களது இச்சைகளை நிறைவேற்றுகின்றோம். உங்கள் குழந்தைகளைக் கருவில் சுமக்கின்றோம்.

ஆண்களாகிய நீங்கள் ஜுமுஆத் தொழுகை, ஜமாஅத்துத் தொழுகை, நோயாளிகளை நோய் விசாரித்தல், ஜனாஸாக்களில் பங்கு பெறுதல், கடமையான ஹஜ்ஜுக்குப் பின் நஃபிலான ஹஜ் செய்தல், இவற்றை விடச் சிறப்பாக அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதுச் செய்தல் போன்றவற்றைக் கொண்டு பெண்களான எங்களை விட சிறப்புகள் வழங்கப்பட்டுள்ளீர்கள்.

உங்களில் ஒருவர் ஹஜ் அல்லது உம்ரா செய்யப் புறப்பட்டால், அல்லது இறைவழியில் புறப்பட்டுச் சென்றால் நாங்கள் உங்களுடைய சொத்துக்களைப் பாதுகாக்கின்றோம். உங்கள் ஆடைகளைத் தைக்கின்றோம். உங்கள் குழந்தைகளை வளர்க்கின்றோம்.

எனினும் நன்மையில் உங்களுடன் நாங்கள் பங்கு சேர முடியவில்லையே யாரஸூலல்லாஹ்!''

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது திருமுகத்தை முழுவதுமாக ஸஹாபாக்களை நோக்கித் திருப்பி, ''மார்க்க விஷயங்களை இப்பெண்மணி கேட்டதைப் போன்று அழகாக வேறு யாராவது கேட்டதை நீங்கள் செவியேற்றி ருக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். ஸஹபாக்கள் கூறினர்: ''யா ரஸூலல்லாஹ்! எந்தப் பெண்ணும் இது போன்று கேட்பார்கள் என நாங்கள் எண்ணவில்லை.''

பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கித் திரும்பி ''பெண்மணியே! உங்களுக்கு பின்னால் உள்ள பெண்களிடம் சென்று கூறுங்கள். உங்களில் ஒருவர் தமது கணவருக்கு அழகிய முறையில் பணிவிடை செய்வதும், கணவனின் திருப்தியைத் தேடுவதும், கணவனை பின்பற்றி அவனோடு ஒத்துப் போவதும் ஆண்களுக்குச் சமமான கூலிகளைப் பெற்றுத் தரும்'' என்றுரைத்தார்கள்.

இதைக் கேட்ட அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மகிழ்வு மீக்குற்றவர்களாக லாயிலாஹ இல்லல்லாஹ் எனவும், தக்பீர் சொல்லியவர்களாகவும் திரும்பிச் சென்றார்கள். நூல்: பைஹகீ 8743

குறிப்பு: இந்த ஹதீஸ் ஜமாஅத், ஜுமுஆத் தொழுகைகளுக்கு பெண்கள் பள்ளி வாசலுக்கு வரத் தேவையில்லை என்பதையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பெண்கள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வருவதற்கு அனுமதி வழங்க வில்லை என்பதையும் தெரிவிக்கிறது.

أَخْرَجَ اِبْنُ خُزَيْمَةَ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: صَلَاةُ الْمَرْأَةِ فِي مَخْدَعِهَا أَفْضَلُ مِنْ صَلَاتِهَا فِي بَيْتِهَا، وَصَلَاتُهَا فِي بَيْتِهَا أَفْضَلُ مِنْ صَلَاتِهَا فِي حُجْرَتِهَا.

ஹழ்ரத் அஸ்மா ரழியல்லாஹுா அன்ஹா அவர்கள் கூறியதாவது: ‘‘நபி ஸல்லல்லாஹுா அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு பெண் அவளுடைய தனியறையில் தொழுவதைவிட அவர்களது படுக்கையறையில் தொழுவதே சிறந்தது. தன்னுடைய பொது அறையில் தொழுவதை விட அவளுடைய தனியறையில் தொழுவதே சிறந்தது.’’ நூல்: இப்னு குஜைமா 169

أَخْرَجَ ابْنُ أَبِي حَاتِمٍ عَنْ أُمِّ نَائِلَةَ رضي الله عنها قَالَتْ: جَاءَ أَبُو بَرْزَةَ وَلَمْ يَجِدْ أُمَّ وَلَدِهِ فِي الْبَيْتِ وَ قَالُوا: ذَهَبَتْ إِلَى الْـمَسْجِدِ فَلَمَّا جَاءَتْ صَاحَ بِهَا فَقَالَ: إِنَّ اللّٰهَ نَهَى النِّسَاءَ أَنْ يَخْرُجْنَ وَأَمَرَهُنَّ يَقِرْنَ فِي بُيُوتِهِنَّ وَلَا يَتَّبِعْنَ جَنَازَةً وَلَا يَأْتِينَ مَسْجِدًا وَلَا يَشْهَدْنَ جُمُعَةً.

உம்மு நாயிலா ரழியல்லாஹுா அன்ஹா கூறுகிறார்கள்: ‘‘அபூ பர்ஜா என்பவர் வீட்டுக்கு வந்த போது அவரது மனைவியை வீட்டில் காணவில்லை. அவர் பள்ளிக்குப் போயிருக்கிறார் என அபூபர்ஜா அவர்களிடம் சொல்லப்பட்டது.

மனைவி பள்ளியிலிருந்து திரும்பி வந்த போது அபூபர்ஜா கோபப்பட்டார். ‘‘பெண்கள் வீட்டிலிருந்து வெளியே செல்வதை அல்லாஹ் தடை செய்திருக்கின்றான். அவர்கள் வீடுகளில் ஒதுங்கி இருக்க வேண்டுமென கட்டளை இட்டிருக்கின்றான். ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டாமெனவும், பள்ளிக்கு வர வேண்டாமெனவும் ஜுமுஆத் தொழுகையில் கலந்துக் கொள்ள வேண்டாமெனவும் கட்டளை இட்டுள்ளான்’’ என்று அபூபர்ஜா தம் மனைவியிடம் கூறினார். நூல்: தஃப்ஸீர் துர்ருல் மன்தூர் 600/2

குறிப்பு: இந்த ஹதீஸில் நேர்வழிபெற்ற ஸஹாபாக்களின் சீரிய வழி தெரிவிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் கட்டளைப்படி ஜுமுஆ மற்றும் ஜமாஅத் தொழுகைகளுக்குப் பள்ளிவாசலுக்கு பெண்கள் வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

أَخْرَجَ الْحَافِظُ ابْنُ أَبِي شَيْبَةَ عَنْ عَمْرٍو الشَّيْبَانِي قَالَ: رَأَيْتُ عَبْدَ اللهِ بْنَ مَسْعُودٍ يَحْصِبُ النِّسَاءَ يُخْرِجُهُنَّ مِنَ الْمَسْجِدِ يَوْمَ الْجُمُعَةِ.

அம்ருஷ் ஷைபானி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். ''அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜுமுஆ நாட்களில் பள்ளியிலிருந்து பெண்களை கல்லெறிந்து விரட்டி வெளியேற்றுவதைப் பார்த்திருக்கின்றேன்.''

நூல்: முஸன்னிஃப் இப்னு அபீஷைபா 7616

أَخْرَجَ عَبْدُ الرَّزَّاقُ عَنْ أَبِي عَمْرٍوالشَّيْبَانِي أَنَّهُ رَأى ابْنَ مَسْعُودٍ يُخْرِجُ النِّسَاءَ مِنَ الْمَسْجِدِ وَيَقُولُ: اُخْرُجْنَ إِلَى بُيُوتِكُنَّ، خَيْرٌ لَكُنَّ.

அம்ருஷ்ஷைபானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பெண்களை பள்ளியிலிருந்து வெளியேற்றுவார்கள். மேலும் அவர்களிடம் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும் என்று கூறுவதைப் பார்த்தார்கள்.

நூல்: முஸன்னஃப் அப்துல் ரஜ்ஜாக் 5201

أَخْرَجَ الْبَيْهَقِيُّ عَنْ سَعْدِ بْنِ إِيَاسٍ قَالَ: رَأَيْتُ عَبْدَ اللهِ يُخْرِجُ النِّسَاءَ مِنَ الْمَسْجِدِ يَوْمَ الْجُمُعَةِ وَيَقُولُ: اخْرُجْنَ، فَإِنَّ هَذَا لَيْسَ لَكُنَّ.

ஹழ்ரத் ஸஃதிப்னு இயாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''ஹழ்ரத் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜுமுஆவுடைய நாளில் பெண்களை பள்ளிகளை

விட்டும் வெளியேற்றுவார்கள். மேலும் நீங்கள் வெளியேறுங்கள். இந்தப் பள்ளி உங்களுக்கானது இல்லை'' எனக் கூறுவதை நான் பார்த்திருக்கின்றேன். நூல்: பைஹகீ 5651

أَخْرَجَ التِّرْمُذِيُّ عَنْ نَبْهَانَ مَوْلَى أُمِّ سَلَمَةَ أَنَّ أُمَّ سَلَمَةَ رضي الله عنها حَدَّثَتْهُ اَنَّهَا كَانَتْ عِنْدَ رَسُولِ اللهِ ﷺ وَمَيْمُونَةَ قَالَتْ: فَبَيْنَمَا نَحْنُ عِنْدَهُ أَقْبَلَ ابْنُ أُمِّ مَكْتُومٍ، فَدَخَلَ عَلَيْهِ وَذَلِكَ بَعْدَمَا أُمِرْنَا بِالْحِجَابِ، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: اِحْتَجِبَا مِنْهُ، فَقُلْتُ: يَا رَسُولَ اللهِ أَلَيْسَ هُوَ أَعْمَى لَا يُبْصِرُنَا وَلَا يَعْرِفُنَا، فَقَالَ: أَفَعَمْيَاوَانِ أَنْتُمَا، أَلَسْتُمَا تُبْصِرَانِهِ. قَالَ أَبُو عِيسَى هَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தமது அடிமையான நப்ஹான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சொன்னார்கள்: உம்மு ஸலமா, மைமூனா ரழியல்லாஹு அன்ஹுமா இருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்த பொழுது கண் தெரியாத இப்னு உம்மி மக்தூம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எங்களுக்கு ஹிஜாப் சட்டமாக்கப்பட்ட பின்னர் அங்கே வந்தார்கள்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இவரிடமிருந்து நீங்களிருவரும் மறைந்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள்.

''இப்னு உம்மி மக்தூம் பார்வையற்றவர் ஆயிற்றே! அவர் எங்களைப் பார்க்க மாட்டார். எங்களைப் புரிந்து கொள்ளவும் மாட்டார்.'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சொன்னேன்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘நீங்கள் பார்வையற்றவர்களா? நீங்களிருவரும் அவரைப் பார்க்க மாட்டீர்களா?’’ என்று கேட்டார்கள்.

இந்த ஹதீஸ் ஸஹீஹான ஹஸன் தரத்தைச் சார்ந்தது என திர்மிதி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

அறிவிப்பவர்: நப்ஹான் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: திர்மிதி 2778

குறிப்பு: இந்த ஹதீஸ், ஆண்கள் இருக்கும் இடத்திற்கு பெண்கள் செல்லக்கூடாது என்பதை உணர்த்துகிறதல்லவா? அப்படியானால் இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் ஆண்கள் கூடுமிடத்திற்கு போகக் கூடாது என்பது தெளிவாகும் போது ஆண்கள் தொழுகை நடத்தும் பள்ளிக்கு பெண்கள் எப்படிச் செல்லலாம்?

அபூபக்ர் இப்னு மஸ்வூது அல்காஸானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹனஃபி மத்ஹபின் மிகச் சிறந்த இமாம், பேரறிஞர், ஹிஜ்ரி 587ல் வஃபாத்தானார்கள். இமாம் காஸானீ அவர்கள் தமது அல்பதாஇஉஸ் ஸாயிஃ என்ற நுலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்:

‘‘ஆரம்ப காலத்தில் பெண்கள் ஜமாஅத் தொழுகைகளுக்கு ஆஜராயினர். பின்னர் தங்களது வீடுகளிலேயே தொழுகை நடத்த கட்டளையிடப்பட்டனர்’’

பெண்கள் ஜுமுஆ, ஜமாஅத்துத் தொழுகைகளுக்காக பள்ளிவாசலுக்கு வருகை தந்தனர் என்று அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் இஸ்லாமின் ஆரம்ப கால கட்டத்தில் ஆள் பலத்தைக் கூட்டிக் காட்டுவதற்காகவும், பர்தா கடமையாக்கப்படாத காலத்திலுமாகும்.

பர்தா கடமையாக்கப்பட்ட பின்னர் பெண்கள் பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காக வருவதை அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதிக்கவில்லை என்பதை ஏராளமான ஹதீஸ்கள் அறிவிக்கின்றன.

رُؤْيَةُ الهِلاَلِ

பிறை பார்த்தல்

أَخْرَجَ البُخَارِيُّ عَنْ مُحَمَّدِ بْنِ زِيَادٍ، قَالَ: سَمِعْتُ أَبَا هُرَيْرَةَ رضي الله عنه، يَقُولُ: قَالَ النَّبِيُّ ﷺ: أَوْ قَالَ: قَالَ أَبُو الْقَاسِمِ ﷺ: صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ، فَإِنْ غُبِّيَ عَلَيْكُمْ فَأَكْمِلُوا عِدَّةَ شَعْبَانَ ثَلاَثِينَ

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘‘பிறையைப் பார்த்து நோன்பு வையுங்கள், பிறையை பார்த்து நோன்பை விடுங்கள்! உங்களுக்கு மேக மூட்டம் தென்பட்டால் ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாக முழுமைப் படுத்துங்கள்.’’

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி 1909

أَخْرَجَ مُسلِمٌ عَنْ كُرَيْبٍ، أَنَّ أُمَّ الْفَضْلِ بِنْتَ الْحَارِثِ، بَعَثَتْهُ إِلَى مُعَاوِيَةَ بِالشَّامِ، قَالَ: فَقَدِمْتُ الشَّامَ، فَقَضَيْتُ حَاجَتَهَا، وَاسْتُهِلَّ عَلَيَّ رَمَضَانُ وَأَنَا بِالشَّامِ، فَرَأَيْتُ الْهِلاَلَ لَيْلَةَ الْجُمُعَةِ، ثُمَّ قَدِمْتُ الْمَدِينَةَ فِي آخِرِ الشَّهْرِ، فَسَأَلَنِي عَبْدُ اللهِ بْنُ عَبَّاسٍ رضي الله عنهما، ثُمَّ ذَكَرَ الْهِلاَلَ فَقَالَ: مَتَى رَأَيْتُمُ الْهِلاَلَ؟ فَقُلْتُ: رَأَيْنَاهُ لَيْلَةَ الْجُمُعَةِ، فَقَالَ: أَنْتَ رَأَيْتَهُ؟

فَقُلْتُ: نَعَمْ، وَرَآهُ النَّاسُ، وَصَامُوا وَصَامَ مُعَاوِيَةُ، فَقَالَ: لَكِنَّا رَأَيْنَاهُ لَيْلَةَ السَّبْتِ، فَلاَ نَزَالُ نَصُومُ حَتَّى نُكْمِلَ ثَلاَثِينَ، أَوْ نَرَاهُ، فَقُلْتُ: أَوَلاَ تَكْتَفِي بِرُؤْيَةِ مُعَاوِيَةَ وَصِيَامِهِ؟ فَقَالَ: لاَ، هَكَذَا أَمَرَنَا رَسُولُ اللهِ ﷺ. وَشَكَّ يَحْيَى بْنُ يَحْيَى فِي نَكْتَفِي أَوْ تَكْتَفِي.

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அடிமையாக இருந்த குறைப் இப்னு அபீ முஸ்லிம் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்:

‘‘உம்முல் ஃபழ்ல் பின்த் ஹாரித் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒரு வேலைநிமித்தம் என்னை சிரியா நாட்டிலிருந்த முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அனுப்பினார்கள். சிரியா சென்ற நான் அவரது தேவையை நிறைவு செய்தேன்.

நான் சிரியாவில் இருந்த போது ரமழான் மாதத்தின் முதல் பிறை எனக்குத் தென்பட்டது. வெள்ளிக்கிழமை இரவில் பிறை கண்டேன்.

பிறகு ரமழான் மாத கடைசியில் மதீனாவுக்கு வந்தேன். அப்போது அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பயணம் குறித்து என்னிடம் விசாரித்தார்கள். ரமழான் பிறை குறித்தும் கேட்டார்கள். சிரியாவில ‘‘எப்போது பிறை கண்டீர்கள்?’’ எனக் கேட்டார்கள். ‘‘வெள்ளி இரவன்று பிறை கண்டோம்’’ என்றேன். ‘‘நீயே அதைப் பார்த்தாயா?’’ என்று வினவினார்கள்.

‘‘ஆம்! நான் பார்த்தேன், மக்களும் பார்த்தனர். முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களும், மக்களும் நோன்பு நோற்றனர்’’ என பதிலிறுத்தேன்.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்: ‘‘ஆனால் நாங்கள் சனிக்கிழமை இரவில் பிறை

கண்டோம். எனவே ரமழான் மாதத்தின் எண்ணிக்கையை முப்பது நாட்களாக முழுமையாக்கும் வரை, அல்லது ஷவ்வால் முதல் பிறையைப் பார்ப்பது வரை நோன்பு நோற்போம்.''

நான் அவர்களிடம் கேட்டேன் ''முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறை பார்த்ததும், நோன்பு நோற்றதும் உங்களுக்குப் போதாதா?''

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள். ''போதாது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்படித்தான் எங்களுக்கு கட்டளை இட்டார்கள்.''

இந்த ஹதீஸ் நான்கு அறிவிப்பாளர்கள் தொடரில் வந்துள்ளது.

நூல்: முஸ்லிம் 1983

اَلتَّرَاوِيحُ

தராவீஹ் தொழுகை

أَخْرَجَ الْبُخَارِي عَنْ أَبِي سَلَمَةَ، أَنَّ أَبَا هُرَيْرَةَ ﵁، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ لِرَمَضَانَ: مَنْ قَامَهُ إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ.

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். ''ரமழான் மாதத்தில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகிறவரின் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப் படும் என்று ரமழான் மாதத்தின் சிறப்பு பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைச் செவியேற்றேன்.''

அறிவிப்பவர்: அபூஸலமா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி 2008

أَخْرَجَ ابْنُ أَبِي شَيْبَةَ عَنْ نَضْرِ بْنِ شَيْبَانَ ﵁ قَالَ سَأَلْتُ أَبَا سَلَمَةَ بْنَ عَبْدِ الرَّحْمَنِ فَذَكَرَ عَنْ أَبِيهِ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: إِنَّ اللهَ افْتَرَضَ عَلَيْكُمْ صِيَامَهُ وَسَنَنْتُ لَكُمْ قِيَامَهُ، فَمَنْ صَامَهُ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ.

நழ்ர் இப்னு ஷைபான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களிடமிருந்து இப்னு அபீ ஷைபா ரழியல்லாஹுு அன்ஹுு அறிவிக்கிறார்கள்: அபூஸலமா இப்னு அப்துர் ரஹ்மான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களிடம் ரமழானில் செய்கின்ற அமல்கள் குறித்து கேட்டேன்.

அபூஸலமா ரழியல்லாஹுு அன்ஹுு தம் தந்தையார் அவர்களிடமிருந்து அறிவித்தார்கள்.

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். ''ரமழான் மாத நோன்பை அல்லாஹ் உங்களுக்குக் கடமையாக்கினான். ரமழான் மாத இரவுத் தொழுகையை உங்களுக்கு நான் ஸுுன்னத்தாக்கினேன். யாரொருவர் ரமழான் மாதத்தில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படும்.''

நூல்: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா 7704

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ ابْنِ شِهَابٍ أَخْبَرَنِي عُرْوَةُ أَنَّ عَائِشَةَ رضي الله عنها أَخْبَرَتْهُ أَنَّ رَسُولَ اللهِ ﷺ خَرَجَ لَيْلَةً مِنْ جَوْفِ اللَّيْلِ فَصَلَّى فِي الْمَسْجِدِ، وَصَلَّى رِجَالٌ بِصَلَاتِهِ فَأَصْبَحَ النَّاسُ فَتَحَدَّثُوا فَاجْتَمَعَ أَكْثَرُ مِنْهُمْ فَصَلَّى فَصَلَّوْا مَعَهُ فَأَصْبَحَ النَّاسُ فَتَحَدَّثُوا، فَكَثُرَ أَهْلُ الْمَسْجِدِ مِنَ اللَّيْلَةِ الثَّالِثَةِ فَخَرَجَ رَسُولُ اللهِ ﷺ فَصَلَّى فَصَلَّوْا بِصَلَاتِهِ فَلَمَّا كَانَتِ اللَّيْلَةُ الرَّابِعَةُ عَجَزَ الْمَسْجِدُ عَنْ أَهْلِهِ حَتَّى خَرَجَ لِصَلَاةِ الصُّبْحِ فَلَمَّا قَضَى الْفَجْرَ أَقْبَلَ عَلَى النَّاسِ فَتَشَهَّدَ ثُمَّ قَالَ أَمَّا بَعْدُ فَإِنَّهُ لَمْ يَخْفَ عَلَيَّ مَكَانُكُمْ وَلَكِنِّي خَشِيتُ أَنْ تُفْرَضَ عَلَيْكُمْ فَتَعْجِزُوا عَنْهَا فَتُوُفِّيَ رَسُولُ اللهِ ﷺ وَالْأَمْرُ عَلَى ذَلِكَ.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழானில் நள்ளிரவில் பள்ளிக்குச் சென்று தொழுதார்கள். அவர்களைப் பின்பற்றி மக்களும் தொழுதனர். விடிந்ததும் இது குறித்து மக்கள் பேசிக் கொண்டனர். மறுநாள் முதல் நாளை விட அதிக மக்கள் திரண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின் தொடர்ந்து தொழுதனர். விடிந்ததும் இது பற்றி மக்கள் பேசிக் கொண்டனர்.

மூன்றாம் நாளிரவு அதிகமான ஜனங்கள் பள்ளி வாசலுக்கு வந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுதார்கள். மக்கள் அவர்களைப் பின் தொடர்ந்து தொழுதனர்.

நான்காம் நாளிரவு பள்ளிவாசல் கொள்ளாத அளவு மக்கள் திரண்டனர். ஆனால் ஃபஜ்ர் தொழுகைக்குத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்தார்கள்.

ஃபஜ்ர் தொழுகை முடிந்ததும் மக்களை முன்னோக்கி தஷஹ்ஹுத் கூறிவிட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள். ‘‘நீங்கள் பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காக வந்திருந்தது எனக்குத் தெரியாமல் இல்லை. எனினும் இத்தொழுகை உங்கள் மீது கடமையாக்கப்பட்டு, அது உங்களால் நிறைவேற்ற முடியாமல் ஆகி விடுமோ என்று அஞ்சினேன்.’’

நிலைமை இவ்வாறிருக்க, ரமழானின் இரவுத் தொழுகையை மக்கள் தனித் தனியாகத் தொழுதுக் கொண்டிருந்த நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஃபாத்தானார்கள் என ஸுஹ்ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகிறார்கள்.

நூல் புகாரி 2012

أَخْرَجَ الْبَيْهَقِيُّ عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما قَالَ: كَانَ النَّبِيُّ صلى الله عليه وآله وسلم يُصَلِّي فِي شَهْرِ رَمَضَانَ فِي غَيْرِ جَمَاعَةٍ بِعِشْرِينَ رَكْعَةً وَالْوِتْرِ اهـ.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமளான் மாதத்தில் ஜமாஅத் இல்லாமல் தனித்த நிலையில் இருபது ரகஅத்துகளும், வித்ரும் தொழுபவர்களாக இருந்தார்கள்.

நூல்: பைஹக்கீ 4286

أَخْرَجَ الْبُخَارِي عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ الْقَارِيِّ أَنَّهُ قَالَ خَرَجْتُ مَعَ عُمَرَ بْنِ الْخَطَّابِ ﵁ لَيْلَةً فِي رَمَضَانَ إِلَى الْمَسْجِدِ فَإِذَا النَّاسُ أَوْزَاعٌ مُتَفَرِّقُونَ يُصَلِّي الرَّجُلُ لِنَفْسِهِ وَيُصَلِّي الرَّجُلُ فَيُصَلِّي بِصَلَاتِهِ الرَّهْطُ فَقَالَ عُمَرُ ﵁ إِنِّي أَرَى لَوْ جَمَعْتُ هَؤُلَاءِ عَلَى قَارِئٍ وَاحِدٍ لَكَانَ أَمْثَلَ ثُمَّ عَزَمَ فَجَمَعَهُمْ عَلَى أُبَيِّ بْنِ كَعْبٍ ثُمَّ خَرَجْتُ مَعَهُ لَيْلَةً أُخْرَى وَالنَّاسُ يُصَلُّونَ بِصَلَاةِ قَارِئِهِمْ قَالَ عُمَرُ نِعْمَ الْبِدْعَةُ هَذِهِ وَالَّتِي يَنَامُونَ يَنَامُونَ عَنْهَا أَفْضَلُ مِنَ الَّتِي يَقُومُونَ يُرِيدُ آخِرَ اللَّيْلِ وَكَانَ النَّاسُ يَقُومُونَ أَوَّلَهُ.

அப்துர் ரஹ்மான் இப்னு அப்துல் காரி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ரமழான் மாதத்தின் ஓரிரவில் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நான் பள்ளிவாசலுக்குச் சென்றேன். அங்கே ஜனங்கள் பிரிந்து பல குழுக்களாக தொழுதுக் கொண்டிருந்தனர். சிலர் தனித்துத் தொழுதுக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இவர்கள் அனைவரையும் ஒரு இமாமின் கீழ் திரட்டினால் நன்றாக இருக்கும் என்று கூறி இம்முடிவில் உறுதியாக உபய் இப்னு கஃபு ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பின்னால் திரட்டினார்கள்.

பின்னொரு நாள் இரவில் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர் களுடன் பள்ளிவாசலுக்குச் சென்றேன். மக்கள் தமது இமாமை பின் தொடர்ந்து தொழுதுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த உமர்

ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘‘இந்த புதிய ஏற்பாடு நன்றாக உள்ளது. இரவின் முற்பகுதியில் தொழுவதைவிட தூங்கி எழுந்து இரவின் பிற்பகுதியில் தொழுவது சிறந்தது’’ என்று கூறினார்கள்.

ஜனங்கள் இரவின் முற்பகுதியில் தொழுது வந்தனர். இரவின் கடைசிப் பகுதியில் தொழுவது குறித்து இவ்வாறு கூறினார்கள்.

நூல்: புகாரி 2010

أَخْرَجَ البَيْهَقِيُّ عَنِ السَّائِبِ بْنِ يَزِيدَ قَالَ: كَانُوا يَقُومُونَ عَلَى عَهْدِ عُمَرَ بْنِ الْخَطَّابِ رضي الله عنه فِي شَهْرِ رَمَضَانَ بِعِشْرِينَ رَكْعَةٍ قَالَ وَكَانُوا يَقْرَؤُونَ بِالْمِئِينَ١ وَكَانُوا يَتَوَكَّؤُنَ عَلَى عِصِيِّهِمْ٢ فِي عَهْدِ عُثْمَانَ بْنِ عَفَّانَ رضي الله عنه مِنْ شِدَّةِ الْقِيَامِ.

ஸாயிப் இப்னு யஸீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் ரமழான் மாதத்தில் இருபது ரகஅத்துகள் ஜனங்கள் தொழுவர். ஒவ்வொரு ரகஅத்திலும் நூறு ஆயத்துகள் வரை ஓதுவர்.

உதுமான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் ரமழான் இரவுத் தொழுகையில் நீண்ட நேரம் நின்று தொழுவதால் தம்முடைய ஊன்று கோல்கள் மீது சாய்ந்து நின்று தொழுவர்.

நூல் : பைஹகீ 2010

أَخْرَجَ الْبَيْهَقِيُّ عَنْ عَلِيٍّ رضي الله عنه قَالَ: دَعَا الْقُرَّاءَ فِي رَمَضَانَ فَأَمَرَ مِنْهُمْ رَجُلًا يُصَلِّي بِالنَّاسِ عِشْرِينَ رَكْعَةً قَالَ: وَكَانَ عَلِيٌّ ا يُوتِرُ بِهِمْ.

அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ரமழான் மாதத்தில் காரிகளை அழைத்து அவர்களில் ஒருவரிடம் மக்களுக்கு 20

ரகஅத்துகள் தொழ வைக்கச் சொன்னார்கள். அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்களுக்கு வித்ர் தொழ வைத்தார்கள்.

நூல்: பைகஹீ 2491

أَخْرَجَ الْإِمَامُ مُحَمَّد نَصْرُ الْـمَرْوَزِي عَنْ زَيْـدِ بْـنِ وَهَـبٍ قَـالَ: كَانَ عَبْدُ اللهِ بْنِ مَسْعُودٍ ﷺ يُصَلِّي بِنَا فِي شَهْرِ رَمَضَانَ فَيَنْصَرِفُ وَعَلَيْهِ لَيْلٌ قَالَ الْأَعْمَشُ كَانَ يُصَلِّي عِشْرِينَ رَكْعَةً وَيُوتِرُ بِثَلَاثٍ .

ஸெய்த் இப்னு வஹப் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரமழான் மாதத்தில் இரவு மீதமிருக்கும் நிலையில் எங்களுக்கு தொழ வைத்து விட்டுச் செல்வார்கள்.’’

அஃமஷ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இருபது ரகஅத்துக்களும், மூன்று ரகஅத்துகள் வித்ரும் தொழ வைப்பார்கள்.’’

நூல்: இமாம் முஹம்மத் நஸ்ர் அல்மர்வஸி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கியாமுல் லைல் 279

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنِ الْحَسَنِ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ لَـمَّا جَمَعَ النَّـاسَ عَلَى أُبَيِّ بْنِ كَعْبٍ فَكَانَ يُصَلِّي لَـهُمْ عِشْرِينَ رَكْعَةً

ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஹழ்ரத் உமருப்னு கத்தாப் ரழியல்லாஹு அவர்கள் ஹழ்ரத் உபய்யிப்னு கஃபு ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமையில் மக்களுக்கு தொழ வைக்க கட்டளையிட்ட பொழுது உபய்யிப்னு கஃபு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இருபது ரகஅத் தொழ வைப்பார்கள். நூல்: அபூதாவூது: 209

اَلْقُنُوتُ فِي الصُّبْحِ

ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதுதல்

القنوت في الصبح. قَالَ الإمام النووي رحمه الله: في مذاهب العلماء في اثبات القنوت في الصبح: مذهبنا أنه يستحب القنوت فيها سواء نزلت نازلة أو لم تنزل وبها قَالَ أكثر السلف ومن بعدهم أو كثير منهم وممن قَالَ به أبو بكر الصديق وعمر بن الخطاب وعثمان وعلي وابن عباس والبراء بن عازب رضي الله عنهم رواه البيهقى باسانيد صحيحة و قَالَ به من التابعين فمن بعدهم خلائق وهو مذهب ابن أبى ليلي والحسن ابن صالح ومالك وداود و قَالَ عبد الله بن مسعود واصحابه وأبو حنيفة واصحابه وسفيان الثوري وأحمد لا قنوت في الصبح قَالَ أحمد إلا الإمام فيقنت إِذَا بعث الجيوش ... اه شرح المهذب ٤٦٥/٣

இமாம் நவவீ ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: ‘‘முஸீபத் இறங்கினாலும், இல்லாவிட்டாலும் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதுவது முஸ்தஹப் ஆகும். இதனை நமது முன்னோர் களில் அதிகமானோரும், அவர்களுக்குப் பின் வந்தவர்களில் அதிகமானோரும் கூறுகின்றனர்.

அபூபக்ர் ஸித்தீக், உமர் கத்தாப், உஸ்மான், அலீ, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், பர்ரா இப்னு ஆஸிப் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.’’ நூல்: பைஹகீ

தாபிஈன்களும், அவர்களுக்குப் பின் வந்த ஏராளமானோரும் குனூத் ஓதுவது முஸ்தஹப் என்று கூறுகின்றனர். இப்னு அபீயஃலா, ஹஸன் இப்னு ஸாலிஹ், மாலிக், தாவூத் ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் ஆகியோரும் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரழியல்லாஹுஅன்ஹு அவர்களும், அன்னாரது தோழர்களும், அபூஹனீபா, அன்னாரது தோழர்கள், ஸுஃப்யான் அத்தௌரி, அஹ்மத் ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் ஆகியோர் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் இல்லை என்கின்றனர்.

இஸ்லாமிய ஆட்சியாளர்கள் போருக்குப் படைகளை அனுப்பும் போது ஸுப்ஹுக்கு குனூத் ஓத வேண்டும் என இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.

நூல்: ஷரஹுல் முஹத்தப் 465/3

قَالَ الحازمي في كتاب الاعتبار: اتفق أَهْل العلم على ترك القنوت من غير سبب في أربع صلوات وهي الظهر والعصر والمغرب والعشاء . قَالَ: واختلف الناس في القنوت في صلاة الصبح فذهب أكثر الناس من الصحابة والتابعين فمن بعدهم من علماء الأمصار على إثبات القنوت فيها، قَالَ: فممن روينا ذلك عنه من الصحابة الخلفاء الراشدون أبو بكر وعمر وعثمان وعلي رضوان الله تعالى عليهم أجمعين، ومن الصحابة عمار بن ياسر وأبي بن كعب وأبو موسى الأشعري وعبد الرحمن بن أبي بكر الصديق وعبد الله بن عباس وأبو هريرة والبراء بن عازب وأنس بن مالك وأبو حليمة معاذ بن الحارث الأنصاري وخفاف بن إيماء بن رحضة وأهبان بن صيفي وسهل بن سعد الساعدي وعرفجة بن شريح الأشجعي ومعاوية بن أبي سفيان وعائشة الصديقة، ومن المخضرمين أبو رجاء العطاردي وسويد بن غفلة وأبو عثمان النهدي وأبو رافع الصائغ،

ஹாசிமீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது இஃதிபார் என்ற நூலில், ‘‘காரணம் ஏதுமின்றி லுஹர், அஸர், மஃரிப், இஷா தொழுகைகளில் குனூத் ஓதுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதில் உலமாப்பெருமக்கள் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர். ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதும் விஷயத்தில் கருத்து வேறுபாடு உள்ளது. ஸஹாபாக்கள், தாபிஊன்கள், இவர்களுக்குப் பின்னுள்ளவர்கள் ஆகியோரில் பெரும்பாலானோர் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் உண்டு என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்’’ எனக் கூறுகிறார்கள்.

ஸுப்ஹு தொழுகையில் குனூத் ஓத வேண்டும் என்று கூறியவர்களில் குலஃபாவுர் ராஷிதுகளான அபூபக்ர், உமர், உதுமான், அலீ ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரும்.

அம்மார் இப்னு யாஸிர், உபய்யிப்னு கஃபு, அபூ மூஸல் அஷ்அரீ, அப்துர்ரஹ்மான் இப்னு அபூபக்கர் சித்தீக், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அபூஹுரைரா, பராஇப்னு ஆஜிப், அனஸ் இப்னு மாலிக், அபூஹலீமா முஆத் இப்னுல் ஹாரிஸில் அன்சாரி, கிஃபாப் இப்னு ஈமா இப்னு ருஹ்ழா, அஹ்பான் இப்னு ஸைஃபீ, ஸஹ்லு பனு ஸஃதி ஸ்ஸாயிதிய்யி, உர்பஜத்துப்னு ஷரீஹில் அஷ்ஜயீ, முஆவியத்துப்னு அபீஸுஃப்யான், ஆயிஷா ஸித்தீகா ரழியல்லாஹு அன்ஹும் ஆகிய அனைத்து ஸஹாபாக்களும் உட்படுவர்.

மேலும், அபூ ரஜாவுல் அதாரிதிய்யி, ஸுவய்திப்னு ஙஃப்லா, அபூஉஸ்மான் னஹ்தீ, அபூ ராபிஃ ஸாஇஃ ஆகிய ஸஹாபாக்களும் குனூத் உண்டு என சொல்கின்றனர்.

தொழுகையில் குனூத் ஓதுவதில் கருத்து வேறுபாடு உள்ளது. எனினும் ஸஹாபாக்கள், தாபியீன்கள், அவர்களுக்குப் பின்னர் உள்ளவர்களில் அதிகமான உலமாப்பெருமக்கள் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் உண்டு என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

- துஹ்பதுல் அஹ்வதி 432/2

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ مُحَمَّدٍ قَالَ سُئِلَ أَنَسٌ أَقَنَتَ النَّبِيُّ ﷺ فِي الصُّبْحِ قَالَ نَعَمْ فَقِيلَ لَهُ أَوَقَنَتَ قَبْلَ الرُّكُوعِ قَالَ بَعْدَ الرُّكُوعِ يَسِيرًا.

ஹழ்ரத் முஹம்மது கூறுகிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸுப்ஹில் குனூத் ஓதி இருக்கிறார்களா?

என்று அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் ''ஆம்'' என்றனர். ருகூவுக்கு முன்பு குனூத் ஓதி இருக்கிறார்களா? என்று மீண்டும் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு ருகூவுக்குப் பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குனூத் ஓதினார்கள் என விடையளித்தார்கள்.

புகாரி: 1001

''ருகூவுக்குப் பின்னர் சிறிது குனூத் ஓதினார்கள்'' என அனஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறியதற்கு சிறிது காலம் ஓதினார்கள் என்றும், சிறிய அளவில் குனூத் ஓதினார்கள் என்றும் இரு வகையாகப் பொருள் கொள்ளலாம்.'' நூல் ஃபத்ஹுல்பாரி 187/9

أَخْرَجَ الدَّارِمِيُّ عَنِ الْـبَرَاءِ بْـنِ عَازِبٍ: أَنَّ النَّـبِيَّ ﷺ كَانَ يَقْنُـتُ فِي الصُّبْحِ

ஹழ்ரத் பராயிப்னு ஆஜிப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள்.''

- ஸுனனுத் தாரமி 1/275

أَخْرَجَ ابْنُ مَاجَه عَنْ أَنَسِ بْـنِ مَالِـكٍ، قَـالَ: سُـئِلَ عَـنِ الْقُنُـوتِ فِي صَلاَةِ الصُّبْحِ، فَقَالَ: كُنَّا نَقْنُتُ قَبْلَ الرُّكُوعِ وَبَعْدَهُ.

ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதுவது சம்பந்தமாக கேட்கப் பட்டது. அதற்கு அவர்கள் ''நாங்கள் ருகூவுக்கு முன்பும் ருகூவுக்கு பின்பும் குனூத் ஓதுபவர்களாக இருந்தோம்'' என்று பதிலுரைத்தார்கள்.

இப்னுமாஜா: 374

عَنْ أَنَسٍ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وآله وسلم لَمْ يَزَلْ يَقْنُتُ فِي الصُّبْحِ حَتَّى فَارَقَ الدُّنْيَا.

ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வஃபாத் வரை ஸுப்ஹுத் தொழுகையில் தொடர்ந்து குனூத் ஓதுபவர்களாக இருந்தார்கள். அஹ்மது:162

اَلْـجُمُعَةُ وَمَا يَتَعَلَّقُ بِهَا

ஜுமுஆவும் அதனோடு தொடர்புடையவைகளும்

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنْ قَيْسِ بْنِ مُسْلِمٍ عَنْ طَارِقِ بْنِ شِهَابٍ عَـنِ النَّـبِيِّ ﷺ قَالَ: الْـجُمُعَةُ حَقٌّ وَاجِبٌ عَلَى كُلِّ مُسْلِمٍ فِي جَمَاعَةٍ إِلَّا أَرْبَعَـةً عَبْـدٌ مَمْلُوكٌ أَوِ امْرَأَةٌ أَوْ صَبِيٌّ أَوْ مَرِيضٌ .

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்ததாக தாரிக் இப்னு ஷிஹாப் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: ‘‘ஜுமுஆத் தொழுகை ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும். அடிமை, பெண்கள், சிறுவர்கள், நோயாளிகள் ஆகிய நான்கு பிரிவினரைத் தவிர.’’

அறிவிப்பவர்: கைஸ் இப்னு முஸ்லிம் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: அபூதாவூது 1069

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ الزُّهْرِيِّ، قَالَ: سَمِعْتُ السَّائِبَ بْنَ يَزِيـدَ يَقُـولُ: إِنَّ الأَذَانَ يَوْمَ الْـجُمُعَةِ كَانَ أَوَّلُهُ حِينَ يَجْلِـسُ الإِمَـامُ يَـوْمَ الْــجُمُعَةِ عَلَى الْـمِنْبَرِ فِي عَهْدِ رَسُـولِ اللهِ ﷺ وَأَبِي بَكْـرٍ وَعُمَـرَ، رضي الله عنهما فَلَمَّـا كَانَ فِي خِلاَفَةِ عُثْمَانَ رضي الله عنه، وَكَثُرُوا أَمَرَ عُثْمَانُ يَوْمَ الْـجُمُعَةِ بِالأَذَانِ الثَّالِـثِ فَأُذِّنَ بِهِ عَلَى الزَّوْرَاءِ فَثَبَتَ الأَمْرُ عَلَى ذَلِكَ.

ஸாயிப் இப்னு யஸீத் ரழியல்லாஹுௗ அன்ஹுௗ அவர்கள் கூறியதைச் செவியேற்றதாக ஸுௗஹ்ரி ரஹிமஹுௗல்லாஹ் கூறுகிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹுௗ அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலும் அபூபக்ர், உமர் ரழியல்லாஹுௗ அன்ஹுௗமா ஆகியோரது காலத்திலும் ஜுௗமுஆ நாளில் இமாம் மிம்பரில் அமர்ந்த பின்னர் பாங்கு சொல்லப்பட்டது.’’

உஸ்மான் ரழியல்லாஹுௗ அன்ஹுௗ அவர்கள் ஆட்சி காலத்தில் மக்கள் பெருகியதால் பாங்கு இகாமத் தவிர மூன்றாவது பாங்கு சொல்ல அவர்கள் கட்டளையிட்டார்கள். மதீனாவின் மக்கள் கூடுமிடத்தில் இந்த பாங்கு சொல்லப்பட்டது. பின்னாட்களில் இது இவ்வாறே நிலைபெற்றது. நூல்: புகாரி 916

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ جَرِيرٍ أَنَّ النَّـبِيَّ ﷺ قَـالَ لَهُ فِي حَجَّـةِ الْـوَدَاعِ إِسْتَنْصِتِ النَّاسَ فَقَالَ: لاَ تَرْجِعُوا بَعْدِي كُفَّارًا يَضْرِبُ بَعْضُـكُمْ رِقَـابَ بَعْضٍ .

ஜரீர் ரழியல்லாஹுௗ அன்ஹுௗ கூறுகிறார்கள். நபி ஸல்லல்லாஹுௗ அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் இறுதி ஹஜ்ஜின் போது மக்களுக்கு உரையாற்றிய நேரத்தில் என்னிடம் மக்களை அமைதி யுடன் செவி தாழ்த்திக் கேட்கும்படி செய்வீராக! என்று கூறினார்கள். மக்கள் அமைதியான பின்னர் ‘‘எனக்குப் பிறகு நீங்கள் ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டிக் கொள்ளும் இறைமறுப்பாளர்களாக மாறிவிட வேண்டாம் என்று கூறினார்கள்.’’ புகாரி: 121

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي سُلَيْمَانَ مَالِكِ بْنِ الْحُوَيْرِثِ قَالَ أَتَيْنَـا النَّـبِيَّ ﷺ وَنَحْنُ شَبَبَةٌ مُتَقَارِبُونَ فَأَقَمْنَا عِنْدَهُ عِشْرِينَ لَيْلَةً فَظَنَّ أَنَّا اشْـتَقْنَا

أَهْلنَا وَسَأَلَنَا عَمَّنْ تَرَكْنَا فِي أَهْلنَا فَأَخْبَرْنَاهُ، وَكَانَ رَفِيقًا رَحِيمًا فَقَالَ ارْجِعُوا إِلَى أَهْلِيكُمْ فَعَلِّمُوهُمْ وَمُرُوهُمْ وَصَلُّوا كَمَا رَأَيْتُمُونِي أُصَلِّي، وَإِذَا حَضَرَتِ الصَّلاَةُ فَلْيُؤَذِّنْ لَكُمْ أَحَدكُمْ ثُمَّ لِيَؤُمَّكُمْ أَكْبَرُكُمْ.

ஹழ்ரத் அபூஸுலைமான் மாலிக் இப்னு ஹுவைரிஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: பனூ லைஸ் தூதுக் குழுவில் சமவயதுடைய இளைஞர்களான நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தோம். அவர்களுடன் இருபது நாட்கள் தங்கினோம். நாங்கள் எங்கள் குடும்பத்தினரிடம் திரும்பிச் செல்ல ஆசைப்படுவதை அறிந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஊரில் நாங்கள் விட்டு வந்த எங்கள் குடும்பத்தாரைப் பற்றி விசாரித்தார்கள். நாங்கள் அவர்களைப் பற்றித் தெரிவித்தோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நல்ல தோழராகவும், இரக்க குணமுடையவர்களாவும் இருந்தார்கள். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ''நீங்கள் உங்கள் குடும்பத்தினரிடம் திரும்பிச் சென்று அவர்களுக்குத் கல்வி கற்றுக் கொடுங்கள். அவர்களை கடமையானவற்றைச் செய்யுமாறு பணியுங்கள். என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள். தொழுகை நேரம் வந்ததும் உங்களில் வயதில் மூத்தவர் உங்களுக்குத் தொழுகை நடத்தட்டும்'' என்றார்கள்.

நூல்: புகாரி: 6008

فَقَالَ: مع قوله ﷺ: صلوا كما رأيتموني أصلي. وكان يخطب بالعربية اهـ شرح المهذب ٥٢٢/٤.

குறிப்பு: ''என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறுகிறார்கள். இந்த ஹதீஸ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் அரபியில் தொழுகை நடத்தினார்கள், அரபியிலேயே குத்பா ஓதினார்கள் என்பதை அறிவிக்கிறது.

மாபெரும் மேதை, ஹதீஸ் கலை விற்பன்னர் நவவீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த ஹதீஸ் அரபியில் குத்பா ஓத வேண்டும் என்பதற்கான ஆதாரம் ஆகும் என்கிறார்கள்.

நூல்: ஷரஹுல் முஹத்தப் 522

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنِ الْحَكَمِ بْنِ حَزْنٍ الْكُلَفِيِّ فَأَنْشَأَ يُحَدِّثُنَا قَالَ وَفَدْتُ إِلَى رَسُولِ اللهِ ﷺ سَابِعَ سَبْعَةٍ أَوْ تَاسِعَ تِسْعَةٍ فَدَخَلْنَا عَلَيْهِ فَقُلْنَا يَا رَسُولَ اللهِ زُرْنَاكَ فَادْعُ اللهَ لَنَا بِخَيْرٍ فَأَمَرَ بِنَا أَوْ أَمَرَ لَنَا بِشَيْءٍ مِنَ التَّمْرِ وَالشَّأْنُ إِذْ ذَاكَ دُونٌ فَأَقَمْنَا بِهَا أَيَّامًا شَهِدْنَا فِيهَا الْجُمُعَةَ مَعَ رَسُولِ اللهِ ﷺ فَقَامَ مُتَوَكِّئًا عَلَى عَصًا أَوْ قَوْسٍ فَحَمِدَ اللهَ وَأَثْنَى عَلَيْهِ كَلِمَاتٍ خَفِيفَاتٍ طَيِّبَاتٍ مُبَارَكَاتٍ...

ஹகம் இப்னு ஹஸ்ன் அல்குலஃபிய்யி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு குழுவில் ஏழு பேர்களில் ஒருவராக அல்லது ஒன்பது பேர்களில் ஒருவராக நானும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்றேன்.

''அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! தங்களைச் சந்திக்க வந்திருக்கின்றோம். எங்களின் நலவிற்காக துஆச் செய்யுங்கள்'' என்றோம். எங்களுக்குப் பேரீத்தம் பழங்கள் கொண்டு வந்து தர அவர்கள் கட்டளை இட்டார்கள். அது மிகச் சிரமமான காலமாக இருந்தது. நாங்கள் சில நாட்கள் அங்கே தங்கினோம். அந்த நாட்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஜுமுஆத் தொழுகையில் கலந்துக் கொண்டோம்.

ஒரு குச்சி அல்லது ஒரு அம்பின் மீது சாய்ந்து நின்றுக் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். பரகத்தான, அழகான, லேசான வார்த்தைகளால் குத்பா ஓதினார்கள். நூல்: அபூதாவூத் 1094

குறிப்பு: இந்த ஹதீஸ், அஸா-கம்பைப் பிடித்துக் கொண்டு குத்பா ஓதுவதற்கு ஆதாரமாகும்.

أَخْرَجَ أَبُو دَاوُدَ عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ أَنَّ رَسُولَ اللهِ ﷺ نَهَى عَنِ الشِّرَاءِ وَالْبَيْعِ فِي الْمَسْجِدِ وَأَنْ تُنْشَدَ فِيهِ ضَالَّةٌ وَأَنْ يُنْشَدَ فِيهِ شِعْرٌ وَنَهَى عَنِ التَّحَلُّقِ قَبْلَ الصَّلاَةِ يَوْمَ الْجُمُعَةِ

அம்ர் இப்னு ஷுஐப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது தந்தையார், பாட்டானார் மூலமாக அறிவிக்கிறார்கள்: பள்ளிவாசலில் விற்பது, வாங்குவது, தொலைந்து போன பொருட்களை தேடுவது, மோசமான கவிதைகளைப் பாடுவது, ஜுமுஆத் தொழுகைக்கு முன்னர் வட்டமிட்டு அமர்வது ஆகியவற்றை அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடை செய்தார்கள். நூல்: அபூதாவூது 1079

குறிப்பு: தீய கவிதைகள் பாடுவதைத் தடுத்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நல்ல கவிதைகள் பள்ளியில் வைத்து பாடுவதை தடுக்கவில்லை. தம்மைப் புகழ்ந்து பாடுவதற்கு ஹஸ்ஸான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மஸ்ஜிதுன் நபவீயில் மேடை அமைத்துக் கொடுத்தது மட்டுமின்றி அவர்களைப் பாட உற்சாகமூட்டிய நிகழ்வுகள் இதற்கு ஆதாரமாகும்.

أَخْرَجَ ابْنُ خُزَيْمَةَ عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ قَالَ صَلَّيْتُ مَعَ النَّبِيِّ ﷺ فَوَضَعَ يَدَهُ عَلَى الْيُسْرَى عَلَى صَدْرِهِ.

ஹழ்ரத் வாயில் இப்னு ஹுஜ்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நான் அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதேன். அவர்கள் தமது கையை இடது கையின் மீது நெஞ்சுக்கு அருகாமையில் வைத்தார்கள்.
- ஸஹீஹ் இப்னு ஹுஸைமா 243/1

குறிப்பு: இந்த ஹதீஸில் அலா ஸத்ரிஹி என்ற வார்த்தை முஅம்மில் இப்னு இஸ்மாயீல் என்ற அறிவிப்பாளரின் வழியாக மட்டும் வந்துள்ளது. இவரைத் தவிர மற்றவர்கள் அறிவிக்கக் கூடிய எந்த ஹதீஸிலும் அலா ஸத்ரிஹி என்ற வாசகம் இடம் பெறவில்லை.

وهناك حديث عند ابن خزيمة انه ﷺ وضعهما تحت صدره (إرشاد الساري: ٣٤٨/٢) وحديث رواه البزار بلفظ " عند صدره" وعند أحمد نحوه (فتح الباري: ١٠٠/٣) ولم يقل أَحَد بالضعف في هذين الحديثين . فبالجمع بين هذين الحديثين يتبين مذهبنا _ مذهب الإمام الشافعي بوضع اليدين تحت الصدر وفوق السرة .

1. முஅம்மில் இப்னு இஸ்மாயீல் பலவீனமானவர் என அனைத்து இமாம்களும் கூறுகின்றனர்.

2. இப்னு குஜைமா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஒன்றில் தஹ்தஸத்ரிஹி நெஞ்சுக்குக் கீழே கை கட்டினார்கள் என வந்துள்ளது.

3. பஸ்ஸார் அவர்களின் அறிவிப்பில் இன்தஸத்ரிஹி நெஞ்சுக்கு அருகில் என வந்துள்ளது.

4. இமாம் அஹ்மது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவிப்பிலும் இவ்வாறுதான் வந்துள்ளது. இந்த மூன்று அறிவிப்பாளர்களில் எவரும் பலவீனமானவர்கள் இல்லை.

எனவே இப்னு குஜைமா, பஸ்ஸார், இமாம் அஹ்மத் ஆகியோரின் பலமான அறிவிப்புகளின் அடிப்படையில் நெஞ்சுக்குக் கீழ்,

தொப்புளுக்கு மேலே கை கட்ட வேண்டும் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வேளை முஅம்மில் இப்னு இஸ்மாயீல் அவர்களின் என்ற அறிவிப்பு பலமானதாக இருந்தாலும் கூட 'அலா ஸத்ரிஹி' என்பதற்கு நெஞ்சுக்கு அருகில் என்றே பொருள் கொள்ள வேண்டும் என பல்வேறு ஆதாரங்கள் அடிப்படையில் ஹதீஸ் கலை மேதைகளும், ஃபிக்ஹ் துறை வல்லுனர்களும் விளக்கித் தருகின்றனர்.

الدُّعَاءُ بَعْدَ الْـمَكْتُوبَةِ

ஃபர்ளுத் தொழுகை களுக்குப் பின் துஆ ஓதுதல்

أَخْرَجَ التُّرْمُـذِيُّ عَـنْ أَبِي أُمَامَـةَ، قَـالَ: قِيـلَ لِرَسُـولَ اللهِ ﷺ أَيُّ الدُّعَاءِ أَسْمَعُ ؟ قَالَ: جَوْفَ اللَّيْلِ الْآخِرِ، وَدُبُرَ الصَّلَوَاتِ الْـمَكْتُوبَاتِ.

அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''அல்லாஹ் செவிமடுக்கக்கூடிய, ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரார்த்தனைகள் எவை?'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்ட போது,

''இரவின் இறுதிப் பொழுதிலும், ஃபர்ழான தொழுகைக்குப் பின்னரும் கேட்கப்படும் துஆக்கள்'' என்று பதிலுரைத்தார்கள்.

நூல்: திர்மிதி 492

أَخْـرَجَ أَبُـو دَاوُدَ عَـنْ أَبِي هُرَيْـرَةَ ﷺ، أَنَّ رَسُـولَ اللهِ ﷺ: قَـالَ الْـمَلَائِكَةُ تُصَلِّي عَلَى أَحَدِكُمْ مَا دَامَ فِي مُصَلَّاهُ الَّذِي صَلَّى فِيهِ مَـا لَـمْ يُحْدِثْ أَوْ يَقُمْ اللَّهُمَّ اغْفِرْ لَهُ، اللَّهُمَّ ارْحَمْهُ.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமுதவாய் திறந்து அருளினார்கள்.

‘‘உங்களில் ஒருவர் தொழுத முஸல்லாவை விட்டு எழாமல், தேவையற்ற பேச்சுகள், பேசாமல், அந்த இடத்தை விட்டு எழாதவரை மலக்குகள் இறைவா! இவருக்குப் பொறுத்தருள்வாயா! இவருக்கு அருள் புரிவாயாக! என்று துஆச் செய்வர்.’’

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: அபூதாவூது 465

أَخْرَجَ مُسْلِمٌ عَنِ الْبَرَاءِ، قَالَ: كُنَّا إِذَا صَلَّيْنَا خَلْفَ رَسُولِ اللهِ، أَحْبَبْنَا أَنْ نَكُونَ عَنْ يَمِينِهِ، يُقْبِلُ عَلَيْنَا بِوَجْهِهِ. قَالَ فَسَمِعْتُهُ يَقُولُ: رَبِّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ أَوْ تَجْمَعُ عِبَادَكَ.

பர்ராஉ ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். ‘‘நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் தொழுதால் தொழுகை முடிந்து அவர்கள் தமது திருமுகத்தால் எங்களை முன்னோக்க வேண்டும் என்பதற்காக அன்னாரது வலது புறத்தில் நின்று தொழுவதை விரும்பினோம்.

தொழுகை முடிந்த பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், யா அல்லாஹ்! மீண்டும் உயிர்ப்பிக்கும் நாளில் அல்லது உனது அடியார்களை ஒன்று திரட்டக் கூடிய நாளில் உன்னுடைய சோதனைகளிலிருந்து என்னைப் பாதுகாப்பாயாக! என்று கூறுவதைச் செவியேற்றுள்ளேன்.’’ நூல்: முஸ்லிம் 1642

أَخْرَجَ إِبْنِ أَبِي شَيْبَةَ عَنِ الْأَسْوَدِ العَامِرِيِّ عَنْ أَبِيهِ قَالَ: صَلَّيْتُ مَعَ رَسُولِ اللهِ ﷺ الفَجْرَ فَلَمَّا سَلَّمَ اِنْحَرَفَ.

அஸ்வதுல் ஆமிரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது தந்தையரிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ‘‘நான் நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஸுப்ஹ் தொழுதேன். ஸலாம் கொடுத்த பின் அவர்கள் திரும்பி அமர்ந்தார்கள்.''

நூல்: இப்னு அபீஷைபா 269

أَخْرَجَ الطَّبَرَانِيُّ عَنِ ابْنِ عُمَرَ رضي الله عنه قَالَ: صَلَّى رَسُولُ اللهِ ﷺ الْفَجْرَ، ثُمَّ أَقْبَلَ عَلَي الْقَوْمِ فَقَالَ: اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِي مَدِينَتِنَا، وَبَارِكْ لَنَا فِي مُدِّنَا، وَصَاعِنَا.

ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் திருத்தூர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ரு தொழுத பின் மக்களை முன்னோக்கி யா அல்லாஹ்! எங்கள் பட்டணத்திலும் எங்கள் முத்திலும் பரகத் செய்வாயாக'' என துஆ செய்தார்கள்.

நூல்: அல்முஃஜமுல்அவ்சத்:4098

أَخْرَجَ الْحَاكِمُ عَنْ حَبِيبِ بْنِ مُسْلِمَةَ الْفِهْرِيِّ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ:لاَ يَجْتَمِعُ مَلأٌ فَيَدْعُو بَعْضُهُمْ وَيُؤَمِّنَ بَعْضُهُمْ إِلَّا أَجَابَهُمْ اللهُ تَعَالَي.

ஹபீப் இப்னு முஸ்லிமதுல் ஃபிஹ்ரிய்யி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக் கேட்டேன். ''ஒரு குழுவினர் சேர்ந்திருந்து அவர்களில் சிலர் துஆ செய்ய, வேறு சிலர் ஆமீன் சொன்னால் அந்த துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளாமலிருக்கமாட்டான்.''

நூல்: அல்முஸ்தத்ரக் 390

أَخْرَجَ إِبْنُ مَاجَه عَنِ النَّبِيِّ قَالَ: مَا حَسَدَتْكُمُ الْيَهُودُ عَلَى شَيْءٍ، مَا حَسَدَتْكُمْ عَلَى السَّلاَمِ وَالتَّأْمِينِ.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''நீங்கள் ஸலாமுரைத்தல் மற்றும் ஆமீன் சொல்வதைப் பார்த்து யூதர்கள் உங்கள் மீது பொறாமைப்படுவதைப் போல, வேறொன்றின் மீதும் அவர்கள் உங்கள் மீது பொறாமை கொள்ளவில்லை.''

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூல்: இப்னுமாஜா 247/1

குறிப்பு: துஆவுக்கு ஆமீன் சொல்தல் மிக மகத்தான ஒரு நற்செயல் ஆகும். எனவேதான் நாம் ஆமீன் சொல்வதைப் பார்த்து, நன்மைகளை ஈட்டித்தரும் இதுபோன்றதொரு வார்த்தை தமக்கு அருளப்படவில்லையே என முஸ்லிம் உம்மத் மீது யூதர்கள் பொறாமை கொள்கின்றனர்.

أَخْرَجَ التِّرْمِذِيُّ عَنْ ثَوْبَانَ، عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لاَ يَحِلُّ لِامْرِئٍ أَنْ يَنْظُرَ فِي بَيْتِ امْرِءٍ حَتَّى يَسْتَأْذِنَ، فَإِنْ نَظَرَ فَقَدْ دَخَلَ، وَلَا يَؤُمُّ قَوْمًا فَيَخُصُّ نَفْسَهُ بِدَعْوَةٍ دُونَهُمْ، فَإِنْ فَعَلَ فَقَدْ خَانَهُمْ ولاَ يَقُومُ إِلَى الصَّلاَةِ وَهُوَ حَقِنٌ .

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்: 'ஒருவர் இன்னொருவரின் வீட்டிற்குள் (வீட்டு உரிமையாளரின்)அனுமதியின்றிப் பார்த்தல் ஆகுமானதல்ல. (அனுமதி இன்றிப்) பார்த்தால் (அனுமதி இன்றி பிறிதொருவரின் வீட்டுக்குள்) நுழைந்தவர் ஆவார். (அனுமதியின்றி அடுத்தவர் வீட்டுக்குள் நுழைந்த குற்றத்துக்கு ஆளாவர்)'

மஃமூம்களை விட்டுவிட்டு தனக்கு மட்டும் இமாம் துஆச் செய்யக்கூடாது. (அவ்வாறு தனக்கு மட்டும்) துஆச் செய்தால் அவர் மஃமூம்களை வஞ்சித்தவர் ஆவார். சிறுநீரை அடக்கிக் கொண்டு தொழுகைக்கு நிற்கக் கூடாது.

அறிவிப்பவர்: ஸவ்பான் ரழியல்லாஹு அன்ஹு; நூல்: திர்மிதி 357

قَالَ الطيبي رحمه الله نسب الخيانة إلى الإمام لأن شرعية الجماعة ليفيد كل من الإمام والمأموم الخير على صاحبه. وإنما خص الإمام بالخيانة لأنه صاحب الدعاء – تحفة الأحوذي ٢/٢٨٦

தீபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘மேற்சொன்ன ஹதீஸில் வஞ்சகம் செய்தவர் ஆவார் என இமாமின் பக்கம் வஞ்சகம் சேர்க்கப்பட்டுள்ளது. இமாம், மஃமூம் ஆகிய ஒவ்வொருவருக்கும் நன்மையைப் பெற்றுத் தருதல் எனும் அடிப்படையில்தான் ஜமாஅத்துத் தொழுகை சட்டமாக்கப் பட்டுள்ளது. அல்லாஹ்வின் பால் அவருக்குள்ள நெருக்கத்தைப் பெறுவதற்காக எவர் தன்னை மட்டும் குறிப்பாக்குகின்றாரோ அவர் தனது தோழருக்கு மோசடி செய்தவராவார். மோசடியை இமாமின்பால் சேர்த்தற்குக் காரணம் துஆச் செய்வதற்கு இமாம்தான் பொறுப்புதாரியாக உள்ளார் என்பதால் ஆகும்.

- துஹ்பதுல் அஹ்வதி 286

أَخْرَجَ التِّرْمِذِيُّ عَنِ ابْنَ عُمَرَ رضي الله عنهما، قَالَ: قَلَّمَا كَانَ رَسُولُ الله يَقُومُ مِنْ مَجْلِسٍ حَتَّى يَدْعُوَ بِهَؤُلاَءِ الدعواتِ لأَصْحَابِهِ: اللّٰهُمَّ اقْسِمْ لَنَا مِنْ خَشْيَتِكَ مَا يَحُولُ بَيْنَنَا وبَيْنَ مَعَاصِيكَ، ومِنْ طَاعَتِكَ مَا تُبَلِّغُنَا بِهِ جَنَّتَكَ، ومِنَ اليَقِينِ مَا تُهَوِّنُ بِهِ عَلَيْنَا مُصِيبَاتِ الدُّنْيَا، ومَتِّعْنَا بِأَسْمَاعِنَا وأَبْصَارِنَا وقُوَّتِنَا مَا أَحْيَيْتَنَا ، واجْعَلْهُ الْوَارِثَ مِنَّا واجْعَلْ ثَأْرَنَا عَلَى مَنْ ظَلَمَنَا، وَانْصُرْنَا عَلَى مَنْ عَادَانَا، ولاَ تَجْعَلْ مُصِيبَتَنَا فِي

دِينِنَا، ولاَ تَجْعَلِ الدُّنْيَا أَكْبَرَ هَمِّنَا، ولاَ مَبْلَغَ عِلْمِنَا، وَلاَ تُسَلِّطْ عَلَيْنَا مَـنْ لاَ يَرْحَمُنَا. قَالَ أَبُو عِيسَى: هَذَا حَدِيثٌ حَسَنٌ غريبٌ.

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கீழ்க்காணும் துஆக்களை தன் ஸஹாபாக்களுக்காக ஓதாமல் எந்வொரு மஜ்லிசிலிருந்தும் எழுந்துச் செல்வது குறைவாகும்.''

யா அல்லாஹ்! எங்களுக்கும், உனக்குமிடையில் பாவம் செய்கின்ற ஒன்றை தடுக்கக் கூடிய அச்சத்திலிருந்து எங்களுக்கு பங்கிட்டுத் தருவாயாக!

உன்னுடைய சுவனத்தை நாங்கள் அடைந்திட செய்யும் வகையிலான வழிபடும் ஒன்றை எங்களுக்கு பங்கிட்டுத் தருவாயாக!

இவ்வுலகின் ஆபத்துகள், முஸீபத்துகளை விட்டு லேசாக்கக் கூடிய ஒன்றை உறுதியான நிலையில் எங்களுக்குப் பங்கிட்டுத் தருவாயாக!

எங்களுடைய கேள்விகள், பார்வைகள், ஆற்றல்களில் எங்களை நீ வாழச் செய்யும் காலமெல்லாம் எங்களுக்கு வலிமையை நீடித்திருக்கச் செய்வாயாக!

எங்களுக்கு தீங்கிழைத்தவர்களுக்கெதிராக நீ அதன் பிரதிபலனை ஆக்குவாயாக!

எங்களைப் பகைத்துக் கொண்டவர்களுக்கெதிராக எங்களுக்கு உதவி புரிவாயாக!

எங்களுடைய மார்க்கத்தில் எங்களுக்கு முஸீபத்துகளை ஆக்கி விடாதே!

இவ்வுலகை எங்களின் முக்கியமான கவலையாக ஆக்கிவிடாதே!

இவ்வுலகை எங்களுடைய கல்வியின் வரம்பாக ஆக்கி விடாதே!

கருணை இல்லாதவர்களை எங்களின் அதிகாரிகளாக ஆக்கி விடாதே!

நூல்: திர்மிதி 3502

مَجَالِسُ الذِّكْرِ

திக்ரு மஜ்லிஸுகள்

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: إِنَّ للهِ مَلاَئِكَةً يَطُوفُونَ فِي الطُّرُقِ يَلْتَمِسُونَ أَهْلَ الذِّكْرِ، فَإِذَا وَجَدُوا قَوْمًا يَذْكُرُونَ اللهَ تَنَادَوْا: هَلُمُّوا إِلَى حَاجَتِكُمْ. قَالَ: فَيَحُفُّونَهُمْ بِأَجْنِحَتِهِمْ إِلَى السَّمَاءِ الدُّنْيَا، قَالَ: فَيَسْأَلُهُمْ رَبُّهُمْ، وَهُوَ أَعْلَمُ مِنْهُمْ، مَا يَقُولُ عِبَادِي؟ قَالَ: يَقُولُونَ: يُسَبِّحُونَكَ وَيُكَبِّرُونَكَ وَيَحْمَدُونَكَ وَيُمَجِّدُونَكَ، قَالَ: فَيَقُولُ: هَلْ رَأَوْنِي؟ قَالَ: فَيَقُولُونَ: لاَ وَاللهِ مَا رَأَوْكَ؟ قَالَ: فَيَقُولُ: وَكَيْفَ لَوْ رَأَوْنِي؟ قَالَ: يَقُولُونَ: لَوْ رَأَوْكَ كَانُوا أَشَدَّ لَكَ عِبَادَةً، وَأَشَدَّ لَكَ تَمْجِيدًا وَتَحْمِيدًا، وَأَكْثَرَ لَكَ تَسْبِيحًا. قَالَ: يَقُولُونَ: فَمَا يَسْأَلُونِي؟ قَالَ: يَسْأَلُونَكَ الْجَنَّةَ. قَالَ: يَقُولُ: وَهَلْ رَأَوْهَا؟ قَالَ: يَقُولُونَ: لاَ وَاللهِ يَا رَبِّ مَا رَأَوْهَا قَالَ: يَقُولُ: فَكَيْفَ لَوْ أَنَّهُمْ رَأَوْهَا؟ قَالَ: يَقُولُونَ: لَوْ أَنَّهُمْ رَأَوْهَا كَانُوا أَشَدَّ عَلَيْهَا حِرْصًا، وَأَشَدَّ لَهَا طَلَبًا، وَأَعْظَمَ فِيهَا رَغْبَةً، قَالَ: فَمِمَّ يَتَعَوَّذُونَ؟ قَالَ: يَقُولُونَ: مِنَ النَّارِ قَالَ: يَقُولُ: وَهَلْ رَأَوْهَا؟ قَالَ: يَقُولُونَ: لاَ وَاللهِ مَا رَأَوْهَا قَالَ: يَقُولُ: فَكَيْفَ لَوْ رَأَوْهَا؟ قَالَ: يَقُولُونَ: لَوْ

رَأَوْهَا كَانُوا أَشَدَّ مِنْهَا فِرَارًا، وَأَشَدَّ لَهَا مَخَافَةً . قَالَ: فَيَقُولُ: فَأُشْهِدُكُمْ أَنِّي قَدْ غَفَرْتُ لَهُمْ قَالَ: يَقُولُ مَلَكٌ مِنَ المَلاَئِكَةِ: فِيهِمْ فُلاَنٌ لَيْسَ مِنْهُمْ، إِنَّمَا جَاءَ لِحَاجَةٍ. قَالَ: هُمُ الْجُلَسَاءُ لاَ يَشْقَى بِهِمْ جَلِيسُهُمْ.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்: அல்லாஹ்விடம் சில வானவர்கள் உள்ளனர். அல்லாஹ்வை நினைவுகூர்ந்து போற்றுவோரைத் தேடி தெருக்களில் அவர்கள் சுற்றுகின்றனர்.

அல்லாஹ்வை நினைவு கூர்ந்து போற்றிக் கொண்டிருக்கும் குழுவினரை அவர்கள் கண்டால் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்திட விரைந்து வாருங்கள் என தமக்குள் ஒருவரை ஒருவர் அழைப்பர்.''

பின்னர் அல்லாஹ்வைத் துதிப்பவர்களை அவர்கள் தம் இறக்கை களால் முதல் வானம் வரை சூழ்ந்துக் கொள்வர்.

அப்போது அவ்வானவர்களிடம் அல்லாஹ் கேட்பான். (அவனே அவர்களைவிட மிக்க அறிந்தவன்.) ''என் அடியார்கள் என்ன கூறுகின்றனர்?''

வானவர்கள் கூறுவர்: உன்னை பெருமைப்படுத்துகின்றனர், உன்னைப் போற்றுகின்றனர், உன்னைப் புகழ்கின்றனர்.

அல்லாஹ்: அவர்கள் என்னைப் பார்த்திருக்கின்றனரா?

வானவர்கள்: இல்லை! உன் மீதாணையாக அவர்கள் உன்னைப் பார்த்ததில்லை.

அல்லாஹ்: அவர்கள் என்னைப் பார்த்திருந்தால் எப்படி இருப்பர்?

வானவர்கள்: உன்னை அவர்கள் பார்த்திருந்தால் இதைவிட அதிகமாக உனக்கு வழிப்படுவர். அதிகமாகப் போற்றுவர், புகழ்வர், துதிப்பர்.

அல்லாஹ்: என்னிடம் அவர்கள் எதை வேண்டுகின்றனர்?

வானவர்கள்: உன்னிடம் சுவனத்தை வேண்டுகின்றனர்.

அல்லாஹ்: சுவனத்தை அவர்கள் பார்த்திருக்கிறார்களா?

வானவர்கள்: இல்லை! உன்மீது ஆணையாக அவர்கள் பார்த்த தில்லை.

அல்லாஹ்: சுவனத்தை பார்த்திருந்தால் அவர்கள் நிலை யாது?

வானவர்கள்: சுவனத்தை அவர்கள் பார்த்திருந்தால் மிக அதிகமாக அதன் மீது பேராவல் கொண்டு, அதிக வேட்கையுடன் தீவிரமாக அதைத் தேடுவர்.

அல்லாஹ்: அவர்கள் எதிலிருந்து என்னிடம் பாதுகாவல் தேடுகின்றனர்?

வானவர்கள்: நரகிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றனர்.

அல்லாஹ்: நரகை அவர்கள் பார்த்திருக்கிறார்களா?

வானவர்கள்: இல்லை! உன் மீது ஆணையாக நரகை அவர்கள் பார்த்ததில்லை.

அல்லாஹ்: நரகை அவர்கள் பார்த்திருந்தால் அவர்கள் நிலை யாது?

வானவர்கள்: நரகை அவர்கள் பார்த்திருந்தால் அதைவிட்டு மிகக் கடுமையாக விரண்டோடுபவர்களாகவும், அதை மிக அஞ்சுபவர் களாகவுமிருப்பர்.

அப்போது அல்லாஹ் கூறுவான்: வானவர்களே! அவர்களுக்கு பிழை பொறுத்தருளியுள்ளேன் என்பதற்கு உங்களை சாட்சியாக்கியுள்ளேன்.

(இதுகேட்ட) வானவரொருவர்: இன்ன மனிதர் உன்னைப் போற்றித் துதிக்கின்றவர்களைச் சார்ந்தவரல்ல. ஏதோ தேவைக்காக வந்தவர் என்பார்.

அப்போது அல்லாஹ் கூறுவான். அவர்கள் ஒன்றாக அமர்ந்திருக்கும் நண்பர்கள். அவர்களுடன் அமர்ந்திருக்கும் ஒருவர் நற்பாக்கியமற்ற வராக ஆக மாட்டார். (அவர்களுடன் சேர்ந்து அவரும் பாக்கியம் பெற்றவராவர்.)

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல்: புகாரி 6408

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَنَسٍ ﵁: أَنَّ رَجُلًا سَأَلَ النَبِيَّ ﷺ عَنِ السَّاعَةِ فَقَالَ: مَتَى السَّاعَةُ؟ قَالَ: وَمَاذَا أَعْدَدْتَ لَهَا؟ قَالَ: لَاشَيْءَ، إِلَّا أَنِّي أُحِبُّ اللهَ وَرَسُولَهُ ﷺ. فَقَالَ: أَنْتَ مَعَ مَنْ أَحْبَبْتَ. قَالَ أَنَسٌ: فَمَا فَرِحْنَا بِشَيْءٍ فَرَحَنَا بِقَوْلِ النَبِيِّ ﷺ: أَنْتَ مَعَ مَنْ أَحْبَبْتَ. قَالَ أَنَسٌ: فَأَنَا أُحِبُّ النَّبِيَّ ﷺ وَأَبَا بَكْرٍ وَعُمَرَ، وَأَرْجُو أَنْ أَكُونَ مَعَهُمْ بِحُبِّي إِيَّاهُمْ، وَإِنْ لَمْ أَعْمَلْ بِمِثْلِ أَعْمَالِهِمْ.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் மறுமை நாள் எப்போது வரும்? என்று கேட்டார்.

''அதற்காக என்ன (நற்செயல்களைத்) தயார் செய்து வைத்திருக் கிறீர்கள்'' என்று அம்மனிதரிடம் கேட்டார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

அல்லாஹ்வையும், அவனது திருத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் நேசிக்கின்றேன் என்பதைத் தவிர வெறொன்றும் என்னிடமில்லை என்றார் அவர்.

தாங்கள் யாரை நேசிக்கின்றீர்களோ அவர்களுடன் (மறுமையில் சேர்ந்து) இருப்பீர்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் பதில் கூறியதைக் கேட்டு நாங்கள் மகிழ்வுற்றதைப் போல வேறு எதற்காகவும் நாங்கள் மகிழ்வு கொண்டதில்லை.

நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், அபூபக்ர், உமர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோரையும் நேசிக்கின்றேன்.

இவர்களை நேசிக்கின்ற காரணத்தால் மறுமையில் இவர்களுடன் சேர்ந்திருப்பதை ஆதரவு வைக்கின்றேன். இவர்களைப் போன்று நற்செயல்களை நான் செய்யவில்லையென்றாலும் சரியே!

நூல்: புகாரி 3688

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﵁، قَالَ: خَرَجَ مُعَاوِيَةُ عَلَى حَلْقَةٍ فِي الْمَسْجِدِ. فَقَالَ: مَا أَجْلَسَكُمْ؟ قَالُوا: جَلَسْنَا نَذْكُرُ اللَّهَ. قَالَ: آللَّهِ مَا أَجْلَسَكُمْ إِلَّا ذَاكَ؟ قَالُوا: وَاللَّهِ مَا أَجْلَسَنَا إِلَّا ذَاكَ. قَالَ: أَمَا إِنِّي لَمْ أَسْتَحْلِفْكُمْ تُهْمَةً لَكُمْ. وَمَا كَانَ أَحَدٌ بِمَنْزِلَتِي مِنْ رَسُولِ اللَّهِ ﷺ أَقَلَّ عَنْهُ حَدِيثًا مِنِّي . وَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ خَرَجَ عَلَى حَلْقَةٍ مِنْ أَصْحَابِهِ . فَقَالَ: مَا أَجْلَسَكُمْ؟ قَالُوا: جَلَسْنَا نَذْكُرُ اللَّهَ وَنَحْمَدُهُ عَلَى مَا هَدَانَا لِلإِسْلاَمِ، وَمَنَّ بِهِ عَلَيْنَا. فَقَالَ: آللَّهِ مَا أَجْلَسَكُمْ إِلَّا ذَاكَ؟ قَالُوا: آللَّهِ مَا أَجْلَسَنَا إِلَّا ذَاكَ. قَالَ: أَمَا إِنِّي لَمْ أَسْتَحْلِفْكُمْ تُهْمَةً لَكُمْ. وَلَكِنَّهُ أَتَانِي جِبْرِيلُ فَأَخْبَرَنِي أَنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ يُبَاهِي بِكُمُ الْمَلاَئِكَةَ.

அபூஸயீதில் குத்ரிய்யி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: பள்ளிவாசலில் வட்டமாக அமர்ந்திருக்கும் ஒரு

குழுவினரிடம் முஆவியா ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள், ‘‘உங்கள் அமர்வின் காரணமென்ன?’’ எனக் கேட்க, அல்லாஹ்வை திக்ர் செய்வதற்காக அமர்ந்திருக்கின்றோம் என்றனர்.

‘‘அல்லாஹ் மீது சத்தியமாக! இதற்காகத்தான் அமர்ந்திருக் கிறீர்களா?’’ என முஆவியா ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களிடம் (மீண்டும்) கேட்டார்கள்.

‘‘அல்லாஹ் மீது சத்தியமாக! அதற்காகத்தான் நாங்கள் அமர்ந்திருக்கின்றோம்’’ என்று அக்குழுவினர் கூறினார்.

முஆவியா ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் கூறினார்கள். உங்கள் மீது சந்தேகம் கொண்டு உங்களை சத்தியம் செய்து கூறச் சொல்லவில்லை. அல்லாஹ்வின் திருத்தூதர் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுடன் என் அளவுக்கு நெருக்கமாக இருந்தவர்களில் எவரும் என்னைவிட குறைவான ஹதீஸ்களை அவர்களிடமிருந்து அறிவிக்கவில்லை. (நான்தான் குறைவான ஹதீஸ்களை அறிவித்தவன்)

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் வட்டமாக அமர்ந்திருந்த தமது சில தோழர்களிடம் வந்து உங்களின் இந்த அமர்வுக்குக் காரணமென்ன? எனக் கேட்டபோது, தோழர்கள், அல்லாஹ் எங்களுக்கு இஸ்லாமை நேர்வழிகாட்டியதற்காகவும், எங்களுக்கு அருட்கொடைகள் புரிந்ததற்காகவும் அவனை நினைவு கூர்ந்து போற்றுவதற்காக அமர்ந்திருக்கின்றோம் என்று பதிலுரைத்தனர்.

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் மீதாணையாக! இதற்காகத்தான் நீங்கள் அமர்ந்திருக்கின்றீர்களா? எனக் கேட்டனர்.

தோழர்கள் கூறினர்: அல்லாஹ் மீது சத்தியமாக! இதற்காகவே தான் அமர்ந்திருக்கின்றோம்.

அறிந்துக் கொள்ளுங்கள்! உங்கள் மீது சந்தேகம் கொண்டு சத்தியமிட்டு உங்களிடம் நான் கேட்கவில்லை. வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் என்னிடம் வந்து வல்லமையும், மாண்பும் மிகுந்த அல்லாஹ் உங்களைக் குறித்து வானவர்களிடம் பெருமையுடன் பேசிக் கொள்கிறான் என்று தெரிவித்தார்கள் என்றுரைத்தார்கள் பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். நூல்: முஸ்லிம் 5233

مَدْحُ النَّبِيِّ ﷺ

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழுதல்

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ أَبِي قَتَادَةَ الأَنْصَارِيِّ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ سُئِلَ عَنْ صَوْمِ الاِثْنَيْنِ، فَقَالَ: فِيهِ وُلِدْتُ وَفِيهِ أُنْزِلَ عَلَيَّ.

அபூகதாதா அன்ஸாரி ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் கூறுகிறார்கள்: ''திங்கட்கிழமை நோன்பு குறித்து நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்டபோது, அன்றுதான் நான் பிறந்தேன். அன்றுதான் முதன் முதலாக எனக்கு திருக்குர்ஆன் அருளப்பட்டது என்று கூறினார்கள்.'' நூல்: முஸ்லிம் 2153

أَخْرَجَ الْحَاكِمُ عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: يَا أَيُّهَا النَّاسُ إِنَّمَا أَنَا رَحْمَةٌ مُهْدَاةٌ . هذا حديث صحيح على شرطهما

அல்லாஹ்வின் அருட்தூதர் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்: ''மக்களே! நான் அருளாகவும், நேர்வழி காண்பிக்கப்பட்டவனாகவும் உள்ளேன்.!''

அறிவிப்பவர்: அபூஹுுரைரா ரழியல்லாஹுு அன்ஹுு

நூல்: ஹாகிம் 100

أَخْرَجَ الْبُخَارِي عَنْ عُرْوَةَ بْنِ الزُّبَيْرِ قَالَ عُـرْوَةُ وَثُوَيْبَـةُ مَـوْلَاةٌ لأَبِي لَهَبٍ كَانَ أَبُو لَهَبٍ أَعْتَقَهَا فَأَرْضَعَتِ النَّبِيَّ ﷺ فَلَمَّا مَاتَ أَبُو لَهَـبٍ أُرِيَـهُ بَعْضُ أَهْلِهِ بِشَرِّ حِيبَةٍ قَالَ لَهُ مَاذَا لَقِيتَ؟ قَالَ أَبُو لَهَبٍ لَمْ أَلْقَ بَعْدَكُمْ غَيْرَ أَنِّي سُقِيتُ فِي هَذِهِ بِعَتَاقَتِي ثُوَيْبَةَ.

உர்வா இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘ஸுவைபா அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார், அபூலஹப் அவரை விடுதலை செய்திருந்தார். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பாலூட்டினார்.’’

அபூலஹப் இறந்த போது, அவனுடைய குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அவனை மோசமான நிலையில் (கனவில்) காட்டப் பட்டார். (மரணத்தின் பின்) நீ எதைப் பெற்றாய்? என அவனிடம் அவர் வினவ, ‘‘உங்களை விட்டுப் பிரிந்த பின்னர் நான் எந்த சுகத்தையும் பெறவில்லை. எனினும் நான் ஸுவைபாவை விடுதலை செய்ததற்காக இந்த விரல்களிலிருந்து நீர் புகட்டப்படுகின்றேன்’’ என்றான் அபூலஹப். நூல்: புகாரி 5101

குறிப்பு: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த செய்தியை அபூலஹபிடம், அவனது அடிமையாக இருந்த ஸுவைபா அம்மையார் தெரிவித்ததையொட்டி, தமது இளவல் அப்துல்லாஹ் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்ததில் மகிழ்வு மீக்குற்று செய்தி சொன்ன ஸுவைபாவை அவன் விடுதலை செய்தான். இதன் காரணத்தாலேயே திங்கட்கிழமைகள் தோறும் தனது விரல் இடுக்கு வழியாக ஊற்றெடுக்கும் நீரைப் பருகும் பாக்கியத்தை அவன் பெற்றான்.

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ الْبَرَاءِ رضي الله عنه، قَالَ أَوَّلُ مَنْ قَدِمَ عَلَيْنَا مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ مُصْعَبُ بْنُ عُمَيْرٍ، وَابْنُ أُمِّ مَكْتُومٍ فَجَعَلاَ يُقْرِئَانِنَا الْقُرْآنَ ثُمَّ جَاءَ عَمَّارٌ وَبِلاَلٌ وَسَعْدٌ ثُمَّ جَاءَ عُمَرُ بْنُ الْخَطَّابِ فِي عِشْرِينَ ثُمَّ جَاءَ النَّبِيُّ ﷺ فَمَا رَأَيْتُ أَهْلَ الْمَدِينَةِ فَرِحُوا بِشَيْءٍ فَرَحَهُمْ بِهِ حَتَّى رَأَيْتُ الْوَلاَئِدَ وَالصِّبْيَانَ يَقُولُونَ هَذَا رَسُولُ اللهِ قَدْ جَاءَ، فَمَا جَاءَ حَتَّى قَرَأْتُ ﴿سَبِّحِ اسْمَ رَبِّكَ الأَعْلَى﴾ فِي سُوَرٍ مِثْلِهَا.

பர்ராஉ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''நபிமணித் தோழர்களில் (மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு) முதன் முதலில் முஸ்அப் இப்னு உமைர், இப்னு உம்மி மக்தூம் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் எங்களிடம் வந்தனர். அவர்கள் எங்களுக்கு குர்ஆனைக் கற்றுத் தந்தனர்.

பின்னர் அம்மார், பிலால் ஸஃது ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரும், பின்னர் இருபது பேர்கள் கொண்ட குழுவினருடன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்தனர்.

பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மதீனா) வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வருகையால் மதீனத்து மக்கள் மகிழ்வு கொண்டதைப் போன்று வேறு எதற்காகவும் அவர்கள் மகிழ்வுற்றதை நான் கண்டதில்லை.

(மதீனாவின்) சிறுமியரும், சிறுவர்களும் இதோ அல்லாஹ்வின் திருத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருகை தந்துள்ளார்கள் என (அகம் மகிழ்ந்து) கூறுவதை நான் கண்டேன்.

ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா எனும் 87வது அத்தியாயத்தையும், அதைப் போன்ற முஃபஸ்ஸல் அத்தியாயங்களையும் நான் ஓதும் வரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு வருகை தரவில்லை.'' நூல்: புகாரி 4941

أَخْرَجَ الْبَيْهَقِيُّ: أَخْبَرَنَا أَبُو عَمْرٍو الأَدِيبُ، قَالَ: أَخْبَرَنَا أَبُو بَكْرٍ الْإِسْمَاعِيلِيُّ، قَالَ: سَمِعْتُ أَبَا خَلِيفَةَ، يَقُولُ: سَمِعْتُ ابْنَ عَائِشَةَ رضي الله عنها ، يَقُولُ: لَمَّا قَدِمَ عَلَيْهِ السَّلاَمُ الْمَدِينَةَ جَعَلَ النِّسَاءُ وَالصِّبْيَانُ يَقُلْنَ:

طَلَعَ الْبَدْرُ عَلَيْنَا مِنْ ثَنِيَّاتِ الْوَدَاعِ
وَجَبَ الشُّكْرُ عَلَيْنَا مَا دَعَا لِلّٰهِ دَاعِ

இப்னு ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறக் கேட்டதாக அபூகலீஃபா ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா நகருக்கு வருகை தந்தபோது, ஸனியதுல் வதாஃ எனுமிடத்திலிருந்து எங்கள் மீது பவுர்ணமி நிலா உதயமானது.

அல்லாஹ்வின் பால் அழைப்பாளர்கள் அழைக்கும் காலமெல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது எங்கள் மீது கடைமையாகி விட்டது என பெண்களும், குழந்தைகளும் பாடினர்.''
நூல்: பைஹகீ, தலாயிலுந் நுபுவ்வத்தி 2/506

وَأَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَائِشَةَ رضي الله عنها قَالَتْ: كَانَ رَسُولُ اللّٰهِ ﷺ: " يَضَعُ لِحَسَّانَ مِنْبَرًا فِي الْمَسْجِدِ يَقُومُ عَلَيْهِ قَائِمًا، يُفَاخِرُ عَنْ رَسُولِ اللّٰهِ ﷺ أَوْ يُنَافِحُ . وَيَقُولُ رَسُولُ اللّٰهِ ﷺ: " إِنَّ اللّٰهَ يُؤَيِّدُ حَسَّانَ بِرُوحِ الْقُدُسِ مَا نَافَحَ أَوْ فَاخَرَ عَنْ رَسُولِ اللّٰهِ ﷺ .

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் ஹஸ்ஸான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மேடையொன்றை அமைத்துக் கொடுத்தார்கள்.

அம்மேடை மீது நின்று ஹஸ்ஸான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்வார்கள். அல்லது எதிரிகளின் இகழ்ச்சிகளுக்கு மறுப்புக் கவிதைகள் பாடுவார்கள்.

அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து பாடும் காலமெல்லாம் அல்லது எதிரிகளின் தூற்றுதல்களுக்கு மறுப்புக் கூறும் காலமெல்லாம் ஹஸ்ஸான் அவர்களுக்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு அல்லாஹ் உதவுவானாக! என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்திப்பார்கள்.’’ நூல்: ஹாகிம் 6058

أَخْرَجَ التِّرْمِذِيُّ عَنْ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما ، قَالَ: جَلَسَ نَاسٌ مِنْ أَصْحَابِ رَسُولِ اللهِ ﷺ يَنْتَظِرُونَهُ قَالَ: فَخَرَجَ حَتَّى إِذَا دَنَا مِنْهُمْ سَمِعَهُمْ يَتَذَاكَرُونَ فَسَمِعَ حَدِيثَهُمْ، فَقَالَ بَعْضُهُمْ: عَجَبًا إِنَّ اللهَ عَزَّ وَجَلَّ اتَّخَذَ مِنْ خَلْقِهِ خَلِيلًا، اتَّخَذَ مِنْ إِبْرَاهِيمَ خَلِيلًا، وَ قَالَ آخَرُ: مَاذَا بِأَعْجَبَ مِنْ كَلَامِ مُوسَى كَلَّمَهُ تَكْلِيمًا، وَ قَالَ آخَرُ: فَعِيسَى كَلِمَةُ اللهِ وَرُوحُهُ، وَ قَالَ آخَرُ: آدَمُ اصْطَفَاهُ اللهُ. فَخَرَجَ عَلَيْهِمْ فَسَلَّمَ وَ قَالَ: قَدْ سَمِعْتُ كَلَامَكُمْ وَعَجَبَكُمْ إِنَّ إِبْرَاهِيمَ خَلِيلُ اللهِ وَهُوَ كَذَلِكَ وَمُوسَى نَجِيُّ اللهِ وَهُوَ كَذَلِكَ، وَعِيسَى رُوحُهُ وَكَلِمَتُهُ وَهُوَ كَذَلِكَ وَآدَمُ اصْطَفَاهُ اللهُ وَهُوَ كَذَلِكَ، أَلَا وَأَنَا حَبِيبُ اللهِ وَلَا فَخْرَ، وَأَنَا حَامِلُ لِوَاءِ الْحَمْدِ يَوْمَ الْقِيَامَةِ وَلَا فَخْرَ،

وَأَنَا أَوَّلُ شَافِعٍ وَأَوَّلُ مُشَفَّعٍ يَوْمَ القِيَامَةِ وَلاَ فَخْرَ، وَأَنَا أَوَّلُ مَنْ يُحَرِّكُ حِلَقَ الْـجَنَّةِ فَيَفْتَحُ اللهُ لِي فَيُدْخِلُنِيهَا وَمَعِي فُقَـرَاءُ المُـؤْمِنِينَ وَلاَ فَخْـرَ، وَأَنَـا أَكْرَمُ الأَوَّلِينَ وَالآخِرِينَ وَلاَ فَخْرَ.

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹுா அன்ஹுா அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நபித்தோழர்களில் சிலர் அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அப்போது நபி ஸல்லல்லாஹுா அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து ஸஹாபாக்களை நெருங்கியபொழுது, அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை செவியேற்றார்கள்.

ஸஹாபாக்களில் சிலர் கூறினர்: ஆச்சரியம்! அல்லாஹ் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை தனது ‘கலீலாக’ உற்ற தோழராகத் தேர்ந்தெடுத்தான்.

வேறு ஒரு ஸஹாபி சொன்னார்: நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் அல்லாஹ் உரையாடியதைவிட ஆச்சரியம் வேறு என்ன உள்ளது? அன்னாருடன் அல்லாஹ் நேரடியாக உரையாடினான். இன்னொரு ஸஹாபி சொன்னார்: நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் வசனமாகவும், ரூஹாகவும் உள்ளார்கள். மற்றொரு ஸஹாபி சொன்னார்: நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் தனது பிரதிநிதியாகத் தேர்வு செய்தான்.

நபி ஸல்லல்லாஹுா அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுக்கு ஸலாம் சொல்லிவிட்டு உங்களுடைய பேச்சையும், ஆச்சரியப்படுதலையும் கேட்டேன். நிச்சயமாக நபி இப்ராஹீம் அல்லாஹ்வின் கலீல் என்றீர்கள். அவர்கள் அவ்வாறே உள்ளார்கள். நபி மூஸா அவர்கள் அல்லாஹ்வுடன் உரையாடினார்கள் என்றீர்கள். அதுவும் அப்படியே! நபி ஈஸா அல்லாஹ்வின் வசனமாகவும், ரூஹாகவும் உள்ளார்கள் என்றீர்கள். அதுவும் அப்படியே! நபி ஆதம்

அவர்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்தான் என்றீர்கள். அதுவும் அவ்வாறுதான்.

பெருமைக்காகக் கூறவில்லை. நான் அல்லாஹ்வின் ஹபீப். மறுமையில் ஹம்து எனும் புகழ்மிகு கொடியை நானே சுமப்பேன். இதையும் பெருமைக்காகச் சொல்லவில்லை. நானே முதன் முதலாக பரிந்துரை செய்வேன். பரிந்துரை ஏற்கப்படுவோரிலும் நானே முதலாவதாக இருப்பேன். இதையும் பெருமைக்காகக் கூறவில்லை. சுவனத்தின் கதவை முதலாவதாக நானே அசைப்பேன். அல்லாஹ் எனக்காக சுவன வாசலைத் திறந்து தருவான். என்னுடன் ஏழையான முஸ்லிம்கள் சுவனத்தில் நுழைவர். இதையும் பெருமைக்காக நான் கூறவில்லை. முந்தியவர்களிலும், பிந்தியவர்களிலும் நானே கண்ணியம் மிக்கவன். இதையும் பெருமைக்காகக் கூறவில்லை என்று திருவாய் மலர்ந்தார்கள்.'' நூல்: திர்மிதி 3616

أَخْرَجَ الْبَيْهَقِيُّ عَنْ مُوسَى بْنِ عُقْبَةَ قَالَ: أَنْشَدَ النَّبِيَّ ﷺ كَعْبُ بْنُ زُهَيْرٍ: بَانَتْ سُعَادُ فِي مَسْجِدِهِ بِالْـمَدِينَةِ، فَلَمَّا بَلَغَ قَوْلَهُ:

إِنَّ الرَّسُولَ لَسَيْفٌ يُسْتَضَاءُ بِـهِ مُهَنَّدٌ مِنْ سُيُوفِ اللهِ مَسْلُولُ

فِي فِتْيَةٍ مِنْ قُرَيْشٍ قَـالَ قَـائِلُهُمْ بِبَطْنِ مَكَّةَ لَمَّا أَسْـلَمُوا زُولُـوا

أَشَارَ رَسُولُ اللهِ ﷺ بِكُمِّهِ إِلَى الْخَلْقِ، لِيَأْتُوا فَيَسْمَعُوا مِنْهُ.

மூஸா இப்னு உக்பா ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ''கஃபு இப்னு ஜுஹைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவின் மஸ்ஜிதுன் நபவியில் வைத்து பானத் ஸுஆத் எனும் கவிதையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து பாடினார்கள்.

(உறையிலிருந்து) உருவப்பட்ட அல்லாஹ்வின் வாள்களுக்கு மத்தியில் நிச்சயமாக திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளி உமிழும் இந்திய நாட்டு வாளைப் போன்றவர்களாவர்.

அப்பெருமான் குறைஷிக் குலத்து வாலிபர்களில் சிறப்பான வர்கள். மக்கத்து மணி வயிற்றில் வைத்து அவர்கள் இஸ்லாமைத் தழுவியபோது அவர்களில் ஒருவர், நீங்கள் (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்யுங்கள் எனக் கூறினார்.

(இவ்வரிகளை கஃபு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடிய போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) தமது திருக்கரத்தால் ஸஹாபாக்களை அழைத்து சமிக்ஞை செய்து அக்கவிதை வரிகளைக் கேட்குமாறு கூறினார்கள்.''

நூல்: பைகஹீ 21142

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ الرُّبَيِّعِ بِنْتِ مُعَوِّذٍ، قَالَتْ: دَخَلَ عَلَيَّ النَّبِيُّ ﷺ غَدَاةَ بُنِيَ عَلَيَّ، فَجَلَسَ عَلَى فِرَاشِي كَمَجْلِسِكَ مِنِّي، وَجُوَيْرِيَاتٌ يَضْرِبْنَ بِالدُّفِّ، يَنْدُبْنَ مَنْ قُتِلَ مِنْ آبَائِهِنَّ يَوْمَ بَدْرٍ، حَتَّى قَالَتْ جَارِيَةٌ: وَفِينَا نَبِيٌّ يَعْلَمُ مَا فِي غَدٍ. فَقَالَ النَّبِيُّ ﷺ: لاَ تَقُولِي هَكَذَا وَقُولِي مَا كُنْتِ تَقُولِينَ

ருபய்யி பின்த் முஅவ்வித் ரழியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்: ''எனது திருமண நாளன்று காலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எங்கள் வீட்டுக்கு) வந்தார்கள். (இந்த ஹதீஸை கேட்டுக் கொண்டிருந்த காலித் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம்) எனக்கருகில் தாங்கள் அமர்ந்திருப்பது போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனது விரிப்பின் மீது அமர்ந்தார்கள். (அங்கிருந்த) சில சிறுமியர் (சலங்கை இல்லாத) கஞ்சிராக்களை தப்புகளை அடித்து பத்ருப் போரில் வீரமரணமடைந்த தங்களு டைய முன்னோர்களைப் புகழ்ந்து (இரங்கற்பாக்கள்) பாடிக் கொண்டிருந்தனர்.''

அவர்களில் சிறுமியொருவர் எங்களிடையே ஒரு இறைத்தூதர் இருக்கிறார். அவர் நாளை நடக்க இருப்பவற்றை அறிவார். என்று

பாடினார். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்படிச் சொல்லாதே! நீ முன்பு சொல்லிக் கொண்டிருந்ததைக் கூறு என்றுரைத்தார்கள். நூல்: புகாரி 4001

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنِ الْهَيْثَمِ بْنِ أَبِي سِنَانٍ، أَنَّهُ سَمِعَ أَبَا هُرَيْرَةَ ﵁، وَهُوَ يَقُصُّ فِي قَصَصِهِ، وَهُوَ يَذْكُرُ رَسُولَ اللهِ ﷺ: إِنَّ أَخًا لَكُمْ لاَ يَقُولُ الرَّفَثَ، يَعْنِي بِذَلِكَ عَبْدَ اللهِ بْنَ رَوَاحَةَ:

وَفِينَا رَسُولُ اللهِ يَتْلُو كِتَابَهُ ... إِذَا انْشَقَّ مَعْرُوفٌ مِنَ الفَجْرِ سَاطِعُ

أَرَانَا الهُدَى بَعْدَ العَمَى فَقُلُوبُنَا ... بِهِ مُوقِنَاتٌ أَنَّ مَا قَالَ وَاقِعُ

يَبِيتُ يُجَافِي جَنْبَهُ عَنْ فِرَاشِهِ ... إِذَا اسْتَثْقَلَتْ بِالْمُشْرِكِينَ المَضَاجِعُ

ஹஸன் இப்னு அபீஸினான் கூறுகிறார்கள்: ‘‘அபூஹுரைரா ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் சரித்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்த போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைவு கூர்ந்து கூறினார்கள்.

உங்களுடைய சகோதரர் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறித்து வீணான விஷயங்கள் எதையும் கூறவில்லை என்று சொல்லி விட்டு, நபியவர்கள் பற்றி அப்துல்லாஹ் இப்னு ரவாஹா பாடிய பாடல் வரிகளை கீழ்க்கண்டவாறு கூறினார்கள்.

ஃபஜ்ரு காலைச் சூரியன் உதயமாகும்போது அல்லாஹ்வின் புனித நூலை ஓதும் திருத்தூதர் எங்களிடையே வாழ்கிறார்கள்.

(குஃப்ர் எனும்) இருளுக்குப்பின் (ஹிதாயத் எனும்) நேர் வழியை அத்திருத்தூதர் எங்களுக்குக் காட்டினார்கள். அவர்கள் கூறுவதெல்லாம் நடந்தேறும் என எங்கள் இதயங்கள் உறுதியாக நம்புகின்றன.

இணை வைப்பவர்களுக்குப் படுக்கைகள் பாரமாகும் போது அவர்கள் படுக்கையிலிருந்து எழுந்து இரவைக் கழிப்பார்கள்.''

(இணைவைப்போர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது படுக்கையிலிருந்து எழுந்து நபி நாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறை வணக்கத்தில் ஈடுபடுவார்கள்).

நூல்: புகாரி 1155

اَلرُّقِّيَةُ

ஓதிப்பார்த்தல்

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أَبِي سَعِيدٍ رضي الله عنه قَالَ انْطَلَقَ نَفَرٌ مِنْ أَصْحَابِ النَّبِيِّ صلى الله عليه وآله وسلم فِي سَفْرَةٍ سَافَرُوهَا حَتَّى نَزَلُوا عَلَى حَيٍّ مِنْ أَحْيَاءِ الْعَرَبِ فَاسْتَضَافُوهُمْ فَأَبَوْا أَنْ يُضَيِّفُوهُمْ فَلُدِغَ سَيِّدُ ذَلِكَ الْحَيِّ فَسَعَوْا لَهُ بِكُلِّ شَيْءٍ لاَ يَنْفَعُهُ شَيْءٌ فَقَالَ بَعْضُهُمْ لَوْ أَتَيْتُمْ هَؤُلاَءِ الرَّهْطَ الَّذِينَ نَزَلُوا لَعَلَّهُ أَنْ يَكُونَ عِنْدَ بَعْضِهِمْ شَيْءٌ فَأَتَوْهُمْ فَقَالُوا يَا أَيُّهَا الرَّهْطُ إِنَّ سَيِّدَنَا لُدِغَ وَسَعَيْنَا لَهُ بِكُلِّ شَيْءٍ لاَ يَنْفَعُهُ فَهَلْ عِنْدَ أَحَدٍ مِنْكُمْ مِنْ شَيْءٍ؟ فَقَالَ بَعْضُهُمْ نَعَمْ وَاللهِ إِنِّي لَأَرْقِي وَلَكِنْ وَاللهِ لَقَدِ اسْتَضَفْنَاكُمْ فَلَمْ تُضَيِّفُونَا فَمَا أَنَا بِرَاقٍ لَكُمْ حَتَّى تَجْعَلُوا لَنَا جُعْلًا فَصَالَحُوهُمْ عَلَى قَطِيعٍ مِنَ الْغَنَمِ فَانْطَلَقَ يَتْفِلُ عَلَيْهِ وَيَقْرَأُ الْحَمْدُ للهِ رَبِّ الْعَالَمِينَ فَكَأَنَّمَا نَشِطَ مِنْ عِقَالٍ فَانْطَلَقَ يَمْشِي وَمَا بِهِ قَلَبَةٌ قَالَ فَأَوْفَوْهُمْ جُعْلَهُمُ الَّذِي صَالَحُوهُمْ عَلَيْهِ فَقَالَ بَعْضُهُمُ اقْسِمُوا فَقَالَ الَّذِي رَقَى لاَ تَفْعَلُوا حَتَّى نَأْتِيَ النَّبِيَّ صلى الله عليه وآله وسلم فَنَذْكُرَ لَهُ الَّذِي كَانَ فَنَنْظُرَ مَا يَأْمُرُنَا فَقَدِمُوا عَلَى رَسُولِ اللهِ صلى الله عليه وآله وسلم فَذَكَرُوا لَهُ فَقَالَ وَمَا يُدْرِيكَ أَنَّهَا

رُقْيَةٌ؟ ثُمَّ قَالَ قَدْ أَصَبْتُمُ اقْسِمُوا وَاضْرِبُوا لِي مَعَكُمْ سَهْمًا فَضَحِكَ رَسُولُ اللهِ ﷺ وَفِي رِوَايَةٍ لِلْبُخَارِي قَالَ ﷺ "إِنَّ أَحَقَّ مَا أَخَذْتُمْ عَلَيْهِ أَجْرًا كِتَابُ اللهِ اه

அபூ ஸயீது ரழியல்லாஹுஅன்ஹு கூறுகிறார்கள்: ''நபித்தோழர்களில் சிலர் ஒரு பயணத்தின் போது ஓர் அரபிக் குலத்தாரிடம் தங்கினர். அவர்களிடம் நபித்தோழர்கள் விருந்து கேட்ட போது, விருந்தளிக்க அவர்கள் மறுத்து விட்டனர்.

அப்போது அக்குலத்தாரின் தலைவரை தேள் கொட்டி விட்டது. (விஷம் இறக்க) அம்மக்கள் எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொண்டனர். எந்த முயற்சியும் பலன் தரவில்லை.

அம்மக்களில் சிலர், இங்கே வந்துள்ள கூட்டத்தினரிடம் சென்றால் அவர்களிடம் இதற்கு ஏதேனும் மருத்துவம் இருக்கலாம் என்றனர்.

அவர்கள் நபித்தோழர்களிடம் வந்து 'கூட்டத்தினரே! எங்களுடைய தலைவரை தேள் கொட்டிவிட்டது. அவருக்காக அனைத்து முயற்சிகளையும் செய்தோம். எதுவும் பயனளிக்கவில்லை. உங்களில் எவரிடமாவது ஏதேனும் (மருந்து) உள்ளதா? என்று கேட்டனர்.

நபித்தோழர்களில் ஒருவர் ஆம்! அல்லாஹ் மீது ஆணையாக, நான் ஓதிப் பார்க்கின்றேன். எனினும் அல்லாஹ் மீது சத்தியமாக! நாங்கள் உங்களிடம் விருந்து கேட்டு நீங்கள் விருந்து தராததால், எங்களுக்கு கூலி தராமல் நான் ஓதிப் பார்க்கமாட்டேன்' என்று கூறினார்.

அவர்கள் (கூலியாக) சில ஆடுகள் தருவதாக ஒப்பந்தம் செய்தனர்.

நபித்தோழர் தேள் கொட்டப்பட்டவர் மீது சிறிது உமிழ்நீருடன் சேர்த்து ஊதி 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்று தொடங்கும் ஸூரா ஃபாத்திஹாவை ஓதினார். உடனே அம்மனிதர் கட்டுகளிலிருந்து அவிழ்த்து விடப்படவரைப் போல தேள் கொட்டிய எந்த பாதிப்புமின்றி நடக்க ஆரம்பித்தார்.

அக்குலத்தினர் பேசிய கூலியை முழுமையாக வழங்கினர். ‘இதைப் பங்கு வையுங்கள்’ என நபித்தோழர் ஒருவர் கூற, ‘இல்லை! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவர்கள் என்ன கட்டளை இடுகிறார்களோ என்பதைத் தெரியாமல் எதுவும் செய்ய வேண்டாம் என்றார் ஓதிப் பார்த்தவர்.’

அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நடந்தவற்றைக் கூறினர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்ஹம்து ஸூரா ஓதிப்பார்க்கத் தக்கது என்பது உமக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டுவிட்டு நீங்கள் சரியானதைச் செய்துள்ளீர்கள். ஆடுகளை பங்கு வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடன் எனக்கும் ஒரு பங்கை ஒதுக்குங்கள் என்று கூறிச் சிரித்தார்கள். நூல் புகாரி 2276

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ عَوْفِ بْنِ مَالِكٍ الْأَشْجَعِيِّ قَالَ: كُنَّا نَرْقِي فِي الْجَاهِلِيَّةِ فَقُلْنَا يَا رَسُولَ اللهِ كَيْفَ تَرَي فِي ذَلِكَ؟ فَقَالَ أَعْرِضُوا عَلَيَّ رُقَاكُمْ لاَ بَأْسَ بِالرُّقَي مَالَمْ يَكُنْ فِيهِ شِرْكٌ.

அவ்ஃப் இப்னு மாலிக் அல்அஷ்ஜஈ ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘அறியாமைக் காலத்தில் நாங்கள் ஓதிப் பார்த்து வந்தோம். எனவே நபியவர்களிடம் ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது குறித்து என்ன கருதுகிறீர்கள்?’ என்று கேட்டோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘நீங்கள் ஓதிப் பார்ப்பதை எம்மிடம் சொல்லிக்காட்டுங்கள்; இறைவனுக்கு இணை கற்பிக்கும் வாசகங்கள் இல்லையானால் ஓதிப்பார்ப்பதில் எந்தத் தவறுமில்லை என்று கூறினார்கள்.’’ நூல்: முஸ்லிம் 4427

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ ابي عَبْدِ الرَّحْمَنِ بْنِ الْأَسْوَدِ قَالَ سَأَلْتُ عَائِشَةَ عَنِ الرُّقْيَةِ مِنَ الْحُمَةِ فَقَالَتْ رَخَّصَ النَّبِيُّ ﷺ الرُّقْيَةَ مِنْ كُلِّ ذِي حُمَةٍ.

அபூ அப்திர் ரஹ்மான் இப்னுல் அஸ்வதி ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘விஷக் கடிக்கு ஓதிப் பார்ப்பதைக் குறித்து அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் கேட்டேன். அன்னை அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு விஷ உயிரினத்தின் கடியிலிருந்தும் நிவாரணம் பெற்றிட ஓதிப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கினார்கள்’’ என பதிலிறுத்தனர்.

நூல்: புகாரி 5741

أَخْرَجَ مُسْلِمٌ عَنْ جَابِرٍ رضي الله عنه قَالَ نَهَى رَسُولُ اللهِ ﷺ عَنِ الرُّقَى فَجَاءَ آلُ عَمْرِو بْنِ حَزْمٍ إِلَى رَسُولِ اللهِ ﷺ فَقَالُوا يَا رَسُولَ اللهِ إِنَّهُ كَانَتْ عِنْدَنَا رُقْيَةٌ نَرْقِي بِهَا مِنَ الْعَقْرَبِ وَإِنَّكَ نَهَيْتَ عَنِ الرُّقَى قَالَ فَعَرَضُوهَا عَلَيْهِ فَقَالَ مَا أَرَى بَأْسًا مَنِ اسْتَطَاعَ مِنْكُمْ أَنْ يَنْفَعَ أَخَاهُ فَلْيَنْفَعْهُ.

ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதிப் பார்ப்பதை தடை செய்தார்கள். அப்போது அம்ர் இப்னு ஹஸ்ம் குடும்பத்தினர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! தேள் கடிக்கு நாங்கள் ஓதிப்பார்த்து வந்தோம். தாங்கள் ஓதிப் பார்ப்பதை தடை செய்து விட்டீர்கள்!’’ என்றனர். ஓதிப்பார்க்கும் வாசகங்களை கூற நபியவர்கள் கேட்க அவர்கள் அவ்வாசகங்களை எடுத்துரைத்தனர்.

‘‘நான் (இவற்றில்) குறை எதையும் காணவில்லை. உங்களில் ஒருவர் தமது சகோதரருக்கு நல்லதைச் செய்திட முடிந்தால் அவர் அந்த நலவைச் செய்யட்டும்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.''

நூல்: முஸ்லிம் 4426

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ أُمِّ سَلَمَةَ ﵂ أَنَّ النَّبِيَّ ﷺ رَأَى فِي بَيْتِهَا جَارِيَةً فِي وَجْهِهَا سَفْعَةٌ فَقَالَ اسْتَرْقُوا لَهَا فَإِنَّ بِهَا النَّظْرَةَ.

ஹழ்ரத் உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் வீட்டில் ஒரு சிறுமியை பார்த்தார்கள். அவளுடைய முகத்தில் கருஞ்சிவப்பான படர் தாமரை ஒன்று இருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவளுக்கு ஓதிப் பாருங்கள். ஏனெனில் இவள் மீது கண்ணேறு பட்டிருக்கிறது என்று கூறினார்கள்.''

நூல்: புகாரி 5739

أَخْرَجَ الْبُخَارِيُّ عَنْ عَائِشَةَ ﵂ قَالَتْ أَمَرَنِي النَّبِيُّ ﷺ أَوْ أَمَرَ أَنْ يُسْتَرْقَى مِنَ الْعَيْنِ.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்ணேறின் தீய விளைவிலிருந்து விடுபட ஓதிப் பார்த்துக் கொள்ளும்படி கட்டளையிட்டார்கள்.'' நூல் புகாரி: 5738

أَخْرَجَ إِبْنُ أَبِي شَيْبَةَ عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ عَنْ جَدِّهِ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا فَرَغَ أَحَدكُمْ فِي نَوْمِهِ فَلْيَقُلْ أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ غَضَبِهِ وَسُوءِ عِقَابِهِ وَمِنْ شَرِّ عِبَادِهِ وَمِنْ شَرِّ الشَّيَاطِينِ وَأَنْ يَحْضُرُونَ وَكَانَ عَبْدُ اللهِ يُعَلِّمُهَا وَلَدَهُ مَنْ أَدْرَكَ مِنْهُمْ وَمَنْ لَمْ يُدْرِكْ كَتَبَهَا وَعَلَّقَهَا عَلَيْهِ.

அம்ர் இப்னு ஷுஐப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் பாட்டனாரிடமிருந்து அறிவிக்கிறார்கள்:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ‘‘உங்களில் ஒருவர் தூக்கத்திலிருந்து பயந்து எழுந்தால் அல்லாஹ்வின் முழுமையான வசனங்களைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகின்றேன். அவனுடைய கோபம், அவனுடைய தீய தண்டனை, அவனுடைய அடியார்களின் தீமைகள், ஷைய்த்தானுடைய தீங்கு, அந்த ஷெய்த்தான்கள் என்னிடம் தங்குவது ஆகியவற்றிலிருந்து பாது காவல் தேடுகின்றேன் என்று ஓத வேண்டும்.’’

அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், வயதுக்கு வந்த தம் குழந்தைகளுக்கு இந்த துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள். வயதுக்கு வராத சிறுவர்களுக்கு இதை எழுதி கழுத்தில் **தாவீசாகக்** கட்டிக் கொடுத்தார்கள். நூல்: இப்னு அபீஷைபா 23537

أَخْرَجَ ابْنُ أَبِي شَيْبَةَ عَنْ عَائِشَةَ رضي الله عنها كَانَتْ لاَ تَرَى بَأْسًا أَنْ يُعَوَّذَ فِي الْمَاءِ ثُمَّ يُصَبَّ عَلَى الْمَرِيضِ.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தண்ணீரில் ஓதி ஊதி அதனை நோயாளி மீது தெளிப்பதில் தவறில்லை என்ற கருத்துடையவர்களாக இருந்தார்கள். நூல்: இப்னு அபீஷைபா 23499

أَخْرَجَ ابْنُ أَبِي شَيْبَةَ عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما، قَالَ: إِذَا عَسُرَ عَلَى الْمَرْأَةِ وَلَدُهَا، فَيَكْتُبُ هَاتَيْنِ الْآيَتَيْنِ وَالْكَلِمَاتِ فِي صَفْحَةٍ ثُمَّ تُغْسَلُ فَتُسْقَى مِنْهَا: بِسْمِ اللهِ لاَ إِلَهَ إِلَّا هُوَ الْحَلِيمُ الْكَرِيمُ، سُبْحَانَ اللهِ رَبِّ السَّمَوَاتِ السَّبْعِ وَرَبِّ الْعَرْشِ الْعَظِيمِ ﴿كَأَنَّهُمْ يَوْمَ يَرَوْنَهَا لَمْ يَلْبَثُوا إِلَّا عَشِيَّةً أَوْ

ضُحَاهَا﴾ (النازعات: ٤٦) ﴿كَأَنَّهُمْ يَوْمَ يَرَوْنَ مَا يُوعَدُونَ لَمْ يَلْبَثُوا إِلَّا سَاعَةً مِنْ نَهَارٍ، بَلَاغٌ فَهَلْ يُهْلَكُ إِلَّا الْقَوْمُ الْفَاسِقُونَ﴾ (الأحقاف:٣٥)

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: ஒரு பெண்ணுக்கு குழந்தை பிரசவிப்பது சிரமமானால் கீழ்க்காணும் இரண்டு திருக்குர்ஆன் வசனங்களை ஒரு பேப்பரில் எழுதி, அதை கழுவிக் குடிக்க வேண்டும்.

அவ்வசனங்கள்:

1) 79ம் அத்தியாயத்தின் 46வது வசனம்.

2) 46ம் அத்தியாயத்தின் 35வது வசனம்.

நூல்: இப்னு அபீஷைபா 23498